உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவரருளிச்செய்த

சகலகலைக்ஞானமென்றுவழங்குகிற

# அமுதகலைக்ஞானம்

ஆயிரத்திருநூறு.

4547



சென்னை

நாகரம் பிரஸிற்

பித்தது.

935. [ரூபா-1.

உ

கடவுள் துணை.

அகஸ்தியமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

சகலகலைக்ஞானமென்றுவழங்குகிற

# அமுதகலைக்ஞானம்

## ஆயிரத்திருநூறு.

### காப்பு.

ஆதிபராபரத்தினுடகிருபைகூர்ந்து
அப்பனேமனோன்மணியைத்தொழுதுபோற்றி
சோதியெனுங்கமலமலரமுதங்கொண்டு
சுந்தரம்போல்வாதத்திலட்சங்காப்பு
நீதிபெறவயித்தியத்திலிரண்டுலக்ஷம்
நிலைத்ததொருசூத்திரத்திற்கோடாகோடி
வாதியெனவந்தோர்க்கும்பெரியோருக்கும்
மனமகிழ்ந்துகருக்குருவாய்வசனித்தேனே. 1

### நூல்வகை.

வசனித்தேன்காவியந்தானாயிரத்திருநூறுக்குள்
வண்மையுள்ள சகலகலைக்ஞானமெல்லாம்
நிசனித்தேனாயிரத்திருநூறுக்குள்
நிச்சயமாய்க்கருக்களெல்லாமிதிலேசொன்னேன்
திசனித்தமந்திரங்கள்சக்கரங்கள்
தீட்சையொடுசரக்குவைப்புசெந்தூரங்கள்
பசனித்தபற்பவகைமெழுகுஜெயநீர்
பாங்கான தாம்பரமும்சிமிட்டுப்போக்கே. 2

போக்கானயந்திரமாமகேந்திரசாலம்
புதுமையுள்ள அஞ்சனமும்வசியப்போக்கும்
நீக்கானமறைப்போடுதிலதப்போக்கும்
நேரானமோடியிலேயனந்தப்போக்கும்
வாக்கானபலிதமுள்ள கருவின்போக்கும்
வஞ்சனைகள்பில்லியுடமார்க்கப்போக்கும்
தாக்கான சரியையொடுகிரியைப்போக்குந்
தண்மையுள்ளயோகமுடன்ஞானமாமே. 3

ஞானமுடன்தேகசித்திக்கற்பக்கூறு நலமானதீட்சைமுதல்தியா
னப்போக்கும், ஊனானகாயாதிகர்ப்பபோக்கும் உண்மையுள்ளமுப்
பூவின்கருவின்போக்கும், தேனானமதியமுதஞ்சமாதிகற்பஞ் சிந்தை
மனதொன்றானஅஷ்டபந்தங், கோனானகுருவினுடகருணைபெற்றுக்
கூறினேன்பன்னிரண்டுநூறுந்தானே. 4

தானென்றபன்னிரண்டுநூறுக்குள்ளே சகலகலைக்ஞானமெல்லா
மடக்கிப்பாடித், தேனென்றமொழிபோலேயிந்தநூலைச்சிக்கெனவே
சமாதிதனில்வைத்தேனப்பா, நானென்றஆணவத்தால்சித்தர்கூடி
நலமாகவந்தார்களொடுக்கந்தன்னில், கோனென்றஎன்குருவேபூர
ணமேஐயா கும்பமுனிசரணமென்றுகூறினாரே. 5

சித்தர் அகஸ்தியரைக்கண்டு வசனித்தல்.

கூறினசொல்லேதெனவேயென்றுநானுங் குணமாகவந்தோர்க்கு
ஆசனங்கள்போட்டு, மீறினதுஏதெனவேகேட்டேனப்போ விளம்பி
னதுஆயிரத்திருநூறுக்குள், தேறினதுசெகத்தோர்கள் கண்டா
ரானால் சிவசிவாகைலாசமிடங்கொள்ளாது, கோறினதுஎன்னவையா
வென்றுகேட்டார் குணமானசித்தருக்காமென்றுசொன்னேன். 6

சொன்னவுடனடிபணிந்து சித்தரெல்லாந் துன்மார்க்கருலகத்
தோர்கண்டாரானால், என்னவையாவுலகமெலாஞ் சித்தாய்ப்போகு
மிதற்குநீசாபமதுஈவாயீவாய், உண்மையுள்ளஇந்தநூல் சித்தர்க்கே
யாம் உலகிலுள்ளோர்க்கிந்நூலைச்சித்தரீந்தால், நன்மைபெறவுதறி
னால் செந்தீப்பற்றி நடுக்கமுடனவன்சிரசு தெறித்துப்போமே. 7

போமென்றுசொன்னவுடன்சித்தரெல்லாம் புகழானஇந்நூலைப்
பதனம்பண்ணி, நாமென்றஆணவத்தைஒடுக்கிக்கொண்டு நலமான
இந்நூலைக்குகைக்குள்வைத்து, தேனென்றஅமுதம்போலெடுத்துப்
பார்த்து சிவசிவாமறுபடியுங்குகைக்குள்வைத்து, கோனென்றகுரு
வைப்போலிந்தநூலைக் குருநூல்போலவரவர்கள்பணிந்திட்டாரே. 8

நூல் பதனமாக்கும்படி புலத்தியருக்குரைத்தல்.

பணிந்திட்டஇந்நூலைப் புலத்தியாகேள்பார்தனிலேயொருவருக்
கும்பகரவேண்டாம், கனிந்திட்டபூஷணம்போலிந்நூல்மைந்தா கரு
வானபொருளெனவேகருத்துள்வைத்து, துணிந்திட்டமனம்போலே
குருவைக்காரு சொல்லாதபூரணத்தில்சொக்கியேறு, அணிந்திட்ட
வாசியினாலறிவைப்பற்றி அரகராபூரணத்திலருள்தான்பாரே. 9

அருளான குருபதத்தையழுத்திப்பாரு அழுத்திமுனைபார்க்
கையிலேயருள்தான்காணும், இருளானமாய்கைதனை யறுத்துநீயு

மின்பமுள்ள பூரணத்தையியல்பாய்க்கொண்டு, மருளானபுத்திதனை யறுத்துத்தள்ளு மதியானசந்திரனைக்கருத்திற்சேரு, உருவான பூரணத்திலுரிமைவைத்து உண்மையுடன் பூரணத்திலுன்னிப்பாரே.

பூரணமகிமை.

உன்னுவது எவ்விடமென்றுகந்துகேளு வுண்மையுடன்சொல்லுகிறேனுனக்காய்மைந்தா, நண்ணுவது அகாரமடாஐயாஐயா நலமான அகாரமொடு உகாரம்ரண்டும், சொன்னபொருளிவையுமொன்றாய்க் கூடும்போது துருவமுள்ளஓங்காரம்நீதானச்சு, இன்னமொன்று சொல்லுகிறேன் புலத்தியாகேள் இரவிமதியற்றவிடம் நீதானச்சே.

நீயென்றசொல்லதுதானென்றாக்கால் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்புலத்தியாகேள், கோனென்றகுருவாகுந்திருவுமாகுங் குருவிருக்குமாயிரத்தெட்டிதழுமாகுந், தேனாகும்மிர்தரசப் பூரணமேயாகுஞ் சிதம்பரத்தின் சூக்ஷாதிசூக்ஷமாகு, மூனென்றநாதமுடன் விந்துவாகு முண்மையென்றபொருளாகும் ஊமையாமே. 12

மவுனமகிமையுரைத்தல்.

ஆமையென்றபொருளே துஐயாஐயா உண்மையுடனெந்தனுக்கு உரைக்கவேணும், ஆமையென்ற அகாரமடாஉகாரம்ரண்டும் அருள்பெருகிக்கூடினது மவுனமாகும், சீமையெங்குந்திரிந்ததனால் மவுனமாமோ சிவாயகுருதேசிகனைக் கண்டாற்காணுந், தூமையென்ற சொல்லதினால்ரோஷம்பெற்ற துரோகியிடஞ்சொல்லாதே நூலைப்பாரே. 13

நூல்பார்த்தால்பூரண நூல் தன்னைப்பாரு நுண்மையுள்ள தீட்சையதினுணுக்கம்பாரு, கால்பார்த்து ஏறுதற்குக்கருவைப்பாரு கருத்துவைத்து இந்நூலைக்கருவாய்ப்பாரு, சேல்பார்த்துகொள்வதற்குஆயிரத்தைப்பாரு சிவசிவாஎந்தனுடயட்சணியைப்பாரு, நாள்பார்த்துக்கொள்வதற்கு ஜோசியத்தைப்பாரு நன்மைபெறவேணுமென்றால் குருவைக்காரே. 14

குருவானபதியறிந்துகுருவைக்காரு குருவறிந்துபூரணத்தைக் குணமாய்க்கொள்ளு, திருவிருந்துபூரணத்தைத் தினமுங்கொண்டால் சிவசிவாகயிலாசதேகமாகு, மருவிருந்தஆயிரத்தெண்மலருக்குள்ளேமகத்தானஅமுதமதுகசிந்துகாணும், கருவானஅமுதமதைக் கொண்டால்மைந்தா காயசித்தியோகமுடன்வாதமாமே. 15

வாதத்திற்குக்கருவுரைத்தல்.

வாதமப்பாபிலப்பதற்குக் கருவைக்கேளு மகத்தானபூரணத்தைமருவிப்பாரு, சேதமப்பாவொருநாளுமில்லையில்லை சிவஞ்சத்தி இரண்டையுமேதினமுநோக்கி, பேதமப்பாஒருநாளும் நினைக்கவேண்டாம் பிலத்தபுத்திஅறிவினால் பேணிப்பாரு, நாதமப்பா நின்றநிலை தன்னைப்பாரு நயமாக இந்நூலைக்காருகாரே. 16

இந்நூல்தானுயிரத்திருநூறுக்குள் இன்பதுன்பமிரண்டையு நானெழுதிவைத்தேன், சொன்னதொருநூல்களுக்கு இந்நூல்தானுஞ் சுத்தமுள்ள குருநூலாய்த்தொழுதுபோற்று நன்னயமாயிந் நூலையார்க்கீந்தாலும் நான்சொன்னகாபமதுபலிக்குமப்பா. தன்மையுள்ள புலத்தியனே யோகவானே தகையினுலிந்நூலைப் பதனம்பண்ணே. 17

பண்ணப்பா அடிமூலமேலாதாரம் பாங்கானகுண்டலியிலங் கென்றிட்டு, விண்ணப்பாமேல்மூலமாருதாரம் மெய்யானமவுனத்தைமேவியோட்டு, கண்ணப்பாசுழிமுனையில் கடுகவுண்ணு கற்பூர தீபமதைக்கருத்தாற்சேவி, உண்ணப்பா அமுதமதையுண்ணுவுண்ணு உன்தேகம் விளக்கொளிபோல்சித்தியாமே. 18

சித்தியப்பா அடிமூலமேலாதாரஞ் சென்றங்கேசதாசிவத்தின் தீட்சைகூடி, பத்தியுடன்ரேசகபூரகமும்பண்ணிப் பதியானகும்பகத்தில் நிருயானுல், எத்திசையிலுள்ள அதிசயங்களெல்லாம் ஏகாந்தமாகநீயறிந்துகொள்வாய், புத்தியுள்ளபுலத்தியனே சொல்லக்கேளு போதமென்னபூரணமேசதயமாமே. 19

சத்தியமேதவிராமல் நினைக்கவேணுந் தண்மையுண்டாய் தருமத்தில் திரியவேணும், பத்தியுடன் பெரியோரைப்பணியவேணும் பதருமல் காயசித்தி பண்ணவேணும், புத்தியுடன் பூரணத்தைக் காணவேணும் பூரணமேசெல்வமென்று புகலவேணுஞ், சித்தியுள்ள சிதம்பரமே அம்மயமாய்த்தோன்றுஞ் சிவசிவாஎன்னசொல்வேன் பூரணத்தின்செயலே. 20

## சிதம்பரசக்கரமகிமை.

செயலான சிதம்பரத்தின் மகிமைகேளு சிறக்கவே ஆறுவரை நேரேகிறி, மயமானி ஆறுவரைகுறுக்கேகீறி மைந்தனேயிருபத்தஞ் சரையுமாச்சு, தயவானநமசிவயவென்றுபோட்டுத் தண்மையுடனடுவணையைப் பிடித்துமாறு, சுயமான சிதம்பரத்தினண்டங்காணுஞ் சொல்லுவார்நடனசபையென்றுபாரே. 21

பாரப்பா சிவயநமவென்றுபோட்டு பாங்காக நடுவணையைப் பிடித்துப்பாறு, நேரப்பாநின்றகயிலாசந்தன்னில் நிச்சயமாய் கனகசபைநேரேதோற்றுங், காரப்பாஅதில்மனதை வைத்துக்காரு கனகமதுவுனக்குநித ருண்டோ பிள்ளாய், கூரப்பா நமசிவயவென்று போட்டு குணமாகநடுவணையைப் பிகுத்துமாறே. 22

மாறப்பாயான்சொன்னபடியேபார்த்து மகத்தானபுலத்தியனே சொல்லக்கேளு, ஆரப்பாவுனக்கீடுதில்லைராஜர் அன்பனேயெதிராக நிற்பார்பாரு, காரப்பாஅவர்பதத்தில்தொண்டுபண்ணி கனிவாகத் தியானித்தாலப்பாகேளு, கூரப்பாவுன்மனதில் நினைத்ததெல்லாங் கூர்மையுடனீந்திடுவார் குருவைப்போற்றே. 23

பஞ்சாட்சரமாற.

போற்றப்பா நமசிவயவென்றுபோட்டு புகழாகநடுவணையைப் பிடித்துமாறு, நாமற்றமுள்ளசிதம்பரமே நீயேயாவாய்நன்மையுடன் மந்திரங்களெல்லாஞ்சித்தி, வாயத்திரிவு இல்லையடா மனமேசெம்மை வசியமுதலஷ்டசித்து மகிழ்ந்துஆடும், பூத்தமலர்வாசனைப்போல் பிரகாசிக்கும் பூரணத்தைப்பிறவாதே தனிதமாமே. 24

புனிதமாய் வய்நமசியென்றுபோட்டு பூரணத்தில்பற்றிமன தறிவினின்றால், இனிதமுள்ளகாயசித்தியாகுமாகும் இன்பதுன்ப மிரண்டினுட இயல்புகாணும், அனிதமுள்ளபீடையெல்லாம் விலகிப் போகும் அரனரும் சிவனுமையுமன்பாலீவார், மனிதனென்றபேர் போச்சு மகாத்மாவாச்சு மாநிலத்தில் நீயுமொருமுனியாவாயே. 25

முனிவான அஞ்செழுத்தும்நமசிவயமாகும் முதன்மையுள்ள அஞ்செழுத்துக் குயிரைக்கேளு, தனிவானசிதம்பரமே அல்ல துண்டோ தானவனாய் நின்றதொரு பூரணமேயாகும், கனிவானபூர ணத்தைக் கண்டால்முத்தி கற்பமெனக்கொண்டாக்கால் காயசித்தி, மணியான மனோன்மணியாம் நமசிவயவென்று மைந்தனேமாறின தால் சித்தியாமே. 26

நாற்பத்துமுக்கோணம்.

ஆமப்பாசிவத்தினுட கூறுசொன்னேன் அப்பனேசத்தியுட மார்க்கங்கேளு, நாமப்பாசொல்லுகிறேன் முக்கோணவட்டம் நன்மை யுடனாற்பத்துமூன்றுமாச்சு, தாமப்பாநாலுபத்து மூன்றுக்குந்தான் சங்கையுடன் சிறும்பத்தைநன்றாய்நாட்டி, காமப்பால்கானற்பாலிரண் டுங்கொண்டு கருவேறவுருவேறக் கருத்திலூணே. 27

ஊணப்பாசத்தியுட பூவையாச்சு ஓகோகோசிலத்தினுட பூவை யாச்சு, பூணப்பாசிவசத்தி யிரண்டுங்கண்டு பூனிதமுடன்மனதறி வாய் நின்றுகொண்டு, காணப்பா காலைசிவமாலைசத்திக் கருணையுட னிருவரையும் பூசித்தாக்கால்,நானப்பாசொல்லுகிறேன் சித்திமுத்தி நன்றானயோகமுதல் வாதமாமே. 28

ஆமப்பா அகமறியார்சண்டிமாண்பர் அறுசுவையின்விவரமதை யறியாமூடர், நாமப்பாவென்றுஅகம் புகுதாமாண்பர் நண்மையுள்ள பூரணத்தை யறியாமாண்பர், வாமப்பால்வகையறியா மடையர் மெத்த வஞ்சருடன்சொல்லாதே மனத்தைப்பாரே. 29

பூரணதரிசனமகிமை.

மனமானபூரணத்தையார்தான்காண்பார் மகத்தானகுருசொல்ல அறியவேணும், இனமானவாசியைத்தா னார்தான்காண்பார் இயல் பானயோகிசொல்ல அறியவேணுங், குணமானகுண்டலியைக் கண் டால்மைந்தா குருவானபதிதலத்திற்கூடலாகுங், கனமானகண்டமதி லங்கென்றோட்டு கருத்துறவேகுறியைமெள்ளக் கருதிப்பாரே. 30

பார்க்கவென்னதீபவொளிபளிச்சென்றேதான் பன்பாகக்காணு மப்போகண்தான்கூசும், மார்க்கமுடன்கண்கடுத்துக்கூசிற்றானால் மரு மட்டிமெள்ளவுருட்டியேகுறியிலேறு, ஏற்கையுடனிப்படியேபழக்க மானால் என்னசொல்வேனந்திப்பிரகாசமப்பா, சேர்க்கையுடன்ஆகா ரம்உகாரம்கொண்டுந் தினந்தோறுஞ்செபித்தவனேசித்தனாமே. 31

காலவளவு கூறல்.

தித்தனாயிருப்பதற்குஆகாரதீட்சை செபித்திடுவாயாண்டொன் றில்தவிராமற்றான், முற்றுதலாய்தினந்தோறும்பழக்கமானால் மூலத் திற்கினிதானமுயன்றுகாணும், பற்றுதல்விடாதப்படி நின்றாயானால் பாலகனேமூலவன்னி அகன்றுபோகும், அற்றுதடாஅசதியெல்லா மகன்றுபோகு மறுசுவையின்வீறெல்லா மகன்றுபோமே. 32

போனபின்பு உகாரத்தைமருவியேறு புத்தியுடனாண்டொன்றி லதின்மேல்தானும், ஆனபின்புநீர்கடுத்து வெட்டைமீறு மாக்கை தனில்வாய்வுநின்று பித்தமீறும், ஊண்சுவையில் மனம்வெறுத்து திசைத்துக்காட்டு முத்தமனேயிப்படிநீ யிருக்குதென்று, கோனரு ளைப்புலத்தியனே விட்டிடாதே கொண்டுமெள்ளஏற்றிவிடு வினைநில் லாதே. 33

வினையானபீடையது பிலத்துதானால் வேணபடிகற்பமதை விரும்பியூட்டு, கனையானசூனையெல்லா மோடிப்போகுஞ் சுந்தரம்போ லுன்தேகந்துலங்கும்பாரு, முனையானசுழிமுனைமேல் வாசியேற்று மூவுலகுங்காணுதற்கு முனைமேல்நில்லு, துணையான சற்குருவைத் தொழுதுபோற்று தொழுகைவிட்டுத்தொழுதாக்கால் மனமேயாமே.

பேய்பிடித்துச்சாத்திரத்தை யுலகத்தோர்கள் பேணியேபடித் திடுவார்குருவைக்காணார், வாய்புழுத்தநாய்போலே யுலகத்துள்ளே வணக்கநெறியறியாமல் மாண்டுபோனார், நோய்பிடித்தசித்தர்கள் தா னனந்தமுண்டு நோக்கியேயவர்களிடம் பேசவேண்டாம், தாயறியாப் பிள்ளைஇடஞ் சொல்லவேண்டாந் தண்மையுடன் பூரணத்தைப் போக்குவாயே. 35

சடாட்சரமகிமை.

தண்மையுடன்சடாக்ஷரத்தின்மகிமைகேளு தயவாகஅறுகோண மிட்டுநன்றாய், உண்மையுடன்ஓம்நமசி வாயமென்று உறுதியுள்ள கோணமதிலுகந்துபோடு, நன்மையுடன்சரவணபவ வென்றேதட்டு நாட்டடாகோணமதின் சுற்றில்தானே, உண்மையுடன்வட்டமிரன் சூலமிட்டு வுள்விந்துதானெழுதி யோகம்போடே. 36

போட்டவுடன் ரேசகபூரகமும்பண்ணி புனிதமுடன்கும்பகத் தில்நின்றுகொண்டு, நாட்டமுடன்மனதுறைத்துச் செபித்தாயானால் நலமானமுருகனுமே பிரகாசிப்பான், தோட்டமுட னவர்பதமே பணிந்துபோற்றி சிவாயகுருதேசிகனே சிவமேஐயா, பூட்டுமுனை திறவுகோல்திறக்கவென்று புனிதமுடன் தாவெனவே தருவார்பாரே

### விநாயகசக்கரம்.

பாரப்பா கணபதியின்திறத்தைக்கேளு பாங்கானமுக்கோண மிட்டுக்கொண்டு, நேரப்பாஅதினடுவேஓங்காரம்போட்டு நினைவாக அதினடுவேயகம்போட்டு, காரப்பாசதாசிவத்தைக்கருத்திலுாணிக் கருணையுள்ளகணபதியே நமாவென்றேதான், கூரப்பாகுருபதத்தில் நின்றுகொண்டு கூர்மையுடன்செய்திடவேவருவார்பாரே. 38

பாரானகணபதிதான் பிரகாசித்தால் பாங்காகஅவர்பதத்தைப் பணிந்துபோற்றி, நேராகநின்றநிலை தன்னைக்கண்டு நினைவுடனே கேட்டதெல்லா மீவார்பாரு, கூறானகுண்டலிதான் பிரகாசித்தால் குணமான அஷ்டசித்துங்கைக்குள்ளாகும், வீறானபுத்திகளுஞ்செம் மையாகும் வேண்டுவதுக்கிவர்திறந்தான் வேணும்பாரே. 39

### மானதபூசை.

பாரப்பாமானதமாம் பூசைகேளு பருவமுடன்கால்முகங்கள் சுத்திபண்ணி, சேரப்பாவிபூதியைத்தான் உத்தளமாய்ப்பூசி சித்த மனதொன்றாக அறிவிற்பூண்டு, நேரப்பாநின்றநிலை தவிராமற்றான் ரேசகமாய்ப்பூரணத்தை நினைவாயோட்டிக், காரப்பாகும்பகத்தில் நின்றாயானால் கருணையுள்ளசிவபூசை கோடியாமே. 40

கோடியென்றாலெத்தனையோ கோடிகாணுங் கூர்மையுள்ளமா னதமாம்பூசைநேர்மை, பேடிகளாய்திரிந்ததினால்வருவதேது பெண் மயக்கங்கொண்டதினாற் காண்பதேது, நாடினதாய்நன்றாகநாடவேணு நாட்டிலுள்ளதபோதனரை வணங்கவேணும், வாடிமனந்திரிந்ததனா லென்றுங்காணாய் வஞ்சருடன்சொல்லாதே மவுனம்பாரே. 41

மவுனமென்றபொருளதிலேமனத்தையூணு மனதாகபூரணத்தை வணங்கிநில்லு, கெவுனமுடன்பூரணத்தில் நின்றாயானால் கேளடா அஷ்டசித்துங்கைக்குள்ளாகும், பவுனமென்றகுண்டலியின் நன்மை யாலே பரர்பரத்தின்கிருபையினாற் பரிவாய்க்காணும், அவமான புத்திதன்னை நினைந்தாயானால் அடிமுடியும் அம்பரத்தை அகன்று போமே. 42

### இரவிமண்டலம்.

அகலாதசூரியன்தன்மண்டலத்தைக்கேளு அகாரமுடன்உகார மதையணைத்துக்கொண்டு, பகலானவுதயமதில்ககாரந்தன்னைப் பருவ முடன்கும்பகத்தைப் பணிந்தாயானால், ஜெகமுழுதுமாடிவருஞ் சூரி யன்தானப்பா சிவசிவாபிரகாசங்கோடிரவிக்கொப்பாம், இகலானமன துகந்தால்சித்தியாகும் இருள்கண்டுவெளியாகு மனதைப்பாரே. 43

மனதாகச்சந்திரன்தான்சூரியனிற்சென்று வாறதும்போறதுவ் மப்போகாணும், இனமானசந்திரன்தான் சூரியனேயாகும் இன்ப முள்ளசூரியனே சந்திரனாயிருக்கும், கனமாகநிலைத்ததுதான் சூரி யனேயப்பா கண்டதொருசந்திரனே யெங்கேயென்றால், தனதாகச் சத்தியிடமிருந்தாரையா தானவனாய்நின்றதுதான் ரவியுமாச்சே. 44

## பஞ்சபூசாதிவகையுரைத்தல்.

ஆச்சப்பா பிருதுவிதானப்பைக்கொள்ளு மப்பதுதான் மீறியல்லோநெருப்பைக்கொள்ளும், பேச்சப்பாநெருப்பதுதான் வாய்வுகொள்ளும் பேரானவாயுவுதானெங்கேயென்றால், போச்சப்பா ஆகாசந்தன்னில்நின்று புகழானவிந்துவெனவளர்ந்துதையா, நீச்சப்பா விந்துவது நாதமாச்சு நிலைத்துதடா நாதமென்ற பொருள்தான் போச்சே. 45

பாங்கானநாதமதில் விந்துசேர்ந்து பரப்பிரமரூபமெனப்பாரின் மீதே, நீங்காதமாய்கையொடுவளர்ந்துதப்பா நிலைத்ததொருபகுத்தறிவினினைவினாலே, தீங்கானமாய்கையெல்லாமறுத்துத்தள்ளிதெசதீட்சையேறுதற்குக் குருவைத்தேடு, ஓங்காரகம்பமதில் மனத்தை வைத்து ஒருமித்தேன்குருபதத்தி லொருமித்தேனே. 46

## முப்பூவிபரம்.

ஒருமித்தமுப்பூவின்விபரங்கேளு வுண்மையுடன் பூமியுடநாதம் வாங்கித், தருமித்தகிறுநீறும்பாண்டத்திட்டு தயவானவுவர்ப்பூவையதிலேபோட்டு, சருவுற்ற பாண்டமதைப்பதனமாகக் கருவாக்ஞாயிறுமுன்வைத்திடப்பா, மருவுற்றவுவர்ப்பூவைக் கரைத்துநீயும் வாரடாமறுபாண்டந் தன்னிற்றானே. 47

தானேதான்பத்துமுறையிந்தவிதஞ் சமர்த்தாகமுடிந்தவுடன் சொல்லக்கேளு, வீணேதான்திரியாதே யிந்தவுப்பில் விபரமுடனிடைக்கிடைதான் வீரம்பூரம், தேனேதான்முப்பூவு மொன்றாய்க் கூட்டி செம்மையுடனறுநீரால் கலவத்தாட்டி, கோனருளாலுருட்டியதைவட்டிபண்ணி, கொடுமையுள்ளரவிமுகத்தில்வைத்திடாயே.

வைத்திடுவாயரவிமுகத்தில்நீறுமட்டு மைந்தனேபத்தெருவில் புடத்தைப்போடு, மெய்த்திட்டசுன்னமாமென்னசொல்வேன் மெய்யானசின்னமதைப்பதனம்பண்ணிக், கைத்திட்டமாகவேசவுக்காரத்தைக் கருவாகஎடுத்துவந்துகலசத்திட்டு, மைத்திட்டமானசிறுநீரைவிட்டு மைந்தனேரவிமுகத்தில்வைத்துப்போற்றே. 49

போற்றியேரவிமுகத்தில் வைத்தபின்பு பூரணத்தையுடன் சேர்த்துபூரம்போட்டு, கூட்டியேகரைத்துநல்ல அடுப்பிலேற்றிக் குமுறவேவைத்தெரிப்பாய் வற்றுமட்டுஞ், சாத்திகமாய்த்திரியாமலெடுத்துப்பாரு தன்மையுள்ளசவுக்காரஞ்சுன்னமாகும், நாற்றிசையுமெய்க்குமிந்தசவுச்காரத்தை நன்மையுடன்பதனமாய்வைத்திடாயே.

வைத்தபின்புசிறுநீரைப் பாண்டத்திட்டு மைந்தனேரவிபீசங்கூடச்சேர்த்து, நைத்தபின்பு அடுப்பேற்றித்தீயைமூட்டி நன்மையுடன்நீர்வற்றி உப்பால்நிற்கும், கைத்ததொருநீருப்பைப் 'பதனம் பண்ணு கசடருடனீகருவைக் கருதவேண்டாம், புத்தியுடன்பெரியோரைத்தொண்டுபண்ணி பூரணத்தைபற்றிமனதறிவில்நில்லே. ()

நில்லப்பாசுழிமுனையில்வங்கென்றோதி நிலையானமூலமதில் சிங்கென்றோது, செல்லப்பாகண்டமதில்அங்கன்றேதான் திரமானஈராறுமடங்கும்வீட்டில், அல்லப்பாசொல்லுகிறேனீராறுந்தா னமர்ந்திருக்குங்குருபதத்திலருளைப்போற்றி, வில்லப்பாநானேற்றிச் சரந்தொடுத்தாப்போல் விசையான்சுழிமுனையில்மேவிப்பாரே. 52

பாரப்பா இரவிமதிசுடர்மூன்றுப்பில் பண்பாகவகைக்கொருபலத்தைவாங்கி, சேரப்பாகலவத்திலிட்டுமைந்தா சீக்கிரமாய்மூன்றுமொன்றாய்ப்பொடித்துக்கொண்டு, வாரப்பாசெயநீரைவிட்டுமைந்தா வார்த்தநீர்வற்றுமட்டுங் கலவத்தாட்டு, காரப்பா ஈராறுசாமமட்டுங் கனலெழும்பநன்றாக ஆட்டித்தீரே. 53

ஆட்டியதோர்முப்பூவைவட்டுபண்ணி ஆதித்தன்முன்பாரவுலரப்போட்டு, வாட்டுறவுஇல்லாமலெடுக்கவேண்டாம் வரிசையுளவட்டதுவுங்கண்ணிலிட்டாக்கால், தாட்டிகமாய்வட்டதுவைப் பதனம்பண்ண சமரசமாய்க்காற்றிலர்விடத்தில்தானு, மூட்டடாறுடெறுவில்புடந்தான்போட்டு முக்யமுளவுப்பதுவுஞ்சுன்னமாச்சே. ()

## பூநீற்றுக்கட்டு.

ஆச்சப்பாயின்னமொருவிபரங்கேளு அருளானபூநீறுஅன்பாய்வாங்கி, பேச்சப்பாவொன்றுமில்லை சுத்தசலந்தன்னில் பேணியேகரைத்திறுத்து ரவிமுகத்தில்வைத்து, காச்சப்பாஇப்படியே பத்துமுறைமட்டுங் கருவானபூநீறுகட்டிப்போகும், போச்சப்பாவூறலது போச்சுபோச்சு புதுமையுள்ளபூநீரைப் பதனம்பண்ணே. 55

பதமானகாரமுடன் சாரம்ரெண்டும் பக்குவமாயொன்றாக்கி ரவியிற்போட்டு, சதமாகக்காய்ந்தபின்புசாரஞ்சேரு சாதகமாய் ரவிமுகத்தில்பின்னும்வைத்து, நிதமாகயிப்படியே பத்துமுறையப்பா நிச்சயமாய்ச்செய்துவிடு நினைவாய்த்தானும், விதமாகக்கட்டியதுவுப்பாய்ப்போகும் விருதுபெற்றவுப்பதுதான் சொல்லக்கேளே. 56

கேளப்பாகட்டியதோர்பூநீறென்று கிருபையுள்ளகளிச்சுன்னமிடையேசேர்த்து, கேளப்பாவீரமொடுபூரங்கூட்டி கெடியாகக்கலவத்திலிட்டுக்கொண்டு, நீளப்பாசெயநீரால்விட்டுஆட்டி நிச்சயமாய் ஈராறுசாமமாட்டு, தேளப்பாகொட்டியதுபோலேவேசஞ் சிவசிவா என்னசொல்வேன்வட்டுபண்ணே. 57

பண்ணப்பாவட்டது நன்றாப்பண்ணி பரிதிமுகமுன்பாகப்பதியவைத்து, நண்ணப்பாசூரியனைப் பணிந்துபோற்றி நன்றாகக்காய்ந்தபின்புவோட்டில்வைத்து, மண்ணப்பாமேலோடுபொதியமூடிமக்களேமண்சீலையேழுஞ்செய்து, உண்ணப்பாபத்தெருவில் புடத்தைப்போடு ஓகோகோகடுங்காரஞ்சுன்னமாங்சே. 58

## சவுக்காரக்கட்டு.

ஆச்சப்பா இன்னமொருவிபரங்கேளு அருளானசவுக்காரக்கட்டிவாங்கி, மூச்சப்பா ஓடாமல்கலசத்திட்டு முக்கியமுள்ளகார

முடன்சாரஞ்சேர்த்து, காச்சப்பா அடுப்பேற்றி நன்றாய்க்காச்சு கருணையுள்ளசவுக்காரத் தெண்ணைபோகும், பேச்சுப்பாஎன்றுமில்லை சவுக்காரந்தான் பிலமாகக்கட்டியது செத்துப்போச்சே. 59

கர்ப்பூரக்கட்டு.

போச்சப்பா கற்பூரக்கட்டிவாங்கிப் புதுமையுள்ளசெயநீரில் தோய்த்துத்தோய்த்து, காச்சப்பாரவிமுகத்தில் நன்றாய்க்காய்ச்சு கருவாகஇப்படியே பத்துமுறைகாச்சு, மூச்சப்பாவொடுங்கியது ஒடுங்கிப்போகும் முக்கியமுள்ளவிளக்கொளியில் பிடித்தாயானால், ஆச்சப்பாதீபமது அதிலொட்டாது அன்பாகக்கட்டியது முழுக்கட்டாமே. 60

துரிசிக்கட்டு.

கட்டானதுரிசியொரு கட்டிவாங்கிக் கருவானபாரையுப்பை யதின்மேல்பூசி, மட்டாகசெயநீரால்தோய்த்துத்தோய்த்து மைந்தனேயக்கினியில்வாட்டுவாட்டு, இட்டமுடனிப்படியே பத்துமுறை வாட்டு இறுகியது துரிசதுவும்வெளுத்துக்கட்டும், சட்டமுடனித்துருசைப்பதனம்பண்ணு சண்டாளர்க்கிந்தமுறை சாற்றவேண்டாம்.

முக்கட்டுச்சுன்னம்.

சாற்றக்கேள்சவுக்காரங்கற்பூரந்தான் தயவானதுரிசதுவுமூன்றுங்கேளு, பார்த்தல்லோமூன்றுமோரிடையாய்ச்சேர்த்துப் பக்குவமாய்கலவத்திலிட்டுமைந்தா, வார்த்தரைக்க அறுவகையுந் தன்னாலாட்டு மைந்தனே முப்பத்திரண்டுசாமம், சாற்றாலேதானரைத்து வட்டுபண்ணி தளரவேரவிமுகத்தி லுலர்த்திடாயே. 62

உலந்தபில்லைஓட்டில்வைத்துஓடுமூடி உத்தமனே மண்சிலையே மூஞ்செய்து, அலர்ந்தவொருஎருவடுக்கிபுடத்தைப்போடு அப்பனே ஒருமித்துசுன்னமாகும், வளர்ந்தவொருநீயாறுஎடுத்துப்பாரு வடுகனுக்கும்கணபதிக்கும் பூசைபண்ணி, மலர்ந்தபூச்சுன்னமப்பா கொடியவேக மாசற்றசுன்னமதைப் பதனம்பண்ணே. 63

முப்பூச்சுன்னம்.

பண்ணப்பாவெடியுப்புசீனக்காரம் பாங்கானகல்லுப்பு மூன்றுமொன்றாம், கண்ணப்பாகலவத்தி லிட்டுக்கொண்டு கருவானவெடியுப்புநீராலாட்டி, விண்ணப்பாரவிதனிலேகாயவைக்க விதமாகவுருட்டியதைவட்டுபண்ணே. 64

பண்ணியதோர்வட்டதனை யோட்டில்வைத்துப் பக்குவமாய்க் காயவைப்பாய்பருதிதன்னில், புண்ணியனேவட்டதுவுங் கனீலிட்டாக்கால் புதுமையுடன்ஓட்டில்வைத்து சீலைசெய்து, நண்ணிவே அஞ்சுபத்துஎருவிற்றானும் நாட்டியேபுடம்போடு வெளுத்துநீறும், தன்மையுள்ளசுன்னமதாய் நீறிப்போகுந் தயவானசுன்னமதைப் பதம்பண்ணே. 65

கருவங்கச்சுன்னம்.

பதமான இன்னமொருசுன்னப்போக்கு பக்குவமாய்ச்சொல்லு கிறேன்புலத்தியாகேள், இதமானகருவங்கம்ரசமுஞ்சேர்த்து இன்ப முள்ளவிந்துவுடநாதங்கூட்டி, சதமானவீரமுடன் பூரஞ்சேர்த்து சாதகமாய்க்கலவத்திலிட்டுக்கொண்டு, விதமாக அறுவகைநீர்தன்னு லாட்டு விசையுடனேயீராறுசாமமாட்டே. 66

ஆட்டியதோர்வட்டதனைவட்டுபண்ணி அப்பனேரவிமுகத்தில் நன்றாய்வைத்து, நாட்டியேகாய்ந்ததொருவட்டுதானும் நன்மையுடன் காயந்துகணீ விட்டால்மைந்தா, தாட்டிகமா யோட்டில்வைத்துச் சீலைசெயது தன்மையுடனாறெருவில்புடத்தைப்போட்டு, பாட்டதி கஞ்சொல்லவில்லைஅப்பாகேளு பண்பாகநீறியதுசுன்னமாச்சே. 67

கர்ப்பூரச்சுன்னம்.

ஆச்சப்பாஇன்னமொரு விபரங்கேளு அன்பான கற்பூரக்கட்டி வாங்கி, பாச்சப்பாரவிமதியுங்கூடச்சேர்த்து பரிசுடையவீரமுடன் பூரங்கூட்டி, காச்சப்பாகலவத்திலிட்டுக்கொண்டு கனலெழும்பஈராறு சாமமாட்டி, பாச்சலதுசெய்யாமல்வட்டுபண்ணி மைந்தனே ரவி முகத்திலுலர்த்திடாயே. 68

உலர்ந்தபில்லைதனையெடுத்து ஓட்டில்வைத்து உத்தமனேமே லோடுபதியமூடி, தளர்ந்ததுவும்போகாமல்மண்ணுஞ்செய்து தரணி தனில்ஒருமுழத்தில் குழிதான்வெட்டி, உயர்ந்ததொரு எருவடுக்கி புடத்தைப்போடுஉத்தமனேபுடமாறிஎடுத்துப்பாரு, மலர்ந்ததொரு பூப்போலேசுன்னமாகு மாசற்றசுன்னமதை வைத்துப்போற்றே.

கெந்தகச்சுன்னம்.

போற்றவேயின்னமொரு புதுமைகேளு பொல்லாதகெந்தகந் தான்பலமும்வாங்கி, காட்டியதோர்விந்துவுடனாதங்கூட்டி கருவான வீரமுடன் பூரஞ்சேர்த்து, வாட்டமிலாக்கல்வத்தி லிட்டுமைந்தா வகையாகஅறுவகைநீர்தன்னாலாட்டி, தாட்டிகமாய்வழித்துவைத்து பில்லைதட்டி தன்மையுடன்ரவிமுகத்திலுலர்த்திடாயே. 70

உலர்ந்தபதமென்னவென்றால் கணீவிட்டாக்கால் உத்தமனே ஓட்டில்வைத்துச்சீலைசெய்து, அலர்ந்தமலர்க்குருபதத்தைத் தொ ண்டுபண்ணி அளவுடனேபுடம்போடச்சுன்னமாகும், மலர்ந்தசுன் னந்தனையெடுத்துப்பதனம்பண்ணி வாசமுள்ளசுன்னமடா மைந்தா கேளு, சலந்துமிகவாடாதேபதனம்பண்ணு சதாநித்தஞ்சதாசிவத் தைப்பணிந்துபோற்றே. 71

போற்றுவது ஆரையென்றால் பூரணத்தைமைந்தா புதுமை யுள்ளி பூரணமேதெய்வம்தெய்வம், நாட்டுவதுசுழிமுனையில் காசி யைத்தா னன்மையுடன்பூரகமேசெய்யவேணும், தேட்டமுடன்சுழி முனையில்சேர்ந்தால்மைந்தா சிவசிவாசிவயோகிசீவன்முத்தன், தாட் டிகாயடிமூலமூலாதாரந் தன்மையுடன்சார்ந்தவனேதவசியாமே. ()

பூமிநாதம்.

ஆமப்பாயின்னமொரு விபரங்கேளு அன்பானபூமியுட நாதம் வாங்கி,நாமப்பாசொல்லுகிறோம்விந்துநீரால்நன்றாகக்கரைத்திறுத்து ரவியில்போடு, தாமப்பாநன்றாகக்காய்ந்துதானால் கருவாகப்பத்து முறையிப்படியேகாச்சு, வாமப்பால்தன்னாலேகட்டிப்போகும் மகத்தான பூவப்பாசிவமதாச்சே. 73

செயநீர்.

ஆச்சப்பாசத்தியென்ற பூரணந்தான் அருளானபீங்கானில் வாங்கிமைந்தா, பாச்சப்பாசிவந்தனிலேஎட்டிலொன்று பக்குவமாயீந்தவுடன்பருவம்பாரு, தேச்சப்பாவொன்றுமில்லை சிவமாய்ப்போகும் பெலமானசெயநீரால்வீரம்பூரம், தேச்சப்பாசெயநீரில்பொடியைத்தூவி சிவசிவாரவிமுகத்தில்வைத்திடாயே. 74

வைத்ததொருசெயநீரில்காரமேரி மகத்தானகொடிதாகநீறதாகும், கைத்ததொருசெயநீரைப்பதனம்பண்ணி கருவானகாசியென்ற குப்பிதன்னில், புத்தியுடன்குருபதத்தைப்பூசைபண்ணி செயநீர் தன்னில், பக்குவமாய்செய்த்தொழிலைப் பகரக்கேளே. 75

கேளப்பாஇச்சலத்தில்துரிசுலிங்கம் கெவுரிசிலைதாரவெள்ளைப் பூரம்வீரம், நாளப்பாதுவைத்துரவி முகத்தில்மைந்தா நாளாறு தினத்திலதுகட்டிப்போகும், மாளப்பாஇச்சலத்திலெச்சரக்குமாளு மைந்தனே இந்நீரிவின்னங்கேளு, கேளப்பா ஒன்றுமில்லை செயநீர் தன்னை குணமாகநிபீங்கானில்வார்த்துக்கொள்ளே. 76

கொள்ளப்பாநாகமொடுவங்கமீயங் குருவானரசமுடனேகாந்தந் துத்த, மெள்ளப்பா ஓட்டில்வைத்துசுருக்குத்தாக்க வேகமதுதானடங்கிக்கட்டிப்போகும், வில்லப்பாதனக்குநாணேற்றினாப்போல் வெகுவேதைசணவேதைவிகிதமாகும், அல்லப்பாசொல்லுகிறேன் மனதடங்கிநில்லு அன்பாகக்குருபதத்திலருள்தானேக்கே. 77

நோக்குவது பூரணத்தால்நோக்கவேணும் நுண்மையுடன்மனதடங்கிநிலைக்கவேணும், வாக்குமனதொன்றாகிநிற்கவேணும் வஞ்சமனக்கசடகற்றிமனதுபூண்டு, ஆக்கைநிலைதனையறிந்துகுருவைக்காரு ஆனந்தமதியமுதமன்பாய்க்கொள்ளு,நாக்குநுனிபதிவுமிகநன்றாய்ப் பாரு நாதாந்தப்பேரொளிவைக்காருகாரே. 78

யோகமுறைகூறுதல்.

காரப்பாயேக்திரமாங்கிரியிற்சென்று கருணையுள்ளபூரணத்தில் கருத்தைதவைத்து, பாரப்பாசக்கரத்தில்நின்றுகொண்டு பாலகனே நந்திகண்டால் வாதங்காணும், வீரப்பாசொல்லுகிற வார்த்தையினாலென்ன விருதாவில்சுடுகாட்டுப் பிணமாய்ப்போவார், சேரப்பா மூலத்தைஒளிகாணமட்டுஞ் சேர்ந்துநீசுழிமுனையில்சிறக்கநில்லே.

நின்றதினால்மனதொடுக்குங்காற்றாடாது நேரறிந்துகுருபதத்தைநினைவாய்க்காரு, பண்டுவினைதானகலும்பயமேயில்லைப் பார்க்

கையிலேஆதாரந்தோணுந்தோணுஞ், சென்றுநீயவ்விடத்தில்சென்றுகொண்டு சிவசிவாசித்திஎல்லாந்திரமாயாடு, நன்றனமனதைவிட்டுக்காத்தாயானால் நலமில்லாச்சுழுத்தியுள்ளேயழுத்துந்தானே. ()

தானென்ற வாசியினால்குருவைக்காரு தண்மைவிட்டுஇருந்தினாலென்றுமில்லை, ஊனான ஊனறிந்துவுண்ணவேணும் உண்மையுள்ளசத்திசிவங்காணவேணும், தேனான அமுதமதுகொள்ளவேணுந் தெளிந்தங்கே தோகமுடனிருக்கவேணுங், கோனானகுருஞானந்தெளிந்துமைந்தா கூர்மையுடன்சுழிமுனையைக்கூர்ந்துபாரே. 81

பாரானமண்ணாசைதள்ளினாலும் பண்பானதீனியுட னாசையாலும், பேரானபெண்ணாசைதள்ளினாலும் பிலத்ததொருதிரோதையின்கூற்றினாலும், கூறானமண்ணாசைக்கொடுமையாலும் கூற்றான காமத்தின்கொடுமையாலுங், தேறுமலிந்தாசைக் கொண்டபேர்கள் சிவசிவா சீவகளைத்திறங்காணாரே. 82

சீவகளைதனையறிந்தால்பாடிவிக்குஞ் சிவசிவாவரிசையுடனுண்ணப்பண்ணுஞ், சீவகளைதானறிந்துஎட்டுநாலுஞ் சிவசிவாபுலப்பட்டுநாலும்பாழாம், சீவகளைமதிபோலேசீரணித்து செகத்திலேமாணிடர்கள்மாண்டாரையா, சீவகளையானதுவேமூலமூலஞ் செம்மையுள்ளகதிரானவன்னிதானே. 83

தானென்றபாத்தினுடஅடிதானென்பார் தன்மையுடன்அகாரமுதல்சோடசமாய்நிற்கும், வானென்றநாகமது கண்டத்திற்காணுமகத்தானவாயுவுக்குவுகந்தவீடு, வூனென்றபஞ்சகர்த்தா ளிருக்கும்வீடு விற்பணமாஞ்சத்திசிவ மொடுங்கும்வீடு, தேனென்றமதியமுதஞ்சொலிக்கும்வீடு, சிவசிவாசீவகளையிருந்தவீடே. 84

## கொள்ளும்பொருள்.

வீடறிந்துமந்திரத்தை நிறுத்தவேணும் வீட்டிலுள்ளபேர்களையும்விரும்பவேணும், நாடறிந்துநல்லபதங்காணவேணு நன்மையுள்ளசத்திசிவபூசைவேணும், கூடிருந்துகுழிபாதங்காணவேணுங் குருடரைப்போலிருந்தாக்கால் குணமோமைந்தா, தேடறிந்தால்சற்குருவைத்தேடவேணுஞ் செகசாலமாய்கையெல்லாந் தள்ளுதள்ளே. ()

## தள்ளும்பொருள்.

தள்ளுவதுஆரையென்றால்குணமில்லாரை சற்குருவையறியாத சமயத்தோரை, கள்ளுஅபின் சாராயங்கொண்டபேரைக் கஞ்சாவுமீனிறைச்சிகலந்தபேரை, உள்ளுணர்ந்துபாராத உலுத்தமாண்பர் உத்தமரைத்தூஷணித்தவுருட்டுமாண்பர், நல்லுணர்வுஇல்லாத அசடர்மெத்த நாட்டிலேயவர்களைநீ யறிந்துதள்ளே. 86

## ஆகாசஜெயநீருப்பு.

அறிந்துகொண்டு ஈந்தாலேரவியைக்கட்டு அந்தரவிபூரணத்திலணுவாய்ப்போகு, முறிந்தரவிபூரணத்தில்பட்டபோதே முக்கியமுள்ளஜலமாகிஜெயநீராகி, செறுந்ததொருசெயநீரைப்பீங்கான்தன்

னில்சீராகவிட்டு ரவிமுகத்தில்வைத்தால், பொறிந்தவொரு பொறி போலேயுப்பாய்நிற்கும்புதுமையுள்ள வுப்பதனைப்பதனம்பண்ணே.

பதமானவுப்பெடுத்துக் கொண்டால்மைந்தா பக்குவமாயறுசு வையுங்கழன்றுபோகும், சதமானபூரணத்தைப்பால்பாரு தருவா னகற்பகம்போல்கற்பமாகும், அதமானவியாதியெல்லா மதமாய்ப் போகும் ஆனந்தமயமான அரூபமாகும், மதியானமாய்கையெல்லா மற்றுப்போகு மந்திரபஞ்சாட்சரத்தைமருவிப்பாரே. 88

பஞ்சாட்சரமகிமை.

மருவிநின்றஜனங்களுக்குமஞ்சுபூதம் வாகானதேவதைக்குமஞ் சுபூதம், தருவானவொளியெல்லாமஞ்சுபூதந் தாக்கானஅண்டமெல் லாமைந்துபூதம், குருவானசதாசிவத்துக்கைந்துபூதங் கூறுனஅஞ் செழுத்தாலெல்லாமாச்சு, துருவமுடன்வேடமிட்டுநீறுசாற்றி துன்ப வினைதீராமல் துடிகொண்டாரே. 89

முப்பூவின்பெயர்.

துடிகொண்ட முப்பூவின்விபரங்கேளு சோதியுப்புஆதிதனைச் சொல்லக்கேளு, முடிகொண்டவழலையென்றுங்கல்லுப்பென்று மூனை யாகசுழினையென்றும் வண்ணுனென்றும், படியானபடிகியென்றுங் குடுகுடானைப் பங்கயத்தின்பூவென்றும் பாருப்பென்றும், வடிவான ஆகாசபுரவியென்று மகத்தானமவுனமென்றும் வயங்கும்பேரே. ()

பேர்கொண்டவடிவானவிந்துவென்றும் பிலத்தநீருப்பென்றும் வாரிதிதானென்றும், கார்கொண்டமேகமென்றுங் கங்கையென்றுங் கருவானவூசிநீருப்பதென்றும், சீர்கொண்டவென்சாரை சாரமென் றுஞ் சியமென்றுங்கருவேம்பின்சாரமென்று, மூர்கொண்டசயிலமெ ன்றுஞ்செவநீரென்று முத்தமனேதிராவகத்திலுண்மைதானே. ()

உண்மையுள்ள அடியென்றுஞ்சத்தியென்று முவரானவுவரென் றுஞ்சருகதென்றுந், தன்மையுள்ளபூமியுடநாதமென்றுஞ் சங்கையு ள்ள பிருதிவியின்காரமென்றும், புன்மையுள்ளபூரமென்றும் புழுக தென்றும் பொல்லாதவிஷமியென்றும் போதமென்றும், பண்புள்ள சில்லென்றுங்களியுப்பென்றும் பாங்கானபூரணத்தினுப்பின்பேரே.

முப்பூமகிமை.

உப்பானமுப்பூவின் விபரஞ்சொன்னேன் உகமையில்லாமுப்பூ மூன்றுமுப்பூ, அப்பாகேள்முப்பூவும்பிர்மாவிஷ்ணு அரகாருத்தி ரனுமாகிநின்றார், தப்பாதமுப்பூவையாவர்காண்பார் தன்மையுள்ள பெரியோர்களறிவார்பாரு, முப்பானமுப்பூவுமாதியிலே குருவாய் முடிந்திருக்குதென் றறியார்மூடர்தானே. 93

தானென்றமூடர்கள்தா னுப்பெடுக்கவென்று தயவானமுப்பூ வைப்பேதனமேசெய்வார், ஊனென்றமுப்பூவையறியார்மூடர் ஊசி நீர்தனில்கரைத்துரவியில்வைப்பார், தேனென்ற பூரணந்தான்மயங்

கிப்போகுஞ் சிவசிவாகாரமெல்லாஞ்செத்தேபோகும், மானென்ற பூப்பாத்தால்மயங்கிப்போவான் மனமடங்கும்பூவையார்முடிப்பார் சொல்லே. 94

சொல்லானமுப்பூவைபுலகத்தோர்கள் தொழுதுமேயதின்விப ரந்துலங்கமாட்டார், அல்லலதைச்செய்துவைத்து அலைந்துபோவார் அமுதமென்றபக்குவத்தை யார்தான்காண்பார், கல்லல்செயும்பாவி கள்தான் வெவ்வேறுப்பு கலந்தெடுக்கவேணுமென்று கழுதைமாண் பர், குல்லல்செய்துகுழம்பிமிகச் செத்தேபோனர் குலமானவுப்பி னுடசெயல்காணரே. 95

செயலறியாப்பாவிகளைச்சேர்க்கவேண்டாஞ் செய்வினைகள்தீராத கழுதைமாண்பர், மயலாசைதனைப்பிடித்துவாதமார்க்க மகத்தான பூரணத்தை யல்லல்செய்வான், தயவானகல்லுப்பை நொருக்கிக் கொண்டு தானரைத்துப்புடம்போட்டுத்தயங்கிப்போவான், துயவான கயவர்கடாமெத்தவுண்டு தொல்லுலகிலிந்நூலைத்துலங்கிடாதே. 96

## நூற்பெருமை.

இந்நூல்தானுயிரத்து இருநூறுக்குள் ஏகநிறமயமானகருவைச் சொன்னேன், தன்மையுடனிந்நூலைப் பதனம்பண்ணு சாயுச்சியபதவி யடா இந்தநூல்தான், உண்மையுடனூலெடுத்து ஒடுக்கந்தன்னில் உண்மையுடன்மவுனந்தா னுகந்துபாரு, நன்மையுடன்மனதுகந்து பார்த்தாயானல் நல்லபதமுண்டாகும்நாடிப்பாரே. 97

நாட்டமில்லாமூடருடன்சொல்லவேண்டாம் நல்லகுணமில்லாரை நாடவேண்டாங், கூட்டமிட்டுக்கல்லலிடுங் குறும்பர்மெத்தக் கூத்தா டிச்சிலம்பதுபோல் குறும்புசெய்வார், வாட்டமிலாக்கருணைபெறுந் தேவிவாலை மகத்தானபூரணத்தின் மகிமைதன்னை, தேட்டமில்லா வம்பரிடஞ் சேரவேண்டாஞ் சேர்ந்தாக்கால்பூரணத்தின் செயல் காணதே. 98

காணதபூரணத்தின் கருவினலே கருணையுள்ளகயிலாச மேரு தன்னை, கோணதேநின்றநிலை குறித்துக்கொண்டு குணமாகரேசக பூரகமும்பண்ணி, வானனகும்பகத்தில் மனதுபூண்டால் மகத்தான சிவயோகமாகுமாகுந், தேனனமதியமுதச் செயல்தன்னலே சிவசிவா சிவயோகத் திறந்தான்பாரே. 99

## பஞ்சபூதமெழுகு.

பாருனபிருதிவியு மப்புங்கூட்டி பங்கயத்தின் மேலேறிப்பதிவு மாகித், தேருகத்தேய்வுடனே வாய்வுரெண்டுஞ் சேர்ந்தாக்காலைந் துருவு மொன்றுய்ப்போச்சு, கூறுதஐந்துருவுமொன்றுய்நின்றல் குரு வானபோதமடா ஆர்தான்காண்பார், மாறுதமனமுடைய சித்தர்க் கெல்லாம் வகையாகஐந்துருவும் வணங்கும்பாரே. 100

வணக்கமுள்ளஐந்துருவு மைந்தேயுப்பு வரிசையுடனிதையறிந்து கல்வத்திட்டு, இணக்கமுடனரைக்கையிலே மெழுகாய்ப்போகும்

என்னசொல்வேனிம்மெழுகி னியல்புதன்னை, வணக்கமுடன்மெழு கெடுத்து பதனம்பண்ணி மார்க்கமுடனிம்மெழுகை வைத்துப் போற்றி, தனக்குமிதுகிடைத்தபொரு ளென்றுநீயுஞ் சதாகாலம் அம்மெழுகைப் பூசைபண்ணே. 101

பூசையதுசெய்ததினால் பலிக்குஞ்சித்திபூரணத்தைமறந்ததினு லொன்றுமில்லை, நேசமுடன்பூரணமே தெய்வமென்று நிலைத்துமன துறுதியிலேநிறுத்தவேணும், ஆசையென்னபூரணத்தி னாசையாசை அதைவிட்டால்வேறுமொரு ஆசையுண்டு, பாசமதைத்தானகற்றி யறிவில்சேர்ந்து பரவெளியில்நினைந்ததினால் பாலனாமே. 102

பாலனாய்ப்பதினாறுபிராயமாவாய் பராபரைத்தாய்பூரணத்தால் பலிக்குஞ்சித்திக், காலனென்றகாலனவ னோடிப்போவான் காலனென்றுசொன்னதுதான் பாசம்பாசம், ஆலமுண்டசிவனாரும்விஷத் தையுண்டார் அவ்விஷந்தான்பராபரத்தி னருளேயாகும், சீலமுடனாலமென்ற விஷந்தான்போதனுஞ் சிவசிவாபூரணத்தின் செயலைப் பாரே. 103

கெந்தகமெழுகு.

பாரப்பா முப்பூவுமொன்றாய்ச்சேர்த்து பரையீன்றநாதமடா கெந்திரசம்வீரனுஞ், சேரப்பா கலவத்திலாட்டினுக்கால் சிவசிவாமெழுகதுபோல் சேர்ந்துநிற்கும், ஆரப்பாஅறிவார்கள் கெந்திப்போக்கு அறிந்தவர்கள்சதாசிவத்தை யறிவாரப்பா, நேரப்பா நின்றநிலை தவிராமற்றான் நேசமுடனிம்மெழுகைப் பதனம்பண்ணே. 104

பண்ணப்பாபூசையினால்பலிக்குஞ்சித்தி பாசமதைத்தானறுத்து நேசம்வைத்து, உண்ணப்பா பராபரமேசெயல்தானென்று வுற்று மெள்ளஆறுதல மூரேசென்று, விண்ணப்பா தீண்டாதேசுடரைப் போற்றுவேதாந்தபூரணத்தில் விரும்பிநில்லு, கண்ணப்பாசுழிமுனை யில் கருத்தாயூணு கருவானபன்னிரண்டு மடங்குந்தானே. 105

தாளகமெழுகு.

தானென்றசற்குருவா முப்பூவோடே தன்மையென்றதாளகமும்வீரம்பூரந், தேனென்றரசமுடனே கலவத்திட்டு திரமாகஈராறுசாமமாட்டு, கோனென்றமெழுகாகுமப்பாகேளு குருவானமெழுகது வைப்பதனம்பண்ணு, நானென்றஆணவத்தைப் போக்கிக்கொண்டு நன்மையுடனிம்மெழுகைப் பூசைபண்ணே. 106

பூசையப்பா தினந்தோறும் பூசைபண்ணு புலத்தியனே உனக்காக இந்தநூலை, நேசமுட னாயிரத்து யிருநூறாக நிலைத்தனடா கருவெல்லாமிதிலேயப்பா, பாசமதைத் தானறுத்துப் பதியிலூணிப் பாச்சடாமெழுகையுநீ நவலோகத்தில், மாசியதுதானறுத்துப் பழுப்பாயேறி மகத்தான சிவகூத்தாய் மகிழ்ந்துகாணும், 107

மகிழ்ந்ததொருசிவகளையைக்கண்டுநீயு மகிழாதேபுலத்தியனே மனம்வேறாகும், நெகிழ்ந்தமனமிருக்குமடா வெகுநாள்செல்லும் நேரானபூரணத்தை நெஞ்சில்தாக்கு, பகுந்ததொருசிவயோகப் பண்

பில்நில்லு பராபரமேகெதியெனவே பணிந்துபோற்று, தகுந்தமன முறுதியுடன் வலுத்துப்போகும் தன்மையுள்ளபராபரத்தைத் தாக் கிப்பாரே. 108

லிங்கரசமெழுகு.

பாரப்பா முப்பூவும் லிங்கஞ்சேர்த்து பஞ்சுடைய வீரமுடன் புழுகுபூரம், சேரப்பாகலவத்திலொன்ருய்ச்சேர்த்து திரமாகஅரைக் கையிலே மெழுகாய்ப்போகும், வீரப்பாசெய்யாமல் மெழுகுதன்னில் விஷமில்லாரசமதிலே நாலிலொன்று, காரப்பா கலவத்திலிட்டுநன் ருய் கருவிட்டுஅரைக்கையிலே சேர்ந்துபோமே. 109

சேர்ந்தவொருலிங்கரச மெழுகுதன்னை திரமானசிமிழ்தனிலே யடக்கம்பண்ணு, கூர்ந்துமெள்ளக் குருபதத்தைத்தொண்டுபண்ணி கூர்மையுள்ளமெழுகதிலே குன்றிவாங்கி, நேர்ந்துகொண்டு இம்மெழு கைக் கொண்டாயானல் நிலைத்துதடா சடலமென்று கூடுதானும், தேர்ந்துஇந்த மெழுகதிலே மண்டலமேகொண்டால் சிவசிவாகவுன மென்றசித்துதானே. 110

ஆணைக்கல்சத்துமெழுகு.

சித்தானசித்திலொரு விபரஞ்சொல்வேன் திரமானஆணைக்கல் சத்துவாங்கி, முத்தானபூரணத்தை யதிலேசேர்த்து மூர்க்கமுள்ள ரசமுடனேபூரங்கெந்தி, கர்த்தாவைத்தான்தொழுது ரவியில்வைக் கக் கருணையுடனுமதுயொன்ருய்ச்சேர்ந்து, வற்ருதமெழுகதுபோ லிருக்கும்பாரு வாகாகஇம்மெழுகைப்பதனம்பண்ணே. 111

பதனமுடனிம்மெழுகில் குன்றியுண்ணு பதருமல்மூலமதில் நின்ருயானல், விதனமெல்லாமோடிவிடும் பலக்குங்காய மேன்மை யுள்ளகற்போலே விளங்குந்தேகம், மதனன்போல்வடிவாகும் பில முண்டாகு மகத்தானஅஷ்டசித்துங்கைக்குள்ளாகும், அதமானகருவி கள்தான் மெத்தவுண்டு அசடரிடஞ்சொல்லாதேயறிவைப்பாரே. ()

அறிவானபூரணமேதெய்வந்தெய்வம் அருமையுள்ளபூரணத்தை யார்தான்காண்பார், குறியானகுறியறிந்தபெரியோர்காண்பார் குண் டலியைச்சத்தியென்றுங் கூறுங்கூறும், நெறியானசிவயோக மார்க்க மெல்லா நேர்மையுடனறிவிக்கும் பூரணத்தின்கூறு, பரியானதேசி யடா அகாரபூடம் பரதேசிதன்னையறிந்துபணிகுவாயே. 113

அபக்குவர்களிவரெனல்.

வாய்திறந்துபேசாத மடையர்மெத்த வானறிந்துசேராத குரு டர்மெத்த, தாயறிந்துயிணங்காத கழுதைமாண்பர் தலைவனையுமறி யாதசண்டிமாண்பர், காயறிந்துகனியறிந்து கொள்ளாமாண்பர் காசி னியில்மெத்தவுண்டு கருத்தில்லார்கள், தீயறிந்து அனல்மூட்டத் தெரியாமாண்பர் சிவவேடந்தனையறியார்திருடர்தானே. 114

தானென்றதத்துவத்தையறியாமூடர் தன்மையென்றமனமொ டுங்கும்நிலையுங்காணர், கோனென்றகுருபதத்தின் குறியுங்காணர்

குருடரவர்காயாசங்குறடுமிட்டு, நானென்றஆணவத்தை மெத்தப் பேசி நலமில்லாஅஞ்செழுத்தையுபதேசித்து, வீண்மதங்கள்மெத் தவுமேபேசிப்பேசி வெள்ளாட்டிப்பயல்களுடன்சேராதையா. 115

சேராதகருவறிந்துகள்ளமாண்பர் செத்தபிணம்போல்திரிவார் சிவனேயென்று, கூறுதபொருளையெல்லாங்கூகூவென்பார் சுற்றிந்து நேராத குருடர்மட்டை, ஆறுதுதத்துவத்தின் செயலைக்காணார் அகண்டபரிபூரணத்தி னறிவைக்கண்டு, தேறுத சித்தர்கள்தான் கோடியுண்டு சிவசிவாதேறினபேர் கோடிக்கொன்றே. 116

ஒன்றானமுப்பூவில் காரஞ்சேர்க்க ஒருமையுள்ளசாரநீ ரதுதா னப்பா, பன்றானசேதியிது காரசாரம் பருவமறிந்துலகமதில் பகர மாட்டார், நன்றானபுலத்தியனே யுனக்குச்சொன்னேன் நலமறியாக் காரமதைச் சாரமென்பார், உண்டானசோதியடாஆதியந்தம் உரிசை யுள்ள பூரணமென் றுகந்துநில்லே. 117

நில்லென்றுமுன்சொன்ன சாரநீரில் நிசமானவீரமுடன் பூரஞ் சேரு, கொல்லென்றுபொங்கியது அமரும்பாரு கொடிதானநீரப்பா கூறப்போமோ, சொல்லென்றஅந்நீரைக் குப்பிதன்னில் சுருக்காக அடைத்துநீ பதனம்பண்ணி, வல்லமைகள்பேசாமல் மனதடங்கி மகத்தானசெய்நீராந் தொழிலைப்பாரே. 118

லிங்கக்களங்கு.

பாரப்பாலிங்கமொருகட்டிவாங்கி பருவமுடன்செயநீரைச்சுருக் குத்தாக்கு, வீரப்பாகட்டியதுஅடங்கிப்போகும் விசையானமுப்பூ வில்கெயநீர்விட்டு, காரப்பாகலவத்திலாட்டினுக்கால் கருணையுள்ள மெழுகாகும்லிங்கத்தப்பி, சீரப்பாமண்சீலையேழுஞ்செய்து சிவசிவா காடைதனில்தணிபோலாமே. 119

ஆமப்பாலிங்கமணிதனையெடுத்து ஆதியென்றதங்கமதில்நாலுக் கொன்று, நாமப்பாசொல்லுகிறேனுங்கொடுத்தாயானால் நன்மையுள்ள லிங்கதங்கமொன்றாய்ச்சேர்ந்து, தாமப்பாலிங்கமென்றகளங்கதாகுந் தயவானகளங்கமதை யுடைத்துக்கொண்டு, வாமப்பாதனையறிந்து கொண்டுமைந்தா மகத்தானமதிதனிலேபதத்துக்கொன்றே. 120

ஒன்றானகளங்கமதை வெள்ளிக்கீந்தா லுத்தமனேவயதுபதி னறதாகு, நன்றானவெள்ளிசெம்பி லீந்தாயானால்நன்மையுடனெண்ப தரைதப்பாதையா, கன்றானகுடவனிலே யீய்ந்தாயானால் கருவான ஏழரையுங்காணுங்காணும், அண்டர்பிரான்தொண்டரென அருளைப் பெற்று அரகராசிவயோகஅருளைப்பாரே. 121

நாகக்கட்டு.

பாரப்பாமுன்சொன்ன சாரநீரில் பக்குவமாய்நாகமதையுருக் கிச்சாய்த்தால், காரப்பாஐந்துமுறை சாய்த்தாயானால் கன்மமுள்ள குடிலமெலாங் கழன்றுபோகும், சீரப்பாஅடங்கியது மணிபோலா

குஞ்சிவசிவாநாகமணியென்னசொல்வேன், ஆரப்பாஅறிவார்கள்நா கப்போக்கு ஆதியந்தப்பொருளதிலடங்கிப்போச்சே. 122

அடங்கினதோர்நாகமதை யெடுத்துக்கொண்டு அப்பனே தங்க மதிலிடைக்கிடைதான்சேர்த்து, தடங்கலில்லாமணியெடுத்து வுடைத்துமைந்தா தயவாகவெள்ளிசெம்பிலீந்தாயானால், முடங்கலில்லா ஆறேழுவயதேயாகு மூடருக்குஇக்கருவைச்சொல்லாதையா, திடங்கனிந்த அமுதமுண்டுகுருவைகாருதேசதீட்சைபதிதனிலே சேர்ந்து நில்லே. 123

நில்லென்றுசொல்வதுதா னெங்கேயென்றால் நிருமலமாங்குரு பதத்தேநேர்ந்துநில்லு, தள்ளென்றசொல்வதுதா னுரையென்றால் தன்மையில்லா வண்டரைநீ தள்ளுதள்ளு, கொல்லென்றுசொல்லது தானுரையென்றால் குருவைநினைந்துருகாத குறும்பர்தன்மேல் செல்லென்றுமன்மதனைக்கொல்லவேண்டாஞ் சிவசிவாகுருவருளைத் தினமும்போற்றே. 124

துரிசிசுன்னம்.

போற்றுவது பூரணத்தைப்போற்றிக்கொண்டு புதுமையுள்ள துரிசிஞுட சுன்னஞ்சொல்வேன், மாற்றுவதுவழலையுட ணிணங்கன் கூட்டிமாறுமலிடைக்கிடைதான் துரிசிகூட்டி, தாட்டிகமாய் கலவத்திலிட்டுக்கொண்டு சமரசமாய்முன்னீரைவிட்டுஆட்டி, லாட்டிடுவாய் பில்லைதனைரவிமுகத்தில் மைந்தனேநன்றாகவுலரப்போடே. 125

உலர்ந்தபில்லை தனக்குமேல் சீலைசெய்து உண்மையுடன்காய வைத்துகுருவைப்போற்றி, அலர்ந்தஎருகளையெடுத்து புடத்தைப் போடு அரகராபுடமாறியெடுத்துப்பாரு, மலர்ந்ததொருபூப்போலே நீறிநிற்கு மகத்தானசுன்னமடாஎன்னசொல்வேன், தளர்ந்ததொரு ரசந்தன்னைப் பழியாய்க்கொல்லும் தன்மையுள்ளசின்னமதைப்பதனம்பண்ணே. 126

ரசமணி.

பண்ணியதோர்கன்னத்தின் மார்க்கங்கேளு பாலகனே ரசமதனைச்சுத்திபண்ணி, கிண்ணியென்றதாம்பரக்கிண்ணிதன்னில் கிருபையுள்ளரசமதனை அதனில்வார்த்து, நன்னயமாய் ரவிதனிலே ரசத்தைவைத்து நன்றானசுன்னமதைமேலேதூவி, கன்னிமயேஸ்பரிதனக்குப்பூசைபண்ணி கையாலேமத்திக்கதிரளுந்தானே. 127

திரமானரசமதனை யெடுத்துமைந்தா சிவசிவாவுண்டைபோல் திரட்டிக்கொண்டு, உரமானமுப்பூவில் முன்னீர்விட்டு வுத்தமனே குப்பிமணிதனக்குப்பூசி, நிறமானரவிமுகத்திலுலர்த்திமைந்தா நிச்சயமாய்விளக்கொளியில் வாட்டிஞக்கால், பரமானபரமகுரு அருளிஞலே புக்குவமாயிருகியதுமணிபோலாமே. 128

ஆமப்பா யிம்மணிக்குச்சாரணைகள்தீர்ந்து அருள்பெருகுஞ் சிமிழ்தனிலேயடக்கம்பண்ணி, நாமப்பாசொல்லுகிறோம் நாவிலிட்டு நன்மையுள்ள அமுதமதுகொண்டாயானல், தாமப்பாவுனதுருவம்

நிர்மலமாய்க்காணுஞ் சச்சிதானந்தவெளிதானேதோன்றுங்,காமப்பா கொண்டதொரு திறத்தால்மைந்தா கயிலாசமேறுதன்னைக் காண லாமே. 129

வழலைநாதமுப்பூசுன்னம்.

காணப்பா இன்னமொருமுப்பூச்சொல்வேன் கருவானவழலை யுடநாதன்கூட்டி, பேணப்பா இந்திடைக்குப்பூரஞ்சேர்த்து பெரு மையுள்ளகலவத்தி லிட்டுமைந்தா, தேனப்பாமுன்சொன்ன செயநீர் விட்டு திரமாகஅரைக்கையிலேகாரமேறி, கோணப்பாதன்னருளால் சுன்னமாகி கொடுமையுள்ளசுன்னமதாய்நிற்குந்தானே. 130

அரிதாரக்கட்டு.

தானென்றசுன்னமதையெடுத்துக்கொண்டு தாரமென்றஅரிதா ரக்கட்டிக்கப்பா, வானென்றசெயநீரால்ரைத்துமைந்தா மகத்தான தாரத்துக்கங்கிபூட்டி, பானென்றரவிமுகத்திலுலர்த்திமைந்தா பக் குவமாய்மண்சீலையேழுஞ்செய்து, தேனென்றபூரணத்தை மனதில் வைத்து சிவசிவாகாடையென்றபுடத்தைப்போடே. 131

போட்டபுடந்தனையெடுத்துப்பார்த்தாயானால் புதுமையுளதார மதுகட்டிப்போகும்,தாட்டிகமாய்கட்டியதோர்தாரந்தன்னை தயவான செம்புவெள்ளிக்கீந்தாயானால், நாட்டமுடனீராறு வயதுபெண்தான் நாயகிபோலுனதுமுன்னே நாடிநிற்பாள், தேட்டமுடனவள்பதத் தைப்பூசைபண்ணு தெவிட்டாதேபூரணத்தைத் தினமுநோக்கே.

நோக்குவதுபூரணத்தைநோக்கவேணும் நுண்மையுள்ளலட்ச ணத்தைப்பார்க்கவேணும், தாக்குவதுஒருநிமைக்கு ளிருளையெல் லாந்தட்டழிந்துபோக்கவேதாக்கவேணு, மார்க்கமுடனிம்முறைகள் பார்க்கவேணும் மந்திரபஞ்சாட்சரத்தில்நிற்கவேணும், ஆர்க்குமிந்த முறைகளைநீ சொன்னாயானால் அப்பனேயுனதுசிரம் வெடித்துப் போமே. 133

போமப்பாசகலசித்தும் பொச்சுப்போகும் பொல்லாதசண்டா ளர்க்கீந்தாயானால், நாமப்பாசொல்லுகிறோ மிந்தசாபம் நம்மாலே தீர்ப்பதற்குமுடியாதையா, ஆமப்பாசொல்லிவிட்டோ மிந்தநூலை அடக்கமப்பாவெகுபதனமடக்கம்பண்ணு, தாமப்பாஅடக்கம்விட்டு வெகுளியானால் தன்னுடலைக்காணாமல்தயங்குவாயே. 134

நாகரசக்கட்டு.

தங்காமலின்னமொருவிபரங்கேளு தயவானநாகரசஞ்சரியாய்ச் சேர்த்து, மயங்காமலடிமுடியுந்தூரிசிபூர மகத்தானவீரமுடன்சீனங் கூட்டி, தியங்காமல்கலவத்திலாட்டிமைந்தா தேவியென்னுமால்தேவி க்கங்கிபூட்டி, நயங்காணுமென்றுநீ மண்சீலைசெய்து நன்றாகரவிமுகத் தில்காயவையே. 135

வையப்பாரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தால் மயங்காமல்புடம் போடமைந்தாகேளு, மெய்யப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு மேன்மையுள்ளாவிபோலேகட்டிநிற்கும், கையப்பா வுதவுவதுபோ

காள் கனமானரவிமதியிலீந்தாயானல், பொய்யப்பா சொல்லவில்லைப் பத்துமாற்று பொன்போலேயிருக்குமடாபுகழ்ந்துதானே. 136

காணப்பாஉப்புடனே புளியுஞ்சேர்ந்து களிப்பானகுடவனைத் தான்தகடாய்த்தட்டி, வீணப்பாசொல்லவில்லைதகடுதன்னில் விசையான அரைமருந்தைவினவிக்கொண்டு, பேணப்பாபுடம்போடச்செம்பாய்ப்போகும் பிலத்தகொருசெம்பதனை உருக்கிக்கொண்டு, வூணப்பாகாட்டினதோர்த் தாரந்தன்னை உகந்துநீகொடுக்கின்ற வரிசைகேளே. 137

கேளப்பாவுருகினதோர் குடவன்தன்னில் கிருபையுடன் வெள்ளியதிலீந்துக்கொண்டு, கேளப்பாவாராம விரண்டுஞ்சேர்த்துகுள்ளென்றுவுருக்கையிலே மைந்தாகேளு, வாளப்பாகட்டினதோர் தாரந்தன்னை வரிசையுடன்கொடுக்கையிலே வாங்கிக்கொள்ளுந், தேளப்பாகொட்டினதோர் விஷந்தான்சென்றுசிவசிவாபழுப்பேறித் தங்கமாச்சே. 138

சீனமாதிமுப்பூச்சுன்னம்.

ஆச்சப்பாஇன்னமொருமுப்பூசொல்வேன் அரகராஆதிஉப்புக்கிடைதான்கேளு, காச்சப்பாகாசினதோர்கம்பிஉப்புங் கருவானசீனமுடன்மூன்றுங்கேளு, பேச்சப்பாஒன்றுமில்லையிடைசரியாக்கொண்டுபெருமையுள்ள சாரநீர்விட்டேஆட்டி, மாச்சமிலென்றுகினையாமல் கலவத்தாட்டி மக்களேயுருட்டியதைவட்டுப்பண்ணே. 139

பண்ணியதோர்வட்டதனை ரவிமுகத்தில்மைந்தா பாங்காகக்கனிந்திடவேகாய்ந்துதானல், புண்ணியனேமண்சீலைசெய்துக்கொண்டு புந்தியுடன்புடம்போடு சுன்னமாகும், கன்னிமயேஸ்வரிதனக்குப் பூசைசெய்து கருவானசுன்னமதில் கழிஞ்சிவாங்கி, தன்னிமையாய் தாரத்துக்கங்கிபூட்டி தயவானசாரநீர்தன்னல்தானே. 140

தானென்றகவசமதைநன்றாய்ச்செய்து தண்மையுடன்மண்சீலையேழுஞ்செய்து, கோனென்றகுருபதத்தைத்தொண்டுபண்ணி குணமாகரெண்டேடருவில் புடத்தைப்போடு, மாவென்ற அரிதாரங்கட்டி நல்லமகத்தானதன்னிறமாயிறுகிநிற்குந், தானென்றஆணவத்தைப் போக்கிமைந்தா தயவானதாரமதையெடுத்துக்கொள்ளே. 141

கொள்ளப்பா கட்டினதோர் தாரந்தன்னைக் கூசாமல்ரவிமதியிலீந்தாயானல், விள்ளக்கேளாறேழுமாற்றுகாணும் விசையானதாய்சேர்க்களட்டுமாற்று, சொல்லக்கேள்புலத்தியனே தகடாய்த்தட்டி சொல்லடங்காப்புடந்தனிலேயிறங்குந்தங்குஞ்,செல்லப்பாசிவயோகமார்க்கந்தன்னில்சிவசிவாமனதறிவால் தினமும்நோக்கே. 142

நோக்குவதுபூரணத்தை நோக்கவேணும் நுண்மையுள்ளகுருபதத்தைப்பணியவேணும், நாக்குரிசைதனையகற்றிக் கனியேதின்று நன்முனகங்கைதனை நவமாய்க்கொள்ளு, வாக்குமனதொன்றுகிமனத்தைக்காரு மகத்தானரேசகபூரகமும்பண்ணு, தாக்குவது கும்பகத்திலறிவைமூட்டு தன்மையுடன்யோகமதைத்தாக்கிப்பாரே. 143

பாரப்பாமூலமதைப்பூசித்தாக்கால் பராபரத்தின்செயலதனைக் காணலாகும், நேரப்பாபிறப்பிறப்புரெண்டுங்காணும் நீடுலகில்மகத்துவரேதெய்வமென்பார், ஆரப்பாசொன்னாலுமுலகமேயாம் அருளானபூரணத்தையறியாமூடர், கூறப்பாஉலகமெல்லாஞ் செனித்தவாருங் கூர்மையுள்ளநாதவிந்துரெண்டுந்தானே. 144

ரெண்டானபொருளறிந்து பூசித்தோர்கள் நிலைத்தார்கள் கோடானகோடிமட்டும், வண்டானததுசென்று மதுவுண்டாப்போல் மகத்தானபூரணத்தைமருவிப்பாரு, அண்டர்கோனருள்பெருகி உலகமீதில் அஷ்டமாசித்துகளுமாடிநிற்பான், பண்டானபரப்பிரமமாகியேதான் பாருலகில்குருவாகித்துலங்குவானே. 145

நாகரசமுப்பூச்சுன்னம்.

துலக்கமதாயின்னமொருமுப்பூசொல்வேன் சோதியுள்ளபுலத்தியனேசொல்லக்கேளு, வலக்கமதாய் நாகமுடன் ரசத்தைச்சேரு மகத்தானஅடிமுடியுங்கூடச்சேரு, பழக்கமதாய்வீரமுடன் புழுகுசேரு பங்கயமாங் கலவத்திலிட்டுக்கொண்டு, மலர்க்கமலநீராலேயரைத்தாயானால் மைந்தனேமெழுகாகும்வட்டுபண்ணே. 146

பண்ணியதோர்வட்டதனைக்காயப்போட்டு பக்குலமாய்மண்சீலைசெய்துக்கொண்டு, உன்னிபதோர்முழுமளவுபுடத்தைப்போடுஉத்தமனேபுடமாறியெடுத்துப்பாரு, வெண்மையுள்ளசுன்னமதால் நீறிநிற்கும் வேதாந்தஆதினமுங் குருவாய்நிற்கும், புண்ணியனே யிந்தநீறதிகச்சுன்னம் பூரணத்தின்செயலதனால் சுன்னமாச்சே. 147

ஆச்சப்பா இச்சுன்னந்தாளகத்திலப்பி அடைவாகமண்சீலையேழும்செய்து, காச்சப்பாரவிமுகத்தினன்றாய்க்காய்ந்தால் கருமால்பத்தெருவில்புடத்தைப்போடு, மூச்சப்பாஓடாமலுருகிநிற்கு மூவுலகுமெச்சுமடாஇந்தத்தாரம், தாட்சியொன்றுமில்லையடா ரவிமதியிற்றாக்கி தயவானபதினாறுமாற்றுப்பொன்னே. 148

பொன்னாகுஞ்செம்புதனில் பத்துக்கொன்று பூட்டினால்வயதெட்டாய்ப்புகழ்ந்துகாணும், உண்ணனமதிதனிலேபத்துக்கொன்று ஊட்டினால்பத்தரைதான் தப்பாதையா, கண்ணனகுடவனிலேபத்துக்கொன்றுகாட்டினால் ஏழரைக்குஅதிகங்காணும், வண்ணமுள்ளமால்தேவிகூத்துமெத்த வாக்கடங்காமனமடங்கா சித்துமாமே.

துரிசிமுப்புச்சுன்னம்.

துரிசானதுரிசுமுப்பூச் சுன்னஞ்சொல்வேன் சித்தமுள்ளபுலத்தியனேசொல்லக்கேளு, பத்தானசவுக்காரஞ்சீனங்கூட்டி பசுமையுள்ளதுருசதுவுமிடையேசேர்த்து, சத்தானஇணக்கனுடன் சூடன்சேர்த்து தயவாகவாய்நீரால் கலவத்தாட்டு, முத்தானமெழுகதுபோல்நிற்குமப்பா மோசமென்றுநினையாரேவட்டுபெண்ணே. 150

பண்ணியதோர்வட்டதனைக் காயப்போட்டு பக்குவமாய்காய்ந்தபின்புமண்ணுஞ்செய்து, தண்மையுடபத்தெருவில் புடத்தைமன்

ு தணலாறியெடுத்துப்பார்சுன்னமாகும், புண்ணியவானுனக்கால் நன்றாய்நீறும் புலத்தியனேயந்நீற்றைப் பதனம்பண்ணு, தண்ணி யில்லாத்தலைகளிலே போட்டுப்பாரு தயவானவாருதிபோல்செலமு மாச்சே. 151

செலமானநற்சலத்தை யொன்றில்வாங்கி சிவப்பானதாரமதில் சுருக்குத்தாக்கு, அழலானவூறலது அற்றுப்போகும் அதின்பிறகு சுன்னமதைக்கவசம்பண்ணு, உலகளந்தஅரியினுடதேவிதானுமுண் மையுடன்கலசமா யுகந்துநிற்பாள், கலசமதுசெய்யாமல் ரவிமதியில் தாக்கு கருணையுடன்பதினாறு மாற்றுப்பொன்னாம். 152

பொன்னானபொன்படைத்தால் பொன்னேயாகும் பொல்லாத பாவியென்றால் மண்ணாய்ப்போகும், கண்ணானசெயலறிந்தாலெல்லா முண்டு கருவானகுறிவந்தாலெல்லாங்காணும், விண்ணானபதியறிந்து அடியுங்கண்டால் வேணவிதங்கருவாகச்செய்யலாகும், பெண்ணாசை கொண்டவனே டிணங்காதையா பொருளாசைகொண்டவரைச் சின ந்துதள்ளே. 153

சினந்துமிகத்தள்ளுவது யென்னவென்றால் செயலில்லாப்புளி யுடனேயெண்ணெய்தள்ளு, உணர்ந்துவருமீனிறைச்சிக்கஞ்சாவாகா உணர்வழுக்குங்கள்ளுசாராயமாகா, மணங்கமழும்பூரணத்தையன்றி யொன்று வாய்க்கடங்காமதம்பேசி நின்றாயானால், இணங்குவதுபூர ணந்தான்கடினமாகும் என்மகனேபுலத்தியனே யிந்தநூலே. 154

இந்தநூலாயிரத்துஇருநூறாகும் ஏகாந்தமானகருவதிலேதோற் றும், அந்தமுடனாதியென்ற பொருளேதோற்றும் அவையடக்க மென்றதெல்லா மிதிலேதோற்றும், சந்தயங்களென்றதெல்லா மிதி லேதோற்றும் விந்தையுள்ளவித்தையெல்லா மிதிலேதோற்றும், வேடிக்கைசிமிட்டிகளுமிதிலேதோற்றும் சாயுச்சியபதவிகளுமிதிலே தோற்றும். 155

தோற்றாதகருக்களெல்லா மிதிலேதோற்றுந் தூபமுதல்பரிச னமு மிதிலேதோற்றும், ஆத்துமத்தின்கருக்களெல்லா மிதிலே தோற்று மருள்பெருகுபூரணத்தி னருமைதோற்றும், பாட்டானபரி பாஷையிதிலேதோற்றும் பக்குவத்தின்செயல்களெல்லா மிதிலே தோற்றும், காட்டாதகருக்களெல்லா மிதிலேதோற்றுங் கபடமிட்டு வெகுளிதனில் நில்லாதையா. 156

ஐயனேபுலத்தியனேயுமக்காய்நாமும் அருள்பெருகுமாயிரத்து இருநூறுக்குள், மெய்யானகருக்களெல்லா மிதிலேசொன்னேன் மேட்டியாய்திரியாமல் குருவைக்காரு, வையகமெல்லாந்திரிந்துஅலைந் தாலுந்தான்வாய்க்குமோஇக்கருள்வாயாதப்பா, கையானகையினெல் லிக்கனிபோல்மைந்தா கருவாகஇந்தநூல்பதனம்பண்ணே. 157

பதனமப்பாவெகுபதன மிந்தநூலைப் பார்தனிலேமாந்தருக்கு ஈந்தாயானால், விதனமப்பாசொல்லாலே யதிகசாபம் வேண்டினாலுன் றாலேதீர்க்கமாட்டாய், மவுனமதாய்மவுனமுட னிருந்துக்கொண்டு

மகத்தான அஷ்டமாசித்துமாடு, இதமானபூரணத்தைத் தினமும் போற்று இன்பமுடனின்னமொரு முப்பூச்சொல்வேன். 158

வழலைமுப்பூச்சுன்னம்.

சொல்லக்கேள்புலத்தியனே வழலைதன்னை சுத்தகெங்கைதன்ணலேசுத்திபண்ணி,விள்ளக்கேளஞ்சுதாரஞ்சுத்திபண்ணி வெண்மையென்னசொல்வனடா வுகமையில்லை, கல்லானவழலைதனையெடுத்துமைந்தா கருவாகஇடைசமனாய் வீரம்பூரம், வல்லமையாய்க்கல்வமதிலிட்டுமைந்தா வரிசையுடன்வெடியுப்பு தன்னாலாட்டே. 159

ஆட்டிநன்றாய்பில்லைசெய்து வட்டுபண்ணி அருள்பெருகுமண்சீலைய தின்மேல்செய்து, காட்டானஎருவதனில்புடத்தைப்போடு கனலாறியெடுத்திடவே சுன்னமாகும், கேட்டானதேட்டாகு மிந்தச்சுன்னந் திருவானபிரிதிவியுந்தாரந்தன்னில், பூட்டாதகவசமதுநன்றாய்ச்செய்துபொருந்தவேமண்சீலை யேழுஞ்செய்யே. 160

செய்தபொருகவசமதைக் காயப்போட்டு சிவசிவாரெண்டெருவில் புடத்தைப்போட்டு, துய்யமுள்ளதாரமது கட்டிநல்ல சோதியுள்ளஅருணனைப்போ விருக்குமப்பா, பையவேகட்டியதோர் தாரந்தன்னைப் பாச்சடாவெள்ளிதனில் பத்துக்கொன்று, அய்யனேபுலத்தியனேசொல்லக்கேளு அன்பாகபன்னிரண்டு மாற்றுமாச்சே. 161

ஆச்சப்பாகுடவனிலே யெட்டுமாற்று அரகராசெம்புதனி லாறுமாற்று,பேச்சப்பாவெள்ளிசெம்பு தன்னிலீந்தால் பிசகாதுஎட்டரைதான் பேணிப்பாரு,நீச்சப்பாவெகுநீச்சுதாரக்கட்டு நேர்மைசொல்லஎன்னாலேகூடாதையா, காச்சப்பாமூலமென்றதீயில்தன்னைக் கருணைபெறமேல்மூலச் சுடரில்நில்லே. 162

சவுக்காரப்போக்கு.

நில்லப்பாசவுக்காரஞ் செய்யுமார்க்கம் நிலைபெறவேசொல்லுகிறேன்மைந்தாகேளு, வல்லபொருகுளக்கரைவாழ் பிண்டத்தானைமகத்தானசிப்பியடா கும்பிடானை, விள்ளாமல்விள்ளுகிறோம் பூமிநாதம் விசையான அடிமுடியும்சிப்பிப்போக்கு, சொல்லாமல்சொல்லுகிறோமாதியந்தஞ் சொரூபமுள்ளவஸ்துவைநீ வணங்கிப்போற்றே.

வணங்குவதுஎப்படிதா னென்றால்மைந்தா மயானமதினிசிவேளைதன்னிற்சென்று, இணங்குவதால்ருத்திரனைப் பணிந்துபோற்றி இன்பமுடன்கைவசமே செய்துக்கொண்டு, குணங்களொருமனதாக வயிரவனைப்போற்று குணமானஆள்வள்ளிக் கிழங்குதன்னை, முணங்காமல்நருக்கியதைப் பாண்டத்திட்டு முன்னீராலுப்பிட்டு அவித்திடாயே. 164

அவித்தபொருகிழங்கதனை எடுத்துமைந்தா அடிகனத்தவுரல்தனிலேயிட்டுக்கொண்டு, குவித்ததோரிருப்புலக்கை தன்னாற்குத்திகுமுறவேநன்றாக யிடித்துமைந்தா, தவித்தியமாய்நினையாமல் பாண்

டத்திட்டுதயவானரவிபீசங்கூடப்போட்டு,பவித்திரமாயைங்கோலத் தயிலம்போட்டு பதனமாய்க்கிண்டியேயுண்டைசெய்யே. 165

செய்யப்பாவுண்டையது விளாங்காய்போலே திரமாகவுருட்ட யிலேயிறுகிப்போகு, மெய்யப்பாசொல்லுகிறோம் சவுக்காரத்துண்டை விருதுபெற்றசித்தர்கள்தான் செய்வாரப்பா, பொய்யப்பா சொன்னபுலையனுவாய் புகழானபூரணத்தைதினமும்நோக்கு, கையப் பாவுதவுவது போலேமக்காள் கருவாக இன்னமொரு காரஞ்சொல் வேன். 166

சவுக்காரமிருக்குமிடம்.

சொல்லக்கேள்புலத்தியனே சவுக்காரந்தான் சுயம்பாகஇருக்கு தடாஅறியமாட்டார், விள்ளக்கேள்வஸ்துவாய்நின்றுகொண்டு விளக் கொளிபோல்நின்றுவிளையாடுதய்யா, வல்லதொருமயேந்திரமலை சார் புதன்னில் வளர்ந்துநிற்குஞ்சவுக்காரம்புற்றுபோலே, சல்லாபமான தொருசவுக்காரத்தை தனதாகக்கொண்டுவந்துநொறுக்கிடாயே. ()

நொறுக்கியதுபாண்டமதிலிட்டுமைந்தா நுண்ணிமையாக்காட்டி விட்டுமுப்பூவிட்டு, குறுக்கிநன்றாய்வற்றுமட்டு மெரிப்பாயப்பா குழம்பானபருவமதில்தயிலம்வார்த்து, கருகிமிகப்போகாமல் கிண்டு கிண்டு கருகாதபதம்பார்த்துஎடுத்துக்கொண்டு, உறுக்கமுடன்குட் டோடேயுருட்டிப்போடு வுத்தமனேயாறியபின்னிறுகிப்போச்சே.

போச்சென்றுவிடுகாதேயின்னமொன்று புதுமையுள்ளசவுக்கா ரஞ்சொல்லக்கேளு, மாச்சலொன்றுமில்லையடாஆதியந்தம் மைந்த னேசமூலங்கைவசமேசெய்து, பேச்சொன்றுசொல்லாமல் நொறுக் கிக்கொண்டு பெரிதானபாண்டத்திலிட்டுமைந்தா, காச்சுதற்கு சுத்த சலம்நிரம்பவிட்டு கசகாமல்கிண்டிவரில்கரைந்துபோமே. 169

கரைந்துமிகக்குறுகிநன்றாய் கொதிக்கும்போது கருகாதபதம் பார்த்துக்கிண்டுகிண்டு, திரைந்துமிகக்கடுகதின்மே லெண்ணெய்நிற் குஞ் சிவசிவாவெண்ணெய்தனைவடித்துக்கொண்டு, குறைந்துநின்ற கடுகதனையெடுத்துமைந்தா கூசாமல்சுத்தசெல மதனில்வார்த்து, வரைந்துமிகக்கையாலே கரைத்துமைந்தா வட்டோடுதனிலூற்றி ரவியில்வையே. 170

வையப்பாரவிமுகத்திலுலர்ந்தபின்பு மக்களேபின்பொருகால் சுத்தசலம்விட்டு,நையப்பாரவிபீசங்கூடப்போட்டுநன்றாகஅடுப்பேற் றித்தீயைமூட்டு, மெய்யப்பாசொல்லுகிறேன்பதமாய்கிண்டி வெந்து வரும்பதந்தனிலேதயிலம்வார்த்து, செய்யப்பாதிரண்டுவரும் பதத் தைப்பார்த்து சிவசிவாவுருட்டிடுவாய்திரமாய்த்தானே. 171

வேறு-சவுக்காரக்கட்டு.

தானென்றசவுக்காரமின்னமொன்று தன்மையுள்ளபுலத்திய னேசொல்லக்கேளு, வானென்றகற்சுன்னம்படி தானொன்று வளமை யுள்ளபூரணத்தின் சுன்னமொன்று, தேனென்றவிந்துப்பு சுன்ன மொன்று திருவானரவிபீசஞ்சுன்னமொன்று, மானென்றஅருநீரில் கரைத்துக்கொண்டு மகத்தானபாண்டத்தில்வாருவாரே. 172

வார்த்ததொருபாண்டத்தை அடுப்பிலேற்றி வாகாகத்தீயெரிப் பாய்வற்றுமட்டும், பார்த்துமிகப்பதனமதாய்க்கிண்டுகிண்டு பால கனேதிரண்டுவரும்பதத்தைப்பாரு, சேர்த்துமிகஒன்றுகத்திரட்டிக் கொண்டு சீக்கிரத்தில்தயில்மதில்வார்த்துக்கிண்டி, போர்த்தியே யுண்டைசெய்வாய் விளாங்காய்போல புகழாகஇறங்கியது கல்லுப் பாமே. 173

வேறு-சவுக்காரக்கட்டு.

ஆமப்பா இன்னமொரு காரஞ்சொல்வேன் அரகாரும்பிடுகற் சுன்னத்தோடு, நாமப்பாகாரமொடுசாரங்கூட்டி நன்மையுள்ள வீர மொடுபூரஞ்சேர்த்து, காமப்பால்கானற்பால்தன்னலாட்டி கருவான அறுவகையில் கரைத்துக்கொண்டு, வாமப்பால் பாண்டமதிலிட்டு மைந்தா வண்மையுள்ள அடுப்பேற்றியெரித்திடாயே. 174

எரித்துமிகவருகையிலே குழம்புபோலே இருக்குமேநன்றுகக் கிண்டுகிண்டு, கரித்துமிகப்போகாமல்கிண்டும்போது கருவான்தயில மதைஅதிலேவாரு, உருத்துமிகஅதில்வார்த்துபதத்தைப்பாரு வுரு ண்டுவரும்பதங்கண்டு வுருட்டிக்கொண்டு, கிருத்துவங்கள் பண்ணு மல்விளாங்காய்போலே கிருபையுடனுருட்டையிலேயிறுகிப்போமே

வேறு-சவுக்காரக்கட்டு.

போமென்றுசொல்லாமலின்னமொன்று புதுமையுள்ளசவுக்கா ரஞ்சொல்லக்கேளு, நாமென்றஆணவத்தால்சொன்னேமையா நல்ல கல்லுப்புடனேகரியும்போடு, கோனென்றவெடியுப்பு இந்துப்போடு குருவானபூநீறுவளையலுப்பு, மானென்றவீரமொடுபூரங்கூட்டி மகத் தானஅறுவகையால்கரைத்துப்போடே. 176

கரைத்திறுத்துபாண்டமதி விட்டுமைந்தா கருத்துறவே அடுப் பேற்றித்தீயைமூட்டி, முரைத்துமிகப்பொங்கியது போகாமற்றுன் மூர்க்கமுடன்கரண்டியதாற் கிண்டுகிண்டு, வுரைத்துமிகக்கிண்டுகை யில்திரளுமைந்தா வுத்தமனே அப்பதத்திலுருட்டிப்போடு, கருத் துறவேசவுக்காரமதிககாரங் காரணத்தால்பூரணத்தைக் கருத்தில் வையே. 177

கருத்துமிகவுண்டானுலெல்லாமுண்டு கண்கெட்டகுருடரைப் போலிருந்தாயானல், உருத்துவுனதிடத்திற விருக்காதுகண்டீர் ஊடாடும்வாசியைநீ காணமாட்டீர், மரித்துமொருகாரணங்க ளாட மாட்டீர் மகத்தானசற்குருவையறியமாட்டீர், சிரித்துமிகக்கொண்ட திறல் வருவதேது சிவசிவாசிவயோகத்திறத்தைப்பாரே. 178

வெண்சாரைகற்பூரம்.

பாரப்பாமயேந்திரகிரிதன்னில்சென்று பக்குவமாய்நீயிருக்கும் போதுமைந்தா, நேரப்பாவெண்சாரைஅதிலேவாழும் நிச்சயமாய்ச் சாரைகண்டாயானல், கூறப்பாஉம்மென்றுகும்பித்தேதான் கூர்மை யுடன்பதினறு வுருவேசெய்து, காரப்பா அச்சாரைவருகும்பாரு கண்டவுடனடுமையம்பிடித்திடாயே. 179

பிடித்தவுடன் பொசிக்கையிலே பொருந்திஓடும் பின்பொருக் காலதைப்பிடித்துக் கொள்ளுகொள்ளு, படித்துமிக அஞ்சுதிரம் பிடித்துக்கொள்ளு பக்குவமாய் தினந்தோறு மிப்படியேகொள்ளு, அடுத்துமிகத் தினந்தோறுங் கொண்டால்மைந்தா அசையாதுயாக் கைதனக் கழிவேயில்லை, நடுத்தினமாய் தினந்தோறுங் கொண்டால் மைந்தா நலமாகஅதுக்கடியில் கனியொன்றுமே. 180

கருநெல்லிக்கற்பம்.

கனியானகருநெல்லி யஞ்சாறுண்டு கருவாகஅவ்வனத்தில் பிரம தேவன், தனியாகத்தவசிருப்பா னவரைப்போற்றி தருவானஐந்த ருவேகற்பகமேயென்று, பனியானபொருளறிந்து பணிந்தால்மைந் தா பாலகனேயென்றவருங் கனிதானீவார், இனியாதகசப்பென்று இருந்தால்மைந்தா ஈடேச்சமில்லையடா ருசிபாராதே. 181

ருசியானகருநெல்லிகற்பங்கொண்டால் நடுங்காதுகாயமெல்லாம் வலுத்துப்போச்சு, ரிஷியானரிஷிமூலமிதுதானப்பா நேர்மையுள்ள வெண்சாரை நந்திமூலமாகும், உசிதமுள்ளரிஷிமூலம் நந்திமூலம் ரெண்டு முண்மையுடன்தினந்தோறும் பூசித்தாக்கால், பசியானதீப னங்க ளில்லைமைந்தா பராபரத்தின்கிருபையினால் பூரணத்தைப் பாரே. 182

சவுக்காரக்கற்பம்.

பூரணமாயின்னமொரு காரஞ்சொல்வேன் புத்தியுள்ளபுலத்தி யனே புகழ்ந்துகேளு, காரணமாய்நீகேளு எட்டாந்திரங்கள் கன்னி யடிமூலமடா கருவைவாங்க, மாரணமாய்வாங்குதற்கு வகையைக் கேளு மருவியேவெல்லமதில் ரவிபீசங்கூட்டி, வாரணமாமுக்கணனை வேண்டிக்கொண்டு மடக்கொடிக்கீந்திடுவாய் வரிசைபாரே. 183

வரிசையுடன்மூன்றுநா ளுப்பைவாங்கி மகத்தானவெந்நீரில் போட்டுமைந்தா, புரிசமுடன்மறுநாள்தா னுப்பைவாங்கி புண்ணி யனே தண்ணீரில் கரைத்துக்கொண்டு பரிசானபாண்டமதி லிட்டு மைந்தா பக்குவமாய்ரவிபீசங்காரசாரம், உரிமையுடன்பாண்டமதில் கரைத்துமைந்தா வுண்மையுடனடுப்பேற்றியெரித்திடாயே. 184

எரித்துமெள்ளப்பதம்பார்த்துக் கிண்டுமைந்தா இன்பமுடன் திரண்டுவரும் பருவந்தன்னில், குறித்ததொருதயிலமதை விட்டு மைந்தா குருகவேகிண்டியதை யெடுத்துக்கொண்டு, பருத்துமிகப் போகாம லுண்டைசெய்வாய் பக்குவங்கள்தப்பிவிட்டா லுதிர்ந்து போகும், வரித்துமிகளரிப்பதுவுங் குறைந்துதானல் மைந்தனே யிளகுமது வகையாய்ப்பாரே. 185

பாரப்பாவெரிப்பதுவுமிஞ்சிற்றானல் பாகதுவுமுறுகியதுவுதிர் ந்துபோகுஞ், சீரப்பாவெரிப்பதுவுங் குறைந்துதானல் சிவசிவா இளகியதுபோகும்போகுங், கூரப்பாதானெரித்து பதத்தோடப்பா குணமாகவுருட்டிவைக்க இறுகிப்போகும், ஆரப்பாஅறிவார்க ளிந்த காரம் அதீதமுள் ளகாரமடா அருளைப்போற்றே. 186

அருளானபோதமல்லா மடங்கும்வீடு ஆயிதிரோதாயி யிருந்த டங்கும்வீடு, இருளானகாமியந்தா னிருக்கும்வீடு இச்சையுள்ளமாய மது யிருந்தவீடு, மருளானபேய்க்கூத்து ஆடிநின்று மாயமெல்லாங் குடியிருக்கு மகத்தாம்வீடு, கருவானகருவிகளும் நிறைந்தவீடு கரு வழிந்துதிகைத்துநின்ற காலன்வீடே. 187

வீடறிந்துபதவியுட னிருக்கமாண்பர் வீட்டிலுள்ளபேர்களைத் தான்விரும்பாமாண்பர், காடறிந்துநாடறிந்து கருதாமாண்பர் கரு வானபூரணத்தைகாணுமாண்பர், கூடறிந்துகுடியிருக்கமாட்டாமாண் பர் குருவருளைப்போற்றுதகுருட்டுமாண்பர், காடறிந்துபயனறிந்துக் கொள்ளாமாண்பர் பாவிகள் தான்மெத்தவுண்டுபார்த்திடாயே. 188

கல்லுப்புக்கட்டு.

பார்த்துமிகப்பூரணத்தைப்பணியவேணும் பணிந்துமிகநில்லாட் டால்பண்பாய்த்தானுங், கூற்றுவனுக்கிரையாகப் போவாய்மைந்தா கூறுடனேகூற்றுவன் தானுறென்றக்கால், நாற்றிசையுந்திரிந்தலைந்து பொருள்கள்தேடும் நன்மையில்லாதிரோதாயிநன்மையப்பா, பூத்த மலர்வாசனைதான்கல்லுப்பாகும் பூமிவளர்பூவதுதானுதமாச்சே. ()

ஆச்சப்பாபிரிதிவியி னுதத்தாலே அடங்காதகல்லுப்பு கட்டிப் போச்சு, மாச்சலதுஇல்லாமல்கட்டிச்சென்று மகிழாமலந்திடைக்குக் காரசாரம், பாச்சுவாய்சீனமுடன் துருசுகூட்டி பதறுமல்வீரமுடன் பூரஞ்சேர்த்து, தாட்சியென்றுமில்லாமலொன்றாய்ச்சேர்த்து தவிரா மல்முன்னீரில்கரைத்துக்கொள்ளே. 190

கொள்ளப்பாபாண்டமதி லிட்டுமைந்தா குருபரனைத்தொழு திறைஞ்சி அடுப்பிலேற்றி, அல்லப்பாசொல்லுகிறேன் தீயைமூட்டி அடித்தூரில்பற்றுதுகிண்டுகிண்டு, வல்லமையாய்கிண்டிவரும்போதி லேதான் வைத்துமிகக்குழம்பானபருவந்தன்னில், சொல்லக்கேளே ரண்டத்தெண்ணெய்விட்டு சுருதியுடன்கிண்டினால்திரளும்பாரே. ()

பாரப்பாதிரண்டுவரும் பருவந்தன்னில் பதறுமல்விளாங்காய் போலுண்டைசெய்து, பேரப்பாசவுக்காரமென்றுசொல்லி பிசகாம லுண்டைதனைப் பதனம்பண்ணி, நீரப்பாநின்றதொரு குருவைப் போற்றி நிச்சயமாய்சவுக்காரவுண்டைதன்னை, வீரப்பாபோவதற்கு சுத்திகேளு விசையானகாரமுடன்சாரஞ்சேரே. 192

சேர்த்துமிகரவியில்வைக்க ஜெயநீராகுஞ் சிவசிவா அந்நீரில் வீரம்பூரம், பார்த்துமிகச்சேர்த்திடவேசெயநீர்காணும் பக்குவமாய் குருநீர்போல் பசுமையாகும், வேற்றுமைகளில்லாத சவுக்காரத்தை வெகுளாமல்செயநீரில்தேய்த்துப்போடு, மாற்றுமடாஎண்ணெயெல் லாம்வழிந்துபோகு மகத்தானகாரமதுசுத்தியாச்சே. 193

ஆச்சப்பாசுத்திசெய்தகாரமொன்று அந்திடைக்குவீரமொன்று மொன்று, பேச்சப்பாஒன்றுமில்லை கல்வத்தாட்டு பிசகாமலீராறு

சாமமாட்டு, பாச்சப்பா ரவிமுகத்தில்வட்டுபண்ணி பக்குவமாய்க் காய்ந்தபின்புமண்ணுஞ்செய்து, காச்சப்பாகாட்டெருவில்புடத்தைப் போடுகருணையுள்ளசுன்னமதாய்நீறிப்போமே. 194

தாரக்கட்டு.

போமப்பா தரித்திரியமெங்கேபோச்சு புதுமையுள்ளசுன்ன மதைவாய்நீராலே, நாமப்பாசொல்லுகிறேன் குழைத்துக்கொண்டு நன்மையுள்ளதாரத்துக் கங்கிபூட்டி, தாமப்பாமண்சீலை யேழுஞ் செய்து தவிராமல் ரெண்டெருவிற் புடத்தைப்போடு, ஓமப்பாதார மதுவுருக்கிக்கட்டு முத்தமனேஅருணனைப்பே விருக்கும்பாரே. ()

பாரப்பா சிவந்ததொருதாரந்தன்னை பாச்சடாவெள்ளியிலே பத்துக்கொன்று, சேரப்பாவெள்ளியது பழுக்கும்பத்தாம் சிலசில தாய்சேர்த்துமேதகடுதட்டி, காரப்பாபுடம்போடு மூன்றுதரமையா கருணைபெறப்பதினாறுமாற்றுப்பொன்னும், வீரப்பாஅகற்றியதோர் செம்புதன்னில் விசையாகபத்துக்குஒன்றுபோடே. 196

போட்டசெம்புஎடுத்திடவே ஆறுமாற்றாய் புனிதமுடனிருக்கு மடாஅப்பாகேளு, தாட்டிகமாய்தாய்சேர்த்துதகடுதட்டி தன்மை யுடன்மூன்றுபுடம்போட்டாயானால், நாட்டதனில்விலையாகும் பத்து மாற்றாய் நன்மையுடனின்னமொன்று நவிலக்கேளு, கூட்டான குட வனைத்தான் சுத்திபண்ணி கொடுத்திடுவாயெட்டில்ரெண்டு வெள்ளி தானே. 197

தானென்றகுடவனிலேவெள்ளிசேர்த்து தன்மையுடன் பதினா றுக்கொன்றேயீந்தால், தேனென்றவயதுதானெட்டுமாற்றாய் தீர்க்க மாய்நிற்குமடாதாயைச்சேர்த்து, மானென்றதகடுதட்டிபுடத்தைப் போடு மைந்தனேவயதுபனிரெண்டுமாற்றே, கோனென்றதிருவரு ளைவணங்கிப்போற்றி குருவானபதியறிந்து அமுதங்கொள்ளே. ()

அமுதமென்றநாதமடாவாயுவாச்சு அப்பனேசுக்கிலமோ விந்து விந்து, குமுதமுடன்ரெண்டல்லோவொன்றாய்சேர்ந்தால், குருவான பதிகாட்டும்வாசியாச்சு, உமிருநிறவாசியது எங்கேயென்றால் உத்த மனேயடியானமூலமாச்சு, நிமிர்த்துகொண்டுமூலத்தைக் கண்ணுற் பாரு நேரானசூரியன்போல்வட்டமாச்சே. 199

அட்டமாசித்துகளுமதிலுண்டாச்சு அருள்பெருகும்போதமே யதிலுண்டாச்சு, நிஷ்டையொடுசமாதிகளுமதிலுண்டாச்சு நேரான மந்திரமுமதிலுண்டாச்சு, துட்டர்களைநீக்குநெறி யதிலுண்டாச்சு சொல்லவொண்ணவசியமெல்லா மதிலுண்டாச்சு, கட்டாதசரக்கெல் லாமிதிலேகட்டுங்கவனமென்றகுளிகையுமேயிதிலுண்டாமே. 200

அகஸ்தியர் புலத்தியருக்குத் தம தனுபவ முரைத்தல்.

உண்டானசேதியடா இன்னமொன்று வுரைக்கிறேன்புலத்தி யனேயுண்மையாக, அண்டர்தொழுஞ்செகஜோதி தன்னைக்காண ஆராலுங்கூடுமடா வப்பாகேளு, பண்டையிலேவிட்டகுறைக் கார

னென்றால் பரமகுருபதம்போற்றிப்பணிகுவான்கேள், கண்டனடா குருபதத்தையென்றுசொல்வான் காசினியில்வாப்பிலுக்காய் கருது வானே. 201

வானென்றமதியமுத மறியாமட்டை வாயூறலமுதமென்று கொள்ளுமாண்பர், தேனென்றபூரணத்தைச் சீசீயென்று தெருத் தோறுந்தானலைந்துதிருடுமாண்பர், கோனென்றகுருவருளைப் பணியாமாண்பர் குவலயத்திற்குருவேடமறியாமாண்பர், நானென்றஆண வங்கள் மெத்தப்பேசி நாள்தோறுஞ்சீரணித்துப்போவார்பாரே. ()

பாரப்பாவீதியிலே பாடினதோர்காண்டம் பன்னிரண்டுஆயிர மாய்ப்பாடிக்கொண்டு, வீரப்பாசெய்யாமலமர்ந்துநின்று நேசமுடன் பணிந்துமிகநின்றானப்போ, நேரப்பாநின்றவருந் தொழுதுநின்று நேசமுடன்பணிந்துமிக நின்றானப்போ, ஆரப்பாஎன்றுமிகக் கேட் டேனையா அப்போதுவேதரிஷியென்றான்தானே. 203

வேதரிஷிவாவெனவேஅழைத்துக்கொண்டு வேதாந்தமூலமது வுபதேசித்து, போதமுள்ளபூரணமுமவனுக்கீந்து புகழுடைய நாத ரிஷியென்றுசொல்லி, நீதமுள்ளபுத்தகத்தையவனுக்கீய்ந்துநிலைத்து மிகப்பன்னிரண்டுங்காத்தாயானால், பேதமில்லாநாதரிஷிநீயேயாமே பெருமையுள்ள இந்நூலைப் பதனம்பண்ணே. 204

பண்ணியதோரிந்நூலின் பயனைக்கேளு பார்மீதிலுறைமாதே மகிழ்ந்திடாதே, நன்மையுடனிந்நூலைப்பதனம்பண்ணி நானென்ற ஆணவத்தைஅகற்றிமைந்தா, தன்மையுடன் பாணத்தைப்பணிந்து கொண்டு தவிராமல்சிவயோகந்தானேசெய்து, சென்னிதனில்தீயை வைத்துதீபமேற்றி தெவிட்டாதபூரணமேதினமுநோக்கே. 205

நோக்கென்றபூரணத்தை நோக்கிக்கொண்டு நொடியென்ற வொருநொடியிற் குள்ளேமைந்தா, வாக்கென்றபூரணத்தை வாசி யேறிவந்தனடாமூலகிரி மலையிற்றானும், பூக்கின்றபூஞ்சோலைவனத் திற்றானும் போகமுள்ளரிஷிகளிடம்வந்தேனையா, தாக்கென்றதபோ தனரைக்கண்டுகொண்டு தயவாகசுவேதகிரிக்கேகினேனே. 206

ஏகியேநானுமேயிரங்கிமைந்தா அட்சணமேஅங்கிருக்கும் ரிஷி யைக்கண்டு, ஆமப்பாசுவேதகிரிதன்னில்வாழும் அரகராசித்தர்கள் தானனந்தங்கோடி, காமப்பால்கானற்பாலிரண்டுங்கொண்டு கருணை யுடன்தவசிருப்பாரனந்தங்கோடி நாமப்பாஅவர்களிடம் சென்றே னையா நன்மையுடன்நாதகிரிஅதோவென்றாரே. 207

என்றவரும் வேதகிரிக்கேகினார்கள் என்மகனேநாதகிரிக்கேகி னேனான், குன்றாதரிஷிகோடி அதனில்வாழ்வார் குறையாதவாயு வைத்தான்பக்ஷிப்பார்கள், நன்றானதபசதிலேமிச்சமிச்சம் நான் சென்றேனவர்களிடமைந்தாகேளு, பண்பானஎன்குருவேயென்று சொல்லி பணிந்தார்கள்அனுதகிரியெங்கென்றேனே. 208

எங்கென்று அனுதகிரிமுடிவிற்சென்று இனியமுள்ளரிஷிகளி டஞ்சென்றேனையா, அங்கென்றுநற்கனியின்ரசத்தையுண்டேனதி

லிருந்துயகிலகிரிச் சருவிற்சென்று, நங்கென்று அகிலகிரி முடிவிற் சென்றே ஞுதாக்கள்வெகுகோடியதனில்வாழ்வார், வங்கென்றுஅவர் களிடஞ்சென்றேனையா வருந்தியவர்கனியீந்தார்வாங்கினேனே. ()

வாங்கியொருநொடிக்குள்ளேசென்றேனையா வரிசையுள்ளசோ திகிரிமுடிவிற்சென்றேன், தீங்கில்லாகுருதேசிசித்தர்கோடி தீர்க்க முள்ளமவுனமதாயிருப்பாரையா,பாங்குபெறஅவர்களிடஞ்சென்றே னப்பா பரமானஅகத்தீசர்வாவென்றாரே, மாங்கனியினமுதரசமீந் தாரையா வரிசையுடன்போதகிரிஎங்கென்றேனே. 210

எங்கென்றுகேட்டவுடன்மவுனயோகியெல்லோருமடிதொழுது ஏதுசொன்னார், அங்கென்றுபோதகிரிநாங்கள்காணேம் அவனிதனில் வாசமதாயதில்வளர்ந்தே, நங்கென்று போதகிரிக் கேகவென்றால் நாதமென்றகெவுனரசக் குளிகைவேணும், சிங்கென்ற என்குருவே கும்பமூர்த்தி சீக்கிரத்தில்நீவரவேதொழுதோம்பாரே. 211

பாரப்பா போதகிரிக் கேகவென்றால் பஞ்சகண தீட்சையினால் குளிகைசெய்து, நேரப்பா நின்றதொரு சாரணைகள்தீர்ந்து நிமிஷத் தில்கெவுனரசக் குளிகைசெய்வாய், வீரப்பா செய்யாமல் ரசத்தை வாங்கி விசையானபஞ்சகண தீட்சைசெய்து, நீரப்பா நொடிக்குமுன் னே திரண்டுபோச்சு நிலைபெருகக்கெவுனமணிக் குளிகையாச்சே. ()

குளிகைதனை யனைவோரும் வாயிற்போட்டு கும்பித்துப் பாய்ந் தார்கள் போதகிரிதன்னில், பலிதமுள்ளபோதகிரி யென்னசொல் வேன் பாய்ந்ததொரு சித்தரெல்லாம் போதமயமானார், அழியாத போதமயமாகிநின்று அனைவருமிலிங்கமயமாகிப்போனார், நெளியாத போதையிலே நிலையிநின்று நேரானபொதிகைகிரிப் பேரானேனே.

பேரானபோதகிரி யென்றும்பேரு பெருமையுள்ள பொதிகை கிரி என்றும்பேரு, வாரானசதுரகிரி யென்றும்பேரு வளமானசூரிய கிரியென்றும்பேரு, கூரானமயேந்திரகிரி யென்றும்பேரு குருவான கும்பகிரி என்றும்பேரு, பாரானபரமகிரி யென்றும்பேரு பரமகயி லாசமென்று பேருமாச்சே. 214

ஆச்சப்பாலிங்கமயமாகிப்போன அனைவருக்கும் பூசைநிவேத் தியங்கள்செய்து, மாச்சலொன்றுஞ் செய்யாமல் அறிவிற்கூடி மகத் தானகும்பகத்தில் மருவிச்சேர்த்து, மூச்சதுதானடங்கிநின்ற பொ திகைதன்னில் முக்கோடிகாலமட்டும் வளர்ந்தேனப்பா, காட்சியில் லாக்காட்சிகளும் மதிலேகண்டேன் கண்டதொருகாட்சியிலே முழித் தேன்பாரே. 215

சித்தர்கள்குலமும் அவர்கள் பாடிய நூல்களும்.

முழித்துமிகப்பார்த்ததொரு ஞானதிருஷ்டி முனையானசுழிமு னையில்கண்டகாட்சி, அழித்துமிகப்பார்த்ததினால் வேதமுனிசெய்த அகத்தியத்தால்நீலகிரி தன்னில்வந்து, பழித்தனமாய்நின்றகிரிதன் னைக்கண்டேன்பரமானபுலத்தியனேகேளுகேளு, கழித்தஒருபன்னி ரண்டாயிரத்தைப்பார்த்து கருவெடுத்துவெகுநூல்கள் கட்டினனே.

கட்டினதுமல்லாமல் ஜாலவித்தை கருவெடுத்து செகத்தோர்க் குக்காட்டினன்பார், திட்டமுடன்கருவூரான் தனக்குச்சொல்லி திர மாகக் குடிமகன்தான் செய்தபோக்கு, மட்டிமைகளில்லாத சந்த பேதம் வரிசையுடன் சிலநூல்கள் பாடினன்பார், கட்டினன் கொங் கணவன் பளிங்கசாதி காவியமாய் வெகுநூல்கள் கருதினனே. 217

கருதினன் சட்டைமுனி யனந்தங்கோடி கருவாக அவன்குலந் தான் சேணியனுமாகும், உருசியுள்ள போகனுமே குசவனாகும் ஓகோகோ அவன்பாடலிலக்கேயில்லை, பருதியுள்ளசந்திரனெரெட் டியாமே பக்குவமாய் முன்பின்னாய்ப் பாடிப்போட்டான், அருமை யுள்ளமச்சமுனி யென்னசொல்வேன் அவன்குலந்தான் செம்படவ னாகுந்தானே. 218

தானனமச்சமுனியனந்தங்கோடி தவிராதவெகுநூல்கள்பாடிப் போட்டான், மானனகமலமுனிகன்னாரு மாறுட்டமாகவேபாடிப் போட்டான், ஊனன இடைக்காட்டனிடையனாகும் உண்மையில்லாக் கல்விகளையுரைத்தானப்பா, தேனனநந்தியுமோபிரமகுலமப்பா திற மாகவெகுமறையாய்ப் பாடினனே. 219

## நாதரிஷியையழைத்தல்.

பாடினநவசித்தரனந்தங்கோடி பக்குவமாய்நாதரிஷி சொன்ன தாலே, நாடியேநாதரிஷி தன்னைக்கூவி நான்கொடுத்த காண்டமதை வெளியிற்போட்டு, பேடியென்னகாரியத்தைச்செய்தாயென்று பெரு மையுடனூல்வாங்கி குகைக்குள்வைத்து, சாடியே அனைவோர்க்குஞ் சாபமீந்தேன் சமுசயங்கள்தீராமல் சபித்தேன்பாரே. 220

பாரப்பா நவசித்தர் பதினெட்டாகி பாருலகில் பதினெட்டுச் சித்தரானர், ஆரப்பாவிவர்பெருமைய றிகுவார்களறிந்துமிகத்தெரிந் தவன்முனீயேயாகு, நேரப்பாபாடினதோர் பன்னிரண்டு நிலைத்த தொருஆயிரத்தைக்குறுக்கிமைந்தா, சீரப்பாதப்பாமல்பன்னிரண்டு நூறுந் திறமாகப்பாடியதோரிந்நூல்பாரே. 221

இந்நூல்தானுயிரத்து இருநூற்றுக்குள் ஏகாந்தமானகருவெல் லாம்பாடி, முன்சொன்னபன்னிரண்டுஆயிரத்தை மூர்க்கமுள்ளமத் தகமாய்ச்சேர்த்துக்கட்டி,வன்னமுள்ளபலவகையாய்ச்சேர்த்துநல்ல வாரிதியங்காவேரிதன்னிலேதான், தன்மையுள்ளசங்கமென்றபலகை யாக சமுத்திரம்போய்சேரென்றுசபித்திட்டேனே. 222

## நாதரிஷியைச் சபித்தல்.

செபித்திட்டநாதரிஷிதனையழைத்து சீக்கிரத்தில்சாபமிதுபிடி யென்றேதான், குவித்திட்டுநாதரிஷியென்னசொல்வான் குருவான வென்குருவே தீர்வதெப்போ, சபித்திட்டு வெகுநாள்தான் சென்ற பின்பு சங்கமென்றபலகையிடஞ் சேர்வாய்நீயும், வகுத்திட்டுசாப மதுஈந்தேனப்போ வலுமைமிகக்கொண்டவனுமறந்திட்டானே. ()

நாதரிஷிவரலாறு.

மறந்துமிகவெகுகோடிகாலந்தானும் மகத்தானவேதரிஷியலைந் தானப்பா, நிறைந்துமிகக்கைலைகிரிவடக்குச்சென்று நிலைத்துமிகப் பவுத்திரகுல மானாரப்பா, கரைந்துமிகவேதரிஷி யென்னசொல் வோம்கருத்தில்லாபவுத்திரரெனப்பேர்கொண்டோம்நாம்,உரைத்த ஒருசாபமதுதீர்வதற்கு ஓகோகோபலகையிடஞ்சேரவென்றார். 224

சேரவென்றுசொன்னமொழி தப்பாமல்தான் சிந்தைதனில் நினைந்துவாரிதியிற்சென்றான், கூர்மமென்றபலகையெதிர் நோக்கி வந்த குறிப்பறிந்து வேதரிஷிகுருவைநோக்கி, மாறல்செய்தபலகை தனையெடுத்துக்கொண்டு மனங்குவிந்துஅதிலிருந்து வறுமைபூண்டு, தேர்வதற்குஏதுவகை செய்வோமென்று திரமாகப்புராணமொன்று பாடினனே. 225

பாடினன்புராணமொரு காசிகாண்டம் பக்குவமாய்நாலடியுங் காந்தமொன்று, நாடினன்வேதமொடுசாத்திரமுமைந்தா நல்மான பஞ்சலட்சணமுஞ்சொன்னார், தேடினன்காவியங்க ளனந்தங்கோடி செகத்தோர்க்குழைப்பனையாய் வெகுசாய்ப்பாடி, மூடினன்சருவமத மொன்றாய்ப்போக மூர்க்கமுடன்வெகுசங்கைபாடினனே. 226

ஆமப்பாவெகுசங்கையெடுத்துப்பாடி அரனேதுநம்மைவிட ஆத்தாளேது, நாமப்பாஎன்றமதமாணவத்தினாலே நரரையெல்லாம் வேதமயமாகச்சொன்னார், தாமப்பாவேதகுருதானேயாகி சங்கை யில்லாமந்திரத்தை தானுண்டாக்கி, வாமப்பால் கொண்டதொரு வெற்றியினாலே வரையானஅண்டவரையாண்டான்பாரே. 227

ஆண்டவனும்வேறல்ல நானேதானென் றுயிரத்தெட்டண்ட மெல்லாமடக்கிமைந்தா, பூண்டவனும்வேதமயமல்லால்வேறே பூத லத்தில்சிவனேதுநான்தானென்று, தீண்டாதமதமோடு இருந்தான் வேதன் தீதிலாவேதமதையடக்கவென்றே, காண்டாவனந்தானெ ரித்துக்கபாலமேந்தி கருணையுள்ளசுந்தரனேபோவென்றேனே. ()

போவென்றுசொன்னவுடன் சுந்தரனுஞ்சென்று பொல்லாத பவுத்தனென்றசாபந்தீர்ந்து, ஆமென்றஅமுதமது அவனுக்கீந்து அருளானபஞ்சகண தீட்சைவைத்து, மானென்றமவுனரச தீட்சை வைத்து மகத்தானபேரொலியை அவனுக்கீய்ந்து, கோனென்ற பொதிகைகிரிதன்னில்வாழுங்கும்பமுனிபாவமதில்வாவென்றேனே

வாவென்றுசொன்னவுடன் வேதமுனிதானு மகத்தானபலகை யதைக்கையிலேந்தி, ஓவென்றுசாத்திரத்தையோதிக்கொண்டு ஒரு நொடியில்பொதிகைகிரி தன்னில்வந்தான், கூவென்றேவேதமுனி தன்னைப்பார்த்து குதுவானபலகையதைத் தாவென்றேன, நூ வென்றசந்திரபுட்கரணிதன்னில் ஒளித்தனடாசங்கமென்ற பலகை தானே. 230

சவுக்காரவழலை.

தானென்றபவுத்தர்பதம் ஒழிந்துபோச்சு சதாசிவமேயெங்கு நிறைந்திருக்கலாச்சு, கோனென்றகும்பமுனிகருணையாலே கொள்

ளுகின்றவிருணீங்கி வெளியாய்ப்போச்சு, தேனென்றவமுதமது பெருகலாச்சு சிவசிவா அட்சரங்கள்தொனிக்கலாச்சு நானென்றதத்துவங்களற்றுப்போச்சு நலமானசவுக்கார குருவுண்டாச்சே. 231

உண்டானசவுக்காரம் வழலையாலே உலகமெல்லாஞ்சித்துமயமானதாலே, பண்டானயடாபரப்பிரமமாச்சு பரமகுருவானதொரு வழலையாக, கண்டாருஞ்சொல்வார்கள்நாவோஇல்லை கயிலைவளர்வழலையடாகாணப்போமோ, விண்டாருஞ்சொன்னதினல் தலைதெறித்துப்போகும் வேதாந்தபூமியுடனதங்கேளே. 232

பூமிநாதம்.

நாதமென்றால்வெகுநாதம்பூமிநாதம் நாதாக்கள்பூசித்துவளர்ந்தநாதம், நீதமென்றசெகநாதம்தேசிநாதம் நிலைபெருகிபூரணத்தில் நின்றநாதம், பாதமென அடிமூல கணேசர்நாதம் பராபரமாம்பரம குருநாதம்நாதம், பூதமென்றபஞ்சகணம்பொருந்துநாதம் பூவான நாதமதைப்புகழ்ந்துகாணே. 233

புகழ்ந்துநின்றபூமியுட நாதம்வாங்கி புரிசடையோன்சிரசில்வருங்கங்கைதன்னில், மகிழ்ந்துநின்றநாதமதுக் கென்னசொல்வேன் வையடாதசதீட்சை யார்தான்காண்பார், அகமகிழ்ந்து தசதீட்சை வைத்துப்பாரு அருளானநாதவெளியென்னசொல்வேன், செகமகிழுந்தசதீட்சைவைத்தாயானல் சிவசிவாநாதமதுவிந்துவாச்சே. ()

விந்துநாதம்.

ஆச்சப்பாநாதவிந்துக்கப்பால்கேளு அருளானதசதீட்சைவைத்தாயானல், போச்சப்பாநாதவிந்துஎன்றபேருபுகழானதீட்சையினல் மைந்தாகேளு, தாட்சியில்லாவிந்துவுடனதமாச்சு தண்மையுடன் விந்துவுடனதங்காணர், மாச்சல்செய்தநாதவிந்து தன்னல்மைந்தா மாண்டார்கள்வெகுகோடி சித்தர்தானே. 235

தானென்றவிந்துவுடனதங்கண்டால் தவிராதுவாதயத்தியோகந்தானும், ஊனென்றவாசியதுபிலத்துப்போச்சு உண்மையுள்ளபூரணத்தைக்காணலாச்சு, மானென்றமவுனமதுகலந்துபோச்சு மகத்தானகற்பமதுவுறலாச்சு, தேனென்றஅமுதமதுசொல்லலாச்சுதேகமென்றயாக்கையதுசித்தியாச்சே. 236

சித்தியுள்ளநாதமது விந்துவாங்கி சிவசிவாகல்லுப்புக் கிடைதான்சேர்த்து,முத்தியுள்ளவெடியுப்புரசிதஞ்சேர்த்துமூர்க்கமுடன் கல்வத்திலிட்டுமைந்தா, பத்தியுடன்செயநீரைவிட்டுஆட்டு பருவமுடன்காயவைத்து வட்டுபண்ணி, புத்தியுடன்மண்செய்து புடத்தைப்போடு புதுமையுள்ளசுன்னமதாய்நீறிப்போமே. 237

நவாச்சாரக்கட்டு.

போமென்றுவிடுகாமல்சாரம்வாங்கி புகழ்பெருககன்னமதைக் கீழ்மேல்வைத்து, நாமென்றகாரோட்டில்வைத்தெரித்தால் நலமான

சாரமதுகட்டிப்போகும், ஆமென்றுஇப்படியேயஞ்சுதிரம்வைத்தால் அரகராசாரமதுபடிகம்போலே, தாமென்றுசாரநீர் கட்டிற்றுனல் சகலசரக்கத்தனையுங் கட்டிப்போச்சே. 238

நாகக்கட்டு.

போச்சென்று விடுகாமல்நாகம்வாங்கி புகையடங்கச்சுத்தியது செய்துக்கொண்டு, கூச்சமறக்குகையிலிட்டிருக்கும்போது குருவான சாரமதைபத்துக்கொன்று, மாச்சலதுசெய்யாமல் கொடுத்துப்பாரு மகத்தானநாகமதுகட்டிப்போகும், காட்சியில்லாக்காட்சிகளும் காண லாகுங் கருணையுள்ளபுலத்தியனேயின்னங்கேளே. 239

கேளப்பாகல்லுப்புவளையலுப்பு கெடியானசாரமுடன்மூன்றுங் கூட்டி, மாளடாகல்வத்தில்நன்றாயாட்டி மகத்தானசாரமதுக்கங்கி பூட்டி, கோளடாவாராமல்மண்சீலைசெய்து குருபரனைத்தியானித் துப்புடத்தைப்போடு, பாளானசாரமதுகட்டிப்போகும் பசுமை யுள்ளநாகமதுசாகும்பாரே. 240

பாரப்பாஇன்னமொருகட்டுசொல்வேன் பச்சையுடன்பூநீறுஞ் சரியாய்த்தூக்கி, சாரப்பாவென்றுசொல்லிசாரஞ்சேர்த்து தயவாகக் கல்வத்திலாட்டும்போது, வீரப்பாஅடக்கியது மெழுகாய்ப்போகும் விசையானசாரமதுக்கங்கிபூட்டி, சீரப்பாமண்சீலை யேழுஞ்செய்து சிவசிவாகாடையென்றபுடத்தைப்போடே. 241

போடப்பாஇப்படியே யேழஞ்சுபுடம்போடு பொருகாமல்சார மதுகட்டிப்போகும், நாடப்பாநவாச்சாரங்கட்டிப்போனல் நாகமெ ன்றவஸ்துவுக்குயிர்தான்போச்சு, கூடப்பாகுலையாதுகுலைந்தாலுந் தான் கூட்டிவிக்குஞ்சாரமென்றவஸ்துவஸ்து, வீடப்பாபிலத்துதடா வஸ்துவாலே வேதாந்தசாரமென்றவித்தைதானே. 242

தானென்றசாரவித்தையார்தான்காண்பார் தன்மையுள்ளபூர ணத்தைக்கண்டோர்காண்பார், ஊனென்றவுரிசைதனை யார்தான் காண்பார் ஊமையென்றபொருளறிந்தோன்காண்பானப்பா, தேனெ ன்றமதியமுத மார்தான்காண்பார் திரமானமவுனியவன் காண்பா னையா, மானென்ற மவுனமதையார்தான்காண்பார் மகத்தானயோகி யவன்காண்பான்பாரே. 243

காணுதமடையர்மெத்தவுலகத்துள்ளே கன்மவினைதீராதகருத் துள்ளோர்கள், தேனைமதியமுதங்கொண்டோமென்பான் திரமான வாசிதனைக்கண்டோமென்பான், தானைதன்மைதனையறியாமட்டை தனையறிந்துமனைபுகுதத்தெரியாமட்டை, கோனைகுருவேடமறியா மட்டைகுணமறியான்மனமறியான்குசவன்தானே. 244

குசவனென்ற பிரமகுலமறியாவம்பன் குறியறியாநெறியறியா குருட்டுமாடு, அசைவதனையறியாதசித்தரெல்லாம்அருளானபூரணத்

தையறிவேனென்பான், பிசகானமாந்தரிடஞ் சொல்லவேண்டாம் பேரின்பமறியாதலுத்தர்கோடி,நிசமில்லாமாந்தரிடஞ்சொல்லவேண் டாம் நிலையானகுருபதத்தைத்தொண்டுபண்ணே. 245

பாரையுப்புக்கட்டு.

பண்ணப்பாபிரமகுருவாகிநின்ற பாரையுப்பைக்கொண்டுவந்து பதனமாக, உண்ணப்பாதண்ணீரில்கரைத்துக்கொண்டு வுத்தமனே வடிகட்டிரவியிற்போட்டு, நண்ணப்பாஇப்படியே யஞ்சுதிரம்போடு நலமானவுப்பதுவுங்கட்டிப்போகும், பொன்னப்பாவுண்டாகுமுப்பி னாலே போக்கொன்றுசொல்லுகிறேன்மைந்தாகேளே. 246

கேளப்பாகட்டியதோ ருப்பிடைதான்மைந்தா கொடியானகல் லுப்புக்கூடச்சேர்த்து, நாளப்பாபிண்டமதிந்திடைக்குமைந்தா நல மாகமூன்றுமொன்றாய்கல்வத்திட்டு, கோளப்பாவாராமலறுநீராலே குமுறவேயீராறு சாமமாட்டு, மாளப்பா அரைத்துருட்டு ரவியிற் போடு மனமடங்கக்காய்ந்தபின்புசொல்லக்கேளே. 247

கேளடாகாய்ந்ததொரு வட்டுதன்னில் கிருபையுடன்மண்சீலை வலுவாய்ச்செய்து, வாளடாதேசியுடசருகிற்றானும் வளமாகப்புடம் போட்டுமைந்தாபாரு, தேளடாகொட்டியதுபோலேமைந்தா சிவ சிவாமுப்பூவுஞ் சுன்னமாச்சு, கோளடாவாராமற்சுன்னந்தன்னைக் குருவாகப்பணிந்துமிகச் சுன்னம்பண்ணே. 248

பண்ணியதோர்சுன்னமதில்வீரம்பூரம் பக்குவமாய்கல்வத்தில் வாய்நீராலே, உன்னியேதானரைத்துதாரத்துக்கு வுத்தமனேகவச மதுநன்றாய்ச்செய்து, நன்னயமாய்மண்சீலையேழுஞ்செய்து நலமா கப்புடம்போடக்கட்டும்பாரு, புண்ணியனே இப்படியேநாகங்கட்டி புதுமையுடன்ரெண்டுமொன்றாய் வேதைபாரே. 249

புசுண்டருக்குச்சொன்ன-தாரக்கட்டு.

பாரப்பா இன்னமொருவகையைக்கேளு பரமானபுசுண்டருக் குப்பகர்ந்தவித்தை, நேரப்பாநின்றதொரு கல்லைவாங்கி நினைவாக அந்திடைக்குக்காலுங்கூட்டி, சீரப்பாஅந்திடைக்குச்சீனஞ்சேர்த்து சிவசிவாமூன்றுமொன்றாய்கல்வத்திட்டு, வாரப்பா அறுவகையினீ ராலாட்டி மைந்தனேவட்டாகவுலர்த்திடாயே. 250

உலர்ந்ததொருவட்டுக்குமண்ணுஞ்செய்து உத்தமனே நூறெரு வில்புடத்தைப்போடு, அலர்ந்துமிகத் தீயாறியெடுத்துக்கொண்டு அப்பனேகவசமது யிட்டுப்பாரு, மலர்ந்ததொருபூப்போலே நீறி நிற்குமகத்தானசுன்னமடா என்னசொல்வேன், கலந்ததொருசுன்ன முடன்வீரம்பூரம் கருவானவாய்நீராலரைத்துக்கொள்ளே. 251

அரைத்ததொருமருந்ததனைத்தாரத்துக்கு அப்பனேகவசமது அன்பாய்ச்செய்து, விரைத்துமேமண்சீலை யேழுஞ்செய்துவிரைக்க வேவரவிமுன்னேகாயப்போட்டு, மறைக்கமனமறிவாலே புடத்தைநீ

தான் மைந்தனேபுடமாறிஎடுத்துப்பாரு, தறைக்கடங்காரவிபோலே மேனியாகி தன்மையுடன்கட்டுமடா தாரந்தானே. 252

தாரத்தின் வேதைதன்னை யார்தான்காண்பார் தன்னிலையைத் தானறிந்தேன் காண்பானையா, பேரொத்த சித்தர்கள்தான் கண்டா ரானால் பெருமைதனைத் தானடக்கி மலைமேல்போவார், பாரொத்த பூமியுட நாதங்கண்டால் பலிக்குமடா வாதமுடன் யோகந்தானுங், காரத்தின்செயலதனை யார்தான்காண்பார் கருணையுள்ள பூரணத் தோன் காண்பார்பாரே. 253

பாரறிந்தூரறிந்து குணத்தைக்கண்டு பலமானவீரத்தை யறி யான்மட்டை, கூரறிந்து குருவறிந்து வணங்காப்பாவி குணமில்லா சண்டாளர் மெத்தவுண்டு, நேரறிந்து பேசாத லுத்தரோடே நீ மகனே சொல்லாதே பாவம்பாவந், தூரறிந்து வேரறிந்து கொம் பைக்கண்டு தூண்டாத மணிவிளக்கைக் கண்டுபோற்றே. 254

போற்றுவது ஆரையென்றால் பூரணத்தைமைந்தா புதுமை யுள்ள பூரணமே தெய்வந்தெய்வந், தேற்றுவதால் மனந்தேறி நிலை யில்நின்றால் சிவசிவாதயிலாயத் தேகந்தேகம், பூத்தமலர் வாசனையை யார்தான்காண்பார் புதுமையுள்ள பூரணத்தைக் கண்டோன் காண் பான், சாத்துநிலை தானடங்குங் குருவைக்கண்டு கருவையறிந் துறுதி பெறக் காயசித்தே. 255

## தாளகமெழுகு.

சித்தான தாளகத்தை யெடுத்துக்கொண்டு சிவசிவாமகாரசமுங் கெந்திகூட்டி, முத்தானகல்வத்தி லிட்டுக்கொண்டு முசியாமல் சார நீர்விட்டுஆட்டி, சத்தான தயிலமதில் பின்புஆட்டு சதாசிவன்போல் மெழுகாகுந் தன்மையாக, பத்தானமதிதனிலே யீந்தால்மைந்தா பாலகனே பதினாறு வயதுஆமே. 256

ஆமப்பா குடவனிலே யீந்தாயானால் அப்பனே ஆறரைக்கு அதிகங்காணும், நாமப்பா வெள்ளிசெம்பி லீந்தாயானால் நன்மையுட னெட்டுவய தாகும்பாரு, தாமப்பா இவ்வேதை புசுண்டர்வேதை தன்மையுட னவருடைய கற்பங்கேளு, காமப்பால் காணாற்பால் ரெண்டுங்கொண்டு கருவான பூரணத்தைப் பொசித்தான்பாரே. ()

## புசுண்டரிஷிகற்பம்.

பூரணமென்றாலுமக்குத் தெரியுமோதான் புத்தியுள்ள புலத்தி யனே சொல்லக்கேளு, காரணத்தின் குருவருளால் காணவேணுங் கருவான காரணத்தைக் கேளுமைந்தா, சீரணித்த தேகமென்று லறிவாளோசொல் சிவசிவா ஐந்துருவு மாதியாதி, மாரணித்துக் கொண்டுவந்து ஐயாகேளு மவுனமதில் கறியுப்பை வகையாய்ச்சேரே.

சேர்ந்தபின்பு ரவிமுகத்தில் வைத்துப்பாரு சிவசிவா மெழுகது போலிருக்குமப்பா, பார்த்தபின்பு ரவிமுகத்தில் நவநாள் காய்ந்தால் பாலகனே யுப்பாகும் பசுமையாக, கார்த்ததொரு காரசாரத்தி னுப்

பைகருணையுடன் தினந்தோறுங் கொண்டால்மைந்தா, மூர்த்திகர முண்டாகி தேகஞ்சித்தா மூதண்டராஜரிஷி முறைதானப்பா. 259

சூதரிஷிகற்பம்.

ஆமப்பா இன்னமொரு விபரஞ்சொல்வே னருள்பெருகுஞ் சூத முனிக் கருளும்வார்த்தை, நாமென்ற விஞ்சையடா ஆதியுப்பு நல மான வுப்புடனே துருசுசேர்த்து, காமப்பால் வெடியுப்பு நேராய் சேர்த்து கல்வத்தில் மூன்றுமொன்றாய் கருவாலாட்டி, வாமப்பால் விட்டாட்டிப் புடத்தைப்போடு மகத்தானசுன்னமடா நீறிப்போமே.

நீறியதோர் சுண்ணும்பில் வீரம்பூரம் நேரப்பா நேர்பாதி சேர்த்துக்கொண்டு, ஊறியதோர் வாய்நீரால் கல்வத்தாட்டி உத்த மனே நன்றாக அரைத்தபின்பு, காரியமாய் ரவிமுகத்தில் காயவைப் பாய் கருவாக வுருட்டியதை வட்டுபண்ணி, ஆறியதோர் மண்சீலை யேழுஞ்செய்து அன்புடனே தான்போடச் சுன்னமாச்சே. 261

ஆச்சப்பா சுன்னமது வாய்நீராலே அப்பனே பூரத்துக் கங்கி பூட்டி, பேச்சப்பா வொன்றுமிலை மண்சீலைசெய்து பிசகாமற் புடம் போட நீறிப்போகும், காச்சப்பா அந்நீரில் வீரம்பூரங் கருவிட்டு மத்திச்சு துருசுக்கப்பி, பாச்சப்பா மண்சீலை யேழுஞ்செய்து பக்குவ மாய் புடம்போடச் சுன்னமாச்சே. 262

சுன்னமென்ற துருசினுட சுன்னந்தன்னை துருசான ரசந் தனக்கு பத்துக்கொன்று, புண்ணியனே தான்கொடுத்து வாய்நீர் விட்டு புதுமையுடன் மத்திக்கத் திரண்டுபோகும், தண்மையுட னுருட்டியதை சுன்னத்துள்ளே தான்முழத்திற் புடம்போட வுருகி நிற்கும், உண்மையுடன் பரியதனை யுருக்கிக்கொண்டு வுருண்டுநின்ற ரசங்கொடுக்கக் களங்கமாச்சே. 263

களங்கமில்லா களங்கதனை யெடுத்துக்கொண்டு கருணைபெற செம்புதனிலூற்றிக்கொண்டு, மலங்காமல் கொடுத்துடனே மாற்றுப் பத்தாய் வரிசைபெறக் காணுமடா வெள்ளிக்கீந்தா, ளுளங்கனிந்த பதினாறு மாற்றுகாணு முத்தமனே குடவனிலே யீந்தாயானால், ஜெலங்கனிந்த வூறலெல்லா மற்றுநல்ல தீர்க்கமுட னெட்டுவய தாகும்பாரே. 264

பாரப்பா சக்களங்கை நொறுக்கிக்கொண்டு பழுதில்லா கெந்தி தனை யிடையேசேர்த்து, சாரப்பா வீரமுடன் பூரம்லிங்கந் தயவான மனோசிலையுங் கூடச்சேர்த்து, நேரப்பா கல்வத்திற் பொடியதாக்கி நேர்மையுள்ள குப்பிதனி லரைமாடிட்டு, சீரப்பா மண்சீலை யேழுஞ் செய்து சிவசிவா வாலுகையில் வைத்துப்போற்றே. 265

போற்றியே குருபரனைத் தொழுதுகொண்டு புதுமையுள்ள சருகுகம்பூவிற்கால்மைந்தா, தேற்றியே தீயெரிப்பா யாறுஜாமம் சிவசிவா செந்தூர மென்னசொல்வேன், நாற்றிசையும் போற்று மிந்த செந்தூரந்தான் நலமாகப் பணவிடைதான் கொண்டாயானால், பார்த்திபனே யாக்கைதனக் கழிவேயில்லைப் பணிந்திடுவாய் குரு பரனைப் பணிந்துபோற்றே. 266

பிர்மரிஷிகற்பம்..

பணிந்துமிக இன்னமொரு கருவைக்கேளு பார்தனிலே பிரம ரிஷிக் கருளும்வார்த்தை, கனிந்துமிகப் பூரணத்தைக் கனிந்துக் கொண்டு கமலமதிலேயிருந்த மதுவைவாங்கி, அணிந்தவொரு கமல மதில் விட்டுமைந்தா அருள்பெருகுங் கங்கைதனை யதனில்விட்டு, துணிந்துமிக ரெண்டுமொன்ருய் ரேசித்தேதான் துலங்குரவி முகந் தனிலே காயவையே. 267

வையப்பா இந்தவிதம்பத்துமுறையப்பா வைத்ததினுல் கார முடன்சாரம்ரெண்டும், மெய்யப்பாசொல்லுகிறேன் ரெண்டுமொன் ருய் விரவியேதிருநீருய்ப்போகும்பாரு, செய்யப்பாஅந்நீற்றில்முன் போல்பத்துதெசதீட்சைபண்ணிவிடசேதிகேளு,அய்யனேயமுதரச மானகற்பம் ஆருக்கும்விள்ளாதேயருமைதானே. 268

தானென்றஅமுதரசகற்பங்கொண்டு தரணிதனில் பிரமரிஷிநா னேயென்று, வூனென்றவுயிர்த்தனைத்தான் திஷ்டிப்பாலேயுண்டாக்கி யண்டமெல்லாமயனுய்நின்று, கோனென்ற குருவாகிகுருவுமானுன் குருவானபிரமகுரு ஆர்தான்காண்பார், நானென்ற ஆணவத்தை யொடுக்கிமைந்தா னன்மையுடனிந்தநூல்பதனம்பண்ணே. 269

இந்தநூலாயிரத்திருநூறுக்கு ளிதமானகருக்கிடையுங் குருக் கிடையுமப்பா,சந்தேகமில்லாமல்சொன்னேன்வாக்யந்தன்மையில்லா மானிடர்க்குசாற்றினுக்கால், பந்தமிலாப்பாசமது சூழ்ந்துக்கொண்டு பாழ்நரகில்வீழாதேபதனஞ்சொன்னே, னந்தமுளஆதியந்தமிதிலே தோன்று மாருக்குமிந்தநூலளிக்கொணுதே. 270

ஒன்ருனகற்பமடா பிரமகற்ப முண்மையுடன் செய்தவனே சித்தன்சித்தன், பண்டானசோதியடாபரப்பிரமமாச்சு பாருலகில் பூரணத்தைப்பணியமாட்டார், நன்ருனபிரமகுரு ஆர்தான்காண்பார் நன்மையுடன்கண்டவனே சீவன்முத்தன், உண்டானசேதியொன்று முரைக்கமாட்டார் உரைத்தாக்காலருநரகமுண்டாம்பாரே. 271

பாரப்பா நரகமதில் சேரநன்ருே பராபரத்தி னருள்பெருகி யிருக்கநன்ருே, நேரப்பாநின்றபொருள் காணவேணும் நிருமலமாம் பிரமகற்பங் கொள்ளவேணும், காரப்பா அடிமூலங் காக்கவேணுங் காராட்டாற் சகலசித்துங் காணுதோடும், ஆரப்பா அறிவார்கள் கார சாரம் அடங்கிநின்ற பொருளறிந்து அருளைப்போற்றே. 272

அருளான பூரணமே போதம்போதம் ஆதியென்ற பிரமகுரு வானபோதம், மருளான மயக்கமெல்லாந் தீர்த்தபோத மனதடங்கி யொருமையாய்மகிழ்ந்தபோதந், திருவானலட்சுமிப்பெண்வாசமான தேசியென்றகுருதேசிநின்றபோதம் உருவான அருவுருவா யமர்ந்த போதம் உண்மையென்ற போதமதிலுகந்துநில்லே. 273

நில்லென்றநிலையறிந்து நின்ருல்மைந்தா நிலையானபோதமதை நீதான்காண்பாய், கல்லென்ற கடுங்காரக் கல்லைமைந்தா காசினியோ

ராரறிவார்கருதிப்பார்க்க, அல்லென்ற கருவிகளை யகற்றினுக்கால் அருள்பெருகும் பிரமநிலை யருளைக்காண்பான், தில்லைகட ராஜருட செயல்கண்டாக்கால் சிவசிவா பிரமரிஷி யாவாய்பாரே. 274

பாராசரிஷிகற்பம்.

பாரப்பா இன்னமொரு புதுமைகேளு பராசமுனி தான்செய்து பகர்ந்தவித்தை, ஆரப்பா அறிவார்கள் தீதவித்தை அன்பான புலத்தியனேயுனக்குச்சொல்வேன், நேரப்பாபிரமகுலத்துதித்ததொன்று நிச்சயமாய்மூலமதை சமூலங்கொண்டு, வீரப்பாசெய்யாமல் ரவியிற்றுக்கி வீறடங்கிக்காய்ந்தபின்பு வித்தைகேளே. 275

கேளப்பா கல்லுரலி விட்டுமைந்தா கிருபையுள்ள இருப்புலக்கை தன்னாற்குத்தி, கேளப்பாவாராமல்கொழித்துக்கொண்டுகூர்மையுடனிடித்திடுவாய்தவிடதாக்கி, வாளப்பாஇடித்ததைநீசமூலங்கொண்டு மைந்தனே தண்ணீரில் பிசைந்துவைத்து, நீளப்பாமி●சாமல்பிசரிக்கொண்டு நேரானரவிமுகத்தில் வைத்துப்போற்றே. 276

போற்றுவதுதசதீட்சை முகிந்துதானல் புதுமையுள்ள வுப்பது தானென்னசொல்வேன், தாட்டிகமாயமுதரச வுப்பைமைந்தா தாளியென்றபீங்கானி விட்டுக்கொண்டு, பூட்டுவாய்சூடனென்று இணங்கனென்று பொல்லாத வீரமொன்று கருவுப்பொன்று, நாட்டியே ஒன்றாகச்சேர்த்துக்கொண்டு நலமானபாணவர்ப்சில்லுப்போடே. ()

போட்டபின்புமண்சீலைஎழுஞ்செய்து புதுமையுடனிடுப்பளவில் குழியில்வைத்து, மாட்டுவாயானையுட கட்டம்போட்டு மைந்தனே மணல்கொட்டி வைத்துக்கேளு, தாட்டிகமா யதின்மேலே திரணை போட்டு தன்மையுடன் தானிருந்து தன்னைப்போற்றி, நாட்டுவாய் லட்சமுறுநீலகண்டம் நன்மையுடன் தினந்தொழுகநன்மையாமே. ()

நன்மையதுஎன்னவென்றால்மைந்தாகேளு நலமானமெழுகாகு மண்டலத்திலப்பா வுண்ணீமயுட னம்மெழுகை யெடுத்துக்கொண்டு வூட்டுவாய்தினந்தோறு மெழுகுபோல, திண்மையென்ற சடலமது நன்மையாகுஞ் சிவசிவா ஆக்கையது பிலத்துப்போகும், தண்மையென்ற மெழுகினுட பெருமைதன்னைச் சதாகாலம் போற்றிப்பூரணத்தைநோக்கே. 279

பூரணமாய் நின்றதொரு மெழுகுதன்னில் புதுமையொன்று சொல்லுகிறோம் புகலக்கேளு, காரணமாய் நின்றகளிம் பானசெம்பில் கருத்துடனே நூற்றுக்குஒன்றுபோடு, மாரணமாய்போகுமடாசெம்புதானு மாற்றேதுஎன்னவென்றால்மைந்தாகேளு, நாரணத்தின்பொருள தினல்நூறுமாற்று நன்மையுடன்காணுமடா நாம்சொன்னோமே.

ஆறுதாரம்.

சொன்னதொருமூலத்துக்கப்பால்பாரு துலங்குமடா ஆறுதலம் பிர்மாவீடு, நன்னயமாய் நகாரமென்ற பூமிக்குள்ளே நாடிநின்றவாசியினல்பிறப்புமாச்சு, தண்மையுடனதின்மேலேமாலின்வீடு தளமான

பத்திதரும்பிறையுமாகும், உண்மையுடன்ஜெகத்துக்குத் தாயாய்நிற்பாள் ஓங்காரமாயத்துக்காதிதானே. 281

ஆதியாந்திரோதாயி யமர்ந்தவீடு அருளானபோதமிருந் தாடும்வீடு, நீதியாங்காமியத்தை நிமிர்த்தும்வீடு நினைவில்லாமாயமெல்லாம் நிறைந்தவீடு, பேதியாமனமுழன்றுபெண்ணைத்தேடி பேய்க்கூத்தாயாட்டிவிக்கும்பிலத்தவீடு, சோதியென்றுவரமளித்த துரைச்சிவீடு சுகமாகக்கண்டறிந்துமேலேபாரே. 282

பாரப்பாஅதின்மேலே பனிரண்டுக்குள் பானுவங்கேயீராறு முகமாய்நிற்கும், நேரப்பாநேரவென்றால் கண்கொள்ளாது நேர்ந்தாலும்நடுமனையில் திரிகோணமாகி, சீரப்பாசிகாரமென்ற எழுத்துநிற்கும் சிவசிவாருத்திரனும் ருத்தரியுநிற்பார், காரப்பாநடுமனையில் நின்றகாட்சி காணவென்றால்கண்கொள்ளாக் காட்சியாமே. 283

காட்சியாமவருடைய கூத்தைக்கேளு கடும்பசியும்நித்திரையும் பயம்மைசயோகம், மாச்சல்செய்யும்விதனத்தால்காமமீறி வலுமையுடநரைதிரையுமாகிநிற்கும், பாச்சலென்றசடமழிந்துபாழாம்வீடு பரஞானயோகமெல்லாம் பறந்துபோகும், தாட்சியுடனதினுடையகூத்தைக்கண்டு தாண்டிநின்றஅகாரமதின் தன்மைகேளே. 284

கேளப்பாபதினறுவாயலின்வீடு கெடியானகாமமுதல்குரோதம்லோபம், மாளப்பாமோகமொடுமதத்தினோடு மகத்தானபிறப்பற்றுமாளப்பண்ணும், கோளப்பாஇல்லாதபரத்தின்வீடு குறியாகஅதின்குணத்தைக்கூறக்கேளு, நாளப்பாமேல்மூலம்அகாரவீடு நாதசதாசிவனுமனோன்மணியுந்தானே. 285

தானென்றமனோன்மணியுஞ்சதாசிவனுங்கூடி தயவாகரெண்டிதழிலிருந்தாரப்பா, கானென்றநால்வருந்தான்போற்றிசெய்ய கண்ணடங்காப்பிரபையொளிகருதிப்பாரு, மேனென்றசக்கரத்திலிருந்துகொண்டு மகத்தானவித்தையெலாமகிழ்ந்துபாரு, வீணென்றவறுமையுமாய்மனதுமாகி வித்தானகருவினுளகூத்துமாச்சே. 286

ஆச்சப்பாவுலகத்தில் கர்மதர்மம் ஆனதொருசரிதைமுதல் கிரிகையாகி, காட்சியதோர்யோகமுமாய் ஞானமாகி கரைகொள்ளாநூலாகிகருவுமாகி, தாட்சியிலாத்தெளிவாகி நினைவுமாகி சகலமெலாந்தோற்றுஞ் சாத்திரமுமாகி, பேச்சாகிப்பொருளாய்மேல் வழியைக்காட்டப் பெருமையுள்ளகுருபதத்தைப் பூசிப்பாயே. 287

## ரோமரிஷிவேதை.

பூசித்தகருமானமொன்றுகேளு புத்தியுள்ளரோமரிஷிபுகழ்ந்தவித்தை, நேசித்தசருவானவுப்புரெட்டி நிருமலமாங்கல்லுப்புகூடச்சேர்த்து, ஆதித்தரவிபீசம்நாலுக்கொன்று அடைவாகமூன்றுமொன்றாய்கல்வத்திட்டு, பாசித்தவிந்துநீர்தன்னாலாட்டி பக்குவமாயுருட்டியதைவட்டுபண்ணே. 288

பண்ணப்பாவட்டதற்கு மண்சீலைசெய்து பக்குவமாய்காட்டையொருபுடத்தைப்போடு, நன்னயமாய்நீயறியதுசுண்ணும்பாகும்காட

கத்திலாடுகிறகுருவிதப்பா, தண்மையென்றசுன்னமுடன் வீரம்பூரந் தாக்கிநன்றாய்மத்திப்பாய் வாய்நீராலே, உண்மையென்றதுருசதற் குக்கவசம்பண்ணி உத்தமனே மண்சிலையுகந்துசெய்யே. 289

செய்யப்பாகவசமதையுலரவைத்து தியானத்தின் தணல்மேலே வைத்தாயானால், மெய்யப்பாசொல்லுகிறேனீறிப்போகும் மேன்மை யுள்ளசுன்னமடா யெடுத்துக்கொண்டு, வையப்பாதாளகத்துக்கங்கி பூட்டி வரிசைபெறக்கவசமதை வலுவாய்ச்செய்து, பையப்பாரெண் டெருவில்புடத்தைப்போடு பசுமையுள்ளகாரமதுகட்டிப்போச்சே.

போச்சப்பாதாளகத்தி னூறலெல்லாம் புகழானரவிபோலே யிறுகிநிற்கும், பேச்சப்பாவொன்றுமில்லைவெள்ளிநூற்றில் பிலமான தாரமொன்றாஈந்தாயானால், தாட்சியில்லாப்பதினாறு மாற்றுத்தங்கந் தடையறவேகாணுமடா தவக்கமில்லை, மாச்சல்செய்யுங்குடவனிலே நூற்றுக்கொன்று மக்களேயொன்றிடவேயெட்டுமாற்றே. 291

எட்டுரெண்டுவெள்ளிசெம்பையுருக்கிக்கொண்டு இன்பமுள்ள காரமதிற்காறேயீவாய், மட்டில்லாஅஞ்சாறுமாற்றுகாணு மகத்தான வேதையடாதாரந்தாரம், அட்டியில்லாதாரமதுக்காதாரந்தான் ஆரறி யப்போகிறார்ஐயாஐயா, திட்டமுடனிம்முறைதான் நல்லபிரயோகந் திடமானரோமரிஷிகற்பங்கேளே. 292

## பிரமரிஷிகற்பம்.

கற்பமென்றுசொல்வதெல்லாங்காயாதிகற்பங் கருவறிந்துவுரு வறிந்துகருவைப்பார்த்து, அற்பமென்றுநினையாமலாதியுப்பை அறு சுவையோடெடுத்துவந்து அறுநீர்விட்டு, மெய்ப்பாகஅப்புமுப்பு மொன்றாய்ச்சேர்த்து விசையானரவிமுகத்தில்வைத்துப்பாரு, வுற்ப னமாய்க்கயப்பேறிகற்பமாகும் உடலினுடவலுவறிந்துவூட்டுவாயே.

ஊட்டுவதுதினகுளது அளவுகொண்டு வுறுதிபெறக்கொண்ட தின்மெற்கழிஞ்சிகொள்ளு, நாட்டுவதுபூரணத்தில் மனதைநாட்டு நன்றானபேரொளியில் நின்றால்மைந்தா, வாட்டரவுமொன்றுமில்லை நரைதிரையுமாறும் மகத்தானகாயமது வலுத்துப்போகும், தாட்டிக மாய்நின்றஒருகாயாதிகற்பந் தனையறிந்துகொண்டவனேசித்தனாமே.

சித்தானகாயாதிகற்பந்தன்னைச் செகத்திலுள்ளமானிடரோகா ணப்போறார், முத்தானமகிமைதனையார்தான்காண்பார் மூர்க்கமுள்ள சத்தரிஷிமுனிவர்காண்பார், வற்றாதபூரணத்தைக்கண்டால்மைந்தா வலுவாகக்காயசித்தி யோகங்காணும், பத்தானதசதீட்சைபருவங் கண்டால் பலிக்குமடாசகலசித்தும்பலிக்குந்தானே. 295

தானென்றதத்துவத்தையறிந்துகொண்டு தண்மையென்றபூரா ணத்தைப் பணிந்துகொண்டு, கோனென்றகுருவருளைப்போற்றிக் கொண்டு கும்பமுனிதஞ்சமென்று நின்றால்மைந்தா, மானென்றமதி யமுதங்கசிந்துகாணு மார்க்கமுளகுண்டலியின் மகிமைதோற்றும், ஊனென்றவூனறிந்தா லெல்லாஞ்சித்தி ஊடாடும்வாசிதனையுற்றுப் பாரே. 296

பாரென்றுசொன்னீரேகும்பமுனியப்பா பராபரத்தின்வகைய தனையார்தான்காண்பார், நேர்நின்றவாசிதனையறிவாற்பற்றி நிலையான குருபதத்தில்நேர்ந்துக்கொண்டால், தூரென்றஅடிமூலங்கணேசன் கோவில் துலங்குமடாகரப்பத்தில்சூட்சமெல்லாம், வேறென்றுமயங் காதேஐயாஐயா விஞ்சையென்றமூலமந்திரமிதுதான்பாரே. 297

பூமியுப்புமகிமை.

பாருப்புமகிமைதனைசொல்லக்கேளு பாரீன்றபூமியுடநாதமப்பா, ஆருப்புமகிமைதனைக் காணப்போமூர் அருளானவிந்துநீர்தன்னிற் போட்டு, சேருப்புரெண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு சிக்கென வேரவிமுகத்தில் வைத்துப்பாரு, காருப்புஇப்படியே பத்துமுறை செய்தால் கருவானரெண்டுமொன்றாய்க்காட்டும்பாரே. 298

பாரப்பாகட்டியதோருப்புகொண்டு பகாரதகல்லுப்புரெண்டுங் கூட்டி, சேரப்பாரவிபீசம்ரெண்டிலொன்று சேர்த்துமிகக்கல்வமதில் சேர்த்துக்கொண்டு, வாரப்பாமூன்றிலொன்றுதுருசுசேர்த்து வாரி தியாமறுவகையின்தன்னலாட்டி, வீரப்பாஅடங்கவுமேநன்றாயாட்டி வில்லைபோல்பிடித்ததனைக்காயப்போடே. 299

காரீயக்கட்டு.

போட்டதொருவட்டதற்குக்கவசஞ்செய்து புதுமையுடன்புடம் போடச்சுன்னமாகும், தேட்டானசுன்னமதுபதனம்பண்ணி சிவப் பானகெவுரிதனக் கங்கிபூட்டி, மாட்டடாமண்சீலை யேழுஞ்செய்து மண்மறைவில் புடம்போட்டு வாங்கிக்கொண்டு, காட்டடாகாரீயத் துள்ளேமைந்தா கருவானகாரீயங்கட்டுந்தானே. 300

தானென்றகாரீயக் கட்டைத்தானுந் தன்மையென்றசாரமதா லுருக்கிக்கொண்டு, தேனென்றபரிதனிலே யிடைக்கிடைதான்சேர் த்து தெளிவானசெம்புதனில் நூற்றுக்கொன்று, கொனென்றகுரு வருளால் கொடுத்தால் மைந்தா குறையாது ஒன்பதரை குணமோ மெத்த, தேனென்றபூரணத்தின்செயல்தன்னாலே திரமாகஇன்ன மொருகருவைக்கேளே. 301

சாதிலிங்கக்கட்டு.

கேளப்பாமுன்குருவிற் கழிஞ்சிவாங்கி கிருபையுள்ளசாதிலிங் கங்கழிஞ்சிவாங்கி, நீளப்பாவாய்நீரால்குருவைமத்தி நிச்சயமாய்வீர முடன்பூரஞ்சேர்த்து, கோளப்பாவாராமல்லிங்கத்துக்கு குணமாகக் கவசமதுநன்றாய்செய்து, வாளப்பாமண்சீலையேழுஞ்செய்து மண் மறைவிற்புடம்போடவலியுந்தானே. 302

சாதிலிங்கக்களங்கு.

தானேதான்வலித்திருந்தலிங்கந்தன்னை தன்மையுடன்மூன்று புடமிப்படியேசெய்து, வீணேதான்திரியாமல்மைந்தாகேளு விளங்கி நின்றசாதிலிங்கந் தன்னைவாங்கி, பேணேநீரசிதமென்ற தங்கந்தன் னைப் பிலமாகச்சுற்றிமுன்பின்குருவைப்பூசி, தோணவேமண்சீலை செய்துக்கொண்டு சுகமாகப்படம்போடக்களங்கமாச்சே. 303

ஆச்சப்பாசாதிலிங்கக்களங்கைவாங்கி அருள்பெருகுஞ்சற்குருவினருளைப்போற்றி, கூச்சமிலாச்செம்புதனில் நூற்றுக்கொன்று குருவானகளங்கமதையீய்ந்தாயானால், தாட்சியில்லாபதினறுமாற்று காணுந் தடையறவேவெள்ளியிலே யீந்தால்மைந்தா, மாச்சலிலா முப்பத்திரண்டுமாற்று மகத்தானகுடவனுக்குஈந்துபாரே. 304

பாரப்பாகுடவனிலேமுந்நூற்றுக்கொன்றுபக்குவமாய்கொடுத்துருக்கமாற்றெட்டாகும், காரப்பாவெள்ளிசெம்புகணக்காய்சேர்த்து கருவானகளங்கமதை நூற்றுக்கொன்று, சேரப்பாகுடவனிலே யுருக்கிப்பாரு சிவசிவாஈரஞ்சுமாற்றேகாணும், ஆரப்பாஅரிவார்கள் வன்னிகெற்பம் அடக்கத்திலாடுகின்றஅருமைதானே. 305

காரீயபற்பம்.

தானென்றவுப்புடனேகாரஞ்சேர்த்து சம்பழத்தின்சாற்றினல் தாக்கியாட்டி, வீணென்றகாரீயத்துக்கங்கிபூட்டி வீறடங்கச்சீலைமண் வீசையாய்ச்செய்து, கானென்றகாட்டெருவில் புடத்தைப்போடு கனல்மீறிகாரீயம் பற்பமாகும், தேனென்றபற்பமதைப் பதனம்பண்ணி சிவசிவாமுப்பூவுங்கூடச்சேரே. 306

சேரப்பாவீரமுடன்பூரஞ்சேர்த்து சிவசிவாசம்பழத்தின்சாற்றுலாட்டி, வீரப்பாகொண்டுநின்றபாஷாணந்தான் வீறடங்கக்கவசமதைவிஞ்சையாக்கி, பாரப்பாமண்சீலையேழுஞ்செய்து பக்குவமாய் மூன்றுபுடமண்மறைவிற்போடு, சீரப்பாமூன்றுபுடம்போட்டபின்பு சிக்கெனவேகாடையொரு புடத்தைப்போடே. 307

பாஷாணபற்பம்.

போடப்பாகாடையென்ற புடத்திற்றனே புதுமையுள்ளபாஷாணம்நீறுய்ப்போகும், நாடப்பாபாஷாணநீற்றில்மைந்தா நாமொன்று சொல்கிறேம்நன்றாய்க்கேளு, தேடப்பாவெள்ளீயமுருக்கிக்கொண்டு சேர்த்திடுவாயற்பமதைநூற்றுக்கொன்று, பாடப்பாவொன்றுமில்லை வெள்ளீயந்தான் பூதையாமல்மாண்டதுவுந் தெறித்துப்போமே.

போமப்பாதெரித்துநின்ற வெள்ளீயத்தைப் புகழ்பெருகுமதிதனிலேயிடைதான்சேர்த்து, நாமப்பாகுகைதனிலேயுருக்கிப்பாரு நலமானசாரைரெண்டுமொன்றாய்ச்சேர்த்து, வாமப்பாதன்னருளால் குருவாய்ப்போகு மகத்தானகுருவினுடவகையைக்கேளு, தாமப்பா பூரமென்றதாம்பிரத்தைதன்மையுடன்குகைதனிலேயுருக்கிப்பாரே.

உருக்கியதோர்பூரமதில்நூற்றுக்கொன்று உத்தமனேகொடுத்துருக்கமாற்றுபத்தாம், கருக்கனென்றவெள்ளியிலே ஐந்நூற்றுக்கொன்று கருவாகக்கொடுத்துருக்க அதிகமாற்றுந், திருக்கானபாஷாணப்போக்குதன்னை சிவசிவாவென்னசொல்வே னின்னங்கேளு, குருக்கானவழியொன்றுசொல்வேன் மைந்தா குருவான்முப்பூவின் குருவைவாங்கே. 310

பாஷாணக்கட்டு.

வாங்குவாய்முப்பூவில்காரசாரம் வரிசையாய்துரிசினுட சுன்னஞ்சேர்த்து, பாங்குபெறகல்வமதிலிட்டுமைந்தா பழச்சாற்றாலரைத்

தெடுத்தெடுத்துப்பருவமாக, தீங்கில்லாபாஷாணந் தனக்குமைந்தா திருக்கவேகவசமதுதிறமாய்ச்செய்து, காங்கையதிலேறுதற்குமண் மறைவில்மைந்தா கருத்துற்றேபுடம்போடக்கட்டும்பாரே. 311

பாரப்பா இப்படியே மூன்றுபுடம்போடு பக்குவமாய்க்கருக்குடத்திலுருகும்பாரு, சாரப்பாவுருகுகின்ற பாஷாணந்தன்னை கருத்துறவேதானெடுத்துருக்கக்கேளு, சாரப்பாவெள்ளிவங்கமுருகும்போது சாற்றடாஇடைக்கிடைதான் பாஷாணஞ்சேர்த்து, வீரப்பா செய்யாமலுருக்கிப்பாரு வெள்ளீயக்கட்டியதுவுடையும்பாரே. ()

## வெள்ளீயபற்பம்.

உடைந்திருந்துவெள்ளீயக் கட்டிவாங்கி உண்மையுடனிடைக்கிடைதான்வெள்ளிசேர்த்து, கடைந்ததொருகுகைதனிலேயுருக்கிப்பாருகமலமென்றவெள்ளியது நொருங்குமப்பா, அடைந்ததொரு கல்வத்தி விட்டுமைந்தா அரகரா இடைக்கிடைதான் ரசத்தைச் சேர்த்து, ஜெடம்வலுத்தசெயநீராலரைத்துமைந்தா சிவசிவாவுருட்டியதைவட்டுப்பண்ணே. 313

பண்ணியதோர்வட்டதனையோட்டில்வைத்து பக்குவமாய்மண் சீலையேழுஞ்செய்து, புண்ணியமாயெருவடக்கிப் புடத்தைப்போடு புதுமையுள்ளஈசானம் பூசைபண்ணு, தண்ணிமையாய் புடமாறி எடுத்துப்பாரு தயவானபற்பமாய் நீறிநிற்கும், வெண்மையென்ற குளுநீற்றைப் பதனம்பண்ணு வேகமுள்ளவன்னிகற்ப மிதுதான் பாரே. 314

## வன்னிகற்பம்.

பாரடாவன்னியுட கற்பந்தன்னை பாச்சடாவெள்ளிசெம்பில் நூற்றுக்கொன்று, சேரடாகற்பமதுதங்கிற்றானால் சிவசிவாசோதியுடதிரமோமெத்த, ஆரடாஅறிவார்கள் வன்னிகற்பம்அறிந்தவனே சிவயோகி அதுதான்மைந்தா, ஆரடாகுருபதத்தைத் தொண்டு பண்ணி குருவிருக்குஞ்சந்நிதியைக் குறித்துப்போற்றே. 315

போற்றுவதுபூரணத்தைப் போற்றவேணும் புதுமையுள்ள குருபதத்தைப்பணியவேணும், நாட்டுவதுசுழிமுனையில் மனத்தை நாட்டிநாலானபூரணத்தைநாட்டிப்பாரு,தாட்டிகமாய்மனதுறுதியாக நின்றால் சடாதரக்கோவைமிகத் தானேதோற்றும், ஆட்டிவிக்கும் வாசியுடகருவைக்கண்டால் ஆதியந்தப்பதிதோற்றுமாதிதானே.

ஆதியென்றசோதிதனைக் கண்டால்மைந்தா அரகராமனோன்மணியையற்புதமேசெய்து,நீதியென்றரவிதனிலேசேர்த்தால்மைந்தா நிச்சயமாய்சித்திதாம் நீதான்பாரு, சோதியென்றதொடுகுறியை யென்னசொல்வேன் துருவமுள்ளமேருவதில் ரவிமதிதான்சேரு, வாதியென்றமனமொத்துநிலையில்வைத்தால் மகத்தானகுருவருளால் மைந்தாபாரே. 317

## பாஷாணக்கட்டுருக்கு.

பாரப்பாசற்குருவைத் தொழுதுகொண்டு பாச்சடாவெள்ளை யென்றபாஷாணத்தில், காரப்பாபஞ்சகணதீட்சைபண்ணு கருவாண

பாஷாணக்கட்டிதானும், நேரப்பாநின்றகுருசூட்சத்தாலே நிச்சய மாய்க்கட்டியதுவுருகும்பாரு, ஆரப்பாஅறிவார்களிந்தப்போக்குஆச் சரியமாச்சரியமருளைக்கேளே. 318

கேளடாகட்டிநின்ற பாஷாணத்தைக் கிருபையுள்ளசெம்பதி லேநூற்றுக்கொன்று, வாளடாகுகைதனிலேயுருகும்போது மாட்ட டாமதிபோலேயாகுஞ்செம்பு, கேளடாவாராமல்தாயைச்சேரு குண மானவங்கத்துக்கசையாதப்பா, ஆளடாகயிலாசத் தடுத்துமெள்ள ஆதியென்றபராபரத்தி னடியைப்போற்றே. 319

அடியென்றஅட்சரத்தை யார்தான்காண்பார் அப்பனேஅகார மென்றஅருளைக்காணார், அடியென்றமவுனமதில்முதலைக்காணார்முத லறிந்துதினம்பணிவுமுடியைக்காணார், படியானபடியறிந்து ஏறமாட் டார்பாவிகள்தான் வெறும்பிலுக்காய் பகருவார்கள், வடிவானரூப மதையறிந்தால்மைந்தா வஞ்சமறவுலகமதில்வாழலாமே. 320

வாழவேமதியமுதங்கொண்டோமென்று மாத்தானபூரணத்தை யறிவோமென்று, ஆளவேஅடிநாவைக்கண்டோமென்று அப்பாலே மவுனமதையறிந்தோமென்று, வேலானவடிவேலையறிந்தோமென்று வேதாந்தபூரணத்தைக் கண்டோமென்று, மாளவேஅமுதமென்றுங் கபாலதூரில் மகத்தானசேத்துமத்தைக்கொள்வான்பாரே. 321

அமிர்தசஞ்சீவி.

பாரப்பா அமுதசஞ்சீவியொன்று பகருகிறேன்புலத்தியனே பண்பாய்க்கேளு, காரப்பாபிருதிவியாம்பூமிநாதங் கருவானமனோன் மணியாங்கருணைப்பூடு, ஆரப்பாஅறிவார்கள்சுவையின்பாகம் அரு ளானதிருவுமையாளணிந்தகாரம், வீரப்பாசெய்தோரைஅடக்குங் காரம் வேதாந்தமனோன்மணியைவிளக்குந்தானே. 322

தானென்ற தன்மையதில்பொருந்திநின்ற தயவாகப்பாரீன்ற நாதம்வாங்கிக், கோனென்றகுருவருளால்தண்ணீர்தன்னில் குருவா னநாதமதைக்கரைத்திறுத்து, பானென்ற பானுவின்றன்முகத்தில் மைந்தா பாங்காகவைத்துலர்த்திபதனமாக, ஊனென்றஅமுதமதில் பத்துமுறையப்பா வுற்பனமாயஞ்சுபத்துமுறைதான்செய்யே. ()

செய்யவே பூமியுடநாதந்தானுஞ் சிவஜீவாளன்னசொல்வேன முதப்போக்கு, மெய்யானசத்திசிவ மிரண்டுமொன்றாய் விரவிநின்ற கருவதனைவிள்ளலாமா, ஐயனேயுனக்காகச்சொன்னேனைமைந்தா அறு சுவையின்பாகமதையார்தான்காண்பார், வையமதிற்கோடியிலேயொ ருவனுண்டு மகத்தானபூரணத்தின்வளங்காண்பாரே. 324

பாரினிற்பிருதிவியுமப்புங்கூடி பதியானதேயுவிலேசமாதிகொ ண்டு, வாரீன்றவாயுவுமாகாசங்கூடி மகிழ்ந்துநின்றஅமுதசஞ்சீவி தன்னை, ஆரின்றுஆரறிவாரமுதப்போக்கு அரகராஅமுதசஞ்சீவி தன்னில், நேரின்றுகுன்றிஇடை கொண்டால்மைந்தா நிச்சயமாயாக் கையதுநத்தியாமே. 325

பொரிக்காரகற்பம்.

சித்திபெறஇன்னமொரு விபரங்கேளு சிவசிவாபொரிக்காரங் கொண்டுவந்து, முத்திபெறஆவினுடநெய்யில்மைந்தா மூர்க்கமுடன் தான்பொரித்துக் கொண்டால்மைந்தா, அத்திதனிலுள்ளவிஷபித்த மெல்லா மகன்றுவிடுந்தேகமதிலழகுண்டாகும், வெற்றிபெறக்காய சித்துக்கிது தான்மூலம் விள்ளுவேனின்னமொருசித்துகேளே. ()

நந்தியுப்பு.

கேளப்பாசித்தியென்றகாரந்தானுங் கிருபையுள்ளஜலமதிதான் றுசாரத்தூட்டி, வாளப்பாதசதீட்சை பத்துமுறையப்பா வளமை பெறச்செய்துகொண்டுமைந்தாகேளு, கேளப்பாவாராமல் சொல்லக் கேளு குருவானரவிபீசங்கூடிச்சேர்த்து, நீளப்பாதனில்கரைத்து ரவியில்வைத்தால் நிசமானநந்தியென்றவுப்பதாச்சே. 327

உப்பானநந்தியுப்பைப்பதனம்பண்ணி யுண்மையுள்ளமந்திரத் தைத்தியானஞ்செய்து, அப்பான்தினங்கழஞ்சி கொண்டாயானால் ஆக்கைதனிலுள்ளவுப்பு அகன்றுபோகுந், தப்பாமல்தினந்தோறுங் கொண்டுயேறு சதானந்தியுப்பினுடதன்மைமெத்த, செப்பாதேகரு விதான்மைந்தாமைந்தா செகத்தோர்க்குவிள்ளாதே சித்தர்காமே.

ஆமப்பாநந்தியுட மூலாதாரம் அழகானபிரிதிவியி னருமை மெத்த, நாமப்பாசொல்லுகிறேன் சுத்தகங்கை நலமறியாச்சித்தர் களே காணப்போறார், காமப்பால்கானற்பால்கருவைக்காணார் கருவ றிந்துவுறுதிபெற்றால் காயசித்தி, தாமப்பாயென்றநிலை தனையறிந்து தவிராமல்ரெண்டுமொன்றாய் தாக்குத்தாக்கே. 329

உப்புமெழுகு.

தாக்கியதோருப்பிடைக்குப்பூரஞ்சேர்த்து தவிராமலந்திடைக் குக்கெந்திசேர்த்து, வாக்கியந்தான்தப்பாம லொன்றாய்ச்சேர்த்து வைத்திடுவாய்ரவிமுகத்தில் மைந்தாமைந்தா, பாக்கியமாயுப்பாகி மெழுகாய்நிற்கும் பரமகுருமெழுகதுவைப்பதனம்பண்ணி, ஆக்கை யுடதிடமறிந்து அளவாய்க்கொள்ளு அரகராசிதமென்ற புளிப்பு போச்சே. 330

ரஞ்சிதமெழுகு.

போச்சென்றுவிடுகாமல் சொல்லக்கேளு புதுமையுள்ளஅட் டுப்புநீரில்சேர்த்து, காச்சென்றுவீரமொடு பூரம்லிங்கங்கருணைபெற வொன்றாகச்சேர்த்துக்கொண்டு, மாச்சலில்லாரவிமுகத்தில்காயவைப் பாய் மகத்தானமெழுகாகு மைந்தாமைந்தா, தாட்சியில்லாமெழுகி னுடபேரேதென்றால் ரஞ்சிதமெழுகெனவேசாற்றலாமே. 331

சாற்றியதோர்மெழுகதனை மைந்தாமைந்தா சடத்தினுடசெய லறிந்துதாயைப்போற்றி, ஊட்டுவாய்கழஞ்சியிடையூட்டிக்கொண்டு வுறுதிபெறப்பருதிமதிச்சுடரில்நில்லு, தாட்டிகமாவாசியதுபணிந்து

மைந்தா தன்னிலையைத்தானறிந்து தனதாய்நிற்கும், பூட்டியதோர் வாசியுடகருவைக்கண்டால் பூரணத்தையனுதினமும்போற்றலாமே.

ஆமப்பாவாசிசிரோமணியைக்கேளு அரகராமனோன்மணியை யன்பிற்கண்டு, காமப்பால்தன்னுடனேகரைத்திறுத்து கருவானபூரமுடன் காரஞ்சேர்த்து, நாமப்பாசொல்லுகிறோங் கருவாய்க்கேளு ஞாயிறுமுன்பத்துநாள் வைத்துப்பாரு, சோமப்பாவென்சொல் வேன்மெழுகதாகுஞ் சுருதியுள்ளமெழுகதனைப்பதனம்பண்ணே. ()

பண்ணியதோர்மெழுகெடுத்து தியானஞ்செய்து பக்குவமாய்க் கழஞ்சியிடைகொண்டாயானால், கண்ணிமையில்நின்றதொருதோஷமெல்லாங் காணாதேயோடிவிடுஞ் சிரோமணியைக்கண்டால், புண்ணியவானைக்கால்க்ஷணத்தில்சித்தி பூரணத்தைக்காணார்க்குச்சித்தியில்லை, வன்னியென்றசிரோமணியில்மெழுகினாலே மகத்தானசித்தியெல்லாம் வாய்க்குந்தானே. 334

சதாசிவவுப்பின்மெழுகு.

தானவனாய்நின்றதொருதன்மைகேளு சகலபிணிபோவதற்குச் சதாசிவத்தினுப்பு, கோனருளால்கொண்டுவந்து அறுநீர்தன்னில் குறிப்பாகச்சுத்திசெய்து எடுத்துக்கொண்டு, கானற்பால்காமப்பால் தன்னிலேதான் களங்கமறப்பத்துவிசைசுத்திசெய்து, வீமப்பா என்றுநீ நினைந்தால்மைந்தா வேதாந்தஞ்சிதறிவிடு மெய்சொன்னேனே. 335

மெய்யாகசுத்திசெய்தவுப்பைவாங்கி மேனியுடசாறதனிலரைக்க மைந்தா, ஐயமிலாமெழுகாகுமென்னசொல்வே னப்பனேயிம்மெழுகைத்தேனிலூட்டி, துய்யமதியானசதாசிவனைப்போற்றி தொழுது கொண்டுகழஞ்சியிடைகொண்டால்மைந்தா, வையமதில்கலங்குகின்ற ஐயந்தானு மாறிவிடுஞ்சிலேத்துமங்கள் மாண்டுபோமே. 336

போமப்பாதசையிலுள்ள தோஷமெல்லாம் பொல்லாதஅஸ்திசுரமூலச்சூடு, காமப்பாவிதனத்தால்வந்தசூடுகருவழிக்குமேகமொடு கபாலசூடு, தாமப்பாசருவாங்கவாயுவெல்லாந் தட்டழிந்துகுட்டமெல்லாஞ்சாந்தமாகும், நாமப்பாசொல்லிவந்தகற்பமெல்லாம் நாள்தோறுங்கொண்டுவரில் நமனாடானே. 337

நாடாமல்போவதுதாமெதினாலென்றால் நகாரமொடுமகாரத்தை நயந்ததாலே, தேடாமலோடிவிட்டானமன் தானையா சிவசிவாநமனென்றால்வேறேயில்லை, வாடாதநல்வினையுந்தீவினையுமப்பா வஞ்சமுள்ள நமனெனவேமகிழ்ந்துகாணும், ஊடாடுரவிதானு மதியில்சேர்ந்தால் ஓகோகோஇருவினையு மோடிப்போமே. 338

ஓடிப்போம்சகலபிணி யெல்லாம்மைந்தா வுறுதியுள்ளசாபமது நிவர்த்தியாக, நாடிப்பார்சாபமதுநிவர்த்தியாகும்நானென்றுசொல்லுகிறேனன்றாய்க்கேளு, சாடிப்பார்பூரணத்தைப் பூரகமேபண்ணி சமயமதில்ரேசகமாய்க்கும்பத்தில்நின்று, பாடிப்பார்நம்முடைய மந்திரத்தைமைந்தா பாவமென்றசாபமது பறந்துபோமே. 339

நவக்கிரக சாபநிவர்த்தி.

போமென்று விடுகாதே யின்னங்கேளு பொல்லாத நவக்கிரக சாபந்தீர, நாமொன்றுசொல்லுகிறே மைந்தாமைந்தா நாலான பூரணத்தை நாட்டிப்பார்த்து, ஓமென்றுபூசித்து ரேசகமேபண்ணி ஒருமொழியால் கும்பகத்தில் நின்றால்மைந்தா, ஆமென்ற நவக்கிரக சாபமெல்லாம் அப்போதே அகன்றுவிடு மறிந்துபாரே. 340

பிரம சாபநிவர்த்தி.

பாரப்பா பிர்மனுட சாபந்தன்னை பக்குவமாய் தீர்வதற்கு பகருவேன்கேள், காரப்பா கருணைவைத்து அகாரந்தன்னில் கருவான மகாரத்தின் கூடச்சேர்த்து, சேரப்பா ரேசகத்தால் பூரகத்தைப்பற்றி சீர்பெருகுங் கும்பகத்தில் நின்றால்மைந்தா, நேரப்பா நின்றதொரு பிரமன்சாபம் நிமிஷத்தி லோடிவிடு நிலைமைதானே.

விஷ்ணு சாபநிவர்த்தி.

தானவனாய்நின்றதொருவிஷ்ணுசாபந் தடையறவேபோவதற்குச் சாற்றுவேன்கேள், மோனமுடன் உகாரமதை அகாரத்தூட்டி முனையானசுழிமுனையில் ரேசித்தப்பா, கோனருளாய் குருபதத்தில் நின்றால்மைந்தா குணமான விஷ்ணுவுட சாபந்தானும், வானவர்கோனறியாத பூரணத்தினாலே வஞ்சமுள்ள சாபமது மாண்டுபோச்சே.

ருத்திர சாபநிவர்த்தி.

போச்சென்று விடுகாதே யின்னங்கேளு புதுமையுள்ள ருத்திரன் மயேஸ்பரத்தின்சாபங், காச்சென்ற ரவிமதியு மொன்றாய்ச்சேர்த்து கருணையுள்ள சதாசிவத்தைக் கருத்தில்வைத்து, தாட்சியில்லாமதிதனிலே பூசித்தப்பா தருவானரேசகத்தால் கும்பகத்தில்நின்று, மார்ச்சலில்லா மனோன்மணியைத் தியானித்தாக்கால் வஞ்சமுள்ள பஞ்சகர்த்தாள் சாபம்போச்சே. 343

ஆறுதார சாபநிவர்த்தி.

சாபமென்றசடாதார சாபம்போக தன்மையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு, தீபமென்றசுடரொளியில் மனத்தையோட்டி தீர்க்கமுடன் ரேசகபூரகமும்பண்ணி, வாமென்ற மதியமுதங் கொண்டால் மைந்தா வரையான சடாதார சாபந்தானுந், தாபமுடன் தயங்கிமிக வோடிப்போகுஞ் சடாதார வணிவைத்த தன்மைதானே. 344

தத்துவ சாபநிவர்த்தி.

தானென்ற தத்துவத்தின் சாபம்போகத் தன்மையுடன் சொல்லுகிறேன் தாழ்ந்துகேளு, கோனென்ற சிவசத்தி தன்னைப்போற்றி குறிப்பாக ரேசகபூரகமும்பண்ணி, மானென்றகும்பகத்தில் நின்றால் மைந்தா மார்க்கமுள்ள மூலத்தின் மேலேசாடி, ஊனென்ற தத்துவத்தின் சாபம்போகும் உறுதியுள்ள தேகமது காந்தியாச்சே. 345

காந்திக் கருச்சுன்னம்.

காந்தியென்ற கருவிலொரு விபரங்கேளு கமலமல ரமுதமதைக் கருவாய்வாங்கி, சாந்தியென்ற மதியமுதந் தன்னிற்சேர்த்து தயவாக

பத்துமுறை தானேசெய்து, பாந்தியமாய் பத்துமுறை செய்தபின்பு பக்குவமாய் பூரமதிற் பாதிசேர்த்து, சீந்தியென்ற தயிலமதைசேர்த் தால்மைந்தா சிவசிவா பொங்கியது கறுப்பாய் போச்சே. 346

கறுப்பானமையெடுத்து தியானஞ்செய்து காயாதி கற்பமெனக் கருத்திற்கொண்டு, குறிப்பான மையெனவே கொண்டால்மைந்தா குண்டலியின்சத்தியது மேலேசாடி, வெறுப்பானசாபமெல்லாம்வெ ருண்டேபோகு மெய்ஞ்ஞானஞ்சித்திக்குந் தேகந்தங்க, முறுப்பான தேகமது வலுத்துப்போகு முற்றசிவ சற்றிரெண்டு முறுதியாமே.

ஆமப்பாவச்சிரமேபலமேபத்து அதுக்குநிகர்வீரமது அன்பாய் சேர்த்து, நாமப்பா சொல்லுகிறேன் துருசுபூரம் நன்றான வெள்ளை யுடன் லிங்கஞ்சேர்த்து, தாமப்பா சாரமுடன் காரஞ்சேர்த்து தய வான அறுவகையால் கல்வத்தாட்டி, காமப்பால் தன்னிலொரு நாள் தானாட்டி கருவாக வுருட்டியதை வட்டுபண்ணே. 348

பண்ணியதோர் வட்டதனைப் பதனம்பண்ணி பக்குவமாயின்ன மொன்று பகறுவேன்கேள், உன்னியதோர் நாகமுடன் ரசமுஞ் சேர்த்து உண்மையுள்ள பூரமுங் கூடச்சேர்த்து, நன்னயமாய் ரச மூன்று இடைசரியாய்சேர்த்து நாட்டியே கல்வமதில் பொடித்து மைந்தா, தன்னிமையா முன்செய்த வட்டுசேர்த்து தயவாக விந்து நீர் தன்னலாட்டே. 349

ஆட்டுவாய் விந்துநீர் தன்னல்மைந்தா அரகரா யீராறு சாம மாட்டி, நாட்டுவாய் ரவிமுகத்தில் வட்டுபண்ணி நன்றாகக் காய்ந்த பின்பு சொல்லக்கேளு, பூட்டுவாய் மண்சீலை நன்றாய்ச்செய்து போடு வாய் காடையென்ற புடத்திற்றானு, மாட்டியதோர் புடந்தானு மாற விட்டு மைந்தனே எடுத்துப்பார் சுன்னமாச்சே. 350

ஆச்சப்பாசுன்னமதின்றொழிலைக்கேளு அடங்காதகுடவனிலே யூறலேகும், காச்சப்பாசெம்புதனையுருக்கிக்கொண்டு கருவானசுன்ன மதினூற்றுக்கொன்று, பாச்சப்பா செம்பதுவும் பழுத்துப்போகும் பக்குவமாய்வெள்ளிசெம்பில்பத்துக்கொன்று, தாட்சியில்லாச்சுன்ன மதுசேர்ந்தால்மைந்தா தடையறவேவயதுபதினறுதாமே. 351

ஏமரசக்களங்கு.

ஆமப்பாதுருசினுடசுன்னந்தன்னை அழகானசம்பழத்தின்சாற் றிற்றாக்கி, நாமப்பா சொல்லுகிறேன் சம்பழத்தின்சாறு நன்றாகத் தெளிந்ததுவுஞ் செயநீராகும், தாமப்பாசம்பழத்தின் செயநீராலே தயவாக அரப்பொடியை சுத்திபண்ணி, தாமப்பால் கல்வத்தில் விட்டுமைந்தா கருவான அரப்பொடியை யரைத்திடாயே. 352

அரைக்கையிலே வீரமொடு பூரம்போட்டு அழகான துரிசி னொடு காரஞ்சேரு, விரைக்கவே சம்பழத்தி னீராலாட்டி விசையாக வுருட்டியதைக் காயப்போட்டு, கரைக்கவே குகைதனிலே சீரமிட்டு கல்மசங்கள் தானறவே யூதவூது, மரைக்கின்ற திரைவுரையு மகன்றுநல்ல மணிபோல வுருகியது செப்புமாமே. 353

செம்பானவயச்செம்பு கிடையாதப்பா செகத்திலுள்ளவாதி களுந்தேடமாட்டார், நம்புவதுயென்னவென்றாலயத்தின்செம்பு நாத மென்றுஞ்சத்தியென்றுமிதுக்குநாமம், சம்புசிவநாதமென்ற அயத் தின்செம்பில் தாக்கடா இடைக்கரைகங்கந்தன்னை, வம்பில்லா நாகம தில்கூடச்சேர்த்து மணிகாணக்காரமிட்டுவுருக்கிப்பாரே. 354

உருக்கையிலேமூன்றுமொன்று யுருக்கிப்பாரு உத்தமனேவமர சக்களங்கமாகுந், தரைக்குளுளவாதிகளோ காணப்போமுர் தய வானஅயக்களங்கின்வீறுமெத்த,உரைக்கிறேனயக்களங்கின்ஒளியை மைந்தா ஓகோகோசெம்புதனில் நூற்றுக்கொன்று, கரைக்கின்ற குகையதனிலுருக்கிப்பாரு கருவானசெம்பதுவும்பழுப்பதாமே. ()

பழுத்ததென்றுமகிழாமல் குடவன்தன்னில் பாச்சடா அன்ப துக்குவொன்றுந்தானும், அழுத்தமுள்ளகுடவனதுவூறலற்று அழ கானபொன்மாற்று யதிகமாகும், முழுத்தமுள்ள அயக்களங்கை வெள்ளிசெம்பில் மூர்க்கமுடன்கணக்காகநூற்றுக்கொன்று, தமுக்க றவேகுகைதனிலேயுருக்கிப்பாரு தாயானதங்கமதுஅதிகமாற்றே.

களங்குசெந்தூரம்.

மாற்றதிகமானதொருகளங்குதன்னில் மாட்டடாஇடைக்கிடை தான்கெந்திசேர்த்து, தாட்டிகமாய்வீரமொடு பூரஞ்சேர்த்து தய வாகக்கல்வமதில்பொடித்துக்கொண்டு, பூட்டுவாய்குப்பிதனில் பொடி யைமைந்தா புகழானமண்சீலையாறுஞ்செய்து, வாட்டுவாய்ரவிமுகத் திலுலர்ந்தபின்பு மைந்தனே தாழியரைஉப்பைவையே. 357

வையப்பாமேருதன்னைவைத்தபின்பு வைத்துமொருகழுத்தின் மேலுப்பைக்கொட்டி, பையவேஅடுப்பேற்றிதீயைமூட்டு பக்குவ மாய்சருகுகம்புவிறகால்மைந்தா, செய்யப்பாதீயெரிப்பாயாறுசாமம் சிவசிவாதாழிதனையிறக்கிப்போடு,கொய்யப்பாசுகந்தமலரர்ச்சனையே செய்து குருவானமேருவைநீ யெடுத்துப்பாரே. 358

எடுத்துமிகப்பார்வையிலே மேருக்குள்ளே யிருக்குதடாசெந் தூரமென்ன சொல்வேன், தொடுத்ததொரு செந்தூரந் தொந்தங் கோடி சொல்லுகிறேன்புலத்தியனே சொந்தமாக, அடுத்ததொரு செந்தூரம் பணவிடைதான்கொண்டால் ஆக்கையதுபிலத்துதடா அழிவேயில்லை, வடித்ததொருதிரிகடுகில் செந்தூரஞ்சேர்த்து வள மானதேனிலொருகடியாய்க்கொள்ளே. 359

கொள்ளவேவாசியது பிலத்துப்போகும் குருவானதிருநடனங் குறிப்பாய்க்காணும், அல்லதுதான்விலகுமமுதஞ்சிந்தும் அஷ்டாங்க யோகமதிலடுத்துக்காணும், விள்ளாததசதீட்சை யொளியேகாணும் வேதாந்தபூரணத்தின்விலாசந்தோணும், வல்லபரமானகுருபதியில் நின்று வளமையுள்ளசெந்தூரமகிழ்ச்சிபாரே. 360

பாரப்பாகாரீயம்வுருக்கிக்கொண்டு பாச்சடாசெந்தூரம்பத்துக் கொன்று, வீரப்பாதானடங்கிவெளுத்துப்போகும் வெள்ளீயந்தனை

யுருக்கிநூற்றுக்கொன்று, சேரப்பாசெந்தூரஞ்சேர்த்தாயானால் சிவ சிவா தங்கமென்னஅதிகமாற்று, ஆரப்பாசெந்தூர மறியப்போருர் அறிந்தவர்கள் தனைக்காண வறிதாம்பாரே. 361

அரிதானசெந்தூரம் நூற்றுக்கொன்று அப்பனேசெம்புதனி லீந்தாயானல், பெரிதானதங்கமடா பழுப்புமெத்த பேசாதேயித் தோடேயின்னங்கேளு, குறிதானசெந்தூரங் கழஞ்சிவாங்கி குண மானவாய்நீரால் மத்தித்தேதான், கரியானகளிம்புசேர் குடவனுக்கு கங்கணமாய்தகடதிலே பூசிப்போமே. 362

போடப்பாபுடந்தனிலேகளிம்புசேர்த்து பொன்னொளிவுஅதிக மதாய்பூண்டுகாணும், தேடப்பாவெள்ளிசெம்பில்கணக்காய் நூற்றில் செந்தூரமொன்றிடவேசெம்மையாகி, ஊடப்பாசெந்தூரம் பாய்ந்து மைந்தா வுலகமதிலதிகமாயொளியேவீசு, நாடப்பாசெந்தூரம் நல்ல பிரயோகம் நலமானயின்னமொருசேதிகேளே. 363

கேளப்பாஇந்தநூல் சகலகலைபீடஞ் செயமாகஆயிரத்து இரு நூருகும், ஆளப்பாஇந்நூலைப்பதனம்பண்ணி அடக்கமுடன்கருவெ டுத்துஆடுமைந்தா, நீளப்பாதளும்புவதுபோலேமைந்தா நின்ருக்கா லுலகமதில்நிசங்கொள்ளாது, தாளப்பாஐம்புலனுமொன்றாய் நின்று தனதானபூரணம்போல்நூலைக்காரே. 364

காராமல்புத்திகெட்டு இருந்தால்மைந்தா கருவிகரணாதிகளுங் கலந்துபோகுங், கூறுதக்குருவையெல்லாமிந்தநூலில் கூறினதாலிந்த நூல்குருநூலாகும், நேரானகுருவினிடப்பாதம்போற்றி நினைவாக இந்தநூல்தன்னைப்பார்த்து, தேராதசித்துகளையாடுமைந்தா தெவிட் டாதபூரணத்தைத் தினமும்நோக்கே. 365

நோக்குவதுபூரணத்தை நோக்கவேணும் நோக்காதேபோனக் காலென்னசென்மம், தாக்குவதுபூரணத்தைதத்தாக்குதாக்கு தன்மை யுடன்குருபதத்திற்றெண்டுபண்ணு, வாக்குமனதொன்றாகிஅறிவி னில்லு வஞ்சரிடமிந்நூலைவழுத்தவேண்டாம், நாக்கதுவும்படபட த்துநில்லாதேமைந்தா நன்மையுடன்மவுனமதைநாடிப்பாரே. ()

நாடிப்பார் மவுனமென்றால் பூரணமேயாகும் நலமானபூரணந் தான்விந்துவிந்து, தேடிப்பார்விந்துநிலைகாணமாட்டார் சிவமானமதி யமுதச்செயலைக்காணேர், கூடிப்பார்த்தரியோடே குண்டலியைக் கண்டால் குருவானபதிதலத்திலமுதங்காணும், வாடிமனந்தளராதே மலரைக்கண்டு வந்தமுதம்பூரணமாய்மனதிற்காணே. 367

காணவேமதியமுதங் கொண்டால்மைந்தா கர்ப்பூரதேகமுமாய் கருணையாகுட், பேணவேபேணினது கண்ணில்காணும் பிரணவத் தோடாறுதலப்பெருமைகாணுங், தோணவேதோணினது தோணத் தோணும் சோதியிலேசெகச்சோதிசுளுவிற்காணும், ஊணான அஞ்சு பஞ்சலவணத்தாலே உலகமெலாந்தானவணுபுறுதியாமே. 368

### நாகக்கட்டு.

உறுதியுள்ள நாகமதிற் கட்டுசொல்வேன் ஓகோகோ வெடியுப்புக் காரஞ்சேர்த்து, பருதிமதிதன்னாலே வங்கநீற்று பக்குவமாய் மூன்றுமொன்றாய் கல்வத்தாட்டி, திருமதியும்நீராலே ஆட்டிமைந்தா சிக்கெனவே நாகமதுக் கங்கிபூட்டி, குருநீதியைத் தியானித்து புடத்தைப்போடு குருவான நாகமது குருவுமாமே. 369

ஆமப்பா குருவான நாகந்தானு மடங்கியது மாண்டுதடா அருமையாக, வாமப்பா தன்னாலே யடங்குகின்ற மகாரசத்தின் பெருமைதனை வழுத்துறேன்கேள், ஓமப்பா வென்றபரி ரவிதானென்று உறங்குகின்ற நாகமதி னிடையேசேர்த்து, தாமப்பா குகைதனிலே யுருக்கிப்பாரு தவளநிற மானதொரு மணிபோலாமே. 370

மணியான நாகமணி யார்தான்காண்பார் மகத்தான பூரணத்தை யறிந்தோர் காண்பார், கனியான நாதமணி தனையுடைத்து கருவான் செப்புதனில் நூற்றுக்கொன்று, வணிகரண மாகநீ யுருக்கிப்பாரு வஞ்சியெனு மபரஞ்சி யென்னும்தங்கம், பணியான பலதொழிலுக் கிதுவேதங்கம் பராபரமாய் நின்றதுவுந் தங்கந்தானே. 371

தானென்ற நாகமணி யொன்றெடுத்து தயவான வெள்ளிதனிலீந்தால்மைந்தா, கோனென்ற குருவருளால் வயதே சொல்வேன் குருவான நாகமணி தரத்தால்மைந்தா, தேனென்ற மொழியுடைய கமலமாது ஜெகஜோதியான திருவானமாது, கானென்ற மதியமுதமானமாது மகத்தான பூரணமாந் தங்கந்தானே. 372

தானானபூரணமே தான்தானாகுந் தலமானபூரணத்தின் தலமேதென்றால், ஊனானதேகமடா சத்திசத்தி உள்ளுயிராஞ் சிவமெனவே யுகந்துகொண்டு, கோனான சத்திசிவக் கூத்தொன்றான் குறியறிந்து அமுதமெனக் கொண்டால்மைந்தா, தேனானதேகமடா சித்தியாகுஞ் சித்தியென்றால் பூரணத்தின் சித்திதானே. 373

### பூரணதயிலமெழுகு.

சித்தித்த கருவொன்று சொல்லக்கேளு செயலான பூரணத்தின் தயிலஞ்சேர்த்து, சத்திசிவ மானமதி யுப்பேதென்று சாரமென்ற வுப்புடனே காரங்கூட்டி, முத்திபெறக் கல்வமதில் நாட்டிணுக்கால் மூர்க்கமுள்ள மெழுகாகுமைந்தா, பத்தியுடன் மெழுகெடுத்து தாரத்துக்குப் பக்குவமாய் கவசமது பதியச்செய்யே.

செய்ததொரு கவசமதைத் தீயந்தன்னில் திரும்பிமெள்ள வாட்டினதால் மைந்தாகேளு, கொய்ததொரு தாரமது கெட்டியாக குருவான மெழுகதினாற் கட்டிப்போகும், பையவே யிப்படியே நாலுமுறை செய்தால் பால்போலே சுத்தவெள்ளை யாகுமாகும், வையகமெல்லாந்துதிக்கு மிந்தத்தார மகத்தான தாரமதின் தொழிலைக் கேளே. 375

## நாகக்களங்கு.

கேளப்பாநாகமதை யுருக்கிக்கொண்டு கிருபையுள்ள தாரமதை யீந்தால்மைந்தா, கேளப்பா தானகலும்நாகந்தன்னில் கொடுமையுள்ள புகையதுவு மடங்கிக்கட்டும், வேளப்பா எரித்தசிவன் தன்னால்கட்டு வெள்ளிமணிபோலெனவேவெளுமையாகுந், தாளப்பா தங்கமிடைக் கிடைதான்சேர்த்தால் தயவான நாகமணி களங்கமாமே. 376

ஆமப்பா களங்கமதை வெள்ளிதன்னில் அன்பாக அன்பதுக்கு வொன்றுபோடு, காமப்பா தன்னருளால் பழுக்கும்வெள்ளி கயிலை தனில் பரமகுரு தன்னால்மைந்தா, வாமப்பால் கண்டவனே வாத யோகி வலுவான சிவயோகி வாசியோகி, நாமப்பாவென்றகுரு தன்னாற்கண்டு நடுவான பூரணத்தை நாடுநாடே. 377

நாடுவதுமூலமுத லாருதாரம் நன்மையுள்ள குருபரமா மேலா தாரம், கூடுவது புருவமையந் துவாதசாந்தங் குறிப்பறிந்து இடகலை யைப் பின்கலையிற்சேரு, வாடுவது வேண்டாங்காண் புலத்தியனே யையா வரிசையுடன் சுழிமுனையில் மனத்தைநாட்டி, தேடுவது பூர ணத்தைத் தேடுதேடு தெவிட்டாத மதியமுதங் கொண்டுதேறே.

தேறுவது பூரணத்தா லேறவேணுஞ் சிந்தைமன தொன்றாகி நிற்கவேணும், மாறுவது அஞ்செழுத்தை யறிந்துமாறு மகத்தான பூரணத்தை மருவிக்கூடு, சேருவது பிரமமென்ற பதியிற்சேரு திரும்புதற்குப் பூரணத்தை நாடியூது, கூறுவது அகத்தீசா வென்று கூறு கும்பமுனித் தஞ்சமெனக் குறித்துநில்லே. 379

நில்லென்றுசொன்னீரே பூரணமேயையா நீயென்றும்நானென் றும்வேறேயில்லை, சொல்லென்றுந்தப்பாதுஎன்குருவேயையாசோம நிதிசூரியநிலை யார்தான்காண்பார், கல்லென்ற கயிலாசங் கண்டபேர் கள் கருவானயிருநிதியுங் கண்டேகொள்வார், வில்லென்ற வொளி தனிலே விதங்கள்மெத்த வேதாந்த சாத்திரமே யறிவார்பாரே. ()

பாரப்பா ஆகாசப் பரவெளியிலேதான் பருதிமதி நின்றிலங் கும் பரத்தைப்பாரு, நேரப்பா நின்றிடத்தை நின்றுபாரு நிரு விகற்ப சமாதியிலே தன்னைப்பாரு, சேரப்பா மதிதனிலே சுடரைச் சேரு சேர்ந்ததே சுடர்மதியாய் நின்றதப்பா, பாரப்பா நின்றசுடர் மதியைநீதான் கலந்துவிடு சூரியனிற் கருவாய்த்தானே. 381

## அஞ்சனம்.

கருவானமையொன்று சொல்லக்கேளு காசினியில்பனிதாங்குங் கறுத்தபூடு, மதுவான திகைப்பூடு ஆர்தான் காண்பார் மகத்தானப் பூண்டைக் கருக்கிக்கொண்டு, உருவான ஏரண்டத்தெண்ணெய்விட்டு ஓமெனவே தியானித்து மத்தித்தேதான், குருவான பதிநோக்கி குருவைப்போற்றி கும்பமுனி தஞ்சமெனச் சிமிழில்வையே. 382

வைத்ததொருசிமிழெடுத்து கரத்திலேந்தி வசிகரத்தைதமோக னத்தால் தம்பனமேசெய்து, மற்றவொருமையெடுத்துத் திலகம் போடு மணிமந்திரபூரணத்தை மனதிற்காரு, வுய்த்ததொருவுலக மெல்லாமுன்வசமேயாகும்உன்வசனமேலாகவுலகில்வாழ்வாய், கைத் ததொருஅரிதாரமையைக்கேளு கயிலாசசின்மயத்தின்கருணையாலே.

அரிதாரமை.

கருணைதரவேணுமென அரிதாரத்தைக் கவலையுடபாலதினால் கல்வத்தாட்டி, மருவுகந்தமலர்வாசமாசத்திலோர்நாள் மங்கையர்தங் குங்குமத்தில்வரிசையாக, உருமையுடன்ரெண்டுதிங்க ளரைப்பாயா கில்ஒகோகோ குங்குமத்தினிறமேயாகும், வரிசையுடன்பீங்கானில் வழித்துவைத்துவான்கதிரீன்முகங்காட்டின் மையாய்ப்போமே. ()

மையானமையதனை தினமுமைந்தா வரிசையுடன்பருதிமுகந் தினமும்வைத்தால், மெய்யானமெய்யுருதிஎன்னசொல்வேன் மேதியு டசிமிழ்தனிலே பதனம்பண்ணு, வையகத்தில்மானிடரை மயக்கு மைதான் மாற்றமென்றவுருமாற்ற மானமைதான், தையலர்கள்கை வசங்களாக்குமைதான் தரணிதனில்வைத்தபொருளெடுக்குமையே.

மைபோடும்வகை.

பொருளானபொருள்கொடுக்கும் போதமையே போடுகிறவித முனக்குப்புகலக்கேளு, இருளானஅகந்தேறி குருவைகாத்து இரு கரத்தில்மைபோட்டுஇசையநோக்கி, குருவானபதம்போற்றி யிருந் தாயாகில்குணமாகவுன்னுருவைப் பார்ப்போர்க்கெல்லாம், உருவான ரூபமதுஆண்பெண்போலேஉலகதனில்தோணுமடாவுன்மைதானே

உண்மையுள்ளமையெடுத்துத் திலதம்போட்டு உருமையுடன் மனோன்மணியைத் தியானஞ்செய்து, நன்மைபெறத் தீட்சையிலே யிருந்தாயாகில் நரரானமானிடர்க ளுருவைக்காணார், தண்மையுடன் நிசத்தொழிலைச்செய்தாயாகில் தரணிதனிலதிசயமாய்த்தானேதோ ற்றும், விண்ணிமையைச்சதாகாலந்தொழுதபேர்க்கு வேண்டலாமை யொளியின்விபாங்கேளே. 387

கேளப்பாமையெடுத்து இடக்கரத்தில் கிருபையுடன் மைபோ ட்டுகீழேபாரு, வேளப்பாஎரித்தசுடர்தன்னால்மைந்தா வேணநிதி தோணுமடாவிபரமாக, ஆளப்பாஅந்நிதியைப் பூரணத்தினாலேஅஞ் சனத்தின் விபரமொன்றன்பாய்க்கேளு, கேளப்பாவொன்றுமில்லை அன்னபேதிகுறிப்புடனே நாதநீர்தன்னாலாட்டே. 388

அன்னபேதிமை.

ஆட்டுவது ஈரைந்துநாள்தானாட்டு அன்பாகப்பீங்கானில் வழி த்துவைத்து, பூட்டுவாய்கடுக்காயையிடித்துக்கொண்டு புதுமையுள்ள நாதநீர்தனிற்கலக்கி, நாட்டுவாய்தெளிவிறுத்து பேதிதன்னில் நன் மையுடன்விட்டுநீ குழப்பினாக்கால், தாஷ்டிகமாயிருக்குமடா மையின் போக்கு தயவானநாதம்விட்டுபதனம்பண்ணே. 389

பதனமுள்ளமையெடுத்துதியானஞ்செய்து பக்குவமாயஞ்சனு தேவிமூலம், விதனமது இல்லாமல்செபிப்பாய்நூறு வேண்டியேமை யெடுத்துதிலதம்போட்டு, மதனமுள்ளமவுனமதா யிருப்பாயாகில் மானிடவருன்னேவல் மகிழ்ந்துகேட்பார், சுதமானகாங்கினத்தில் மையைத்தீற்றி சூழ்விளக்கிலீந்திடுவாய்சுருக்கம்பாரே. 390

சுருக்கானமையொன்றுகண்ணிற்றீற்றித் தூரதுலைப்பார்த்திட நல்சுகமாய்க்காணு, மிறுக்கிமெள்ளகண்திறந்தால்காசம்பார்க்க இருளகன்றுவெளிதோன்றியின்பங்காணு, முருக்கமுடன்விநயமாய்பார்த்தாயாகில் ஒகோகோகயிலாசமுகந்துகாணும், திருக்கறவேயுன்மனை யைப்பணிந்துபோற்றி திருவானலட்சுமிப்பெண்வசமாவாளே.

வசமான இந்நூலிலாறுநூறும் வாக்கியங்கள்தப்பாமல்வசமாய்ப் பார்த்தால், நிசமாகத்தோணுமடாமறைப்பேயில்லை நின்னினைவுதான் மறந்தால்நிசங்காணாது, திசமானதீட்சைவிதிநன்றாய்க்காணுந் திடஞ் சுத்தியாவதுவுந்திடந்தானப்பா, கசமானமானிடர்க்கு இந்நூல் காட்டில் கண்மருண்டுபேரிருளாய்க்காணுந்தானே. 392

செம்புமை.

காணவேஇன்னமொருகருவைச்சொல்வேன் களிம்பானசெம்பினுடமையைக்கேளு, பேணவேதாம்பிரத்தால் செம்புபண்ணி பிலமானநாதநீர்நிரம்பவிட்டு, தோணவேதுரிசிதனைப்பொடித்துத்தூவி சுண்டியிதின்மேல்பேதிதுலங்கத்தூவி, நாணவேரவிமுகத்தில் வைத்துப்பாரு நாலஞ்சுநாளையிலேமைபோலாமே. 393

மையானதாம்பிரத்தின் மையிலேதான் மாதாந்தசஞ்சீவியை மகிழ்ந்துபாரு, கையாலேமத்திக்கும்போதிலேதான் கருவானமையுருளஎன்னசொல்வேன், மெய்யானமேதியுடசிமிழில்வைத்துமேன் மையுடன் தினந்தோறும்ரவியில்வைத்தால், தொய்யாததாம்பிரத் தின்மையின்வேகஞ் சொல்லுவேன்புலத்தியனே துலங்கக்கேளே.

கேளப்பாமையெடுத்துதியானஞ்செய்து கெணிதமுடன்ரேசக பூரகமும்பண்ணி, மேலப்பாகும்பகத்தேநின்றாயானால் மேதினியிலுன தேவல்விரும்பிக்கேட்பார்,வாளப்பாவுலகத்தோடொத்துவாழ்ந்து வரிசைபெறஅஷ்டசித்து மகிழ்ந்துமாடி, ஆளப்பாகுருபதத்தைப் பணிந்துபோற்றி அஷ்டமாசித்துவிளையாடலாமே. 395

அறுவகைச்சரக்குமை.

ஆடுதற்குஇன்னமொருகருவைக்கேளு ஆதியந்தமென்றதொருவுப்போடாச்சு, போடுதற்குலவணத்தைச் சொல்லக்கேளு பொல்லாதசவுக்காரம்வளையலுப்பு, நாடுமெய்த்தவுவருப்புதுருசுசீனம் நலமானபேதியுடனாறுங்கூட்டி, தேடுதற்குக்கல்வத்தில் பதியவைத்து திரமானநாதநீர் விட்டுஆட்டே. 396

ஆட்டியேயக்கிண்ணி தன்னிலேதான் அடுப்பேற்றிதீயெரிக்க அடங்கிவேகு, மாட்டியேகருவெடுத்து கல்வத்திட்டு மாதாந்தசஞ்சி வியைவிட்டுஆட்டி, நாட்டியேமுன்போலே யெரித்துப்பாரு நன்மை பெறமையுறுதி யென்னசொல்வேன், காட்டியேரவிமுகத்தி லஞ்சு முறையப்பா கருத்துறவேவைத்துமிகக்காருகாரே. 397

காத்ததொருமையெடுத்துக் கல்வத்திட்டு கற்பூரவிந்துவினாற் கலரவாட்டி, சேர்த்துமிக ஈரஞ்சுநாள்தானாட்டி சிவசிவாயென்ன சொல்வேன் மையின்போக்கு, பூத்தமலர்சமாதியிலே செய்தமை யைப் பொன்னானசிமிழ்தனிலே வைத்துக்கொண்டு, நாற்றிசையு மெய்க்கவொரு திலதம்போடு நாடுநகருனக்கீடோ சொல்லக்கேளே.

கேளப்பாமையெடுத்துதியானஞ்செய்து கிருபையுடன்கண்ணி லிடக்குருகுமப்பா, நீளப்பாகரித்துமிக வடிந்தபின்பு நிமையாட்ட மில்லாமல்நிற்கும்பாரு, வாளப்பாராக்காலம் பகற்காலம்போல் வரி சையுடன்காணுமடா வளமையாக, காலப்பாவிறிசுகொண்டு நடந்தா யானால் காதவழிநிமைப்பொழுது காணுங்காணே. 399

காணவேமையெடுத்துக்கண்ணில்தீற்றி கருணைமலர்பூமாதைக் கருத்தில்வைத்து, பேணவேஆகாசம்பார்க்கும்போது பிலமானநட் சத்திரம்பகலேகாணும், நாணவேசோமகிரிசூரியகிரிரெண்டும் நளின முடன்தோற்றுமடா நளினமாக, பூணவேபூமிதனிலுள்ள பொரு ளெல்லாம் போக்கோடேகாணுமடா புதுமைதானே. 400

தானென்றமைபெடுத்துஅடக்கம்பண்ணி தங்காதகுன்மமொடு மூற்சைவாய்வு, கோனென்றஆனந்தவாய்வுகெண்டை குடல்பிரட்டி சருவாங்கங்குத்துமூலம், ஊனென்றசீமூலம்ரெத்தமூலம் ஒடுங்காத குதமூலம்வாய்வுமூலம், பேணவேகுண்டுமணியளவுகண்டால் பேசா தேயோடிவிடும்பெருமைகேளே. 401

## பேரண்டமை.

பெருமையுள்ளமையொன்று சொல்லக்கேளு பேரண்டத்துள் மூலம்வராகன்பத்து, வுருமையுள்ளபேதியதுவராகன்பத்து வொன் றுக்கிரவிமுகத்திலுலரப்போடு, கருமையுள்ளகடுக்காயைத் தயிலம் வாங்கிக் கண்டிடைக்குஐங்கோலத் தயிலம்சேர்த்து, தருமையுடன் முன்மருந்தோடொக்கநல்ல சஞ்சீவி தயிலமதைச்சாற்றிடாயே. 402

சாற்றிமிகக்கல்வமதிலாட்டும்போது தயங்காதேமையுறுதிஅரு மைமெத்த, போற்றிமிகப்பூசித்துசிமிழில்வைத்து பூரணத்தையனு தினமும் புகழ்ந்துநோக்கி, காத்தருளவேணுமென்றுமையெடுத்துக் கருணைமலர்திருமுகத்தில் திலதம்போட்டு, மாற்றமென்றஅஞ்சனா தேவிதேவி மானிடருக்குனதுருவைக்காண்பியாதே. 403

காண்பியாதேயிருந்து என்னைக்காரு காத்துநீயொருவருக்குங் காட்டவேண்டாங், தான்மயமாய்த்தானாகத்தானே தானாய் தரணிதனி

லட்டமா சித்துஆட, கோன்மயமாய்வந்தகுருமையேயென்று :கும்பிட்டுரேசகபூரணமும்பண்ணி, வான்மயமாய்வந்தகுருநாதாவென்று வணங்கியேகும்பித்துதிலதம்போடே. 404

போட்டவுடனுன்னுருவையொருவர்காணார் புத்தியுடனீயிருந்து சித்துபண்ணு, தாட்டியாய்விநயமுடன் சித்துசெய்தால் தரமாக வேணபொருள்கோடிசேரும், பூட்டாகநீயிருந்து கருவைச்செய்தால் பூலோகமன்னவர்கள் புத்திகேட்பார், வாட்டமிலாச்சிந்தையா யிருந்துக்கொண்டு வகையுடனே அஷ்டாங்கவரிசைபாரே. 405

வரிசையதுபுலத்தியனேசொல்லக்கேளு வண்மையுளசீஷனேநீ வைத்துக்கொண்டு, வரிசையுடனவன்சிரத்தில்திலதம்போட்டு வுண்மையுடனரசரிடம்சென்றுகொண்டு, துரிதமுடன்கொண்டுவாகுட்டிச்சாத்தான் சொல்லியேஅஷ்டமாகாசம்பண்ணி, பரிசமுடனீயிருந்தஷ்டமாசித்தாட பாருலகமன்னரெல்லாம்பணிவர்பாரே. 406

பாரப்பா சுடர்மதியைப் பாருபாருக் கையிலே பளிச்சென்று வெளிபோல்வீசும், நேரப்பாவெளியோடேநேர்ந்துகூடு நேரறிந்து கூடுவதால் பிரமந்தோன்றுங், காரப்பாபிரமனிட திதியிற்சென்றால் கனிந்துமிகஅமுதமதுகசிந்துகாணும், நீரப்பாஅமுதமதைக் கொண்டால்மைந்தா நின்னுடையதேகமதுஅமுதமாமே. 407

அமுதநிலைதனையறிந்து பதனம்பண்ணு ஆதிபராபரமெனவே அருளைநோக்கு, குமுதவொலிதனையறிந்துகுருவைக்காரு குருவான பதியறிந்துதன்னைக்காரு, திமிர்தவுருவானமதிபருதிதன்னை சிதமான பூரணத்தில்தினமும்சேரு, சமரசமாயமுதநிலைதன்னைக்காரு தன்மனையையுன்மனையில்தாக்குத்தாக்கே. 408

தாக்குவதுபூரணத்தால் தாக்கவேணுந் தருவானமூலமதைப் பார்க்கவேணும், நோக்குவதுஅம்பரத்தைநோக்கவேணும் நுண்ணிமையால்தன்னிமையிலணுகவேணும், நாக்குநுனிசுவையமுதங்கொள்ளவேணும் நாதாந்தப்பேரொளியைநணுகவேணும், போக்குவரத்தறிந்தமுதங்கொள்ளவேணும் போதமயமாகபூரணத்தைநம்பே. ()

நம்புவதுஜெகஜோதிபாதந்தன்னை நாடறிந்துநகரறிந்துநாட்டங்கண்டு, தன்பிலத்தைத்தானறிந்துதானேதாணாய் தானறிந்துங்கனியறிந்துதனதாய்நில்லு, வெம்பிமனதலையாமல் தன்பிலத்தைப்பாரு மெய்ஞ்ஞானமறியாதவீணர்கோடி, அம்புவியில்மெத்தவுண்டு அறிந்துபேசு அடக்கமுடனாலெடுத்துஅன்பாய்ப்பாரே. 410

அன்பறியாமடையர்மெத்த வுலகத்துள்ளே அவையடக்கந்தனையறியாரசட்டுமாண்பர், வெம்பிமனந்தானுழன்று வேடம்பூண்டு விஞ்சைதனையறியாமல்வெருளும்பாவி, கொம்பறிந்துதாவுகிற மந்திபோலே குறியறிந்துதாவுவதுகுணமாமப்பா, சிம்புவதுஆகாதுசினமாகாது சிவசிவாமதியமுதச்செய்கைபாரே. 411

பாரப்பாகுருவினுட பதியைநோக்கி பார்க்கையிலேசீழ்மூலம் பதிந்துபாரு, ஆரப்பாஅறிவார்களமுதப்போக்கு அமிர்தரசந்தான றிந்துஅழுத்திப்பாரு, வீரப்பாசெய்யாமல்விண்ணைப்பாரு விண்ணி றைந்தபோதமதை மிகவும்வேண்டு, காரப்பாசதானந்தந் தன்னைக் காரு தனையறிந்துகாராட்டால் தவறிப்போமே. 412

தவமானபுலத்தியனே சொல்லக்கேளு சந்திரபுஷ்கரணியிலே ஸ்நானம்பண்ணி, சிவமானசெபதபங்கள் செய்யும்போது தென் பொதிகைதனில்வாழும் சித்தர்கூடி, நவமானகருவெடுத்து ஆடுங் கூத்தை நாங்கள்மிகஅதிசயித்துப் பார்க்கவந்தால், உவமானந்தெரி யாமல்செய்தாயானல் ஓடுமெணிகவுனமதையுரையென்றாரே. 413

உரையாதகவுனரசமணியையீந்து வுருமறைக்குங்கருவொன்று வுகந்துகூறி, திரையானதிரைநீக்கவலுவுகூறி திரைநீக்கிக்குருபதத் தில்சேரக்கூறி, வரையானஆறுவரைதாண்டக்கூறி மகத்தானமேல் வரையின்மார்க்கங்கூறி, குரையானஅமுதமதுகொள்ளக்கூறி குரு விருக்கும்பதிகூறிப்போவென்றேனே. 414

போவென்றுசொன்னவுடன் சித்தர்கூடி பொதிகையென்ற போதகிரிதனிற்சென்றார்கள், ஆவென்றபதியறிந்து அதீதசித்தர் அவையடக்கங்கேட்டவுட னறிந்துபோனர், கோவென்றகுருமுறை யாய்சொன்னல்மைந்தா கொள்கையுடன்தனையறிய மாட்டாதேது, நாவென்றருசியதனையறியாதாலே நல்லருசிதனையறியமதிபோனாரே.

மதியொடுங்கிவளருகின்ற சூட்சந்தன்னை வணக்கமுடன்தானி ருந்துவணங்கினக்கால், பதிதலத்திலெட்டிரண்டு மொன்றாய்க்கூடி பத்தானதசவாய்வு அகாரபீடம், விதியெழுத்தையாரறிந்துகூட்டப் போறார் விமலனேபுலத்தியனேஅந்தம்பாரு, கதிமுகத்திற்காயசித் துக்கடுத்தவாறு கண்டுகண்டுகொண்டவனே சித்தனமே. 416

அறுபத்துநாலுசித்து.

சித்தானஅறுபத்துநாலுக்கும்பேர்செப்புகிறேன்புலத்தியனே தெளிந்துகேளு, முத்தானபிரவதிகசித்துவொன்று மூர்க்கமுள்ள இதமிகிதச்சித்துவொன்று, சுத்தானசுக்கிலத்தின் சித்துவொன்று சுகமானபிரமகுலச் சித்துவொன்று, பத்தானபிறையதிகச் சித்து வொன்று பாங்கானஅங்கிசத்தின் சித்தொன்றாச்சே. 417

ஒன்றானபெண்மயமாம் சித்துவொன்று வொடுங்காதபவமூலச் சித்துவொன்று, பன்றானஈசர்குலச் சித்துவொன்று பராபரமாந் தாதுவெனும்பரமசித்து, குன்றாதஅசுரமெனும் சித்துவொன்று குறையாததானியமாம்சித்துவொன்று, சென்றண்டபிரமாதிச்சித்து வொன்று திரமானஅணுமாதிசித்தொன்றாச்சே. 418

ஆச்சப்பாவிகுர்தகுலச்சித்துவொன்று அடங்காதசித்திரமாம் சித்துவொன்று, மூச்சப்பாசிவநிதியாம் சித்துவொன்று முறையான

தருணவலுசித்துவொன்று,காச்சப்பாபருதியெனுஞ்சித்துவொன்று கரைகாணுஅதிரூபச் சித்துவொன்று, பாச்சப்பாசருவகுலச் சித்துவொன்று பண்பானமோகினியாஞ் சித்துமாமே. 419

ஆமப்பாவிரோதமயச்சித்துவொன்றுஅசையாதவிருர்திஎனுஞ் சித்துவொன்று, நாமப்பாசுரூபச்சித்துவொன்று நாதமெனுமன்புநிலைச்சித்துவொன்று, காமப்பால்விஜயமெனுஞ் சித்துவொன்று கருணைபெறச்செயரூபச் சித்துவொன்று, தாமப்பாமதன்கேளிச்சித்துமொன்று தருகாததும்பிவனச்சித்தொன்றுச்சே. 420

சித்தானபரிநகுலச்சித்துவொன்று திரமானநரிபரியாஞ்சித்துவொன்று, வித்தானவகாரமயச்சித்துவொன்று விதமானசந்தவிதச்சித்துமொன்று, சுத்தானதாம்பிரமாஞ்சித்துவொன்று துலையாதசலபேதிச் சித்துவொன்று, முத்தானஅசுபதியாஞ் சித்துவொன்று முறையானசிங்கமுகச் சித்துவொன்றே. 421

சித்திக்கும்ரிஷபமுகச்சித்துவொன்று சிவசிவாசித்துமகாசித்துவொன்று, பத்திக்கும்பரம்பரச்சித்துவொன்று பகர்பஞ்சீகரணசித்துஅதிகவித்தை, உத்திக்கும்உத்திகரு வுருமைசித்து வுருவானமறைப்பிலேயனந்தஞ்சித்து, வெற்றிக்கும்வெற்றிமுனைச் சித்துவொன்று வேடிக்கைமதுரகேளிச் சித்துவொன்றே. 422

மதுராதிமாமோகச் சித்துவொன்று மங்கையர்களதிமோகச்சித்துவொன்று, வீதனமுடன்விதனவருஞ்சித்துவொன்று வேடிக்கைகாலத்திலதிகசித்து, சுகமானசலதம்பச் சித்துவொன்று சுருக்கான அக்கினியிலனந்தம்சித்து, அதமானமாரணத்திலனந்தம்சித்து ஆக்கையுறுமாருட்டமானசித்தே. 423

மாருட்டமானதேதனமாஞ்சித்து வையகத்தோர்தனை மயக்குவானடசித்து, நீரிட்டமானதிலேநனையாச்சித்து நிஷ்டையிலேதம்பிக்கும்வாயுஸ்தம்பங், கோராட்டவிநோதத்திலதிகசித்து குமரிவிளையாடுகிறகோலச்சித்து, பாராட்டம்பண்ணுகிறஅரவின்சித்துபகைத்தவர்தமதியகத்தும்பாரிசித்தே. 424

பாரப்பாமுத்திரப் படைக்குஞ்சித்து பார்க்கையிலேதீயெரிந்துபறக்குஞ்சித்து, நேரப்பாயெரிந்ததீயவிக்குஞ்சித்து நிமைக்குமுன்னேகாதவழி நெருக்குஞ்சித்து, வீரப்பாசெய்யாம லடக்குஞ்சித்து வெகுகோடிசித்துகணுன்விபரமாக, ஆரப்பாஅறிவார்களறுபத்துநாலு மடக்கமுட்னுடுகிறதுநீதான்பாரே. 425

நீதானேயாடுகிறவகையைக்கேளுநீள்புவியிலிக்கருவைச்சொன்னுயாமூல், கோதரவேவாயுவினு லடக்கப்பட்டுகொடும்பிணிகள் சூழ்ந்துமிகக்கொடுமையாகி, வெதாளம்பூதகணமயமாய்ப்போவாய் வேதாந்தசத்தியமாய் நின்ருயானல், தாதரவாயுலகிலுள்ளோர்க் காவாயப்பா தண்மையுள்ளபுலத்தியனேகேளுகேளே. 426

கேளப்பா சித்துவகை யோரெட்டெட்டுங் கிருபையுடன் பேர் வகையுங் கெணிதஞ்சொன்னேன், வேளப்பா எரித்தசிவன் கிருபை யாலே வணிதோணக்கருக்குருவாய் விபரங்கேளு, ஆளப்பா இந்நூல் தான் சாலஞ்சாலம் ஆயிரத்து இருநூறு மதிகஞ்சாலம், கேளப்பா ஜாலமதிலடக்கமானால் கொள்கின்ற சாலவித்தை நிசமதாமே. 427

நிசமானதொழிலெடுத்து நீதானுடு நிச்சயமாய்சாலவித்தை மன திற்காணும், வசமானமன தடங்கி அறிவிற்சேர்ந்தால் மகத்தான சாலவித்தை யென்னசொல்வேன், நிசமான தசதீட்சை மனதிற் கொண்டு நித்தபரிபூரணத்தைப் பணிந்தாயானல், ருசியான பால் போல சகலசித்தும் நொடிக்குமுன்னே ஆடுதற்கு நோக்குண்டாமே.

பிரவதிகச்சித்து.

உண்டானசித்துவகைக்குவமைகேளுவுறுதியுள்ளபுலத்தியனே யுனக்காய்ச் சொல்வேன், செண்டாட வூக்குருவி பிச்செடுத்து செந் தேனுங் கருந்தேனும் விட்டுண்மந்தா, நன்றாக மத்திக்கும் போதில் மைந்தா நன்மையுள்ள மைபோல நலமாய்க்காணும், குன்றாத சிமிழ் தனிலே பதனம்பண்ணி குருவானபதிநோக்கித் திலதம்போடே.

போட்டவுடன் ரேசகபூரகமும்பண்ணி புனிதமுடன் கும்பகத் தில் நின்றால்மைந்தா, நாட்டமுட நாலுதிக்கி லுள்ளசேதி நலமாகத் தோணுமடா நலமாய்மைந்தா, தேட்டமுட னிந்தமுறை சித்து தானுந் திறமான பிறவதிகச் சித்துமாகும், வாட்டமில்லா மன தடங்கி நில்லுநில்லு மைந்தனே யின்னமொரு வரிசைகேளு. 430

இதமகிதச்சித்து.

வரிசையென்ன இதமகிதச் சித்துசொல்வேன் வால்நீண்ட கருக்குருவி பிச்சுவாங்கி, உரிசையுள்ள ஏரண்டத் தெண்ணெய் விட்டு ஓமெனவே மத்தித்து ரவியில்வைக்க, முரசதிரத் திருவேறி மையாய்ப்போகு மூர்க்கமுள மையதனைச் சிமிழில்வைத்து, குரு பதியைத் தனைநோக்கி மையைப்போட்டு கும்பித்து நின்றதினால் குணத்தைக்கேளே. 431

கேளப்பாநாலூரு ஜனங்கள்கூடி கெம்பீரமாயிருக்குங் கூட்டத் தேகி, கோளப்பாமிகப்பேசி சண்டைசெய்வார் குணமாக நீயடங் கிப் போகும்போது, வேளப்பா மதன்ரதிபோ லிணங்கி நிற்பார் வேடிக்கை பார்க்கவுநீ பின்புசென்றால், காலப்பா மிகவோங்கி மிதித்துக்கொண்டு கடினமுள்ள சண்டையிட்டு வோடும்பாரே. 432

பிறையதிகச்சித்து.

பாரப்பா இன்னமொரு சேதிகேளு பண்பான பிறையதிகச் சித்துசொல்வேன், காரப்பா திகைப்பூண்டு தனைக்கருக்கி கருவான ஏரண்டத் தெண்ணெய்விட்டு, வீரப்பா செய்யாமல் கல்வத்தாட்ட விபரமுள்ள மைபோல வெளிச்சங்காணும், சேரப்பா சிமிழ்தனிலே பதனம்பண்ணித் திருவான பதிநோக்கித் திலதம்போடே. 433

போட்டவுடனமாவாசை இருட்டில்மைந்தா போக்குடனே நாலுதிக்கும்பார்த்தாயானால், நாட்டமுடன் பிறையதிக மாகத்தோற்றும் நரரானமானிடர்க்கு அப்படியேகாணும், வாட்டமுடனிடதுகண்ணை மூடிப்பார்த்தால் வலமான சூரியன்போல்வரிசைகாணும், காட்டாதே யுலகத்திலிந்தநூலை கர்மவிதி தீர்ந்தவர்க்குக் காட்டுகாட்டே. 434

அங்கிசசித்து.

காட்டவேபிறையதிகச் சித்துசொன்னேன் கருவான அங்கிசத்தின்சித்துசொல்வேன், பூட்டாதமின்மினியாம்பூச்சிதன்னை பொறுக்கியொரு சிரங்கைதனைப் பீங்கானிட்டு, கூட்டுவாயேரண்டத் தெண்ணெய்விட்டுகுருவானகருவிட்டுரவியில்வைக்க, ஆட்டானதிகைப்பூடுவுருகிநல்ல ஷுரக்குநிறை மையெனவே அன்பாம்பாரே. 435

அன்பானமையெடுத்துச்சிமிழில்வைத்து அண்டமெனுங்கும்பமுனியடிமையாகி, நிம்பாமல்நீயிருந்து திலதம்போட்டு நின்றிடத்தைக்கும்பித்தருளைநோக்கு, சம்பிரமாய்பூமிதனைப்பார்க்கும்போது தட்டாதபாதாளங் கெசமாய்த்தோற்றும், வம்பானபாதாளம் பார்க்கும்போது மனதுபயமாகவேதான் தோற்றும்பாரே. 436

சுக்கிலசித்து.

பாரப்பா அங்கிசத்தின் சித்துசொன்னேன் பாங்கான சுக்கிலத்தின்சித்துகேளு, நீரப்பா நாதமதைப் பீங்கானிலிட்டு நிறையாகப் பெருங்காயந் தன்னிற்சேர்த்து, காரப்பா ரவிதனிலே வைத்துப்பாரு காரமதுதானேறி புளிபோலாகும், சேரப்பா சிமிழ்தனிலே பதனம்பண்ணி சிந்தைமனதொன்றாக அறிவில்நில்லே. 437

நில்லென்றுதியானித்து சம்போகஞ்செய்யி னிசமானக்டுகளவுபுளிதான்கொண்டு, சொல்லொன்றும் பேசாமல் சம்போகித்தால் சுருக்கான விந்துவதுமேலேஏறுங், கல்லென்றமலையதுவுநகர்ந்தாலுந் தான் கழலாதுவிந்துவது கட்டிப்போகும், வல்லென்றமலபொருந்துங் கோடிபெண்ணை மாதவொலி சத்தமது சொல்லொணாதே. 438

சொல்லவொண்ணு லீலையிலே மதன்போலாடு தோகைமனம் வேறானால் சொல்லக்கேளு, நல்லதொரு அடக்கமென்ற புளியைத்துப்பு நாரியுடனுனதுவிந்து கரிபோற்பாயும், புல்லென்ற புல்லருக்கிந்தநூலைப் புகலாதே அவர்களிடம் பேசவேண்டாம், வல்லென்ற சுக்கிலத்தின் சித்துமாகு மகத்தான பிரமகுலச் சித்துகேளே. 439

பிரமகுலச்சித்து.

கேளப்பா செம்பருந்துப் பித்தெடுத்து கிருபையுடனதனிந்துமொன்றாய்சேர்த்து, கோளப்பா வாராமல் புழுகுசேர்த்துக் கூர்மையுடன் மத்திக்கும்போதிலையா, கூழப்பாபோலாகி யிறுகிமையாய்குணமாக இருக்குமடா சிமிழில்வைத்து, நாளப்பா மூலமதிற் றிலதம்போட்டு நன்மையுடன் கும்பகத்தில் நின்றுபாரே. 440

பாரப்பாவுனதுருவைக் கண்டோரெல்லாம் பரப்பிரமசொரூப மெனப்பணிவாரையா, காரப்பாமவுனமதாயிருந்துகொண்டு காசினி யோர்செய்தொழிலைக் காணுகாணு, பேரப்பாபிரமகுல மென்றே சொல்வார் பேசாமல்திலதமதையழித்தாயானால், சீரப்பாவுனதுருத் தான்சுபமதாக செகத்தோர்க்குத்தோணுமடா தெளிந்துபாரே. ()

பெண்மயச்சித்து.

பாரப்பாபிரமகுலச் சித்துசொன்னேன் பதிவானபெண்மயத் தின்சித்துகேளு, ஆரப்பாஅறிவார்கள்காமரூபி அசுபதியினால்தனி லேகொண்டுவந்து, நேரப்பாகருவினால்பித்தஞ்சேர்த்து நினைவாகத் தானெடுத்துவைத்துக்கொண்டு, சீரப்பாதாரமதுகூடச்சேர்த்து திர மாகஜங்கோலத்தயிலம்வாங்கே. 442

வாங்கியேகல்வத்தி லாட்டும்போது மயங்காமற்றயிலம்விட்டு மாட்டிஆட்டி, ஓங்கியேஆட்டிவரி லென்னசொல்வேன் ஓகோகோ அருணநிறமையேயாகுந், தீங்கில்லாச்சிமிழ்தனிலே பதனம்பண்ணி செங்கதிருஞ்சோதியுமே சேர்ந்தநாளில், பாங்குபெறத்திலதமிட்டுப் பூசியேதான் பதிவாகரேசகபூரகமும்பண்ணே. 443

பண்ணியேகும்பகத்தில் நின்றாயானால் பாருளோரதிமோகப் பெண்தானென்று, சண்ணையொடுசயிக்கினைகள் பேசுவார்கள் தன் மனத்தைதானடக்கிக் குஞ்சிரிப்புகொள்ளு, கன்னிகையேயுன்மனது என்றுபோற்று கால்தனிலேவிழுவார்கள்கருவாய்நீயும், உன்னியே திலதமதையழித்தாயானால் உடனின்றபெண்தேடியேங்குவாரே.

ஏங்கியேமனந்தளர்ந்துபெருமூச்சேறி என்னசொல்வேன்மத ரதியோமோகினியோபோபோ, மாங்குயில்போல் நின்றபெண்ணை நிமைக்குமுன்னே மறைந்ததினால்மனிதரெல்லா மாயமாயந், தூங்கு வதுசொற்பனம்போலாச்சேயென்று சொல்வார்களனைவோருந் துய ரம்வைத்து, பாங்குடனேபெண்மயத்தின் சித்தைநீயும் பகராதே யொருவருக்கும்பண்பாய்த்தானே. 445

பவமூலச்சித்து.

தானென்றபெண்மயத்தின்சித்துசொன்னேன் தவமானபலமூ லச்சித்துகேளு, கானென்றகானகத்தில் வாழும்நல்ல கவரியெனு மானினுடக்குளம்பைவாங்கி, பானென்றபாண்டமதிலிட்டுநல்ல பசு மையுள்ளதுருசதுவுங்கெந்திசேர்த்து, வூனென்றஅமுரிவிட்டு எரித் தாயாகில் உடன்சேர்ந்தநீர்வற்றித்தயிலமாமே. 446

ஆமப்பாதயிலமதில்வீரம்பூரம் அன்பானபுழுகிட்டுமத்தித்தே தான், நாமப்பாசொல்லுகிறோம்ரவியில்வைக்கநல்லதொருமெழுகாகி மைபோலாகுங், காமப்பால்சென்றதொரு மையைநீயுங் காட்டெரு மைக்கொம்புதனில் பதனம்பண்ணி, காமப்பாதன்னிலையையறிந்து கொண்டு தயங்காமல்ரேசகபூரகமுஞ்செய்யே. 447

செய்தபின்புகும்பகத்தில் நின்றுகொண்டு செப்புதனில்மையெ டுத்துத்திலதம்போட்டு, வுய்தமுள்ளபிடரிதனிற்றடவிமைந்தா வுன்

மனையைத்தான்தொழுது நின்றாயாகில், துய்தமுள்ளகாலைவடிவாகத் தோற்றி தொல்லுலகிலிக்காலை யார்மாடென்பார், பைதலர்களனை வோருமதிசயமாய்க்கூடி பதித்ததொருகயிறெடுத்துப் பிடிப்பார் பாரே. 448

பிடிக்கையிலேகண்மறைப்பாய் மையைத்தேய்த்து பின்பாக நின்றிடில்நீசென்றாயானால், அடுக்கின்றபயிதலர்கள திசயித்துஅடுத்துநின்றகாலையதுமாயமாக, நொடிக்குநிமைக்குள்ளாக மறைந்ததாலே ஓகோகோமாபூதமென்றுசொல்லி, முடிக்கியவரோடிடுவார் பாருபாரு மூர்க்கமுள்ளசாலவித்தைய்தீதந்தானே. 449

ஈசுரகுல்ச்சித்து.

தானென்றபவமூலச் சித்துசொன்னேன் தயவானஈசுரகுலச் சித்துகேளுநீ, தானென்ற கவரிமான்பித்துதன்னை கருவானஈரலுட தயிலம்வாங்கி, ஊனென்றதயிலமதிற்பித்துப்போட்டு வுருவானநாதமுடன் புழுகுசேர்த்து, மானென்றகல்வத்தில்மத்தித்தாக்கால்மகத்தானகருக்குழம்பாமையாம்பாரே. 450

மையானகருமையைச்சிமிழில்வைத்துமகத்தானகருவெனவே மகிழ்ந்துபாரு, மெய்யாகச் சொல்லுகிறேன் பூரணத்தைநோக்கி விசையாகரேசகபூரகமுஞ்செய்து, அய்யனேபுலத்தியனே கும்பகத்தில்நில்லு அறிவாலேகுருபரனே அன்பாற்கொண்டு, வையகமெல்லாம்புகழுமையேயென்றுமன துருதி செயலுறுதிவைத்துக்காரே.

காரப்பா ஏகாந்தவெளியிலேதான் கருணையுடன் வடமுகமாயிருந்துக்கொண்டு, நேரப்பாநின்றநிலை தன்னைப்போற்றி நீமகனே புருவத்திற் றிலதம்போட்டு, கூறப்பா அஞ்செழுத்தை யோதிக்கொண்டு குருவென்றுநீயிருக்கக் குணத்தைக்கேளு, ஆரப்பாகண்டாலுங்குருவேயென்று ஆள்கூட்டம்ரொம்பவுந்தான் கூடுந்தானே.

தானென்றஆள்கூட்டமிகவுங்கூடி சதாசிவனோதவமுனியோதம்பிரானோ, தேனென்றவசனமதாய்தொழுதுபோற்றி செகத்திலுள்ளோர்கூடியேநிற்கும்போது, மானென்றமையதனைக் கண்மறைப்பு பார்த்து மார்க்கமுடனழிந்திடவேமனிதனாகும், வானென்றமாமுனி தானெங்கேயென்று மார்க்கமுடன்மயங்கிமிகமருளுவாரே. 453

மருண்டுமிகஇருந்துபரதேசியெங்கே மாயமாய்ப்போனதினால் மனிதனல்ல, திரண்டகுருதேசிகனோசிவனோநல்ல சித்தனோமா முனியோ ஆரோவென்று, வெருண்டுமிகவோடிவா ரய்யாஐயாவே தாந்தசித்தியிலேஅதிகசித்து, முரண்டுமிகப்பண்ணுமற்றன்னைக் காரு முனையானசுழிமுனையை முயன்றுபாரே. 454

விஷ்ணுகுலச்சித்து.

பாரப்பாஈசுரகுலச்சித்துசொன்னேன் பண்பாகவிஷ்ணுகுலச் சித்துகேளு, ஆரப்பாஅறிவார்கள் குளமான்தன்னில் அடவானபித்துடனே கொழுப்புவாங்கி, சீரப்பாகொழுப்பிலே நெய்வடித்துக்

கொண்டு திரமானபித்துடனே சேர்த்துக்கொண்டு, காரப்பா கல்வத்திலிட்டுக்கொண்டு கனமானபேதியுடன் பூரணமுஞ்சேரே. 455

சேர்த்துமிக மத்தித்துப் பார்க்கும்போது திரமான கருவாலே மையாய்ப்போச்சு, காத்துமிகச் சிமிழில்வைத்து பதனம்பண்ணு கண்ணொளிக்குள் விண்ணொளியைக் கருதிப்பார்த்து, போற்றிமிகக் கும்பகத்தில் நின்றுகொண்டு புனிதமுள்ள மையெடுத்துத் திலகம் போட்டு, பார்த்துமிக வாயுவெனும் பீசந்தன்னைப் பருவமுடன் தொழுததினால் வரூபங்கேளே. 456

கேளப்பா அனுமனுடரூபம்போலே கெடியாகக்காணுமடா கண்டோரெல்லாம், கேளப்பா மிகப்பயந் தோடுவார்கள் கொக்கரித்து நீஓடிக் குதித்துப்பாய்ந்து, காலப்பா மிகவூணி நின்றாயானால் கண்டவர்களதிசயமாய்ப் பார்ப்பாரப்போ, நீளப்பா மிகத்தொட்டுத் திலதந்தன்னை நிமைக்குமுன்னே யழித்திடுவாய் நீதான்பாரே. 457

பாரப்பா மதன்போல வுன்னைக்காண்பார் பார்த்துநின்ற அனுமனுங் குரங்கைக்காணும், வீரப்பா செய்தவொரு பூதந்தானோ வெருளுகிறபிசாசமோ பேயோவென்று, ஆரப்பா வறிகுவார் மாயாரூப மனுமனல்ல தேவதையென் றதிசயிப்பார், சீரப்பா மனதடங்கி அறிவிற் சேர்ந்தால் செகசால மானவித்தைத் திரமிதாமே. 458

அசுரகுலச்சித்து.

திரமானவிஷ்ணுகுலச் சித்துசொன்னேன் தீர்க்கமாயசுரகுலச் சித்துசொல்வேன், உரமானஐங்கோலத் தயிலம்வாங்கி உற்பனமாய் தயிலமதைப் பதனம்பண்ணி, திரமான நாதமொடு விந்துசேர்த்து திறமானபச்சோந்தி பித்துங்கூட்டி, கரமான கல்வத்தில் மத்தித்தாக்கால் கருவான கருசேர்ந்து மையாம்பாரே. 459

மையானமையெடுத்துப் பதனம்பண்ணி வசமானபுழுகெடுத்து மையிற்சேர்த்து, கையாலேமத்தித்துசிமிழில்வைத்து கருணையுடன் ஜெகஜோதி பாதந்தன்னை, மெய்யாகவேதொழுது குருவைக்காத்து விசையாகரேசக பூரகமும்பண்ணி, செய்யவே கும்பகத்தில் நின்றுகொண்டு திறமான மையெடுத்துத் திலதம்போடே. 460

போட்டவுடனுனதுருவை யொருவர்கண்டால் புதுமையுடனதிசயமாய்ப் பார்ப்பர்கேளு, நாட்டமுளதேக மலைபோலத்தோற்றி நலமானதேகமது முன்பின்னாக, தோற்றாதுதோற்றுமது வெவ்வேறாக தொல்லுலக ரதிசயமாய்ப் பார்ப்பாரப்பா, காட்டாது திலதமதை நிமைக்குமுன்னே கையாலே துடைத்துநீ யப்பால்போகே. 461

போனவுடன் கூடிநின்ற பேர்களெல்லாம் பொல்லாத ரூபமது மாயமாக, காணாமல் போனதுதா னென்னசொல்வேன் கண்டவர்களதிசயமாய்ப் பேசுவார்கள், தானான இக்கருவைத் தானேதானுப்

தனதாகப் பார்த்ததினால் பலிக்குஞ்சித்தி, கோனான குருவருளா லிந்தநூலைக் குணமாகப் பரத்தினுட சித்துப்பாரே. 462

## தானியசித்து.

சித்தான அசுரகுலச்சித்துசொன்னேன் திரமான தானியத்தின் சித்துசொல்வேன், முத்தான அட்சயமாய் மூலிதன்னை மூர்க்கமுடன் கொண்டுவந்து தயிலம்வாங்கி, வித்தான ஏரண்டத் தயிலத்தோடே விசையான ஐங்கோலத் தயிலங்கூட்டி, வற்றாத தயிலமது மூன்று மொன்றாய் வார்த்துவிடு பீங்கானில் வகையாய்த்தானே. 463

வகையானமூன்றுவகைதயிலந்தன்னை வான்கதிரில்வைத்திடநீ வண்மைகேளு, பகையாகவொன்றையொன்று கொண்டுநல்ல பருவ முள்ளமெழுகாகி யிறுகிநிற்குந், தகையாமல்மெழுகைநீ யெடுத்துக் கொண்டு தாமென்றசெம்பதனிலடக்கம்பண்ணி, திகையாமல்தேசத் தில்சஞ்சாரஞ்செய்யில் திடமாகச்செய்கிறதோர் சித்துகேளே. 464

கேளப்பா ஓடெடுத்து வட்டமாக கிருபையுடன் தானுரைத்த சேதிகேளு, வேளப்பா எரித்தசிவன் தன்னால்செய்த விசையான தயிலமதைக் கிண்ணத்தப்பி, கோளப்பா ரவியில்வைக்கக் கிண்ணந் தானுங் கூர்மையுள்ள தயிலமதையுண்டுநல்ல, கேளப்பாசிவந்தநிறம் போலேகாணுந் திறமான பாத்திரத்தின் செய்கைகேளே. 465

கேளப்பா புலத்தியனே கர்மம்வானே கேசரமா மட்சயத்தின் பாத்திரமாகும், வேளப்பா எரித்தசிவன் கையிலேந்தி வெகுகோடி சீவசெந்துக்கன்னமீந்தார், நாளப்பாதினம்பார்த்து பாத்திரந்தன்னை நலமாகப்பூசித்து அர்ச்சனைகள்செய்து, ஆளப்பா அட்சயமாம் பாத் திரந்தன்னை அனுதினமும் பூசித்து அருளைப்போற்றே. 466

போற்றியேகுருபரனைத் தியானஞ்செய்து பொருத்தமதுதான் பார்த்து கழஞ்சிகட்டி, நாற்றிசையிலுள்ள நவதானியந்தன்னை நல மானகளஞ்சியத்திற்போட்டுக்கொண்டு, வாட்டுறவு இல்லாத பாத்தி ரந்தன்னை வாங்கியேகுருபரனை மகிழ்ந்துபோற்றி, தேட்டமிலாதே கொடுக்குந் தெய்வமென்று சிந்தைமனம் ஒன்றாகப் பூசைபண்ணே.

பூசைபண்ணிப் பாத்திரத்தை கையிலேந்தி புகழ்பெருகுங் களஞ்சியத்தின் வாசல்சென்று, ஓசையுடன் மந்திரத்தைத் தியா னஞ்செய்து ஒன்றட்சயமாய்வளர்ந்து வுறுதியாக, நேசமுடன் பாத் திரத்தைவைத்தாயானால் நிச்சயமாய்த்தானெடுக்கத் துலையாதப்பா, வாசமுள்ள பூரணத்தின் மகிமையாலே வளர்ந்ததே தானியங்கள் வளமாய்த்தானே. 468

தானென்றபாத்திரத்தை யெடுக்கும்போது தனதானகளஞ்சிய மும்வற்றிப்போகும், கோனென்றகுருவருளால் சித்துவித்தை குரு வறிந்துகருந்து வார்த்தாயானால், தேனென்ற சென்மமது பிலசத்து தையா திருவாகுங்குருவாகுந் திரமிதாகும், வீணென்று பேசாமல் விண்ணைப்பார்த்து வேதாந்த பதியில்மனம் நிறுத்திடாயே. 469

### பிரமாதிசித்து.

ஆமப்பாதானியவகை சித்துசொன்னேன் அன்பானபிரமாதி சித்துகேளு, நாமப்பாசொல்லுகிறோமத்தினுடைவேரும் நலமானஅவ் விரையுங்கூடச்செர்த்து, தாமப்பாகுழித்தயிலமிறக்கிக்கொண்டு தன தானபூரணமுங்கூடச்சேர்த்து, காமப்பால்விட்டாட்டி ரவியில்வைக் கக் கருணையுள்ளபிரமாதிமையுமாச்சே. 470

ஆச்சப்பாமையெடுத்துச் சிமிழில்வைத்து அடக்கமுடனவை யடக்கமன்பாய்ச்செய்து, மாச்சல்செயும்பயல்களுடமேனிதன்னில் வஞ்சகமாய்த்தடவிவிட மருட்டுத்தானும், பேச்சப்பாபேசாமல் பிணம்போல்நிற்பான் பிலமானவெறிபிடித்துப் பேய்போலாவான், மாச்சல்செய்துதீராமலுன்னிடத்தில்சொன்னால் மார்க்கமுடன்தண் ணீரால்துடைத்துப்போடே. 471

துடைத்தவுடன்மருள்நீங்கிப் பேசுவான்கேள் சுகமாகப்பேசி யவனிருப்பான்கேளு, மடத்தினமாய்க்கருவெளியில் சொன்னலையா மகத்தானகுற்றம்வரு மனதைக்காரு, அடைத்துவைத்தபொருள்க ளெல்லாமிதனில்சொன்னேன் ஆயிரத்துஇருநூறு ஆர்தான்காண் பார், இடத்தில்வெகுசருவறிந்து இடத்தில்பாரு இன்பமுள்ளநூல் தன்னைப்பதனம்பண்ணே. 472

### அணுமாதிசித்து.

பண்ணப்பாபிரமாதிசித்துசொன்னேன் பகரவொணுஅணுமா திசித்துகேளு, விண்ணிறைந்தபூரணமோபலத்தைவாங்கி விபரமுள் ளகாரோட்டில்வைத்துமைந்தா, திண்ணமுளரவிபீசங்கூடச்சேர்த்து செங்கதிரோன்முன்னிலையாய் தயிலம்வாங்கி, நன்னயமாய்ஜங்கோ லத்தயிலம்வாங்கி நல்லதொருபீங்கானில்பதனம்பண்ணே. 473

பதனமுள்ள தயிலமதில்விபரங்கேளு பாங்கானசாரதனில்விட்டு மைந்தா, மதனமுள்ளபாராசகேசரிஷியைத்தானு மார்க்கமுடன்தா னுரைத்துச்சிமிழில்வைத்து, வதனமுடன்வழிபாதை தனிலிருக் கும் வஸ்துவெனும்பிள்ளையார் நெற்றிதன்னில், சதமாகத்திலதமிட் டுப்பார்த்தாயானல் சத்தியெனுங்கணபதிதான்பெரிதாம்பாரே. 474

பார்த்தவொருகணபதியைப் பார்த்தோரெல்லாம் பண்பாகப் பெரிதாகஇருக்குதேது, நேற்றிருந்தபிள்ளையாறல்லகாணும் நிச்சய மாயிதுவேறேயார்தான்வைத்தார், மாற்றுதற்குஇவிடத்தில்மனித ருண்டோமகத்தானபெரிதாகஇருக்குதப்பா, வீற்றிருக்கும்பிள்ளை யார்மகத்துவமுண்டு வேண்டுவாரனைவோரும்வேண்டுவாரே. 475

வேண்டிமிகப்பணிந்துபொங்கலிடும்போதையா வேதியனுங்கு ருக்கள்வந்துஅபிஷேகம்பண்ணி, தீண்டியவஸ்திரத்தால்துடைக்கும் போது சிவசிவாபழையபடிரூபங்காணும், ஆண்டவனார்செயலிதுதா ன்பலரும்பாரும் அணுவாகுமதின்பிறகுமேருவாகும், பூண்டதொரு மனிதரெல்லாமதிசயித்துபோக்குவரத்தாயிருப்பார்புதுமைதானே.

விகுர்திசித்து.

காணப்பாஅனுமாதிசித்துசொன்னேன் அல்லானவிகுர்தியின் சித்துசொல்வேன், பூணப்பாநவாச்சாரங்கல்லுப்போடு பொங்கிநின் றபூநீறுங்கருவுங்கூட்டி, தேனப்பாகல்வத்திலிட்டுஆட்ட சிவந்தநிற மெழுகாகுஞ்சிமிழில்வைத்து, வேணப்பாஅதனையேபதனம்பண்ணி பிடாரியெனுந்துர்க்கையுடகோவில்சொல்லே. 477

செல்லப்பாகோவிலுக்குத் துர்க்கைதானுந் தீர்க்கமுளவடிவுரு வாய்பார்த்துநீயுங், கல்லப்பாஒருசிலையின்கண்ணிலேதான் கணமா னமையெடுத்துத்தடவிப்போடு, மல்லப்பாபிடித்ததுபோல்மையுங் கல்லில்மண்டிநின்றஎண்ணெயதுஒன்றாய்ச்சேர்த்து, புல்லப்பாபனி நீர்போல்வீழும்பாரு போக்கரியாஅச்சனுங்கண்டேதுசொல்வார். ()

வானவர்கள்போற்றுமயேஸ்பரிக்குத்தானும் வரிவிழியின்கண் ணாலேநீர்களோடி, மானமுளமார்புமடிகொள்ளாதோடி வடிந்தசல மென்சொல்வேனையாவென்று, கோனனராஜனிடஞ்சொல்வானப்பா கோலமுள்ளராஜனங்கேவருவான்பாரு, தேனனபானமுடன்மதுக் கள்வைத்துச் சிறப்புமிகத்தானடத்திக்கொள்வான்பாரே. 479

பாராளும்ராஜனுந்தானிருக்கும்போது பக்குவமாய்ஜெகசாலம் பண்ணுபண்ணு, சீராகக்கருவித்தையாடும்போதுசீக்கிரத்தில் பெண் மயத்தின்மையைநீயுங்,கூறுகப்போட்டவுடன்பெண்ரூபமாகுங்குண மாகக்கண்டவர்க ளதிசயமாய்ப்பார்ப்பார், மாறுதமறைப்புமையை யதின்மேல்போடு மாயமாய்ப்போனவுடன்ராஜன்சொல்வான். 480

சொல்லுவான்தேவியுடசித்துவொன்று தோணவேசிறப்புமிக நடத்திவைப்பான், நல்லதொருசித்துகளிலனந்தமுண்டு நாடகத்தி லாடுகிறபொருளிதாகும், விள்ளாதேபொருள்களெல்லாஞ் சொன் னேனையா வேதாந்தப்பதியில்மனம்நிறுத்தியாடு, புல்லர்தொழும்வி குர்தியதுசித்துசொன்னேன்புகழ்பெரியசித்திரத்தின்சித்துகேளே

சித்திரசித்து.

கேளப்பாசுந்தனத்தின் மரத்தின்மேலே கீழ்மேலாய்வாழுற தோர்சிவந்தவவ்வால், நாளப்பாதினம்பார்த்துப்பிடித்துவந்து நல்ல தொருகருவினுற்பிச்சுவாங்கி, சூழப்பாஏரண்டத்தெண்ணெய்சேர் த்து சுருக்கானரவியில்வைக்கமெழுகாய்நிற்கும், வாளப்பாபூரணமு மெழுகுஞ்சேர்க்க வளமையுள்ளகறுப்பாகிமையாய்ப்போடே. 482

மையானமையெடுத்துச் சிமிழில்வைத்து மனோன்மணியைத் தொழுதிறைஞ்சிவணக்கமாக, கையானநடுவிரலில்மையெடுத்து கரு ணைபெரும்பூரணத்தைதக்கருத்தில்வைத்து, மெய்யானபாலருடநிமை யில்தீற்றி மேடையெனவுப்பரிகைமேலேநின்று, ஐயாவேகண்டவ திசயங்கள் அன்பாகச்சொல்லுமென்றுகேளே. 483

கேட்கையிலேரிஷபமதில் ஈஸ்வரனும்வாருர் கிருபையுடன் மயில்மீதில் கந்தர்வாருர், வாழ்க்கையுள்ள கெருடன்மேல்விஷ்ணு

வாமுர் வரிசையுள்ளகணபதியும் வாமுர்வாமுர், பார்க்கமிகப்பயமான ஜனங்கள்தானும் பந்திபந்தியாய்வருகுதென்றுசொல்வான், மார்க்க முடன்கண்கசக்கிப் பார்க்கபார்க்க மகத்தானஅதிசயங்கள் சொல்லு வானே. 486

வானென்றமுலைப்பாலால்கண்துடைத்து மார்க்கமுடன்பாருநீ யென்றுசொல்லி, ஊனென்றசண்டகணுவொன்றுமில்லை உத்தமனே கண்கலக்கமானதப்பா, தேனென்றசித்திரத்தின்சித்துசொன்னேன் தெளிவானமனதோர்க்குச் சித்தியாகும், மானென்றமனமுடையா ரறிந்துபாரு மகத்தானசிவநிசியின்சித்துகேளே. 485

சிவநிசிச்சித்து.

கேளப்பாகவரிமான்செவியிலேதான்கிருபையுடன்களிபோலே திரண்டிருக்குநஞ்சு, நாளப்பாநம்மலையின்சார்பிலுண்டு நன்மையுட னஞ்செடுத்துநாதஞ்சேர்த்து, கோளப்பாவாராமல் ரவியில்வைக்க கூர்மையுட னுருகிரெண்டுமையாய்நிற்கும், வாளப்பா ஐங்கோலத் தயிலஞ்சேர்த்து வரிசையுடன் மத்தித்துச்சிமிழில்வையே. 486

வைத்தடொருமையெடுத்து தியானஞ்செய்து வளமையுடன் ஈஸ்வரன்கோவில்வாசல், தைத்தடொருபடியதனிலெங்குந்தேய்த்து தயவாகஅதனருகே யிருந்துகொள்ளு, வுற்றஈஸ்வரனைச் சேவிக்க நல்ல வுலகிலுள்ளோர்படிமிதித் துள்ளேசெல்வார், கைத்தடொரு மைகாலிற்பட்டபோது கனலெழும்பிக்கண்மயக்கமாகுந்தானே.

தானென்றகண்மயக்கமாகியுள்ளே தான்சென்று பார்த்தவிட மெங்குந்தானுந், தேனென்றஈஸ்வரன்போற் கண்ணில்தோற்றுஞ் சிவசிவாவென்றுசொல்லிசேவிப்பார்கள், ஊனென்றகுருக்கள்வந்து யிங்கேவாரும் உருவானநிலையிருக்குதென்றுசொல்வான், வாவென்ற வடிவானலிங்கந்தானும்வைத்ததிங்கேயாரெனவேசொல்வான்பாரே.

சொல்லெனவேயுங்களுக்குப் பயித்தியமோவென்பான் சுணை கெட்டகுருக்களேநீ சொல்வதுபயித்தியம், நில்லடாவென்றெனவே யிருக்குஞ்சண்டைநிமைக்குமுன்னே மடிபிடியாய்வெளியில்வருவார், கல்லானபடிதனை நீரால்துடைத்துக் கடக்கப்போய் சென்றவர்கள் கோயில்வருவார்கள், உல்லானகண்மயக்கந் தீர்ந்துநின்ற வுருவான யீஸ்வரனைச்சேவிப்பாயே. 489

அருணசித்து.

பாரப்பா சிவநிசியின் சித்துசொன்னேன் பண்பான அருண சித்துபகரக்கேளு, காரப்பாஅரவினுடநஞ்சுப்பித்தும் கருவாகமத் தித்துரவியில்வைத்து, தீரப்பாரெண்டுபத்து நாளைக்குள்ளே சிவ சிவாவென்னசொல்வேன் கருவாய்நிற்கும், ஆரப்பா அறிவார்கள் ஐங்கோலத்தால் அமுத்திமிகமத்திக்கமையாய்ப்போமே. 490

மையானஅரவமையின்சித்துசொல்ல வையகத்திலொருவருண் டோமைந்தாகேளு, பொய்யானமானிடர்க்கு விஷங்கள்தீண்டிபோ

ராடித்திரியாமல் மயானஞ்செல்வர், மையாலேமைமையெடுத் தடக்கம் பண்ணி காத்திருக்கும்ஜனங்களேநீ அடக்கச்சொல்லி, மெய்யான மைமெயடுத்துக் கண்ணில்தீற்றி விசையாகத் தலையிலொரு குட்டு போடே. 491

போட்டவுடன்விஷமிரங்கி யெழுப்பிநிற்பான் புதுமைவெடி புதுமையென்று போற்றுவார்கள் தேட்டமுடனுனதுபதங் காக்க வென்று திசையிலுள்ளமானிடர்கள்தேடிக்காண்பார், நாட்டமுடன் மாற்றமென்றமையைப்போட்டால் நற்குருவைக்காணாமல்தேடுவார் கள் தாட்டிகமாய்மனிதனல்ல சித்தனென்பார் சற்குருவேயென்று சொல்லி தயங்குவாரே. 492

பருதிவிம்பச்சித்து.

தங்காமலருணசித்து விபரஞ்சொன்னேன் தயவானபரிதிவிம் பச்சித்துகேளு, மயங்காமல்நேர்வாளந் தயிலஞ்செய்து மைந்தனே பீங்கானில் பதனம்பண்ணி, தயங்காமலுளுந்துமாச்செய்துகொண்டு தன்மையுள்ளமாவதனில் தயிலஞ்சேர்த்து, முயங்காமலேங்கோலக் கருவுஞ்சேர்த்து மூர்க்கமுடன்பிசைந்துருட்டிபதனம்பண்ணே. ()

பண்ணியதோர்மாவதனில்கடுகுபோலே பார்மீதில்நோய்களுக் குப்பகர்ந்தாயானால், உன்னியதோர்நோய்தீரும் வகையைக்கேளு ஒடுங்காதகுன்மமொடு மகோதரங்கள், சென்னியிலே பற்றுகின்ற சூலைரோகஞ் செவியடைப்பான் மூக்கடைப்பான் திரண்டவாய்வு, குன்னியதோர்குணமெல்லாங் குடிகெட்டோடுங்குணமானமாவினிட போக்குத்தானே. 494

மதிரூபச்சித்து.

தானென்றபருதிவிம்பச்சித்துசொன்னேன் தயவானமதிரூபச் சித்துகேளு, ஓமென்றவூமத்துசமூலமப்பா வுருமையுடன்கொண்டு வந்துகண்டமாக்கி, நாமென்றபாண்டமதி விட்டுமைந்தா நன்மையு டன்சவுக்காரங்கூடச்சேர்த்து, ஆமென்றுசெபித்துமே குழித்தயில ம்வாங்கி அன்பானீமேருதனில்பதனம்பண்ணே. 495

பண்ணியதோர்தயிலமதில்சேரும்வகைகேளு பாங்கானஅரிதா ரங்கெந்தியோடு, உன்னியதோர்பாஷாணம் கெவுரிதானும் உரிமை யுள்ளசரக்கைந்துந் தயிலத்தாலே, கன்னிகாமயேஸ்வரிக்குப் பூசை பண்ணி கல்வமதிலாட்டிநன்றாய்வழித்துக்கொண்டு, புண்ணியனே முன்செய்ததயிலத்தோடே புதுமையுடனரைத்ததனை கூடச்சேரே.

சேர்த்துநன்றாய்ஜலங்கோலத்தயிலஞ்சேர்த்து திரமானபீங்கான் தான்தாழியுள்ளே, போற்றிநன்றாய்சேர்த்துரவி முகத்தில்வைக்க பூரணத்தின்கிருபையினால் தயிலந்தொட்டு, பார்த்துமிகமுடியாது ஐயாகேளு பார்தனிலேமனிதருக்குக் கொடுக்கும்போதே, காத்து மிகக்கண்ணிலிட்டுப் பார்க்கும்போது கயிலாசமிதோவெனவே கரு துவானே. 497

வானென்றநாவிலிட்டுப்பார்க்கச்சொல்லு மதிகோடிஅவள்கண் ணில்மகிழ்ந்துகாணுந், தேனென்ற லலாடமதில் போட்டுப்பாரு

என்னசொல்வேன் மண்ணும்விண்ணுங், கோனென்ற குருவருளால் துலைதானேடுங் குருவான பரத்தினுட வீடுந்தோறும், ஏனென்று பேசுமடாபேய்பூதங்கள் என்சொல்வேன்மதியினுடஇயல்புதானே.

சருவகுலச்சித்து.

தானவனையின்னமொரு சித்துகேளு சயவானமதிரூபச் சித்து சொன்னேன், கோனருளால் சருவகுல சித்துகேளு குருவான புலத்தியனே தேவதேவா, மானனவூமத்து மருளாமொன்று வகையான கோரக்கர் மூலியொன்று, தேனனை அண்டமொண்டு நிலவுப்பொன்று சிவசிவா சிவனார்தம்வேம்புகூட்டே. 499

கூட்டுவாயைந்துமோ ரிடையாய்த்தானுங் கூர்மையுடன்கண்டம தாய் நருக்கிக்கொண்டு, நாட்டுவாய்பாண்டமதி விட்டுநன்றாய் நன்மையுடன்குழித்தயில நன்றாய்வாங்கி, தேட்டமுடன் சாதிக்காய்சாதிபத்திரி திடமான மதனப்பூகாந்தநாலுங், காட்டியாய்ப் பொடித்துநல்ல தயிலத்தூட்டி தயங்காமல் ரவிமுகத்தில் வைத்துப்போற்றே. 500

போற்றுவதுபீங்கானில்தாணிதன்னில் புதுமையுடன்வைத்து நல்லகுருவைப்போற்றி, சாற்றுவதுபூரணத்தைத் தியானம்பண்ணி தயவாகக் குன்றிநிறை எடுத்துக்கொண்டு, பூட்டுவாய் தான்திறந்து பதியைப்போற்றி பூரணத்தை நோக்கிநீ கொண்டாயானால், மாற்றமுள்ள உருப்பேதம் வகையாய்த்தோற்றும் மாநிலத்தில் வெகு புதுமை மனதிற்காணே. 501

மோகினிச்சித்து.

காணவேசருவகுலச் சித்துசொன்னேன் கருணைபெற மோகினியின் சித்துகேளு, பேணவே ஆவாரைமூலங்கொண்டு பிரியமுடனுலர்த்தியது கண்டமாக்கி, தோணவே பாண்டமதி விட்டுநல்ல சுருக்கான காரமுடன் சாரம்போட்டு, வூணவேகல்லுப்புச் சத்தும்போடு வுடன்சேர்த்துக் குழித்தயிலம் வாங்குவாங்கே. 502

வாங்கினதோர்ஐங்கோலத்தயிலஞ்சேர்த்து மைந்தனேபீங்கான் தன்பரணிதன்னில், பாங்கானபுழுகுடனேரசனைசேர்த்து பதிவான தயிலமதில் சேர்த்துக்கொண்டு, தீங்கில்லாக் குருபதத்தைத் தொழுதுபோற்றி சிவசிவாரவிமுகத்தில் வைத்துப்பாரு, ஆங்கவனே தயிலமது யிறுகிநல்ல அரகரா வாசமென்ன சொல்லப்போமே. ()

வாசமுள மையெடுத்துத் தியானஞ்செய்து மைந்தனே லலாடமதில் திலதம்போட்டு, நேசமுள ரணக்களத்தில் போனாயானால் நின்றவர்க ளெல்லோருங் குருவேயென்று, பாதமுடன் வணங்கி நல்ல வணக்கஞ்செய்து பருவமுடன் புத்திகள்தான் கேட்பாரையா, தோஷமுள பகைஞருமே மோகஞ்செய்வார் துடியான சத்துருவும் வசியமாமே. 504

விரோதமயச்சித்து.

ஆமப்பாமோகினியாஞ்சித்துசொன்னேன் அன்பில்லாவிரோதமயச்சித்துகேளு, நாமப்பாசொல்லுகிறேன் குதிரையுடகுளம்பு நன்

றுக எடுத்துவந்து அடியுஞ்சேர்த்து, தாமப்பா பாண்டமதில் குழித் தயிலம்வாங்கி தயவான பீங்கானில் பதனம்பண்ணி, வாமப்பா ஐங் கோலங் கொஞ்சம்விட்டு மைந்தனே ரவிமுகத்தில் வைத்துப்பாரே.

பாரப்பா தயிலமது மைபோலாகும் பக்குவமாய் தயிலமதைபத னம்பண்ணி, ஆரப்பா அறிவார்கள் மையைத்தொட்டு அரகராலலா டத்தில் போட்டாயானால், காமப்பால் விரகத்தில் மருவும்பெண்கள் கசப்பாகிமனைவிருப்பக் காணுங்காணுஞ், சேரப்பா மையினுட வீரந் தன்னை ஜெகத்தோர்க்குச் சொல்லாதே தெளிந்துகாணே. 506

விகுர்தரசச்சித்து.

காணவே விரோதமயச் சித்துசொன்னேன் கருவான விகுர்த ரசச் சித்துகேளே, பேணவே சிவன்வேம்பு மூலங்கொண்டு பித மூவே நோக்கியதில் வகையைச் சொல்வேன், தோணவே அண்ட மொன்று பிண்டங்கூட்டி சுருக்காகப் பாண்டமதி லிட்டுக்கொண்டு, நாணவே குழித்தயிலம் வாங்குவாங்கு நன்மையுள்ள தயிலமதில் வகையைக்கேளே. 507

வகையென்ன கற்பூரச் சுன்னம்போடு மத்தித்து ரவிமுகத்தில் வைத்துப்போற்றி, திகையாதே தயிலமதுகரவில்தீற்றிசெப்பக்கேள் தின்பண்டமெல்லாந்தின்க, நகையாதே தின்னதெல்லா மினிக்கும் பாரு நன்மையுள்ளசலங்களெல்லாமமுர்தமாகும், வகையானபகைக ளெல்லாம்நன்மையாகும் பக்குவமாயிக்கருவைப் பகரொண்ணுதே.

காரூபச்சித்து.

ஒண்ணுன விகுர்தரசச் சித்துசொன்னேன் உத்தமனேகாரூபச் சித்துகேளு, கண்ணுனகருநெல்லிப் பட்டைவாங்கி கருவான ஆவா ரைப்பட்டைகூட்டி, விண்ணுன அடிமுடியுங் கூடச்சேர்த்து விசை யாகப்பாண்டத்திலிட்டுக்கொண்டு, பண்ணுனகுழித்தயிலம் பதமாய் வாங்கி பக்குவமாய்ப் பீங்கானில் பதனம்பண்ணே. 509

பதனமுள்ள தயிலமதில் வகையைக்கேளு பக்குவமாய் புழு குடனே ரசனைகூட்டி, விதனமில்லா தயிலமதை நாவில்தீற்றி வேண் டியதோர் பதார்த்தமெல்லாந் தின்றுயானல், அதனமாய் புளிப்பாகு மப்பாசொன்னேன் அதிக இனிப்பானதுவும் புளிப்பாய்ப்போகும், இதமான தயிலமப்பா பதனம்பண்ணி இந்திர சாலத்தொழிலை யியம்பிடாயே. 510

அன்புநிலைச்சித்து.

இயம்பியே காரூபச்சித்து சொன்னேன் இன்பமுள்ள அன்பு நிலைச் சித்துகேளு, நயம்பியதோர் கஞ்சாவின் வித்துவாங்கி நன்றுன மதனப்பூ நாலுக்கொன்று, செயம்பெறவே மத்தினுட வித்துநேராய் செப்புகிறேன் சாதிக்காய் பத்துக்கொன்று, மயம்பெறவே அண்டம் ரண்டு பிண்டம்ஒன்று மகத்தானபூரம் பத்துக்கொன்றே. 511

ஒன்றுகக் கூட்டியதோர் சரக்குக்கெல்லாம் உடன்சேரு கருவா யின் பட்டைதன்னை, நன்றுனபாண்டமதி லிட்டுநன்றுய் நாயகியைத்

தொழுதுகுழித் தயிலம்வாங்கி, குன்றுதஙுங்கோலத் தயிலநேராய் கும்பிதனிலேயடைத்துபதனம்பண்ணி, மன்றான தில்லைநடுசபையில் நின்று மனதினுடசெயலறிந்துதயிலங்கொள்ளே. 512

கொள்ளுவதுக்குள்ளாக அண்டங்காணுங் குறிப்பானஅண்ட மதிலன்புரிற்கும், விள்ளுவதுக்குவமையில்லைஅண்டக்கூறுவேதாந்த வேதமடாவிமலன்காணுன், சொல்லுகிறசொற்களெல்லாம் வேத மப்பா துன்பமற்றபுலத்தியனேசொல்லக்கேளு, நல்லுறவாமிந்நூல் பன்னிரண்டுநூறு நன்மையுடன்பார்த்தவர்க்கெல்லாஞ்சித்தே. ()

விசையபரச்சித்து.

சித்தானஅன்புநிலை சித்துசொன்னேன் சிவசிவாவிசையபரச் சித்துகேளு, முத்தானஙுங்கோலத் தயிலம்வாங்கு மூதண்டபூரண முங்கூடச்சேர்த்து, வித்தானமுளகுவித்துதயிலங்கூட்டி விசையான ரவிமுகத்தில் வைத்துப்போற்றி, பற்றுனதயிலமதைப் பதனம் பண்ணு பரமானதயிலத்தின்வகையைக்கேளே. 514

கேளப்பாதயிலமதை விரலில்தொட்டு கிருபையுடனதைத் தேய்த்துமோந்துபாரு, வேளப்பாளரித்தநெற்றிச் சுடரேதோன்று ஷிறுவுடனேகடுகளவு கொண்டாயானால், கோளப்பா வொன்றுமிலை வுருவுகாணர் கூர்மையுடன்பார்ப்பவர்க்கு தீபம்போலாம், ஆளப்பா மனுக்கோடிகாலில்வீழ்ந்து அன்பாகக்கருக்கேட்பார் சொல்லிடாதே.

சொல்லவொண்ணாக் கருக்களெல்லாஞ் சொன்னதாலே துடிய டங்கிமனதறிவால் பாருபாரு, நல்லமனதுடையமாணுக்கனை நற்பு தல்வாபுலத்தியனே ஐயாகேளு, வல்லமையாயுனதடியை வணங்கிக் கொண்டு மனதானசீஷனுக்கு யீய்ந்தநூலில், உள்ளபொருளிது வென்றுபாதியீவாய் உத்தமனேயிதில்குறையைத்தேடினேனே. ()

தேடினேனென்றசொல்லைக் கேட்டபோதே திரும்பவனும் பணிந்துமிகஐயாவென்று, நாடியேபொருள்கோடியீந்துநல்ல நன்மை யுள்ளநூல்குறையைத் தீருமென்பான், வாடியேசொன்னதினல் நூலின்மார்க்க மைந்தனே யெடுத்தணைத்து மனக்குறையைத்தீரு, பாடிகள்போல்மனதானல் குறைதீர்க்கவேண்டாம் பானமென்ன அஞ்சுகுணம் பகுத்தறியும்பாரே. 517

பாரப்பாமனதறிந்து குணமறிந்துபேசி பசிதாகந்தானறிந்து ஈவாருண்டோ, ஆரப்பாகோடியிலேயொருவனுண்டு அவன்மனதிற் கவடறிந்துகருவறிந்துகொண்டு, சேரப்பாஅச்சீஷ னிணக்கமானல் தேட்டமென்னஎவலிடம் பொருள்தான்சிக்கும், கோரப்பாவெகு கோடிசித்துதானுங்கொண்டாடியவன்குருவாய்குறித்துக்கொள்ளே.

குருவென்னஅன்னமது கொடுப்போனுசான் குணமானதந்தை தாயவனேயாகும், உருவானகுலதெய்வ மவனேயாகும் உருவொன் றுங்தோற்றுத பரமேயாகுந், திருவானலட்சுமியு மவனேயாகுந் தோட்டமுள்ளபலருசியு மவனேயாகுந், தருவானதருக்களெல்லா மவனேயாகுஞ் சதகோடிமந்திரமுமவன்தான்பாரே. 519

செயரூபச்சித்து.

பாரப்பாவிசையபரச் சித்துசொன்னேன் பாங்கானசெயரூபச் சித்துகேளு, ஆரப்பாஅறிவார்க ளண்டங்காக்கை அன்பாகஅதினுடையமுட்டைதானும், நேரப்பாஅமுதமுள்ள நிலத்திற்றானும் நீ மகனே திலதமிட்டுப் பார்த்தாயானால், காரப்பாகருநிறம்போல் முட்டைதோன்றுங் கருவானமுட்டைதனைக் கருவாய்வாங்கே. 520

வாங்கியதோர்முட்டைதனையுடைத்துப்பாரு மகத்தானநீரப்பா என்னசொல்வேன், தாங்கியதோநீரெல்லாந்தயிலமப்பா தடிப்பான பீங்கானில்பதனம்பண்ணி, ஓங்கியதோரவிமுகத்தில்வைத்துப்பாரு ஓகோகோதயிலமது என்னசெய்வேன், தீங்கிலாத்தயிலமதில்கோடி வித்தை சித்துமிகஆடினதோர் செயலைக்கேளே. 521

கேளப்பாபுலத்தியனே ஐயாஐயா கெடியானதயிலமதில் வகையைக்கேளு, கேளப்பாஒன்றுமில்லைகண்ணாடிதன்னில் குணமானரவிமதியாங்காந்தியுண்டு, ஆளப்பாசந்திரசூரிய காந்தத்தில் அப்பனே கண்ணாடியுண்டுவுண்டு, நாளப்பாநாளறிந்துகண்ணாடிவாங்கி நன்மையுளத்தயிலமதில்பூசிப்பாரே. 522

பாரப்பாசூரியகாந்தத்தைப்பார் பல்வாகநினைத்ததெலாங்கண்ணிற்றோன்று, நேரப்பாபார்த்துவிடு சந்திரகாந்தத்தை நேர்மையுள சிவதலங்கள்கண்ணிற்காணும், காரப்பா ரெண்டுகண்ணாடிக்குள்ளே காரணமாங்கோடிவித்தை யதனிற்காணும், வித்தைஎன்னவென்று கேட்டால் கூர்மையுளபுலத்தியனே இன்னங்கேளே. 523

கேளப்பாகூடாரமொன்றுபோட்டு கெடியானரவிகாந்தமதனுள் வைத்து, கோளப்பாவாராமல் திரையொன்றிட்டு கூட்டமதில்வந்து நின்றுகூகூவென்று, ஆளப்பாஇதக்குள்ளேமீன்வரனைப்பாரு அன்பாகதீபமுடன்சோடசமும்பாரு, நூலப்பாதிரைவாங்கியுள்ளேபாரு நொடிக்குமுன்னே சாம்பசிவன்தெரிசனையேகாணும். 524

காணுமடாநினைத்தவண்ணமெல்லாங்காணுங் காத்துநின்ற செனங்களதிசயமாய்ப் பார்ப்பார், தோணுமடாவெகுகோடி சித்துதானுந் தோணுதுதோணுமடாவென்னசொல்வேன், பேணிவாய்திரைபோட்டுமைந்தாகேளு பிரியமுடன்ரவிகாந்தமப்பால்வைத்து, வூணுவாய்மதிகாந்தந் தன்னைவைத்து வுத்தமனேதிரைநீக்கிப் பார்க்கச்சொல்லே. 525

சொன்னவுடனனைவோரும் பார்ப்பாரப்பா சுருதிமுனையார்த்ததுவும்கனாப்போலாகும், நன்னயமாய்நின்றவர்க ளெல்லோருமப்பா நகைத்திடுவா ரதிசயத்தைகண்டுகண்டு, வுண்மையின்னஞ்சொல்லுகிறேனிந்திரசாலம் உருமையுள்ளபுலத்தியனே நன்றாய்க்கேளு, தன்னையென்றபேரெடுத்தா லெல்லாஞ்சித்து தயவிலாச்சீஷரைநீதள்ளுதள்ளே. 526

மதனகேளிசித்து.

தள்ளாமல்செயரூபச்சித்துசொன்னேன் தயவானமதனகேளி சித்துகேளு, விள்ளாமல்சொன்னஅண்டங்காக்கைவிசுவானமுட்டை

யுடதயிலந்தன்னில், நல்லானரசமதனில் சேர்த்துப்பாரு நன்மை யுள்ளதயிலரச மொன்றாய்ப்போகுஞ், சொல்லாமல்முன்சொன்ன ரவிகாந்தத்தில் சுருக்கமுடன்தடவிநன்றாய்ப்பாருபாரே. 527

நன்றாகப்பார்க்கையிலே யுருக்கள்பேதம் நளினமுள்ளமலை போலே தோற்றுமப்பா, குன்றுதவணுகளெல்லா மேறுபோலே குறையாமல்தோணுமடா குறிசாய்ப்பாரு, அண்டர்தொழும்ரசஞ் சேரத்தயிலந்தன்னை அணுவளவுநாவுதனி லடக்கம்பண்ணி, பெண் டானபெண்களுட னனுபவித்தால் பிரியமுடனாயிரம்பெண் மருவ லாமே. 528

மருவினால்விந்தவுந்தம்பனமேயாகும் மகத்தானதம்பனந்தா நெகிழவென்றால், குறியானபுளியிலணு வளவுகொண்டால் கொப்ப ளிக்குங்காமசல மென்னசொல்வேன், தருவானதருக்கோடி யீந்திட் டாலுந்தம்பனத்தின்புதுமையைச்சாற்றவேண்டாந், திருவானமதன கேளிச்சித்துசொன்னேன் சிவசிவாதும்பிவனச்சித்துகேளே. ()

தும்பிவனச்சித்து.

சித்தென்னகருவிடையஞ் சொல்லப்போமோ செயமானரசஞ் சேர்ந்ததயிலத்துள்ளே, வித்தென்னவரிதாரம் லிங்கம்ரெண்டும் வேண்டியேதயிலத்தால் நன்றாயாட்டி, பத்தென்னமதிகாந்தந்தன் னில்தேய்த்து பக்குவமாய்கண்ணாடி பார்க்கும்போது, கொத்தான ஆனைபந்திபந்தியாக கோடானகோடியது தோற்றும்பாரே. 530

பரிநகுலச்சித்து.

பாரப்பாதும்பிவனச் சித்துசொன்னேன் பாங்கானபரிநகுலச் சித்துகேளு, நேரப்பாரசஞ்சேர்ந்த மயிலந்தன்னில் நினைவாகவீர முடன்பூரம்சேர்த்து, காரப்பாகல்வத்தில் நன்றாயாட்டி கனக்கவே ரவிகாந்தந்தன்னிற்பூசி, சேரப்பாமறுபுறத்தில்முலைப்பால்பூசி சிறப் பாகநீபார்க்கத்தோணுங்கேளே. 531

கேளப்பாகண்ணாடி பார்க்கும்போது கெம்பீரமானவரி அனந் தங்கோடி, கோளப்பாவாராமல்கண்ணிற்காணுங் குறிப்பாகப்பார் க்குமெகு சித்துண்டாகும், நாளப்பாநாழிகைக்கு ளனந்தஞ்சித்து நன்மையுடனாடவென்றாலின்னங்கேளு, நீளப்பாதன்னிலொருசித்து கேளு நிச்சயமாய்ரசஞ்சேர்ந்த தயிலம்வாங்கே. 532

நரிபரியாஞ்சித்து.

வாங்காமல்நரிபரியாஞ்சித்துசொல்வேன் வணக்கமுடன்வாங்கி னதோர்தயிலந்தன்னில், தீங்கிலாப்புழுகோடுசவ்வாதுசேர்த்து சிவ சிவாமத்தித்துரவிகண்ணாடி, பாங்காகபரிநரியைப்பாருபாரு பறக் கிறதோர் குதிரையைப்போல் கண்ணில்காணும், ஏங்காமலின்ன மொருசித்துசொல்வேன் என்மகனேவகாரமயச்சித்துதானே. ()

வகாரமயச்சித்து.

சித்தென்னரசஞ்சேர்ந்த தயிலம்வாங்கி செம்மையுள்ளலிங்க மதையாட்டிக்கொண்டு, முத்தானமதிகாந்தந்தன்னில்தேய்த்துமூர்க்

கமுள்ளசமுத்திரத்தைப்பார்த்தாயானால், வித்தானமஞ்சங்கன்வித விதமாய்த்தோற்றும் வெகுதூரம்சமுத்திரந்தான் விரிவாய்த்தோன்றும், பத்தாசையாகநீ பார்த்தாயானால் பலகோடி சீவசெந்தைக் காணலாமே. 534

காணலாங்கண்கொள்ளாக் காட்சியெல்லாங் கருவரியாமானிடர்க்குகருத்தங்கேது, தோணவேசற்குருவை யறிந்தாயானால் தொல்லுலகிலவன்சுத்தயோகியாகும், யேணலாமிச்சடலம்பித்துப்போகும் பிலத்தபுத்தியறிவினால் பேணிப்பாரு, பூணலாஞ்செகசால மின்னங்கேளு புத்தியுள்ளபுலத்தியனே பொறுமையோனே. 535

சாத்துவிதச்சித்து.

பொறுமையுள்ளபுலத்தியனேஐயாகேளுபுத்தியுள்ளகாரமாய்ச்சித்துசொன்னேன், வறுமையெலாந்தானகற்றுஞ்சாத்துவிதச்சித்துவகையறியச்சொல்லுகிறேன்மைந்தாகேளு, கருமையுள்ளகரும்பூனைவுச்சிவெள்ளை கண்கள்ரெண்டும் பச்சையடாமெத்தவுண்டு, வரிசையுடன்கொண்டுவந்துபித்துவாங்கி வுள்ளதெல்லாந்தயிலமதாய் வடித்துக்கொள்ளே. 536

கொண்டதொருதயிலமதில்பித்துசேர்க்க கூர்மையுடன்சிவந்துமிகப்பச்சையாகும், விண்டதொருதயிலமதைபரணிதன்னில் வெகுதாகமோகமதாய்பதனம்பண்ணி, அண்டர்தொழுமையபதனைகையாலதொட்டுவனமெழும்பதேய்த்துநல்லதனைபூவாங்கி, துண்டுதுண்டாய்கசக்கிநீபிழிந்தாயானால் துலையாதசலமெல்லாம் ரத்தமாமே. 537

தாம்பரத்தின்சித்து.

ஆமப்பாசாத்துவிதச்சித்துசொன்னேன் அருள்பெருகுந்தாம்பிரத்தின்சித்துகேளு, நாமப்பாசொல்லுகிறோமாதியந்தம் நடுவணையால்தயிலமதை யிறக்கிக்கொண்டு, தாமப்பாவீரனைத்தான் தயிலத்தாலேதானரைத்துதயிலமதைக் குழப்பிக்கொண்டு, போமப்பாரவியில்வைக்கவீரனுடன்சீவன்புதுமையதாய் தயிலமதுசிவந்துபோமே.

சிவந்ததொருதயிலமதைப்பதனம்பண்ணிசிவசிவாதுரிதநிறத்தயிலமூட்டி, சிவந்ததொரு சீலையிலேதயிலமூட்டி தீபமதுதான்பொருத்திவிளக்கிற்போட்டு, சிவந்ததொருதாம்பிரத்தின்கிண்ணத்துள்ளே தீபம்வைத்துத்தானுகத்தீபமேற்றி, பவந்தவழத்தண்ணீரிலதுவைத்துப்பாரு பார்க்கையிலேதங்கநிறமதிகந்தானே. 539

தானப்பாபுளித்தசலந்தன்னிற்போட்டால்தப்பாமல்தாம்பிரம்போலிருக்குமப்பா, வீணப்பா அல்லவிதுயிந்தவித்தை வேந்தரெனும்ராசரிடம்விளையாட்டாகும், கோணப்பாகுருவருளால் விளைந்தவித்தை குணமானபுலத்தியனேகூர்ந்துபாரு, பேணப்பாதவசுகளைவிட்டிடாதே பேணிப்பார்சித்துவித்தையனந்தமாமே. 540

ஜலபேதிசித்து.

ஆமப்பாதாம்பிரத்தின்சித்துசொன்னேன் அன்பானஜலபேதிசித்துகேளு, நாமப்பாசொல்லுகிறோம்சாரந்தன்னி னல்லந்தசுன்ன

த்தில்விட்டுப் பனியில்வைக்க, தாமப்பா சொல்லுகிறேருஞ் சலந்தா ணூறுந் தன்மையுளஜலமதனை விங்கமாட்டி, காமப்பால் ஜலந்தனிலே கரைத்துக்கொண்டு கருவெடுத்து ஆடுதற்குக் கருத்தைக்கேளே.

கருத்தென்ன செம்புகளைச் சலத்தினுள்ளே காசினியோர் தானறிய தோய்த்துக்கொண்டு, பெருத்தவொரு நெருப்பதனி லாட்டிஞக்கால் பிலமான செம்பதுவும் வெள்ளிபோலாம், உருத்துடனே மேருதனில் வைத்துவாட்ட உள்ளசெம்பு பொய்யாது நிசந்தான் சொன்னேந், திருத்தமுள்ள ராசரிட மாடுவித்தை செப்பினேன் புலத்யனே யுனக்காம்பாரே. 542

பாரப்பா பன்னிரண்டு நூறுந்தானும் பன்னிரண்டு ஆயிரத்துச் சுருக்கமாகும், ஆரப்பாவறிவார்க ளிச்சுருக்கந்தன்னை அறிந்தவர்கள் வெளிவிடா தடக்கஞ்செய்வார், தேரப்பாயிந்நூலிற் சித்துப்பார்த்து சேர்ந்துமனதறிவிலே திறத்தைக்கண்டு, சாரப்பாகுருவினுடபாதந் தன்னில் சாரமிக நீயிரங்கிச் சித்துபாரே. 543

## அசுவதியின்சித்து.

சித்தானசலபேதி சித்துசொன்னேன் சிவசிவா அசுவதியின் சித்துகேளு, பித்தானபித்தப்பா குதிரைப்பித்து பேணியேதானெடுத்து வைத்துக்கொண்டு, முத்தான பேரண்டத் தயிலஞ்சேர்த்து மூர்க்கமுள்ள அரிதாரக் குருவுஞ்சேர்த்து, வித்தாரமாகவேரவியில் வைத்தால் விதமான மைபோக்குஞ் சொன்னூர்தானே. 544

தானென்றமையெடுத்து திலதம்போட்டு தப்பாமல் குருபதத்திற் சார்ந்துநின்றால், தேனென்ற தன்முகந்தான் குதிரைமுகமாகுந் தெளிவாகப்பார்த்தோர்க்கப்படியேயாகும், வீணென்ற வீண்பயல்களதிசயமாய்ப்பார்ப்பார் வித்தாரமாகவேதான் ரவியில்நின்று, கோனென்றவமுதத்தால் திலகந்தேய்க்கக் குறிப்புடனே தன்முகமாய்க் காணுங்காணே. 545

## சிங்கமுகச்சித்து.

காணவே அசுமதியின் சித்துசொன்னேன் கருவான சிங்கமுகச் சித்துகேளு, பேணவேகடுவாயின் மண்டைவாங்கி பிலமாக கருவெடுத்துதயிலம்பண்ணி, தேனைதயிலமதிக்கடுவாய்மண்டைசிலதடுத்துத் தானுரைத்துத் திலதம்போட்டால், நாணவே தன்முகந்தான் சிங்கமுகமாகும் நலமான சனங்களுக்கு அதிசயமாம்பாரே. 446

## ரிஷபமுகச்சித்து.

பாரப்பா சிங்கமுகச் சித்துசொன்னேன் பாங்கான ரிஷபமுகச் சித்துகேளு, காரப்பா காட்டெருமை யார்தான்காண்பார் கருவான நம்மலையின்சார்பிலுண்டு, தேரப்பாவம்மலையில் சென்றுகாணுந் திடமாககாட்டெருமை பித்துவாங்கி, வீரப்பா செய்யாமல் ஐங்கோலஞ் சேர்த்து விரும்பியே ரவிமுகத்தில் வைத்துப்போற்றே. 547

போற்றப்பாமையதனைத் திலதம்போட்டு புதுமையுடன்வெளி யேறி நின்றுயானால், மாற்றப்பா தன்முகந்தான் காளைமுகமாகும் மானிலத்தில் மானிடர்க்கு வசியமாய்த்தோற்றும், காற்றப்பா ரவி யில்நின்று திலதமதையழித்து கண்காணவெளியேறி நின்றுயானால், தோற்றமுள்ள தன்முகந்தான் நிசமுகமாய்த்தோணும் சுருதிமுடி வானதிந்தச் சோதிதானே. 548

சித்துமிகச்சித்து.

தானப்பா ரிஷபமுகச் சித்துசொன்னேன் தப்பாமல் சித்து மிகச்சித்துகேளு, தேனப்பா முகமாற்ற மூன்றுசித்தும் தெளிவர்ன கருவெடுத்து அடக்கம்பண்ணி, வேணப்பாகூடாரந் தன்னில்நின்று விதவிதமாய் சித்துகளை மாறியாடு, பூரப்பா ராசன்வெகு சந்தோஷ மாகி பூட்டுவான் கனவரிசை பூட்டுவானே. 549

பரம்பரச்சித்து.

வானென்றசித்துமிகச்சித்துசொன்னேன் வரிசையுளபரம்பரச் சித்துகேளு, கோனென்றகரும்பூனைபித்தெடுத்து குருவானபூரணத் தில் குழைத்துக்கொண்டு, வேனென்ற கண்ணிமையி லிட்டுப்பார்த் தால் வெகுதூரம் பரவெளியாய் வெகுவாய்தோற்றும், தேனென்ற மயேந்திரமாஞ் சாலவித்தை செப்புமொழி தவராமல் பாருபாரே.

பஞ்சிக்கரணச்சித்து.

பார்க்கவேபரம்பரச் சித்துசொன்னேன் பஞ்சிகரணசித்தைப் பகரக்கேளு, ஆர்க்கும்வெகு அரிதானகாந்தமப்பா அதிலூசிகாந்தம் வெகு வருமையாகு, மார்க்கமதாயூசியுட காந்தம்வாங்கி மைந்தனே அக்காந்தம்பதனம்பண்ணி, சேர்க்கையாய் தாய்வீடொன்று திட்டம் பண்ணி தெரியாமல் முகட்டினிலே சுட்டித்தூக்கி. 551

தூக்கியதோர் காந்தத்தின் எதிர்கீழாக துப்புரவாயிரும்பாலே பலகைசெய்து, தாக்கியேயதின்மேலே யிருந்துகொண்டால் தப்பா மல்கந்தியதுயிரும்பிற்பற்றி, நீக்கியேதரையைவிட்டுவுயரத்தூக்கும் கினைவாகநீயிருந்து காலம்பண்ணு, பாக்கியமாய் கண்டவர்கள் வாயுஸ் தம்பம் பலித்தசித்தனிவனுகு மெனச்சொல்வாரே. 552

உத்திகருச்சித்து.

வாரானபஞ்சிகரணச் சித்துசொன்னேன் வன்மையுள்ள வுத்தி கருச்சித்துகேளு, நேராகப்பட்சிபோல் மரத்தால்பண்ணி நினைவாக அதிலிரும்பைப்பாய்ச்சிக்கொண்டு, சீராகக்காந்தத்தின்கீழதாகசிறப் பாகபட்சியைநீ வைத்துப்பாரு, கூறுகக்காந்தத்தின் காந்திசென்று குறிப்பான பட்சியைத்தான் தூக்கும்பாரே. 553

உருமறைப்பு.

பாரப்பாவுத்திகரு சித்துசொன்னேன் பண்பானவுருமறைப்பு கருவைக்கேளு, சேரப்பாகணபதிபோல்மரத்தால்செய்து திரமாகயி

ரு பாணி சிரசில்தாக்கி, நேரப்பா காந்தங்கீழ் கணபதியைவைக்க நேராகக்காந்தியது தூக்குந்தூக்கும், பாரப்பாபிள்ளையாரந்தரத்தில் நிற்க கண்டவர்களதிசயமாய்ப் பார்ப்பார்தானே. 554

## வெற்றிமனச்சித்து.

தானென்றவுருமறைப் புசித்துசொன்னேன் தயவான வெற்றி மனச்சித்துகேளு, கானென்றயிரும்பிலூசிபண்ணி கருவானவூசி தனைச்சிக்கில்போட்டு, வானென்றவட்டிதனில் சீலுவைத்து வட்டுத் தூர்தனிக்காந்தஞ் சுற்றிலுக்கால், ஊனென்ற சீகதுவுங் கூடச்சுற் றும் உறுதியுடன் பார்ப்போர்க்குக் கதைபோலாமே. 555

கதைபோலயிந்திரமாஞ்சாலவித்தை கருவாகநிற்பவற்குஆடும் மாடும், விதையாதேசாலவித்தை யார்க்குத்தோணும்விதைப்பதுதா னுருக்குப்புத்தியோர்க்கு, புதையாகப்பூட்டிவிடுமப்பாசொன்னேன் பொருளிதுதென் றிருப்பார்க்குப் புத்திபாரு, பதையாமல் மன தடங்கி அறிவிற்சேர்ந்தால் பலிக்குமடா ஆயிரத்திருநூறுமே. 556

ஆயிரத்துயிருநூறு மன்பினாலே அசைவற்றுநின்றதுவு மறிவி னாலே, பாயிரத்திலோடேதான் பார்த்தால்மைந்தா பலிக்குமடா சாலவித்தை யின்னங்கேளு, போயொருத்தர் மொழிகேட்கவேணு மோசொல் புத்திமதிநன்றாகப் புகலக்கேளு, தாயொருத்திக்கிருபை யுண்டேயெல்லாஞ்சித்தி தானவனுமீயிருக்கத் தனதாம்பாரே. 557

## மதுரக்கேளிச்சித்து.

தனதாக வெற்றிமனச் சித்துசொன்னேன் சந்தோஷமதுர கேளிச் சித்துகேளு, மனதான்பூரணமும் பின்கஞ்சாவு மதனப்பூ சாதிக்காய் சுக்குங்கூட்டி, கனமான ஐங்கோலந் தன்னாலாட்டி கடுகு போலுருட்டியதுபதனம்பண்ணி, சினமானபுல்லருக்குஈந்தால்மைந் தா சிவசிவாஅவனுடைய கூத்தைப்பாரே. 558

கூத்தென்னவவன்தேக முள்ளமட்டுங் கொண்டாடித் தான்திரி வானப்பாகேளு, மாற்றமென்று செயநீரைக் கொண்டால்மைந்தா மயக்கமற்றுதன்சுரணை யப்பால்காணும், ஏற்றமென்ற மதுரகேளிச் சித்துசொன்னேன்என்மகனேமனதடங்கியாடுமாடு, சாற்றுமெனமா மோகச் சித்துகேளு தன்மையுள்ள புலத்தியனே யறிவுள்ளானே.

## மாமோகச்சித்து.

அறிவுள்ளபுலத்தியனேசொல்லக்கேளு அன்பாகப்பானைதனில் தண்ணீர்விட்டு, குறியானவமுதமது எடுத்துக்கொண்டு கொட்டுவாய் பானைதனி லிரும்புபோட்டு, விரிவாகத்தீமூட்டி யமுதுசெய்து வெந் திறக்கிநடுவீட்டில் பதியவைத்து, தரியாதகாந்திதனை முகட்டில்கட்டி தயவான தேவிதனைப் போற்றுவாயே. 560

போற்றியதோர் பானைதனை காந்திதூக்கும் புகழாகநின்றவர்க ளதிசயிப்பார், தேற்றியதோர் தேவிதான் பானைதூக்க செய்தவித

மென்சொல்வேன் திறந்தானப்பா, ஊற்றிசையுங்கண்டனடாயிடதவித்தைநாதாந்தமகிமைதனை சொல்லப்போமோ, பூட்டியதோர்பூட்டெல்லாஞ்சாலவித்தை புகலாதே யொருவருக்கும் புதுமைதானே. 561

அதிமோகச்சித்து.

புதுமையென்றமாமோகச் சித்துசொன்னேன் பொருந்திநின்ற அதிமோகச்சித்துகேளு, மெதுவாகக்கவுதும்பைசாபந்தீர்த்துமென்னிரவிதனைத்தொழுது வேரைவாங்கி, மதுவானபால்தனிலே தில்தம்போடு மைந்தனே கண்டவர்கள் மோகஞ்செய்வார், சதுவான சமாதினத்தில் சென்றாயானால் தாகமுடனதிமோக மாவார்பாரே.

விதனம்வரும்சித்து.

பாரப்பா வதிமோகச் சித்துசொன்னேன் பரதவிக்கவிதனம்வருஞ்சித்துகேளு, ஆரப்பாவறிவார்களகிரிப்பூண்டு அன்பாகத்தனைப்பறித்துமைந்தாகேளு, வீரப்பாசெய்தவுடன் கட்டையேற விரும்பி மனவிருப்பாகி வயிராக்கியஞ்செய்வாள், சேரப்பா தனைப்பிடிங்கித்தேய்த்தாயானால் சேர்ந்துமிக வழுதிடுவாள் பாருபாரே. 563

சாலசித்து.

பார்க்கவே விதனம்வருஞ் சித்துசொன்னேன் பண்பான சாலசித்து மகிமைகேளு, ஏர்க்கவேவெளாம்பிசினி பொடியதாக்கி என்னசொல்வேன் குமிழில்லாப் பலகைவைத்து, சேர்க்கையுடன் பலகையின்மேல் பொடியைத்தூவி திறமாகக்கால்தனைத் ததுமேல்வைத்து, மார்க்கமுடனடக்கவென்றால் சொல்லக்கேளு மைந்தனேவுலருமட்டுநின்றுகொள்ளே. 564

நின்று அட்டகாசம்பண்ணிப் பசப்பிமைந்தா நிற்கையிலேகாலோடபலகையொட்டி, மன்றுதனில்நடனமதாய்நிற்கும்போதுமைந்தனேபார்த்தவர்கள் புதுமையென்பார், நன்றுநன்று குமிழில்லாபலகைமேலே நடக்கிறதுவதிசயந்தானையாவென்பார், விண்டிடாவிளாம்பிசினிவதிசயந்தான் விரிவாக ஜலம்பட்டால் கழன்றுபோமே. 565

ஜலஸ்தம்பனசித்து.

போமப்பாசாலமென்றசித்துசொன்னேன் புகட்டுகிறேன்சலஸ்தம்பசித்துதானும், நாமப்பாசொல்லுகிறோம் வெண்புலித்தோலையா நன்மையுள்ளநம்மலையில்மெத்தவுண்டு, ஆமப்பாசொல்லுகிறோம்புலிதானென்பான் அருமையுள்ள புலியதுவு மானைக்கண்டால், ஓமப்பா வாங்காரமுள்ளடங்கி உருமிக்கமாட்டாது குலத்தின்வாறே. 566

வாறானவப்புலியைவேடரப்பா மாங்கிஷத்தினிச்சையதா யடிப்பாரப்பா, வீறுகமாங்கிஷத்தி னுரிசைசொல்ல வேண்டினேனதுக்குநிகரில்லையில்லை, நாறுதுபுழுக்காது எந்நாளுந்தான் நல்லதொருநெய்க்கட்டியாகுமப்பா, பாராமல்மலைவேடர் தோல்சதைவைத்து பக்குவமாய்சித்தருக்கு யீவார்பாரே. 567

பாரப்பாவத்தோலைப்பதனம்பண்ணி பக்குவமாய்சாலவித்தை பகரக்கேளு, நேரப்பாநிலையாதநீர்மேற்போட்டு நீயிருக்கவமிழாது ஆசனத்தின்வண்மை, தேரப்பாஅதிலிருந்து அட்டகாசஞ்செய்ய செப்பியேவிளையாடா விளையாட்டெல்லாம், ஆரப்பாவறிவார்களிந்த வித்தை அதிகமாஞ்சமஸ்தம்பமதிகந்தானே. 568

அக்கினிஸ்தம்பனசித்து.

தானென்றசலஸ்தம்ப சித்துசொன்னேன் தயவானவக்கினியின்சித்துகேளு, பானென்றபானைதனில் சலத்தைக்காச்சி பார்க்கவொணுச்சூடுகொண்டுவெந்நீர்தன்னில், தேனென்றவெண்புலியின் சதைரசத்தைதேகமுழுதுந்தடவி வெந்நீர்விட்டால், வானென்ற அமுதத்தின்குளிர்ச்சியாகும்வையகத்தோரதிசயிக்குமார்க்கமன்றே

மாரணத்தின்சித்து.

மார்க்கமென்றவக்கினியின் சித்துசொன்னேன் மாரணத்தின் சித்துநீமகிழ்ந்துகேளு, ஏர்க்கமுள்ளதேகமதில்குட்டநோவு இடிந்து கரைந்தெங்குமேபுண்ணதாகும், பார்க்கரசந்தொட்டுநீதடவிப்பார்த்தால் பழுப்படைந்தபுண்களெல்லாம் பார்க்கபார்க்கச், சேர்க்கையுடன்புகைகளெலாமாறிநல்ல தேகவச்சிரகாயமாயாகும்பாரே.

பேதனத்தின்சித்து.

பாரப்பாமாரணத்தின்சித்துசொன்னேன் பண்பானபேதனத்தின்சித்துகேளு, ஆரப்பாவறிவார்கள் வெண்புலியினெய்யை அன்பானமவுனமுள்ளோரறிந்துசெய்வார், காரப்பாபாலுமொருவட்டகையில்வைத்து கசப்பானபச்சிலைச்சார் வட்டகையில்வைத்து, சேரப்பாமஞ்சள்பால்வட்டகையில்வைத்துசெய்யப்பாசாலவித்தைசொல்லக்கேளே. 571

கேளப்பாவெண்புலிநெய் விரலில்தொட்டு கெற்சிதமாய்கை தேய்த்துப்பாருபாரு, சேலப்பாபாலையள்ளிப் பூர்க்கநல்ல சிவந்தசலம்போலாகும் பச்சிலைச்சார்தொட்டால், சாலப்பாபச்சிலைச்சார் பால்போலாகும் சருவாங்கமஞ்சள்பால் நீலமாகும், கேளப்பாவாராது எந்தவகைச்சாருங் குணமாகப்பேதிக்கும் நெய்யின்வளம் பாரே. 572

வாடைசித்து.

வளமானபேதனத்தின் சித்துசொன்னேன் மகத்தானவாடையுடசித்துகேளு, நலமானநெய்யுடனே ஆவிநெய்யும் நற்புழுகுசவ்வாதுடனே ரசனைசேர்த்து, குருவானகுருவிட்டு மத்தித்தேதான் கூர்மையுடன் ரவியில்வைத்தால் வாடைவேகும், பிலமாகஅவனினைத்தபடிவாசம் பிசகாதுவாசிக்குமின்னங்கேளே. 573

நனையாதசித்து.

இன்னமுநான்சொல்லுகிறேன் சித்துவித்தை இதமாகவாடையுடசித்துசொன்னேன், மன்னவனேநனையாதசித்துதன்னைவழுத்து

மெனப்புலத்தியனே வளமாய்க்கேளு, நன்னயமாய்வெண்புலிநெய் தன்னோடொக்க நல்லதொருஜலங்கோலங்கூடச்சேர்த்து,தன்னயமாய் மேனியெலாந் தடவியப்பா தயவாகவிளையாடும்சார்புகேளே. 574

கேளப்பா தண்ணீரில்முழுகிநல்லகெற்சிதமாய்கரையேறிநின்று பாரு, நீளப்பாமேனிதனி லொட்டாதப்பா நிச்சயமாய்நனையாதான் போலேகாணும், கேளப்பாயின்னமொருசேதிகேளு திறமாகமழை யிலேநடந்தாயானால், தூளப்பாபோலவுநீர் சிதறியப்பால்தோயாது மேனிதனில்தண்ணீர்தானே. 575

வாயுவுஸ்தம்பனசித்து.

தானென்றயித்தொழிலைவுலகத்தோர்கள் தயவாகக்கண்டுஅதி சயிப்பார்பாரு, கோனென்றபுலத்தியனே நனையாச்சித்து கூர்மை யுடன்சொன்னேனினின்னங்கேளு, வானென்றவாய்வுஸ்தம்பசித்து கேளு மார்க்கமுடன்சொல்லுகிறேன் மைந்தாமைந்தா, வீணென்று வெளியரங்கம்பண்ணாதையா வேதமயமானதொருசித்துதானே.

தானென்றநாயுருவி வித்துதன்னை தன்மையினால் மூலைப்பாலி லுரைத்துமைந்தா, பானென்றபசும்பாலில்கரைத்துக்கொண்டு பாங் கானஎட்டிவிரை யுரைத்துக்கொண்டு, தேனென்றேதியானித்துக் கொண்டாயாகில் செவ்வையாய்வயிறுபசிஎடுப்பதில்லை, நானென்று எத்தனைநாளிருந்தாலுந்தா னளினமுடன்பசியாதுமைந்தாபாரே.

பாரப்பாபசியெழும்ப வேணுமென்றால் பண்பாகச்சொல்லு கிறேன்மைந்தாகேளு, வீரப்பாஎழும்பியதோர்மஞ்சளிஞ்சி விரும் பியேதின்றிடவே வேகங்கொண்டு, காரப்பாமூல அக்கினியேநீயுங் கடும்பசிதானெடுக்குமடா கருவால்பாரு, தேரப்பாமனந்தேறி கரு வாய்ப்பார்த்தால் சித்துவித்தையனேகமுண்டுதெளிந்துகாணே. ()

விநோதவித்தைசித்து.

காணப்பாவாய்வுஸ்தம்ப சித்துசொன்னேன் கருவானவிநோத வித்தைசித்துகேளு, பூணப்பாபொரிக்காரக் கட்டிவாங்கி பொங்கா மல்தான்பொரித்து எடுத்துக்கொண்டு, ஊணப்பா சூரியனலண்டம் போற்சீவி உண்மையுடன்தானெடுத்துகெற்சிதமேபண்ணி, தானப் பாமோடிதான் முட்டையைத்தான்வைக்க தயங்காமலெடுத்துப்பா ரென்றுசொல்லே. 579

சொல்லியதோர்மணல்குவித் ததின்மேல்முட்டை தோணவே வைத்துநீ பூசைச்சாத்தி, அள்ளியேதண்ணீரை யதின்மேலூற்றி அடங்கியேகரைந்திடுந்தான் முட்டையப்பா, சொல்லிஎதிராளியைப் போயெடுக்கச்சொல்லு துடிதுடித்தே ஓடியவன்பார்த்து, புல்லியே நாணமுற்று முன்பின்பார்த்து போக்கறியான்மனந்தளர்ந்து ஏங்கு வானே. 580

ஏங்கிமிகநிற்கயிலேநீதான்சென்று யியல்பானமுட்டையடக்கம் பண்ணி, ஆங்கிகொண்டேயெழும்பியந்த ஸ்தானமன்பாய் போய்

நின்றுஅடக்கஞ்செய்ய, தீங்கிலாமுட்டையைத் தானெடுத்துக்காட்டி திரமாகநின்றுவட்ட காசம்பண்ணி, பாங்காகராஜனிடஞ் சென்றால் மைந்தா பாரிலுள்ளோரதிசயிப்பார் பரிந்துகாரே. 581

இக்கோலச்சித்து.

காரப்பாவினோதமயச்சித்துசொன்னேன் கலங்காமலிக்கோலச் சித்துகேளு, பாரப்பாகூடுகட்டி தூங்குஞ்சிட்டு பண்பாகப்பெண் சிட்டுப்பிடித்துவந்து, சீரப்பாமஞ்சள்நிறச்சிட்டைதானுஞ் செம்மை யுளஅடக்கமாய் செய்துக்கொண்டு, கூரப்பாளலுமிச்சம் பழத்தைக் கட்டி கூடையினில்வைக்கிறேனெடுத்துபாரே. 582

பாரென்றுகூடையைநீ கவிழ்த்துமுன்னே பழத்தைமுன்னே யடக்கம்பண்ணி சிட்டைவைத்து, காரென்றுதேவியைநீ தொழுது போற்றிக் கடக்கப்போய்நின்றவனை யெடுக்கச்சொல்லி, ஏரென்று பழம்ஓடிப் பேர்வென்றேதான் எல்லோருமேயறியச் சொல்லுமுன் னே, நேரென்றுஓடியவன்பெட்டியைத்தான் நின்றசிட்டுபறந்தோடி மயங்குவானே. 583

வானென்றுபழம்பறந்து போக்குமுன்னே மக்களேவழைக்கி றேன்பாரென்றுசொல்லி, தானென்றசபைசுற்றியோடிவந்து தப்பா மல்பாரெனவே பழத்தைக்கட்டி, தேனென்றசபைகளதி சயமாய்ப் பார்ப்பார் சிவசிவாபிரட்டானவித்தையப்பா, மானென்றஇக்கோலச் சித்துசொன்னேன் மகத்தானவரவினுடசித்துகேளே. 584

அரவின்சித்து.

கேளடாகீறியுட வித்துவாங்கி கிருபையுள்ளஐங்கோலங்கூடச் சேர்த்து, மானடாமத்தித்துச்சிமிழில்வைத்து மக்களேபுற்றருகே நின்றுகொண்டு, வேளடாஎரித்தமையைப் புற்றில்தேய்த்து விசை யாகநீயிருக்கவறவஞ்சீறி, வாளடாபோல்வுமேவரவம்நின்று மதிமய ங்கியலகுகட்டியாடுந்தானே. 585

தானென்றவரவுதன்னைக்கையால்பற்றி தான்பிடித்துராஜரிடஞ் சதிராயோடி, தேனென்றமுத்தமிட்டுவமுதமீந்து சிறப்பாகவாட்டி வைத்தால்ராசனப்போ, கோனென்றசித்தவனுக்குமென்றுகுணமாக வெகுவரிசைகொடுப்பானப்போ, வூனென்றமறப்புமையைத்திலதம் போட்டு வுண்மையுடன்மறைந்துவிடு மைந்தாபாரே. 586

மனத்தியக்கச்சித்து.

பாரப்பாமறைந்தவுடன்சபையெல்லோரும் பாங்கானவதிசயந் தானென்றுசொல்வார், ஆறப்பாவறிவார்கள் சித்துமார்க்கம் அதிச யித்துஎவராலே யறியப்போமோ, சீரப்பாவரனுட சித்துசொன் னேன் செகசாலமனத்தியக்கச் சித்துகேளே, வாரப்பாமுற்றின தோர்தேங்காயைவாங்கி வயணமதாய்தானுடைத்துமைந்தாகேளே.

கேளப்பாஒருமுடியைத் திருவிக்கொண்டு கெட்டியாயெலிபிடித்துசொல்லக்கேளு, நாளப்பாதினம்பார்த்து முடிக்குள்ளெலியை நன்றாகவைத்து மருமூடிநன்றாய்பொருந்தி, சேலப்பாவுடைத்த வாய் தெரியாமல்தான் திரமாகச்சிரத்தின்பசையையூட்டி, சாலப்பா மஞ்சள்தனையதின்மேல்பூசிசமர்த்தாகக்காவவைத்துசாலம்பண்ணே

ஜாலமென்னசபைகூடிநடுவேநின்று தயவாகத்தேங்காயைகையிலேந்தி, கோலமென்னகூகூ தேங்காயைப்பாரு கூப்பிட்டாலோடி வெகுசுற்றால்சுற்றும், ஓலமென்றேதான்கூவி தேங்காயைவைத்து வோடிவிளையாடெனவே யுகந்துசொல்லே, தாலமென்றுநிற்கையில் தேங்காய்க்குள்ளே தானிருந்து எலிபிரண்டதாபத்தாலே. 589

தாபமென்றதேங்காய்தானுருண்டதாலே சபையில்நின்றமூடரெல்லாமதிசயமாய்ப்பார்த்து, தூபமென்றேதேங்காய்தான்மந்திரத்தின்விசையால் நொடிக்குமுன்னேவெகுசுற்றாய்சுற்றுதப்பா, கோபமென்றகொடுமையிலாப் புலத்தியனேஐயா கூறுகேட்டஎலியிருந்த கூறுகாணார், லாபமென்றுலாபம்வெகுநிதிகள்சேரும் ராச்சியத்தோரதிசயிப்பார் நன்றாய்பாரே. 590

முத்துதிருஞ்சித்து.

பாரப்பாமனத்தியக்கச் சித்துசொன்னேன் பண்பானமுத்துதிருஞ்சித்துகேளு, காரப்பாகுண்டுமணி பரப்பினோடு கருவான எட்டியுடவித்துசேர்த்து, சாரப்பாமதனப்பூ அபின்கெஞ்சாவுஞ்சமனாகஅஞ்சதுவு மொன்றாய்ச்சேர்த்து, வீரப்பாசெய்யாமல் ஐங்கோலத்தால் வீரடங்கமைபோலே ஆட்டிவாங்கே. 591

வாங்கப்பாகருபிடித்துநாலுக்கொன்று மைந்தனேகரைத்ததையும்பாகுசெய்து, சாங்கமாய்கரைத்தபொருமருந்தைப்பாகில் சமரசமாய்கரைத்ததையுமடுப்பில்வைத்து, பாங்காகக்கிண்டிவரில் மெழுகுபோலே பக்குவமாய்தானெடுத்துபதனம்பண்ணி, தீங்கில்லாமெழுகுதனில் பணவிடைதான்கொண்டால் சிறப்பாகச்சிறித்தவனுமகிழுவானே. 592

வானப்பாகெற்சிதங்க ளிட்டாப்போலே வலுவாகச்சிரிக்கையிலேவாய்நீரோடும், தேனப்பாவென்னினும்வாயைச்சப்பி திகையாமல்சிரித்திடுவா னப்பாசொன்னேன், தானப்பாமுத்துதிருஞ்சித்து சொன்னேன் தன்மையுடன்தீயெரியுஞ் சித்துகேளு, தோணப்பா சொல்லுகிறேன் புலத்தியனேஐயா தொடுமுன்னேதீயெரிய வகையைக்கேளே. 593

தீயெரியுஞ்சித்து.

வகையானகெந்தகமுஞ் சூடன்கூட்டி மகத்தான தீமுருகப்பாஷாணஞ்சேர்த்து, தகையாமல்மூன்றுமொன்றாய் பொடித்துக்கொண்டு சமர்த்தாகப்பீங்கானில் பதனம்பண்ணி, பகையானபஞ்சு

களைக் குவித்துக்கொண்டு பஞ்சிதனி லப்பொடியைப் பனிபோற் றாவி, புகையான புகையெழும்பி அப்பாசொன்னேன் புகழிலவம் பஞ்சில்பொறி யெறியுந்தானே. 594

தீயழியுஞ்சித்து.

தானென்ற தீயெரியுஞ் சித்துசொன்னேன் தன்மையுடன்தீய ழியும் சித்துகேளு, கோனென்ற தீயெரியும் புதுமைமைந்தா குறிப் பாகப் பூரணத்தைக் குவித்துப்பார்த்து, தானென்ற வசம்போக்கி நீதானென்று தன்மையுடன் தொழுதுசலம் வாவென்றேதா, மோ னென்ற மோனமுடன் செபிக்கும்போதில் மூர்க்கமதாய் மேகசலம் பொழியுந்தானே. 495

தானவனுய்நின்றுதீ யெறியும்போது தகையடங்கமேகசல மதி யிற்சென்று, காணவலுவானதீ யெங்கேயென்று கனகசபையனை வோரும் போற்றுவார்கள், தோணவலுவானதொரு இந்தவித்தை சித்தருக்கு யெய்துமடா ரூபஞ்சித்து, பூணவரிதானதொரு சித்து சொன்னேன் புதுமையுடன் வழிநடக்குஞ் சித்துகேளே. 596

வழிநடக்குஞ்சித்து.

சித்தென்ன சந்தனமும் பூரங்கூட்டி சீக்கிரத்தி லமுதம்விட்டு புழுகுஞ்சேர்த்து, முத்தான நீரதனிற் கரைத்துக்கொண்டு மூர்க்க முள்ளகல்லுப்பை யரைத்துமைந்தா, விஸ்தாரமாகவேநீ காலிற்பூசி விசையாகநடக்குதற்குத் தகையோயில்லை, மத்தானவிரையுரைத்து நாவில்தீற்றி மார்க்கமுடனமுதங்கொள் வகையைக்கேளே. 597

அடக்குமதிச்சித்து.

வகையென்னநொடிக்குமுன்னே யண்டஞ்சுற்றி மார்க்கமுடனி ருப்பிடத்திற்காணலாகும், தகையில்லாவழிநடக்குஞ் சித்துசொன் னேன் தன்மையுடனடக்குமதிச் சித்துகேளு, நகையாமல்வளியைநீ யடக்கம்பண்ணி நல்லோரைத்தான்பணிந்து நன்மையாக, பகையி லாப்பூரணத்தைச் செபித்துக்கொண்டு பருதிமதிச்சுடரொளியைப் பற்றுபற்றே. 598

பற்றுவதுபூரணத்தைபத்தினுக்கால் பார்க்கின்றசித்துவித்தை எல்லாந்தன்னுள், முற்றுமதையடக்கும்பூரணந்தானையாமூடருடன் பேசவாயெடுக்காதப்பா, சித்துவித்தைசகலமுநீயாடும்போதில் சிவ சிவாபூரணமேயென்றுபோற்று, சுத்தமுள்ளமனதானல் எல்லாஞ் சித்தி தாடுகுறியிலாத்மாவைத் தொண்டுபண்ணே. 599

பண்ணப்பாவடக்குமதிசித்துசொன்னேன் பகுத்தறிவாய்பன் னிரண்டுநூறுக்குள்ளே, விண்ணப்பாமன்னுமுதல் மண்ணும்விண் ணில் வேந்தருனக்கெதிருண்டோவிளம்பக்கேளு, கண்ணப்பாயிந்த நூல்சாலவித்தை கருவானயிந்திர மயேந்திரசாலம், மண்ணப்பா பொன்னுகுமுப்பூச்சுன்ன மணிமந்த்ரஅவுஷதவகைசொன்னேனே.

சொன்னேனே ஆயிரத்திருநூறுக்குள் தொடுகுறிபோல்குரு முடிக்கவகையுஞ் சொன்னேன், முன்னுனகாவியத்தில் சகலசித்து

மூர்க்கமுடன் பாடினநூ லார்தான்காண்பார், கண்ணான பரிபாஷை எல்லாந்தோற்றுங் கருவான கருக்களெல்லாங் காணுங்காணும், என்னுணை யிந்தநூல் கடினமாக இருக்குதென்று சொல்லாதே யிருத்திப்பாரே. 601

இருத்திமெள்ளப் பார்க்கையிலே ஒளிதான்வீசும் என்னசொல்வேன் ஒளிமேலே வெளிதான்காணுங், தருக்களென்ற கருக்களெல்லாமிதிலேகாணுஞ் சதாசிவமனோன்மணியு மிதிலேகாணுங், குருக்களென்ற பராபரத்தின் குறியுந்தோன்றுங் குணமான குண்டலியுமெதிரேகாணுங், கருக்களென்றகருக்களெல்லா மிதனிற்றோன்றுங் கற்பூரதீபமதைக் காணுகாணே. 602

ஞானமார்க்கம்.

காணுதற்குக்கருவான ஞானமார்க்கம் கருத்துறவே சொல்லுகிறேன்மைந்தாகேளு, பூணுதற்குச்சொல்லவிலைசுளுவாம்பாருபொன்கோடியீந்தாலும்நாலீயாதே,யூணுதற்குக்கருத்தாகக்கற்பங்கொண்டுவுற்பனமாயடுவின்முடிவைப்பார்த்து, தோணுதற்குத்தோணுமடாஞானமார்க்கஞ் சுருதிமுடிவானபொருள்சொல்லுகிறேனே. 603

சொல்லுகிறேன் அஞ்செழுத்து அஞ்சுமுகமானால் சுருக்கான ஆறுமுக மென்றுகேட்டால், வெல்லுவேன் புலத்தியனே சொல்லக்கேளு வேதாந்த சுருதிமுடி வாறுதலமாகும், நல்லுறவாம் ரேசக பூரகமும்நின்று நன்மையுடன் வீற்றிருக்குங் கும்பகமேயாகும், புல்லுறவாம் நின்றபனி மணிபோலாகும் புகழுநவ மணிமோலாம் நாதகுருவாமே. 604

நாதமென்ற அஞ்செழுத்துக்காதாரமான நடுவானபூரணந்தானெழுத்துமாகும், மேதமென்றேபேதமெல்லா மெழுத்தேயாகும் பிசகாதுஅஞ்செழுத்து மூன்றெழுத்துமாகும், கோதமென்றகுற்றமில்லாகுருமணியுமாகுங் குருவானமூலமணி கிரீடமாகும், வேதமென்றமலர்க்கொழுந்தின் வாசமதுவாகும்வாசமுண்டு வாசமில்லா நேசமாமே. 605

நேசமுடனிருப்பவர்தான் மைந்தாமைந்தா நெறிமெற்றஆறுமுகமவரேகாண்பார், பாசமற்றபெரியோரும் பணிந்துநின்று பரமகுருவானதொரு ஆறுமுகமாகும், வாசமற்ற நவக்கிரகத்தாதியான வலுவானஅனுக்கிரக மாறுமுகமப்பா, தேசியென்றசிவதலமுமாறுமுகமாகும்தெவிட்டாத மதியமுதமாறுமுகமாமே. 606

ஆமப்பாபூரணத்தி னருளைப்பற்றி அப்பதியைக் கால்நிறுத்தி அதின்மேல்நின்று, நாமப்பாமூலமென்ற நாடிதன்னால் நளியாமல் சுழிமுனையென்ற நாடிதன்னால், தாமப்பாஅதில்பூட்டி ரேசகமே பண்ணிதன்மையுடன் பூரகமாய்நின்றுகொண்டு, சோமப்பாபூரணத்தைக்கொண்டாயானால் சிவசிவாஆறுமுகச் செயல்காண்பாயே. 607

காணப்பாஆதியந்தம்பொருளைத்தானுங் கருவாகத்தானறிந்து நடுவைப்பற்றி, பூணப்பாஒருமனதாய்பூணுபூணுபுத்தியுடனுண்டதினால்பொறிகள்தோணுங், தாமப்பாதன்மயமாய் நின்றபோதன்னில்

சக்கரமுமட்சரமுந் தானேதோற்றுந், தேனப்பாவமுதமென்றவமு
தந்தோன்றுந் தெளிவானஅமுதமுண்டு தெளிந்துபாரே. 608

தெளிவானமனத்தோர்க்குயிந்நூல்வேணும் சிவயோகமாவதற்
குயிந்நூல்வேணும், அழியாதவாசிக்குமிந்நூல்வேணும், அரிதான
மவுனத்துக் கிந்நூல்வேணும், வழியானவழிதுரைக்கு மிந்நூல்வே
ணும் வான்தீபம்நோக்குதற்கு யிந்நூல்வேணும், நெளிதானநூல்
களுக்குயிந்நூல்வேணும் நேரானபனிரண்டுநூரைப்பாரே. 609

பாரப்பாபதியறியயிந்நூல்வேணும் பரயோகமென்பதற்குமவு
னம்வேணும், காரப்பாசிவம்வேணுஞ்சித்துவேணுங் களங்கமறசற்
குருவைக்காணவேணும், சாரப்பாசமாதிகற்பஞ்சமாதிவேணுஞ் சதி
ராகநந்தியுடநாட்டம்வேணும், ஆரப்பாவறிவார்கள் ஞானமார்க்கம்
அப்பனேபூரணத்தை யழுத்திப்பாரே. 610

பார்க்கையிலேவண்டபகிரண்டமெல்லாம்பண்பாகப்பூரணத்தி
லுதித்தவாறும், கார்க்கையிலேபூரணத்தி னருவிபாய்ந்து கற்பூடு
தாபரங்கள்பதித்தாப்போலே, சேர்க்கையிலேமதிதானுந்தெளிவாய்
மைந்தா சேருமடாசூரியனிலா ரறியப்போனூர், ஏற்றையுடன்அகார
மதிலுகாரந்தோன்றி இன்பமுள்ளமகாரமொடு விந்துநாலே. 611

நாலானவிந்துவிலேவனந்தன்சோமன்நாடிப்பார்திரோதியொடு
நாதாந்தந்தான், மேலானவுகாரமதிற்சத்தியோடு வியானியுஞ்சமனே
முதல்வுன்மனேதானப்பா, சேலானகருணேதரு ஓமரூபி சேர்க்கை
யுள்ள அனந்தைதமுதஞ்ஞையோடு, காலானஅனுதிசிறுதைதுநானுந்
தான் கண்டுபார்சிவகலையைக் காட்டினேமே. 612

ஆமப்பாசோடசத்தின் கலையுள்ளாகி அருள்தீபம்நோக்குதற்
குத்திறவுகோல்தான், ஓமப்பாவுகாரந்தான்மின்போல்மின்ன மூல
மென்றநாடியிலே முழங்கிநிற்கும், நாமப்பாஅகாரந்தா னிருதயத்
துள்ளே நாடியேஅக்கினிபோற்பிரபைவீசுந், தாமப்பாமகாரந்தான்
கண்டத்துள்ளே தயவானபதிகோடிகாந்தியாமே. 613

காந்தியாம்விந்துவப்பா மின்போல்வீசி கண்டமேல்அங்குலம்
நால்கடந்துகாணுஞ் சாந்தியாம்புருவநடு சார்ந்தசாலஞ் சந்திரன்
போல்வீசுமக்குசம்புக்காணும், பாந்தியதாய்தினந்தோறும்பழக்கமா
கில் பார்மகனேகற்பூரந்தேகமாகுஞ், சேர்ந்துபாரிதற்குமேல்அங்கு
மூன்றுனல் செப்புகிறேன்சோடசத்தின்கலைதானுமே. 614

ஆமப்பாபூசைபோலே தூபமோடும் அதினேடேசேர்ந்தாக்கா
லுந்தன்தேகம், போமப்பாகத்திநடுவதற்குமேலே புகழாகமூன்று
விரற்கடந்துதானல், ஓமப்பாநாதகலை மாணிக்கம்போல் ஒளிவீசுங்
கால்மாறியூணிப்பாரு, நாமப்பாநாதாந்தவுச்சிமீதில் நாடுவாய்மீன்
கோடி யொளிபோலாமே. 615

ஒளியாருமாத்திரை தானரைக்கால்வைத்து வூணிப்பார்பிடித்த
விடம்பொய்யாய்ப்போகும், அழியாதபேரின்பமோட்சவீடு அதுக

டந்துவங்குலநாலப்பால்செல்ல, சுழியாதசத்திகலை ரவிபோல்மின்னி காணுமடாமாகாணிமாத்திரைதான்வைக்க, தளிர்பாய்ந்தபோலேயுந் தன்தேகந் தானுகுஞ்சத்தியடிமருவிக்காணே. 616

மருவியேயங்குலம்நால் நடந்துபார்த்தால் மைந்தனேவியாபினி யுங்கலைதானின்று, அருவியேஆதித்த னொளிபோல்வீசும் அரைக் காணிமாத்திரைதா னங்கேநீயும், பரவியேபூசித்தா லுந்தன்தேகம் பானுவைப்போல் காந்தியதாய்பத்திப்பாயும், மருவியேதோத்திரஞ் செய்மவுனத்தாலே மகத்தானசித்திமுத்தி வருகுந்தானே. 617

தானனவுச்சிவெளிகடந்தப்பாலே சமனகளைதளதளந்து ரவி போல்மின்னும், மானனமாத்திரைதான் கால்மாகாணி மனக்கண் ணால்தன்கண்ணால் மருவிப்பாரு, தேனனதேகமப்பா ஒளிபோல் காணுந் திரமாகவுன்மனையைமேவிப்பாரு கோனனரவிகோடி ஒளி போல்வீசுங் குணமாகஅரைக்காணி மாத்திரைதானோதே. 618

ஓதப்பாஒளிபோலேயுந்தன்தேகம்ஒன்றுமில்லைப்பிடித்தஇடம் பொய்யாய்ப்போகும், நாடப்பஅண்டபகிரண்டமெல்லாம் நாடலாம் ஓடலாமனேகஞ்சித்தி, நீதப்பாஆதாரமாறில்நின்றால்நிலைத்துதப்பா தேகமதுகற்போல்காணும், வாதமப்பாபாக்கியமாம்வாசிமூலம் வ ரைந்தாக்கால்சமாதிக்குள் வழியுமாச்சே. 619

ஆச்சப்பாயிதிலொன்று தப்பிவிட்டால் அரகராஎடுத்தசித்து பொய்யாய்ப்போகும், மாச்சப்பாபோகாதே மைந்தாசொன்னேன் மந்திரந்தானறிவார்மைந்தாகேளு, மூச்சப்பாறீங்காரமதனுள்வித்து மூட்டினால்திரிகோண முனையுங்காணுங் காச்சப்பா மணிக்குளிகை முட்டியாடுங் கசடறவேயாண்டொன்றில்துவஞ்சித்தே. 620

## குருமுறை.

சித்திக்குங்குருமுறையைச்சொல்லக்கேளு சிவாயநமஅவ்வோ டேசவ்வுங்கூட்டி, முத்திக்குபாதையிதுமைந்தாசொன்னேன் முனை நடுவாஞ்சுழிமுனையில் முத்திகண்டேன், சத்திக்குச்சவ்வுண்டுசித்தி யாகி சதாசிவமாயவ்வுண்டுசமைந்ததப்பா, பத்திக்குமொழிபோலே ஒன்றாய்காணும் பாங்குபெறஅஞ்செழுத்தால் பணிந்திடாயே. 621

பணிந்திட்டஅஞ்செழுத்தால்மூன்றெழுத்தைப்பாருபாங்கான எட்டெழுத்தும்வாலையாச்சு, கனிந்திட்டஎட்டெழுத்தால்மனத்தைப் பாரு கருவானசுயம்புலிங்கம்கண்ணில்காணுந், தணிந்திட்ட அஞ்செ ழுத்தைப்பிடித்துவாங்கி தாயானவோரெழுத்தைத் தாக்கிப்பார்த் தால், அணிந்திட்டஅஞ்செழுத்துக்குயிரேதோன்றும் அரகராவோ ரெழுத்தையார்காண்பாரே. 622

காணரிதுஎவராலுமூலசூட்சங் காண்பவரேசிவயோகி சீவன் முத்தர், பூணரிதுவுலகத்தில்மாண்பர்க்கையா போக்கோடேயுறு தற்கும்பொருளைக்காணார், தோணரிதுஎவராலுங்காணப்போமேசுழி

திறந்துமேலாறுஞ் சுடர்விட்டாப்போல், பேணரிது என்மகனே
மனம்பேயாகும் பின்னறிந்து முன்னறிந்து குருவைக்காரே. 623

தாரப்பாகளங்கமன்றி சுழினைக்குள்ளே கற்பூரதீபமதில் கருத்
தோடொக்க, ஏறப்பா வாசிகொண்டு கனலைத்தூண்டி என்மக்காள்
நிராதாரங் கடந்தப்பாலே, சேரப்பா சுழினைபற்றி விட்டநாலைச்
சேர்ந்தேதானிகம்விட்டு பரத்துக்குள்ளாய், நேரப்பா மனந்தளும்
பும் நேரொட்டாது நிலைத்தவனே சிவயோகி நீதான்பாரே. 624

பாரப்பா வசியவென்றும் யவசியென்றும் பண்பாகச் சிவய
வென்று மூன்றுதிரமாறு, நேரப்பா பிராணயமென்றதாச்சு நேர்ந்
தேதான் கண்டுதிரந் தீர்ந்தாயானல், ஆரப்பா வுன்தேகம் பொன்னி
ரம்போல்காணும் அரகரா அமுதமது சிந்திப்பாயும், கூரப்பா பிரா
ணயம் நேமநேயம் கூடியேயோகத்திற் குறிகண்ணூட்டே. 625

நாட்டவே யோகத்தில் குறிகண்ணூட்டு நலமாகக்கும்மென்ற
நாதத்துள்ளே, கூட்டவே ஓம்ஆம்ஊமென்றேது குறிப்பாக உம்
அம்ஓமென்றேத்து, ஆட்டவே அட்டசத்தி எழுத்தீதாச்சு அஞ்செ
ழுத்து மிதிநூடே அப்பமாறு, நீட்டவே எட்டெட்டுத் தொழிலு
மாடும் நீநினைந்து கேட்டதெல்லாம் தருகுந்தானே. 626

தருகுமப்பா சிவவாலை எழுத்துக்கூட்டி தாக்கிற லஷ்டகர்மந்
தானேயாடும், வருகுமப்பா வாதசித்தி காயசித்தி மகத்தான யோக
சித்தி ஞானமெய்தும், உருகுமப்பா ரீங்கார மதனிற்பூட்டி ஒரு
கோடி நூல்களிலே யொளித்தார்பாரு, பருகுமப்பா சிவவாலை எழுத்
தைமாறி பாடினர் சாத்திரங்கள் பார்த்துத்தேரே. 627

தேரவேசத்திசிவமிந்நூல்காட்டுஞ் ஜெகத்திலேயிந்நூல்போல்
செப்பாதையா, நேரவே யாயிரத்தெண் மலருக்குள்ளே நிற்குதடா
அமுதமங்கே நீதான்கொள்ளு, கூறவென்றால் நாவேது பாவங்கேது
கூடினல் வாசிசென்று வொளிபோற்காணும், ஆரவே சொல்லிவைத்
தேன் மட்டசித்து அருளான பூரணமும் பூசைவிதிதானே. 628

தானென்றதீட்சைவிதி சரக்குவைப்பு தயவானமெழுகுநீர்கார
மெல்லாம், ஊனென்றதயிலமொடுகடுகுகற்கம்வுறப்பானபற்பமொடு
செந்தூரங்கள், கோனென்றயிந்திரமயேந்திரசாலங் கோகரணங்கச
கரணமப்பாகேளு, நானென்றவாணவத்தா லிந்தநூலை நாட்டினேன்
செகத்தோர்க்குக் காண்பியாதே. 629

கோகரணம்.

காணப்பா யிந்தநூல் கிட்டுவதுமருமை கருவாளி கண்டாக்கா
லுயிர்போல்காண்பான், வீணப்பாவென்றுநீ மறதியாலே வெகுளி
விட்டு இந்நூலைப் பேசவேண்டாம், ஊனப்பா ஆதியென்ற கற்பங்
கொண்டு வுரைத்துமிகக் கேசரத்தி லுன்னிப்பார்த்து, தேனப்பா
வென்றதொரு அமுதங்கொண்டு திரமான மவுனமதைக் காருகாரே.

காரப்பாகுருபதத்திலருளைநோக்கி கமலமென்றமூலமதி லிருந்
துகொண்டு, வீரப்பாசெய்யாமல் கும்பகத்தேநின்று விசையாகபூர

கத்தால் ரேசகத்தைப்பண்ணு, நேரப்பாநின்றுகொண்டு தொட்ட விடமசைக்க நேரானரேசகத்தாலசையும்பாரு, ஆரப்பாவறிவார்கள் கோகரணவித்தை அப்பனே தொட்டவிடஞ் சுழிக்கும்பாரே. 631

கெசகரணம்.

பாரப்பாகெசகரணஞ் சொல்லக்கேளு பாங்கான பூரணத்தைப் பற்றிக்கொண்டு, நேரப்பா மூலமென்ற சுழியைநாட்டி நேர்சரியாய் ரேசகத்தால் பூரணத்தைப்பற்றி, தேரப்பா கும்பகத்தில் நின்று கொண்டு திறமாக விசைநாடி யசைக்கும்போது, சேரப்பா செவி ரெண்டு மசையும்பாரு செப்பக்கேள் கெசகரண மாகுந்தானே. 632

தானென்றமந்திரமாஞ்சாலவித்தை தயவானகோகரணங்கெச கரணமப்பா, மானென்றசாலத்திலனேகஞ்சொன்னேன் மகத்தான சித்துவித்தை யனேகஞ்சொன்னேன், ஊனென்றகருவித்தை யனே கம்சொன்னேன் உண்மையுள்ளசுன்னமது ஒடுங்கிச்சொன்னேன், தேனென்றசெயநீருந் திராவகமுஞ்சொன்னேன் செயமான பன்னி ரண்டு நூறுக்குள்ளே. 633

பன்னிரண்டுங்காராக மடையர்தானும் பாவமென்றவஞ்சகமே செய்வார்செய்வார், புண்ணியமேதானினையார் போதமில்லார் போத மில்லாப்பாவிகள் குடிலஞ்செய்வார், கண்ணிமைக்குள்குற்றமென்று கருத்தாய்க்காணார் கடைகெட்ட பாவிகள்தான் வஞ்சகமீதென்று, குண்ணியதோர் பாவமென்றுங் கொடுமைசெய்வார் குடிகெட்ட சண்டாளர் தனக்குங்கேளே. 634

சத்துருமாரணம்.

கேளப்பாசத்துரு மாரணத்தைச்சொல்வேன் கெடியானநாய் மயிரினுடைவாங்கி, தாளப்பா பதினாறு மடிப்பதாக தன்மையுடன் தான்மடித்து அதன்மேற்கேளு, மீளப்பா ஐங்கோல மையால் மைந்தா சிவசிவாசத்துருவின் பேரைநாட்டி, கோளப்பா ஐங்காய மதின்மேற்பூசி கொண்டைபோல்சுற்றியதைப் பந்துபண்ணே. 635

பண்ணியதோர் பந்துதனை மயானருத்திரன் பதியிருக்கு மிடந் தனிலே குண்டஞ்செய்து, வுன்னியே நிசிவேளை தன்னிற்சென்று ஓமம்வளர் குண்டமதில் பதியவைத்து, சென்னிமிகத் தானனைய ஸ்நானம்பண்ணி சீக்கிரத்தில் நிருவாணத்துடனேமைந்தா, தன்னி மையா லோடிவந்து சாம்பல்தன்னில் தான்பிரண்டு எழுந்திருந்து தம்பனமேசெய்யே. 636

செய்யப்பாகுண்டமதின்கிட்டவந்து சிவயவென்றுதெற்குமுக மாகிநின்று, பையப்பாயவசியென்றிருந்துமைந்தா பக்குவமாய்வசிய மென்றுவனலைவைத்து, மையப்பாரெண்டுவகை எருவால்மைந்தா மகத்தானவனல்மூட்டி மைந்தாநீயும், மெய்யப்பா நெய்யென்ற கேசரியினெய்யால் மேன்பாடா நசியமென்று ஓமம்பண்ணே. 637

பண்ணப்பாஓமமதுகடிகைக்குள்ளே பாங்கானசாராயந்தன்னை வாங்கி, விண்ணப்பாதானுக்கி அதனிலிட்டால் வெகுசுருக்காய்தீ பிடிக்குமப்போமைந்தா, கண்ணப்பாதான்மூடி மண்ணைவாரி கருகு வாயென்றுநீகனக்கப்போட்டு, வுண்ணப்பாநதிக்கரையில் ஸ்நானம் பண்ணி உம்மெனவேதானிருக்குமிடத்திற்செல்லே. 638

செல்லவேநாளுக்குநாளாய்மைந்தா செடங்கரைந்துஅனல்மீறி தேகத்துள்ளே, சொல்லவேபழிபிறக்குமிடமாய்மைந்தா தொல்லுல கினுய்போலே சுழன்றுமாண்பர், துள்ளவேசெயலற்று நடப்பார் மைந்தா சுருக்கானகருவித்தைசொல்லாதையா, கொல்லவேநினைத்த தொருபசுவைமைந்தா கொட்டினுல்தோஷமில்லை எனச்சொன்னுரே.

சொன்னுரேஎன்குருவும் புலத்தியனேஐயா தொடுகுறிபோல் முப்பொருளுந்துவக்கமாக, கண்ணுரக்காண்பித்தே னவனேயாசான் களங்கமற்றசற்குருவைக் காருகாரு, எந்நேரம்சற்குருவை மனதிற் காண இயல்பொன்றுசொல்லுகிற இன்பங்கேளு, பொன்னுனபொருள் போலேயவரைக்காரு புத்தியுடன்வாமனத்தைக்கனியப்பாரே. ()

கனியானபலருசியும் புசிக்கும்போது கால்திட்டமீண்டிடுவாய் குருவுக்கப்பா, தனியாகநிந்தையதுவைத்தாயையா தாய்தந்தைபோ லவுமேதயவுமாவார், ஜனியாதமோட்சத்தியருளுஞ்செய்வார் ஜடம் பிலக்கஅமுதரசம் செலுத்திவைப்பார், மணியானசிரோமணியின் மணியையீவார் மகாமந்திரசொரூபியென வசனிப்பாரே. 641

## வசியம்.

பாரப்பாசத்துரு மாரணத்தைச்சொன்னேன் பண்பானவசிய மொன்றுபகரக்கேளு, நேரப்பாமந்திரத்தால்வசியமொன்றுநிலைத்த தொருகழுவுமையால் வசியமொன்று, ஆரப்பாஅறிவார்கள் ரெண்டு விதந்தானும் அப்பனேமந்திரத்தால் வசியங்கேளு, மாரப்பாசத்தி சிவமிரண்டுங்கூட்டி மார்க்கமுடன்மாறுவதால்வரிசைகேளே. 642

கேளப்பாஇடதுகையில் விபூதிவைத்து கெணிதமுடன்பரப்பி யதிற்சுழியும்நாட்டி, ஆளப்பாஈசானியம்பார்த்துக்கொண்டு அன்பா கச்சிவசிவயென்றறிந்துமாறில், கேளப்பாஒன்றுமில்லை பகைதான் வெல்லுங் கூர்மையுடன்விபூதியைநீ குறிப்பாய்பூசி, வாளப்பாமீத முள்ளவிபூதிதன்னை மைந்தனேஉள்ளுக்குப்பொசித்திடாயே. ()

பொசித்திடுநீ மைந்தாகேள் தினமுமையா புத்தியுடநீயிருக்கப் பகைஞரெல்லாம், பசித்திடுவார்தாகமது போலேமைந்தா பாராளு மரசன்முதல் தேவதைகள்முழுதுங், கதித்திடும்ஸ்திரீ வசியம்வசிய மெல்லாங்கண்காணத்தோணுமடாகருவாய்ப்பாரு, நசித்திடுவிரோத மயமான்தெல்லா நன்மையுடனிரண்டெழுத்தை நயமாய்ப்பாரே.

பாரப்பாரெண்டெழுத்தும் நயனமாகும் பாங்காகரெண்டையு மேசுழினைத்தேற்றி, காரப்பாரேசகபூரகந்தான்றெண்டுங் கருத்துற

வேகும்பகத்தில்காக்கப்பண்ணி, வீரப்பாசெய்யாமல் மைந்தாகேளு வேண்டினதோர்நேரமெலாங் கணம்போலாகும், ஆரப்பாஅறிவார் கள்சிவயோகவாழ்க்கை அப்பனேபுலத்தியனேயின்னங்கேளே. ()

இன்னங்கேள்சிவயோகவாழ்க்கைதன்னை இயல்பானநயனமதை மேருக்கேற்றி, சொன்னதொருகயிலாசமேறுதன்னில் சுடர்கோடி காந்தியாய் ரவிதான்வீசு, மன்னமனேகாந்திக்கப் புறத்தைநின்று மனோன்மணியின்கருணை தனை யென்னசொல்வேன், மின்னுனைஒளி யில்ஒருமின்தான்தோன்று மின்னொளியிலுன்மனதைமேவிப்பாரே.

சீனவைப்பு.

பாரப்பாசரக்கினுட வைப்புகேளு பாருப்புதன்னுடனே கல் லுப்புங்கூட்டி, ஊரப்பாபழச்சாறு தயிருங்கூட்டி உடன்சேர்த்து பாண்டத்தில்விட்டுமூடி, காரப்பாகுழிவெட்டி எருவைப்போட்டுக் கருவானபாண்டமதை யதின்மேல்வைத்து, சேரப்பாஎருபோட்டுச் சமாதிவைத்தால் திரமாகமண்டலத்தில் சீனமாச்சே. 647

பூரவைப்பு.

ஆச்சப்பாபூரத்தின் வைப்புகேளு அரகராசீனமொடு நாதங் கூட்டி, நீச்சப்பாகுந்திரிக்க இடைதான்சேர்த்து நினைவாகத்தான் பொடித்துசெயநீர்விட்டு, மூச்சப்பாபோகாமல்தாய்தான்கூட்டிமுன் னவனைத்தான்பணிந்து குப்பிக்கேற்றி, பாச்சப்பாநெல்லவிக்கும் பானைதன்னில் பக்குவமாய்வைத்தெடுக்கப் பூரமாச்சே. 648

ஆச்சப்பாபூரமதுகாரமென்பார் அன்பானசவுக்கார வழலைஎன் பார், காச்சப்பாரவிபீசமென்பார்சித்தர் கருவானஅக்கினியின்கோத் திரமென்பார், பாச்சப்பாவாதத்துக் கில்லாவிட்டால் பாயாதுசரக் கொன்றும்பழுக்காதையா, நீச்சப்பாகடுநீச்சுரவியில்மைந்தா நெறி யானரவியறியார் நிலைத்திடாரே. 649

நிலையாதுசுன்னத்துக் கிதில்லாவிட்டால் நேரானகுளிகைக்கு மாகுமாகும், சிலையானகற்பத்துக்காதிபீடம் சேர்ந்துநின்றமெழுகுக் குமாதிபீடங் துலையானசெயநீர்க்குமாதிபீடம் சுருக்கானபூரத்துக் காதிகேளு, விலையானவெண்காரவைப்புகேளு மேதினியிலாரறிவார் லவணப்போக்கே. 650

வெண்காரவைப்பு.

போக்கானநிலவுப்பு கல்லுப்போடு புகழானபடிகத்தூ ளண்ட வித்து, தாக்கானமணிஉளுந்துமாவோடொக்க தனிக்கள்ளிப்பால் வார்த்துக்கிண்டிமைந்தா, ஆக்கானபானைதனிலிட்டுமூடி அருமையு ள்ளசிறுநீறுங்கூடவிட்டு, நீங்காமல்மண்டலந்தான்சமாதிவைத்தால் நிலைத்ததொருவெண்காரப் பலகையாச்சே. 651

ஆச்சப்பாவெண்காரந் தன்னால்மைந்தா அப்பனேயுண்டாச்சு சரக்கோகோடி, காச்சப்பாவுருக்கினதுக் காதியாகும் கருவானவே தைக்குமாதியாகும், பாச்சப்பாசத்துகளுக்குயிரேயாகும் பாங்கான

நீருக்கும் சுன்னத்துக்கும், பேச்சானவெடியுப்பு சீனம்ரெண்டில் பிலமான வுளுந்தினிட மாவைச்சேரே. 652

சேரப்பா கள்ளிப்பால் விட்டுநன்ருய் திரமாகக் கிண்டிநன்ருய் பாண்டத்திலிட்டு, நீரப்பாவிட்டுநன்ருய் சமாதிவைத்தால் நிசமாகத் துய்யநிறவெண்காரமாச்சு, காரப்பாவெண்காரம்பொரிக்காரம்ரெண் டுங் கருவாளிதானறிவார் மற்ருேர்காணுர், பேரப்பா சொல்லவென் ருல்நாவேயில்லை பிசகாதசாரத்தைச் சொல்லக்கேளே. 653

## சாரவைப்பு.

கேளப்பாகரிமாவும்சிறுமாவோடு கெடியானஅமுரியோடுஆவின் நீரும், நீளப்பா அஞ்சுவகை நீருங்கூட்டி நிலைத்தவெடி யுப்புடனே கல்லுச்சுன்னம், வேளப்பா எரித்தோனைத் தியானம்செய்து வீசை யான நீர்நின்றபடியேதாக்கி, கோளப்பா வாராமல் பாண்டத்தூட்டி கோடினன்ற இடமதிலே சமாதிவையே. 654

வையப்பாமண்டலத்துக் கப்பால்நீயு மைந்தனேசார்வாக எடுத் துப்பாரு, மெய்யப்பா சொல்லுகிறேன் காரசாரம் மெய்யான சார மதையார்தான்காண்பார், கையப்பாவுதவுவது போலேமக்காள் கைப் பானவுப்புக்கு வுறுதியாச்சு, எய்யாதசாரைகடி பட்டுதாளுல் எழும் பாமல் வீறடக்கும் சாரந்தானே. 655

சாரமென்ருல்வழலைகடிக்கொண்டுதாளுல் சரக்கனைத்துமாண்டு தடாதப்பேயில்லை, காரமென்றகருவழலைக்கடிதானப்பா கடுஞ்சுருக் குச்சாரத்துக் கதிகமாகும், பாரமென்றகாரமதைப் பணியவேணும் பணிந்ததொரு சாரத்தால் நிறுத்தவேணும், ஆரமென்றஅதிகார சாரமப்பா அனைத்துயிருக்குடலுயிரே யறிந்துபாரே. 656

பாரப்பாவாதத்துக் காதியாகும் படியேறகெவுனத்துக் காதியா குங், காரப்பாகற்பகத்துக்குயிரேயாகுங் கருவானசெயநீர்க்குமாதி யாகும், நேரப்பா பூரணத்துக்குயிர்தாளுதி நினைவானஅறிவுக்கு மமுதமாகி, தேரப்பா காரசாரத்தைக்கண்டு தேர்ந்துமனதொன் ருன செயலைப்பாரே. 657

## துரிசுவைப்பு.

பாரப்பா துரிசினுட வைப்புகேளு பாங்கான கல்லுப்பு சீனங் கூட்டி, சாரப்பாபழச்சாறுந் தயிருங்கூட்டி தன்மையுள்ள அமுரிய துங்கூடச்சேர்த்து, சேரப்பாதாம்பிரப் பாத்திரத்தில்மைந்தா செம் மையுடன்குழிவெட்டி மைந்தாநீயுங், காரப்பாகேசரி னெருவைக் கொட்டி கருவான பாத்திரத்தை யதின்மேல்வையே. 658

வையப்பாவாய்மூடி மேலுங்கொட்டி வலமாகத்தான்மூடி மைந் தாகேளு, மெய்யப்பா சதாசிவத்தைப்போற்றிநீயு மேன்மையுடன் மண்டலத்துக் கப்பால்வாங்கி, செய்யப்பா ஆறவிட்டுத் திறந்துபாரு சிவசிவா என்சொல்வேன் துருசுநேர்மை, கையப்பா புளிப்புடனே புளிப்புசேர்ந்து கழிவான கறுப்புடனே சேர்ந்துபோச்சே. 659

போச்சப்பா களிம்புடனே யுப்புசேர்த்து பொருமிகத்தானுறைந்துதுருசியாச்சு, ஆச்சப்பாவெகுதுருசு துருசியாட்டு அடங்காத சுன்னத்துக் காதியாகும், மூச்சப்பா வெகுதுருசு கெவுனம்பாயும் மூதண்டகுருவுக்கு இதுவேயாதி, நீச்சப்பாவெகுநீச்சு துருசார் காண்பார் நெறிபெற்ற சற்குருவுந் துடியாம்பாரே. 660

துடியென்பார்கண்டரென்பார்விஷமியென்பார் துலங்குபச்சை அக்கினியின்பீசமென்பார், ரடிகொண்டஅடியென்பாராதியென்பார் அரகராஆணைக்குஅந்தமென்பார், கடிதானசத்தியென்பார் நீலமென்பார் காமனுக்குச் சத்துருவாங் கண்ணேயென்பார், முடிகொண்ட ஆகாச முதலேயென்பார் முத்திவெகு துருசாகு முதலைப்பாரே.

பாஷாணவைப்பு.

பாரப்பாசீனமொன்று வெடியுப்பென்று பரமான விந்துடனே மூன்றுங்கூட்டி, சேரப்பா தாம்பிரக் கிண்ணத்துள்ளே சேர்க்கையிலேகேசரியின் நெய்யைவார்த்து, நேரப்பா மேற்கிண்ணத்தாலே மூடிநிலைத்ததொருபாண்டமதில்மண்ணும்விண்ணும், சாரப்பாபாண்டத்திலிட்டுநல்ல கருவாகவட்டகையை யதின்மேல்வையே. 662

வைத்ததின்மேல் முன்போலே நிறையக்கொட்டி வாகாகமேல் மூடிமண்ணும்செய்து, விஸ்தாரமாகவேநீயடுப்பில்வைத்து வீறடங்க வொருசாம மெரிப்பாய்மைந்தா, முத்தனே நிறம்போலே நாலும் சேர்த்து மெழுகுபோலுருகியது வொன்ருய்ச்சேரும், பத்தானபூரணத்தைத் தியானம்பண்ணி பதமாக ஆறவிட்டு எடுத்துப்பாரே.

பாரப்பாவட்டகைக்குள்ளிருகிநல்லபளிங்கதுபோல்பாஷாணம் பண்பாய்காணும், ஆரப்பா அறிவார்கள் பாஷாணத்தை அறிந்தவர்களறிவார்களம்பரத்தை, மேரப்பாஎன்பார்கள்வெண்கண்டரென்பார் விசையான மதியென்பார் நிலவுப்பென்பார், சார்ப்பாசாரைக்கு நாகமென்பார் சகலசரக்கானதற்கும் சத்துருதான்பாரே. 664

பார்க்கவென்று லெந்தனுட காவியத்தில் பக்குவமாய் சரக்கு வைப்பு முறையைச்சொன்னேன், மார்க்கமுட னைந்நூற்றில்கட்டு முறையோடு மகத்தான நானூற்றில் மெழுகுமுறை சொன்னேன், சேர்க்கையுடன் எண்ணூற்றில் திராவகத்தினேடு செப்பமுள்ள, முந்நூற்றில் செந்தூரம் சொன்னேன் கருணையுள்ள புலத்தியனே யின்னங்கேளே. 665

கேளப்பா கற்பவகை நூற்றில்சொன்னேன் கெர்வமெல்லாந் தானடங்க எழுநூறும்பாரு, ஆளப்பா லோகமாரணத்தை நன்ருய் அப்பனே எண்பதுக்குள்ளடக்கிப்பாடி, தேளப்பா கொட்டுதல் போல் வழியும்சொன்னேன் திரும்பவொரு நூற்றிலேதான் திறமாய்மைந்தா, கோளப்பாவாராமல் சத்ருமித்துரு குணமாகச்சொன்னதையார் கொடுப்பார்பாரே. 666

பார்த்தவர்கள்மனங்கனிய நடந்தாயானால் பண்பாகமுறைகள் தவிராமலையா, கார்த்தவர்களீந்திடுவாரப்பாசொன்னேன் கனகவெகு யீந்தாலுமுறைசொல்வார்கள், நாற்றிசையுமறியவே தானிந்த நூலில் நலமாகக்கைமுறைகள் நன்றாய்த்தோணும், பூத்தமலர்வாசனை தான் மிகவேதோன்றும் பூவறியார்க்கென்னவரும்புகலக்கேளே. 667

கேளப்பாவுலகத்தில் முன்னோர்தாமுங் கிருபையுடனன்மை துன்மைரெண்டும்பாடி, நாளப்பாதினம்பார்த்துயறியவென்று நன் மையுடன்ஜோசிய முப்பதிலேபாடி, கோளப்பாவாராமனுலகமீதில் கொட்டினார்சாத்திரந்தா னென்னசொல்வேன், மாளப்பாவென்ற சொல்லாகாதென்று மானிடர்களூல்முறையைப்பார்த்தார்பாரே. ()

பார்த்தவர்கள்குருமொழியைப்பாராமல்தான் பதரோடேநெல் வாரித்தூற்றுவார்போல், கூத்தானகூத்தாடிசிலம்பங்காட்டி கொடி தான நூல்களைத்தான்பழிப்பானப்பா, நாற்றிசையுந்தான்தேடிகுரு வைக்கண்டு நன்மையுடன்வணங்கியவர் பாதம்போற்றி, கார்த்ததி னால்பலனுனக்குச் சொல்வேன்கேளு கனகம்போல்நன்மைதுன்மை காட்டுவாரே. 669

காட்டினால்நன்மையிலே நின்றுமைந்தா கசடறவேதுன்மைநீ கண்டுதேறி, மாட்டினால்ஜோசியத்தைமனதில்காணும் மார்க்கமென்ற அமுதத்தைப் பானம்பண்ணு, பூட்டினாள்தாள்திறந்து வுலகத்துள் ளே புதுமைகளைக்கண்டுமேதேறிதேறி, ஆட்டினாலம்பலத்திலேற லாகும் அப்பதியிலேறிமெள்ளவமுதங்கொள்ளே. 670

கொள்ளப்பாபூரணத்தைகொண்டுதேறி குணமாகமனதறிவால் குருவைக்கண்டு, விள்ளப்பாவுனதுடையபாட்டையெல்லாம் விண்ட தினால்மனமகிழ்ந்துவருட்பாலீவார், செல்லப்பாவதின்பிறகுசாத்தி ரத்தைத்தேடி சிவசிவாகண்டதெல்லாமெழுதிப்போட்டு, சொல்லப் பாமனக்கண்ணி னருள்கண்ணாலே சொன்னதினால்பொருளடக்கந் தோணும்பாரே. 671

கெந்திபாஷாணம்.

பாரப்பாகெந்தி பாஷாணந்தன்னை பகருகிறேன்புலத்தியனே பண்பாய்க்கேளு, ஆரப்பாவறிவார்கள்கெந்திரசந்தன்னை யணைத்திடு வாயதின்பிறகுசெயநீர்வாங்கி, காரப்பாபூமியுடநாதந்தன்னை கருவா கத்திசநாதம்வாங்கிமைந்தா, சேரப்பாமுன்சொன்ன நீரில்மைந்தா சேர்த்துமிகக்கரைக்கவே யனலாம்பாரே. 672

பாரப்பாவனல்மீறி சுடும்போதன்னில் பக்குவமாய்முப்பூவுங் காலுங்கூட்டி, சேரப்பாவடிமுடியுங்கூடச்சேர்த்து மைந்தனேயடுப் பேற்றியலைவில்லாமல், காரப்பாஅலைவில்லாப்பாண்டந்தன்னில் கருக் கவேதணல்மூட்டியெரித்திடாயே. 673

எரிக்கவேமருந்தெல்லாம்பாண்டத்துள்ளே யிளகிமெள்ளவுருகியதுகல்போற்சேருந், தறுக்கவேவனலாறும்போதுமைந்தா தப்பாமலுடைத்துமிகத்தயவால்வாங்கி, பெருக்கவேபீங்கானில்பதனம்பண்ணி பெருமையுளமவுனமதாய்குருவைப்போற்றி, உருக்குவெண்ணையிதுவாகுமென்றுமைந்தா உண்மையுடன்குன்றிநிறையெடுத்துக்கொள்ளே. 674

எடுத்ததொருகெந்தியுடமகிமைகேளு என்னசொல்வேன்புலத்தியனேயடக்கமாக, தொடுத்தவெள்ளிநூறுக்குயீந்தால்மைந்தா சுகமாகவயதுசொல்லமுடியாதையா, அடுத்தொருவர்கெந்திமுறை கேட்டாலுந்தான் ஆரறிவாரென்றுநீயகலநில்லு, முடித்ததொருபூவாசமறிவோர்க்கெய்து மூர்க்கமுடனிந்நூலைப்பதனம்பண்ணே. 675

கெவுரிரசம்.

பண்ணப்பாகெவுரியுட முறையைக்கேளு பண்பானபுலத்தியனேயறிவுள்ளானே, விண்ணப்பால்வணமொடுகாரசாரம் விசையானபடிகமொடு பூரணமுங்கூட்டி, கண்ணப்பாமஞ்சளென்றகருவுங்கூட்டி கருக்கூட்டிகல்வத்திலாட்டிநன்றாய், மண்ணப்பாசட்டிதனில் வைத்துமைந்தா மைந்தனேயடுப்பேற்றியெரித்திடாயே. 676

எரித்திடவேசட்டிக்குள்மருந்துதானு மிளகிமெள்ளவுருகியதுமஞ்சள்போலே, பெருத்தகல்லுப்போலுறைந்துமஞ்சளாக பெருமையுளகெவுரியென்றபேரேயாகுங், குறித்தபொருள்காதியென்றகெவுரியாகுங் குணமானகெவுரிரசமுறைதானப்பா, பரித்தகடுயிதற்குநிகரொவ்வாதையா பாலகனேயிதினுடையபரிசுகேளே. 677

கேளப்பாஅட்டமா யோகமெல்லாங் கெம்பிரமாய்பழுக்குமிதினுடையநேர்மை, நாளப்பாநாளிலொருநாளிற்றானும் நன்மையுள்ள அட்சயனும் வருவாரப்பா, வேளப்பாஎரித்தசிவனட்சயன்தனக்குவேண்டியே ஒருவார்த்தையீந்தாரப்பா, ஆளப்பாயவ்வார்த்தைகேளுகேளு அன்பாயொன்றட்சயமாயிருவென்றாரே. 678

வென்றதொருஅட்சயத்துக் குயிரேதன்னில் வேதாந்தசத்திசிவமிரண்டுங்கூட்டி, கொண்டதொருவட்சரத்தைக் குறியில்நாட்டி குருவாயொன்றட்சயமென்றுருவைநாட்டு, அண்டர்தொழவுருவேற்றிநின்றபூதி அன்பாகநீயெடுத்துமைந்தாகேளு, கண்டதொருபதார்த்தமதிலணுவாய்ப்போட்டு கைநீட்டியெடுக்கவதுதுலையாதண்ணே

துலையாதவட்சரத்தை யார்தான்காண்பார் துடியானகெவுனதிமார்க்கமார்க்கம், மலையாமலட்சரத்தைமவுனமாக மார்க்கமுடனேதியேமனதுட்கொண்டால், அலையாமல்பூரணத்தைநோக்கலாகு மப்போதுமதியமுதங்கொள்ளலாகும், சிலையானதேகமதுவழியாதப்பா சிவசிவாபூரணத்தின்செயல்தான்பாரே. 680

சவ்வீரவைப்பு.

பாரப்பாசவ்வீரவைப்புகேளு பரமானவெடியுப்புபத்தாங்காச்சல், காரப்பாகல்லுப்புசீனக்காரங் கட்டியதோர்நவாச்சாரஞ்சவுக்காகாரந்தான், வீரப்பாதானடங்கும்பொரிக்காரந்தான்வெள்ளியென்றதுருசுடனேபேதிகெந்தி, சேரப்பாமுப்பூவுங்கூடக்கூட்டி சேர்த்துமிக்துகைபார்க்கப் பத்துமாச்சே. 681

ஆச்சப்பாபத்துவகை சரக்கொன்றுக அனைத்துமேஜந்திடைக்குச்சூதஞ்சேர்த்து, பாச்சப்பாகல்வத்தில் பொடியைத்தாக்கி பார்க்கையிலே ரசமாண்டுமொன்றாய்ப்போகும், நீச்சப்பாஜெயநீரால் பிசரிக்கொண்டு நேர்மையுட்ன்காசியென்றகுப்பிக்கேற்றி, காச்சப்பாமண்சீலைஏழுஞ்செய்து கருவானகுப்பிதனைப் பதனம்பண்ணே. ()

பண்ணியதோர்குப்பிதனை பாண்டத்துள்ளே பக்குவமாயுப்போடுபதிவாய்ப்போட்டு, உண்ணியேகுப்பிதனைநடுவேவைத்து வுத்தமனேமேலுமந்தப் பொடியைப்போட்டு, நண்ணுறவேபாண்டமதின் வாயைமூடி நலமாகமண்சீலைநன்றாய்ச்செய்து, தண்ணுறவாய் குருபரனைத் தொழுதுபோற்றி தயவானவனல்மூட்டி யடுப்பிலேற்றே. 683

ஏற்றியேசருகுகம்பு விறகினாலே யிதமாகபதினாறு சாமமாட்டி, ஆற்றியேபாண்டமதிலுடைத்துமைந்தா அதிலிருக்கும்குப்பியைநீயன்பாய்வாங்கி, போற்றியேயுடைத்துப்பார்மதிபோல்காணும் புதுமையுடன்கிள்ளிப்பார் கல்போற்காணு, நேத்தியென்வயிரம்போல் ஒளியேவீசு நேர்மையுளவீரனுடவளமைகேளே. 684

கேளப்பாமுன்போலேகல்வத்திட்டு கெணிதமுடன்பொடித்து நன்றாய்மாவதாக்கி, தேளப்பாகொட்டுதல்போல் செயநீர்விட்டு திராக்ஷக்கேசரியைக்குப்பிக்கேற்றி, கோளப்பாவாராமல்பாண்டத்துள்ளேகுண்மாகமுன்போலே குப்பிவைத்து, தாளப்பாமண்மூடிமண்ணுஞ்செய்து தப்பாமலடுப்பேற்றியெறித்திடாயே. 685

எரியப்பாயீராறுசாமமாட்டி எரித்தபதங்கட்டியின்மேல் நெல்லைப்போட்டால், பொரியப்பாஎழும்பியதுவிழுந்துதானல்புத்தியுள்ளபுலத்தியனே பதந்தானென்று, குறியப்பாமறவாமற் பூசைபண்ணி குளிரமட்டும்நீயிருந்து எடுத்துப்பாரு, வரியப்பாதானேடி வீரந்தானும் வாகாகயிரைமடக்குச் சரக்குமாச்சே. 686

ஆச்சப்பாயின்னமொருமடக்குச்சொல்வேன் அரகராமுன்போலேகல்வத்திட்டு, தேச்சப்பாபொடித்திடுவாய்மாவதாகசெப்பமுள்ளசெயநீரால்மாவைக்கிண்டி, பாச்சப்பாகுப்பிதனில்பதனமாக பக்குவமாய்த்தானடைத்து மண்ணுஞ்செய்து, மூச்சப்பாதானடங்கசலாகைபோட்டு முக்கியமாய்ப்பாண்டமதிற்பதியவையே. 687

வையப்பாவடுப்பேற்றித்தீயைமூட்டி வரிசையாய்முன்போலேயெடுத்துமைந்தா, பையப்பாஆறுசாமமெரித்தபின்பு பக்குவமாய்

சலாகைதனைத்திருப்பும்போது, கையப்பாசாயாமல்நிதானமாக கைமுறையாய்திருகியபின் சலாகைவாங்கி, செய்யப்பா மேல்மூடிசீலைசெய்து திறமாகத்தீயெரித்து யிறக்குவாயே. 688

இறக்கியபின் ஞாறவிட்டு எடுத்துப்பாரு இறுகிவெகு வலுவாகயிருக்கும்வீரம், உருக்கமுள்ளவீரமென்னவீரமென்றால் உத்தமனேசவ்வீரமிதுவேயாச்சு, சுருக்கமென்ற கருக்கமெல்லாம் வீரம்வீரங்கருவாகவின்னமொரு மடக்குக்கேளு, பெருக்கவேசவ்வீரக் கட்டிவாங்கி பெருமையுள்ள செயநீரில் தோய்த்துப்போடே. 689

போடப்பாரவிமுகத்தில் பத்துமுறைதானும் புகழானவீரமதுஎன்னசொல்வேன், நாடப்பாசெயநீரின்வலுவினாலே நாவடங்காவீரவலுவென்ன சொல்வேன், கேடப்பாவீரமென்ன சிரமேதென்றால்சிவந்தமஞ்சள்நிறமாகு மைந்தாபாரு, கூடப்பாமஞ்சள்நிற வீரனைத்தான் கொடுமையுள்ளசுன்னமதில் சிகப்புமாச்சே. 690

ஆச்சப்பாயிவ்வீரங் கொச்சிவீரம் ஆரறிவார்கொச்சியுட வாழுந்தன்னை, நீச்சப்பாவெகுநீச்சு கரையேகாணேன் நினைத்தசுன்னமகாரமதுக்காதியாகும், பாச்சடாகெவுனரசமணிக்குநல்ல பாங்கானசாரணைக்கு மிதுவேமூலம், வாச்சப்பாவேதையுட வீரம்வேணும்வலுவான நீர்மெழுக்குக் காதிதானே. 691

தானென்றபன்னிரண்டுநூறுக்குள்ளே சகலகலைக்கியானமெலாமடக்கம்பண்ணி, கோனென்றகுருமுறையுமடக்கம்பண்ணிகோடானகோடிவித்தை குறியுஞ்சொல்லி, தானென்ற ருசிபோலே ஞானஞ்சொல்லி தெவிட்டாத பூரணத்தின் வகையுஞ்சொல்லி, மானென்றமவுனமென்றகுறியுஞ்சொல்லி மனமடங்கவறிவுமிகவசனித்தேனே.

வசனித்த யிந்நூல்தான் பெருநூற்கப்பா வண்மையுளகருக்கமிதுபன்னிரண்டுநூறும், நிசனித்த சுருக்கமிது கோடாகோடி நீள்திசையில்மெத்தவுண்டுகண்டுபாரு, வசனித்துப்பாராமல் கருவாய்ப்பாருபார்க்கையிலேயிந்தநூல்பருவப்பாரு, திசனித்துகருவாகயிந்தநூலை செகத்தோர்க்குச்சொல்லாதே மனதாய்ப்பாரே. 693

## தொட்டிபாஷாணவைப்பு.

பாரப்பா தொட்டிபாஷாணந்தன்னை பண்பாக வைக்குமுறைபகரக்கேளு, காரப்பா சீனமுடன் பூரங்கூட்டி கருவாகவெடியுப்புகூடச்சேர்த்து, சாரப்பாசூதமொடு நாகஞ்சேர்த்து தயவாக அந்திடைக்குக் காந்தங்கூட்டி, வீரப்பாதானடங்க வெண்கருவாலாட்டிமேன்மையுடனிருப்பகலில் வைத்துமூடே. 694

மூடப்பாசட்டியிற்குளிருப்புகலைவைத்து மூர்க்கமுடனுப்பிட்டுமேலுமூடி, வீடப்பாபிலப்பதற்கு வடுப்பிலேற்றி விசையாகமுச்சாமமெரித்துவாங்கி, பாடப்பா ஒன்றுமில்லை யாறவிட்டு பக்குவமாயு

டைத்தெடுக்க மைந்தாகேளு, தேடப்பாதொட்டிபாஷாணமென்பார் செகத்தோர்க்கு இந்தமுறை தெரியாதன்றே. 695

தெரியாதுதொட்டியுட முறையைக்கேளு சிவசிவாநாதமதுதிர மாய்க்கட்டும், பரியான தங்கத்தால்குருவ தாச்சுபழுப்பாகும்வெள்ளி செம்பில் பதமாய்ப்பாரு, குறியான குறியறிந்து குருவைக்காத்து குணமானபூரணத்தைக் குறிப்பாய்க்கொண்டு, அரிதான இந்நூலைப் போற்றுவோர்க்கு ஆச்சரியம் வெகுவித்தை யறிவார்பாரே. 696

பாரப்பாபங்கபத்தை யறிவால்பாரு பதுமமலர் பூரணத்தைப் பதமாய்க்கொள்ளு, தேரப்பா செயலறிந்து தோத்தேறி தேகவச் சிரகாயமதா யிருக்கவேணும், ஆரப்பா அறிவார்கள் கற்பக்கூறு அரகராகாயாதிகற்பமென்று, நேரப்பா நிலையறிந்து கொள்ளமாட் டார் நினைவறிந்து மனதறிந்து நிதானம்பாரே. 697

பாரென்றுஞ் சிவமென்று மழல்தானென்றும் பார்தனையேகாக் கிறதோர்வாயுவென்றுங், காரென்றுமாகாசசென்னயென்றுங் கருத் தாகத்தானிருந்து கருவைக்கண்டு, நேரென்று தானறிந்து அஞ்சு மொன்றாய் நினைவாகப் பூசிக்க மைந்தாகேளு, ஆரென்றுவுனக்கு நிகர் சொல்லாரையா அரகரா அடிமுடியை மறந்திடாதே. 698

## சிங்கிமுறை.

மறவாமல்சிங்கியுட முறையைக்கேளு மகத்தான வெடியுப்பு சீனங்கூட்டி, உறவானகாரமதுமூன்றுமொன்றாய்உத்தமனேயிதுக்கு நிகர்நாகங்கூட்டி, திறமான வடிமுடியுங் கூடச்சேர்த்து செம்மையுள துருசதுவுங் காலுங்கூட்டி, அறமான பூக்குகையில் வைத்துவூத அப்பனே யுருகியது குழம்பாம்சாறே. 699

குழம்பானபதங்கண்டு பதமுஞ்சேர்த்து குறிப்பாகக் குகையெ டுத்துமைந்தாநீயுந், தளமானவளந்தனிலேதளப்போல்கீறி தன்மை யுடனதில்வார்க்க இறுகும்போதில், நலமாகவுடைத்தெடுப்பாய் துண்டு துண்டாய் நன்மையுடமிருதாரு சிங்கியாச்சு, வளமான சிங்கிதனை யாரறியப்போறார் மகத்தான வேதைக்கு சிங்கியாச்சே. 700

சிங்கியென்ற சிங்கியுட முறையைக்கேளு சிவசிவா செம்பு வெள்ளிப் பொன்தான் மூன்றும், அங்கமதாய் குகைதனிலே யுரு கும்போது ஆதியந்த மென்றசிங்கி யதிலேபோடு, பங்கமில்லாச் சிங்கமது ஆட்டைக்கண்ட பரிகாச மூன்றையுந்தான் கவ்வுமப்பா, சங்கையுடன் குகைதனிலே நாலுமொன்றாய் தன்மையுட னுருகியது ஒன்றாம்பாரே. 701

ஒன்றாகி உருகிநின்றகளங்குதன்னை உடைத்துப்பார் மாப்போ லேயுதிருமப்பா, நன்றாக அப்பொடியைப்பதனம்பண்ணு நாட்டுவாய் செம்புதனில் நூற்றுக்கொன்று, குன்றாத வயதென்ன சொல்லப் போறேன் குருவானசங்கமடாமயங்காதையா, சென்றாட அம்பலத்தி னருளைக்காட்டுஞ் சிவசிவா சிங்கிமுறை நன்றாம்பாரே. 702

### சிங்கிமெழுகு.

பாரப்பாகட்டுமுறைசிங்கிவாங்கி பண்பாகக்கல்வத்தில்பொடித் துக்கொண்டு, நேரப்பாலுங்கோலத்தாலே நினைவாகத்தானரைக்கும் போதில்நீதான், வாரப்பாசூதமொடுநாகம்லிங்கம் வரிசையுள்ளகாந்த முடனயமுங்கூட்டி, சாரப்பா அரைத்தெடுப்பாய்நாலுசாமம் சமர்த் தாக அரைத்தெடுக்க மெழுகுமாச்சே. 703

ஆச்சப்பாமெழுகிலொருகாணிதூக்கி அப்பனே வெள்ளியொரு காணி நூலில், பாச்சப்பா இம்மெழுகைஎன்னசொல்வேன்பகரறிதாய் துலங்குகின்ற தங்கத்தால்தான், நீச்சப்பா வெகுநீச்சு சொல்லப் போமோ நிலையில்லாக்காயமதை நிறுத்தவேண்டி, காச்சப்பா மூல மென்ற கனலிற்றானுங் கனகமென்னதேகம் வச்சிரகாயமாமே. 704

### காயாதிகற்பம்வல்லாரை.

காயமென்றகாயாதிகற்பந்தன்னைகருணைபெறச்சொல்லுகிறேன் மைந்தாகேளு, நேயமுடன்வல்லாரை யாறுமாதம் நிலைத்ததொரு ஆரையடா ஆறுந்திங்கள், தாரகமாய்க்கொண்டுவந் துலர்த்திமைந்தா சமரசமாய்த்தூளாக்கி கல்வத்திட்டு, மாழமென்ற தூள்தனிலே கழஞ்சிகொள்ள மாயாதுகாயமது வலுவாய்ப்போச்சே. 705

### கடுக்காய்கற்பம்.

போச்சென்று விடாமலே தினமுங்கொண்டால் போகும்டா நரைதிரைகள் சாவேயில்லை, ஆச்சென்று கடுக்காய்தான் வருஷ மொன்று அப்பனே அதின்முறையைச் சொல்லக்கேளு, வாச் சென்று கடுக்காயைத் தகர்த்துக்கொண்டு வளமாக அமுரியிலே ஊறப்போட்டு, காச்சென்று மறுநாள்தான் காயப்போட்டு கணக் காகப் பத்துமுறை சுத்திசெய்யே. 706

சுத்திசெய்தகடுக்காய்தான்செங்கடுக்காயாச்சு சுகமானகடுக்காய் தன் முறையைக்கேளு, பத்தியுடனிடித்துவடிக் கட்டிமைந்தா பாங் கானகரகமதில் பதனஞ்செய்து, புத்தியுடன்பூரணத்தைப் பணிந்து போற்றி புனிதமுடன்ரேசகபூரகமும்பண்ணி, வெற்றிபெறக்கும்ப கத்தினின்றுகொண்டு வேதாந்தகற்பமதை விரும்பிக்கொள்ளே. ()

### பத்தியம்.

கொள்ளடாகாலையிலேவல்லாரைகொள்ளு கொண்டபின்புமதிய மதிலமுதுகொள்ளு, தள்ளடா கடுக்காயை மாலைதன்னில் தூளில் லொருகடியளவாய்த் துணிந்துகொள்ளு, நள்ளடாமதியமதி லமுது கொள்ளு நானொன்றுசொல்லுகிறே நயந்துதேளு, பல்லுடனேகால் முகங்கள்சுத்திபண்ணி பாலகனே விபூதியுந் தளமாய்ப்பூசே. 708

பூசியே ரெண்டெழுத்தை ஒன்றாய்க்கூட்டி பூரணமாய் செய்த பின்பு அசனங்கொள்ளு, நேசமுட னமுதுகொள்ளு சிறுபயறு கொள்ளு நேர்மையுள சர்க்கரையும் பழமுங்கொள்ளு, வாச்முள

பதார்த்தமெலா மகிழ்ந்துகொள்ளு மகத்தானகடுக்காய்தான் வனு வாய்ப்பாரு, ஈசுரனுருரைத்தபடியேநின்றால் பலிக்குமடாகாயசித்தி யோகந்தானே. 709

## லிங்கங்கட்டு.

யோகமுள்ள புலத்தியனே சொல்லக்கேளு வண்மையுள லிங்க முரையுரைக்கக்கேளு, நாகமென்றகருநாகம் வங்கமொன்று நலமான சூதமொன்றுகுருத்தானென்று, பாகமென்ற சீனமொன்று ஆதியந் தம் பக்குவமெலாங்கூட்டிக் கல்வத்திட்டு, ஆகமென்ற செயநீரால் பொடித்துக்கொண்டு அப்பனே குப்பியிட்டு எரித்திடாயே. 710

எரித்திடவே விந்துநின்ற தாரையோடி ஏகமென்ற கம்பியதா யிறுகிநிற்குங்,குறித்திடவேகுளிர்ந்தபின்புவடைத்துப்பாருகூர்மை யுனக்குப்பிவைப்பின்கம்பியாகுந், தரித்திரமேபோய்விடுமே லிங்கங் கண்டால் தன்மையுள்ள விந்துவுடநாதமாகும், வருத்திம்கப்போர்த் திடுவாய்லிங்கந்தன்னை மகத்தான லிங்கமதின் வரிசைகேளே. 711

தேளப்பா லிங்கமதைத் தங்கத்தூட்டி கெணிதமுடன் தானெ டுத்து வைத்துக்கொண்டு, தேளப்பா கொட்டுதல்போல் வெள்ளி நூற்றில் தெவிட்டாதலிங்கந் தங்கமொன்றுதாக்கி, கோளப்பாவத் தங்க மென்னசொல்வேன் குறையற்ற தங்கமடா கூர்ந்துபாரு, வேளப்பா எரித்தசிவ னெனக்குச்சொன்னார் வேதாந்தப் பனிரண்டு நூற்றில்தானே. 712

தானென்றபனிரண்டுநூற்றைமைந்தா தரணிதனில்விள்ளாதே நாவாடாதே, கோனென்ற குருபாத மடுத்துக்காரு குருவான பெரி யோரைவணங்கிமைந்தா, தேனென்றவமுதமதுகொண்டால்மைந்தா தேகவச்சிரகாயமடா திரஞ்சொன்னேனன், வீணென்றவீணருடன் வீண்பேசாதே விண்ணொளிக்குள் கண்ணொளியை மேவிப்பாரே.

பாரப்பாமதியிருந்த திரையைப்பாரு பக்குவமாய்த்தானறிந்த பருவந்தன்னில், நேரப்பூரகதிரிருந்ததிரையைப்பாரு நின்னிடத்தில் மாறினதை நினைவாய்கண்டு, தேரப்பா நின்மனதை யறிவால்தேரு தேர்ந்ததினால் காயசித்தி ரசமதாகும், ஆரப்பா வறிவரீர்கள் சத்தி சிவந்தன்னை அறிவான பெரியோர்க ளறிவார்பாரே. 714

## நாகமுறை.

பாரப்பா நாகமென்ற முறையைக்கேளு பக்குவமாய் சொல்லு கிறேன் மைந்தாமைந்தா, தேரப்பாதேகமென்ற வெண்ணைகந்தான் சேர்ந்துநின்றகருநாக முயிருமாச்சு, வேரப்பாயிருவகையுமொன்றே யாகும் வெடியுப்பு நாலிலொன்று சூதம்ரெண்டுங், காரப்பாகருவுப்பு நாகப்புற்றுக் கல்லுப்புக் குண்டுமணிப் பருப்புங்கூட்டே. 715

கூட்டியேயிடைசமனாய் கல்வத்திட்டு குருவானகருவாலே ஆட் டிக்கொண்டு, மட்டியே குகைபிடித்துக் குகைக்குள்வைத்து மைந் தனே துருசிட்டு வுலையில்வைத்து, நாட்டியேயுலையில்வைத்து வூதும்

போது நன்மையுடனுருகியல்லோ தெளியும்பாரு, வாட்டியேபதங் கண்டு தெளிந்துதானல் வயிரம்போல் கண்விழுந்த நாகமாச்சே. ()

நாகமென்றநாகமதை யார்தான்காண்பார் நல்லோர்களறிவார் கள்மற்றோர்காணார், தேகமென்றதேகமதி லுயிர்தானின்ற திறமான வுடலாவி காணார்காணார், பாதமென்றவுடலாவி தனக்குமைந்தா பண் பானபொருளதுவுங் காணமாட்டார், ஆகமென்ற பொருளதனைக் கண்டாரானல் அப்பவல்லோ வாதசித்தி நாகமாச்சே. 717

ஆச்சப்பாநாகமதி லஞ்சுவுண்டு அஞ்சானநாகமதில் ரெண்டைக் கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை ராகுகேது பிசகாமல்ரெண்டு மல்லோ ஒன்றைஒன்று, மூச்சப்பா பிடித்தல்லோ கொன்றுபோடும் முனையான சுழிமுனையி லுயிருமாச்சு, பாச்சப்பா குகைதனிலே நாக மிட்டு கருவான சத்துருமித் துருவைமாட்டே. 718

மாட்டினதோர் நாகமது கட்டிப்போச்சு மகத்தான குருவாக்கு மைந்தாகேளு, தாட்டிகமாய்க்கட்டினதைத்தானெடுத்து தன்மையுள மேருவிலேநூற்றுக்கொன்று, நாட்டினதால்சேதியென்ன சொல்லப் போறேன் நாகரத்னமணியதுவு மொவ்வாதையா, தேட்டினதால் நாகமதைத்தேடவேணுஞ் சிவசிவா வாசுகையின் திறந்தான்பாரே.

பாரப்பா வுலகத்தில் தாதிசொல்லும் பார்த்தேனுன் காதாரக் கேட்டேனென்றும், வீரப்பாதானடைந்து சொல்லுஞ்சேதி விள்ளு கிறேன் புலத்தியனே மனதாய்க்கேளு, சாரப்பா பச்சிலையால் தங்க மாச்சு சாரமென்றவுமிநீரால் தங்கமாச்சு, சாரப்பா க்ஷணிக்காத்தாற் பஸ்பம்பண்ணி கண்மூடி முழிக்குமுன்னே தங்கமாச்சே. 720

தங்கமென்ற அங்கமது குருத்தான்பண்ணி சலுதியிலே பத் தரைதான் மாற்றைக்கண்டேன், அங்கமுட னிமிஷத்தில் வேதை போட்டார் அரகரா மண்ணதுவும் பொன்னுய்ப்போச்சு, சங்கை யுடன்கண்டனென்று சொல்வான்மட்டை தங்கமென்ற அங்கமதை யறியாப்பாவி, பங்கமென்ற வாயகந்தை பேசும்பாவி பார்தனிலே மெத்தவுண்டு கண்டுதேறே. 721

பெரியோர்மகிமை.

கண்டுதேர் மனமுகந்து பேசவேண்டாங் கடக்கநின்று அகற்றி விட்டு கருவைக்கேளு, பண்டுடைய பரமவொளி கண்டபேர்கள் பதறாமல் வறுமையொத்திருப்பாரையா, தொண்டரெனத் தொண் டரைப்போ லுலகத்துள்ளே சுத்தமுள்ள மானிடரைத் துலங்கிப் பார்த்து, அண்டர்பிரான் பரமருளை யவருக்கீந்து ஆதியந்தம் நடு மூன்று மருள்செய்வாயே. 722

அருளானமுப்பொருளுமவருக்கீந்து அவர்தேகபீடையெல்லா மகற்றிக்கொண்டு, இருளான மாய்கையெல்லா மகற்றிநல்ல ஏகாந்த தசதீட்சை யவருக்கீந்து, பொருளான அனுக்கிரகப் போதமீந்து புத்திமதி இரண்டையுமே போதித்தப்பா, மருளாம லவரிடமே தவமேசெய்வார் மார்க்கமுள்ள தவமுடையார் வழிதான்பாரே. 723

· பாரப்பா குருமுறையைக் காணவென்றால் பாடுமெத்தப் பாடு மெத்த மைந்தாமைந்தா, ஆரப்பா அறிவார்கள் குருமுறை தானப்பா அதற்குமொரு இடம்பொருள்தா னேவல்வேணும், னேரப்பா பொருளதுவுங் கிட்டிச்சானால் நேர்மையுடன் கிட்டுவது எப்படியோ வென்றால், தேரப்பா வுலகமதில் சென்றுதேறி செகத்திலுள்ள நால்வகையில் சாதிபாரே. 724

சாதியிலே எச்சாதியானாலென்ன தன்மையுள்ள மானிடரிற்கோடிக்கொன்று, ஆதியிலே விட்டகுறைக்காரருண்டு அவர்களுட மனதறிந்து சேர்ந்தாயானால், சோதியென்ற பொருளீவார் வெகுசாயப்பா சொன்னபடி யாட்டிவிக்குஞ் சோதிசோதி, வீதியென்ற இடம் பதினாறு முழத்துள்ளே வீடுகட்டும் வகையதனை விளம்பக்கேளே. ()

சமாதியிடம்.

கேளப்பா நானுன்குச் சதிரமாகக் கெணிதமுடன் வெட்டிநன்றாய்க் கல்லினாலே, வாளப்பா பூமியின்கீழரைமூன்றாகும் மகத்தான பூமியின்மேலரைமூன்றாகுங், கோளப்பாவாராமற்கட்டித்தீர்ந்து கூர்மையுடன்மெழுகுதற்கு வகையைக்கேளு, காலப்பாபிலப்பதற்குள்ளறையில்மைந்தா கருஞ்சாந்தால் மெழுகிநல்லாய்க் கடிந்திடாயே.

கடுத்துவலுத் தானதின்பின் மேல்போக்கெல்லாங் காங்கையுள்ள வெண்சாந்தாற் பூசிமைந்தா, அடுத்தடுத்து நாலுதிரம் பூசிமைந்தா அடிவலுக்க நன்றாகத் தீர்த்துத்தீர்த்து, நடுத்திரமாய்க் காய்ந்தபின்பு அறைகட்குள்ளே நல்லதொருசந்தனத்தின் கட்டைச்சீவி, வடுத்தவிரா சாம்பிராணிப் பொடித்துச்சேர்த்து மைந்தனே அக்கினியிற் போடுபோடே. 727

போட்டவுடன் கையெழும்பும் வாசந்தன்னை பொருந்தவே அரைத்துநன்றாய்ப் பூட்டுபூட்டு, நாட்டமுடன் மண்டலந்தான் சென்றபின்பு நடுவாசந் தனில்நிறுத்தித் திட்டிதன்னால், பூட்டை நன்றாய்த் திறந்துமிக ஆறப்போட்டு புண்ணியனே தானமன்ன தானஞ்செய்து, தேட்டமுடன் விட்டங்கே யிருந்துக்கொண்டு சிவசிவா பூரணத்தை நோக்குநோக்கே. 728

நோக்குவது பூரணத்தை பணிந்துக்கொண்டு நுண்மையுள முப்பூவைமுடித்துக்கொண்டு, ஆக்குவது அமுதரசவர்க்கத்தோடே அப்பனே அமுதுகொண்டு கற்பங்கொண்டால், நாக்குநுனி அமுதரச மென்னசொல்வேன் நாவடங்கப் பூசைபண்ணி நாட்டம்பார்த்து, வாக்குமன தொன்றாக முப்பூச்செய்ய வழலைமுறை தனைவழுத்தும் வழியைக்கேளே. 729

முப்பூமுடிக்கும்வகை.

கேளப்பா அயமானவுருக்குச்சட்டி கெணிதமுள்ள அயக்காந்தச் சட்டியொன்று, வேளப்பா காந்தமென்ற சட்டியொன்று வீறடங்கு நாகமதாற் சட்டியொன்று, தேளப்பா கருநாகச் சட்டியொன்று தெவிட்டாதவொண்ணாகச் சட்டியொன்று, வாளப்பா அயச்செம்பால் சட்டியொன்று மார்க்கமுள வெள்ளிதன்னாற் கட்டியொன்றே.

ஒன்றான தங்கத்தால்சட்டியொன்று வுத்தமனேபத்திரமும் ஒன்பதாச்சு, அன்றான நவக்கிரக பானபத்ரம் அப்பனே வழிமுறையாயடக்கிக்கொண்டு, நன்றாக அமுதரச வர்க்கங்கொள்ளு நன்மையுடன் கற்பமது அப்படியேகொள்ளு, குன்றாத முப்பூவின் செய்கைமார்க்கங் கூறுகிறேன் வழிமுறையாய்க் கூர்ந்துகேளே. 731

## ஆதியுப்பு.

கேளப்பா ஆதியென்றசவுக்காரத்தை கெணிதமுடன்கொண்டு வந்துவந்துநீரால், நாளப்பாதெசநாள்தான் தோய்த்துத்தோய்த்து நன்றாகரவிமுகத்தில்சாய்ந்துதானால், நீளப்பாசாரமதினுப்புசென்று நேரானவழலையது கல்லுப்பாச்சு, ஆளப்பா ஆதியென்ற வுப்புமாச்சு அப்பனே நாதவிந்து வுப்புக்கேளே. 732

## நாதவிந்துப்பு.

உப்பானசத்திசிவ மிரண்டுகூட்டி உடன்சேருபூரமுடன் நாதங் கூட்டி, செப்பானஅயம்உருக்குச்சட்டிதன்னில் சேர்க்கையுடனாலின முங்கரைத்துவைத்தாய், அப்பானதெளிவிறுத்து பாத்திரமெட்டில் அரையளவு விட்டுரவிமுகத்தில் வைத்தால், கைப்பான வுப்பதுவு மெட்டாநாளில் கடுங்கார வுப்பதுவால் விளையுந்தானே. 733

விளைத்தவொருவுப்பதுக்குநாமங்கேளு விசையானசத்திசிவவுப் பதாச்சு, விளைந்தசிவசத்தியுப்பின்மார்க்கங்கேளு மகத்தானசிவத்தி னடிசத்திகூட்டி, உளைந்தவருவுப்புடனேயிந்துகூட்டி உடன்சேர்த்து அயக்காந்தச் சட்டிதன்னில், குழைத்துநன்றாய்க் கரைத்திறுத்து தெளிவைமைந்தா கூர்மையுடன் பாத்திரத்திற் குணமாய்வாரே. ()

வார்த்துநன்றாய் ரவிமுகத்தில் காயக்காய வளமையுள்ள வுப்பா கும்பத்துநாளில், கார்த்துமிகவுப்பெடுத்து வைத்துக்கொண்டு கலங் காமல்கீழரையில் பதனம்பண்ணி, சேர்த்துமிகமுப்பூவு மொன்றாய்க் கூட்டி செயமான அயமுறுக்குச் சட்டிதன்னில், தாற்றிநன்றாய் செய நீரில் கரைத்துமைந்தா தயவாக ரவிமுகத்தில் காயப்போடே. 735

போட்டவுடனுப்பாகுமைந்தாகேளு புகழான அயக்காந்தச்சட்டி தன்னில், தேட்டமுடன்போட்டுநன்றாய் செயநீர்வார்த்து திரளவே கரைத்துரவிமுகத்திற்போட்டு, நாட்டமுடனவநாள்தானுப்பேயாகு நன்மையுடவுப்பெடுத்துச்சொல்லக்கேளு, வாட்டமிலாக்காந்தமதின் சட்டிதன்னில் வார்த்திடுவாய் செசநீரை மைந்தாபாரே. 736

பாரானவுப்பெடுத்துக் கரைத்துமைந்தா பதிவாகரவிமுகத்தில் வைத்துப்போற்று, நேராக எட்டாநாளுப்பேயாகும் நிசமாக வுப் பெடுத்து சொல்லக்கேளு, வீரானநாகமதின் சட்டிதன்னில் விசை யாகவுப்பிட்டு செயநீர்வார்த்து, கூறாகரவிமுகத்தில் வைத்தாயானால் குறையாத வுப்பாகுங் குருவாம்பாரே. 737

பாரப்பா கருநாகச்சட்டிதன்னில் பக்குவமா யுப்பிட்டு செயநீர் வார்த்து, சாரப்பா கரைத்திடுவாய் நன்றாய்மைந்தா தன்மையுடன்

ரவிமுகத்தில் வைத்துப்பார்க்க, தேரப்பாவழானா ளுப்பேயாகும் தெவிட்டாதவுப்பதனை எடுத்துமைந்தா, வேறப்பாவொண்ணுகச் சட்டிக்குள்ளே வேதையென்றவுப்பெடுத்து செயநீர்பாச்சே. 738

பாச்சிநன்றுய்க்கரைத்துமிக ரவியில்வைத்தால் பரமானவுப் பாகுமாறுநாளில், காச்சியதோருப்பெடுத்து மைந்தாமைந்தா கரு வின்னஞ்சொல்லுகிறேன் கருதிக்கேளே, தாட்சியிலா தாம்பிரப்பாத் திரந்தன்னில் தயவாகவுப்பிட்டுச் செயநீர்வார்த்து, வாச்சுதென்று கரைத்திடுவாய்நன்றுய்மைந்தா மகத்தானரவிமுகத்தில் வைத்துப் பாரே. 739

பார்க்கவே அஞ்சாநாள்காரமேறி பசுமையென்றவுப்பாகு மைந் தாமைந்தா, ஏற்கவேயுப்பெடுத்து மைந்தாகேளு ஏகாந்தவெள்ளி யென்றசட்டி தன்னில், மார்க்கமுடனுப்பிட்டுசெயநீர்வார்த்து, மன மடங்காரவிமுகத்தில்வைத்துமைந்தா, சேர்க்கையுடநாலாநாளுப்பே யாகுஞ் சிவசிவா இதின்பெருமை செப்பக்கேளே. 740

கேளப்பாசத்திசிவ முப்பேயாச்சு கேள்மகனேயுப்பெடுத்து சொல்லக்கேளு, வாளப்பாதங்கமென்றசட்டிக்குள்ளே வரிசையுட னுப்பிட்டுசெயநீர்குத்தி, ஆளப்பாவிரவிநன்றுய் ரவியில்காய்ந்தால் அப்பனேமறுபடியுஞ் செயநீர்குத்தி, நாளப்பாமூன்றுநாள் காய்ந்து தானுல் நாதமென்றவுப்பாகும்நாதமாமே. 741

## நாதாந்தவழலை.

நாதமென்றவுப்பதுக்கு நாமங்கேளு நாதாந்தவழலைசவுக் கார மென்பார், போதமென்றபூரணத்தினுப்பென்பார்கள் புகழ்காரசார மென்றலவணமென்பார், நீதமென்றகுருவான முப்பூவென்பார் நிலைத்தஒருபூரமென்பா ரடியதென்பார், பாதமென்றஅடியென்பார் முடியதென்பார் பராபரத்தினருள்காட்டும் பசுமைதானே. 742

தானென்றபூரணத்தி னுப்பால்மைந்தா ,சதாகோடிசித்துமிக ஆடலாகும், வீனென்றமானிடர்களுப்பைக்காணூர் வீணென்றுமா காசப் புரவியென்றுங், தேனென்ற மதுவென்றுங் காணுமல்தான் திகைத்தல்லோநாதவுப்பை யறியவென்று, நானென்றஆணவத்தால் பெண்ணைக்கூடி நயந்துசுகங்காட்டியவளிடத்தில்தானே. 743

தானப்பாமாதவிடாய் தன்னைவாங்கி தவிராமலுப்பெடுப்பே னென்பார்மாண்பர், வீணப்பாகல்லுப்பை நாதமென்பார் வீணன சவுட்டுப்பைநாதமென்பார், காணப்பாவெடியுப்பை நாதமென்பார் கரைக்கின்றநீருப்பை நாதமென்பார், தோணப்பாவெகுவாகப்பார்ப் பார்மாண்டர் சுந்தரம்போல்நாதமுறை யறிவார்தானே. 744

தானென்றநாதமுறையறியவென்றல் தப்பாதுவெகுபாடுபாடு மெத்த, கோனென்றசற்குருவால் காட்டவேணுங் குறிப்பாகக்கை முறையா யறியவேணுந், தேனென்றஇடம்வேணும் பொருள்தான் வேணுஞ் சிந்தைமணதொன்றான சீஷன்வேணு, மானென்றமனது றுதிபழக்கத்தாலே மகத்தானநாதமதை யறியலாமே. 745

ஆரப்பாநாதவிந்து செயல்தான்காணர் அரகராகுருவிடத்திற் காணலாகுந், தாமப்பாவிந்துநிலை நாதமென்றுந் தயவானநாதநிலைப் போதமென்றும், நாமப்பாவென்றசொல்நாதம்நாதம் நாட்டினேமிந் நூலில் நாதவாழ்வு, ஓமப்பாசொல்லுவதுபோ லொருநூல்சொல்லா தொடுக்கமென்ற இந்நூல்தான்குருநூலாமே. 746

நூலானஇந்நூற் பன்னிரண்டுநூறு நுணுக்கமுடனிந்நூலைப் பதனம்பண்ணி, காலானபன்னிரண்டுகலையின்மார்க்கங் கடக்காமலிந் நூலாற்கட்டலாகும், ஆளானஆண்பிளைகள் நூலைக்காப்பார் அமர்ந்த நிலைசித்தனென்ருல் பன்னிரண்டுங்காப்பார், நாளானதினம்பார்த்து வாசிபார்த்து நாதவிந்துநிலைப்பார்த்து நாட்டம்பாரே. 747

நாட்டமுடனுதவுப்பை நாதநீரால் நன்ருகத்தாணட்டி பில்லை செய்து, தேட்டமுடன்ரவிமுகத்தில் காயப்போட்டு செம்மையா யோட்டில்வைத்தோடுமூடி, நாட்டியமாய்மண்சீலை வலுவாகச்செய்து தாழவெட்டி எருபரப்பிப் புடத்தைப்போட்டால், வாட்டமிலாநாத வுப்புச்சுன்னமாகு மகத்தானமுப்பூவின் மார்க்கங்கேளே. 748

முப்பூச்செயநீர்.

கேளப்பாமுப்பூவில்சாரஞ்சேர்த்து கிண்ணமென்றபீங்கானில் பனியில்வைத்தால், நீளப்பாசலமகிமைஎன்னசொல்வேன் நீரான சலந்தனிலே மைந்தாகேளு, வாளப்பாவீரமுடன் பூரஞ்சேர்த்து மகத்தானநீர்தனிலே தூவிப்பாரு, கூழப்பாபோலவுமே சிவந்து காணுங் கூர்மையுள்ளவுப்பதுவுங் கட்டிப்போச்சே. 749

கட்டிநின்றசலமதிலே முறையைக்கேளு கருவானதுருசியொடு லிங்கம்வீரந், திட்டமுள்ளகெந்திசிலைதாரம்பூரஞ் சிறப்பான கௌரியுடபாஷாணங்கள், சட்டமுள்ள நவாச்சாரஞ் சீனிக்காரஞ் சாந்தமுள்ளபொரிக்காரம் வெடியுப்போடு, அட்டியில்லாச்சுருக்கான சரக்கெல்லாந்தான் அப்பனேசுருக்கிடவே கட்டிப்போச்சே. 750

போச்சென்றுவிடுகாதேசெயநீர்தன்னில்பொல்லாதநாகமுடன் கருநாகந்தா, வீச்சென்றுவெண்ணை நிமிளைவகையெல்லா நேராகத் தானுருக்கிச்சாய்த்தாயானல், வீச்சென்றமேகமெலாமடக்கிக் கட்டி வீறடங்கக்கட்டுமடா மைந்தாமைந்தா, பாச்சென்றசாந்தமதைத் தேய்த்துத்தேய்த்து பதிவாகப்புடம்போடஈரஞ்சாமே. 751

ஈரஞ்சாமப்பிரேகந் தோய்த்துவாட்டி என்னசொல்வேனௌி மடக்கிக்கட்டுங்கட்டுங், காரஞ்சாஞ்சாரஞ்சா மெல்லாஞ்சாகும் கருவானவுபரசங்கள் சத்தேயாகும், வீரஞ்சாம்பூரஞ்சா மெல்லாஞ்சாகும் வீறடங்காச்சரக்கெல்லாம் விரைந்துபோகுந், தாரஞ்சாஞ்சகல சரக்கெல்லாஞ்சாகுந் தன்மையுள்ளகட்டுவகை செயநீராச்சே.

மெழுகுவகை.

ஆச்சப்பாகட்டுவகை செயநீர்சொல்லி அதிலடங்கும்சரக்குவகையெல்லாம்சொல்லி, காச்சப்பாமெழுகுவகை செயநீர்கேளு கரு

வானகட்டுவகைசெயநீர்தன்னில், பாச்சப்பாகட்டிநின்ற சாரங்காரம் பாங்கான வீரமுடன் பூரம்நாலுந், தேச்சப்பா பொடித்து நன்றாய்த் தூவிப்பாரு சிவசிவா மஞ்சள்நிறம் செயநீராச்சே. 753

நீரானசெயநீரின் முன்னேசொன்ன நிசமானகட்டுவகை சரக்கையெல்லாம், ஆரானநீர்தனிலே அழுக்கிவைத்து அப்பனே விளக்கொளியில் வாட்டினாக்கால், கூரான சாரமெல்லாஞ் சரக்கிற்சென்று கொளுகொளெனவெதும்பியது மெழுகுமாமே, வாரான மஞ்சள்நிற மெழுகுதன்னை வகைவகையாய்ப் பதனமதாய் வைத்துப்போற்றே.

போற்றியே மெழுகுவகைசெயநீர்சொல்லி புதுமையுள்ளகைப் பாகம்பூணச்சொல்லி, தேற்றியேசெய்வகையுந்தேறச்சொல்லி தேக வச்சிரகாயமதாயிருப்பதற்கு, வாழ்த்தியே ஆதியந்தவழியுஞ்சொன்னேன் வரிசையுள்ள பூரணமும் வகையுஞ்சொன்னேன், ஆத்தியே அறிவுருவு நீயாய்நின்றால் அப்பவல்லோ தசநாத மறியலாமே. 755

செந்தூரவகை.

ஆமப்பா கட்டுவகை நீருஞ்சொல்லி அதின்பிறகு மெழுகுவகை செயநீர்சொன்னேன், நாமப்பாசெந்தூரஞ்செயநீர்சொல்வேன் நன்மையுள்ளபுலத்தியனேநன்றாய்க்கேளு, தாமப்பாமெழுகுவகைசெய நீரோடே தவிராமல்கட்டுவகை செயநீர்கூட்டி, வாமப்பாபீங்கானில் விட்டுநல்ல மதியான ரவிதனிலே வைத்துப்பாரே. 756

பார்க்கவேரெண்டுவகைநீருங்கூட்ட பசுமையுள்ளசெந்நீராய்ச் சிவந்துபோகும், ஏற்கவே யிந்நீரில் வகையைக்கேளு இன்பமுடன் கூட்டிவைத்தசரக்கில்மைந்தா, காக்கவேயெச்சரக்குங்கல்வத்திட்டு கட்டிநின்றரசமதுவு மிடைதான்விட்டு, சேர்க்கையுடன் கட்டிநின்ற கெந்திதன்னில் செம்மையுடனலிலொன் றதனிற்சேரே. 757

சேர்த்துநன்றாகப்பொடித்துச்செந்நீர்விட்டு திறமாகஅரைத்து நன்றாய்வில்லைபண்ணி, போற்றியேரவியதனில்காயப்போடு புதுமையுட னோட்டில்வைத்து ஓடுமூடி, தேற்றியே மண்சீலை வலுவாய்ச் செய்து செம்மையுட னிதானமாய் புடத்தைப்போடு, சாற்றுவயிர வற்குவடமாலைசாற்றி தன்மையுடன்பூசைபண்ணியெடுத்துப்பாரே.

பாரப்பா செந்தூரங் கண்கொள்ளாத பதனமாய் சிமிழதனில் வைத்துக்கொண்டு, சேரப்பாசரக்குகளை யிப்படியேசெய்தால் செந்தூரம் பொய்யாது செம்மையாகும், ஆரப்பா அறிவார் செந்தூரப் போக்கு ஆதியந்தமறிந்தவரே அறிவாரப்பா, காரப்பா தானிருக்கு மொடுக்கந்தன்னில் கருவானசெந்தூரம் வைத்துப்போற்றே. 759

போற்றப்பாபணவிடைதானுட்கொண்டேதான் பூரணத்தைப் பற்றிமன தறிவால்நின்று, பார்த்தப்பா ரேசகபூரகமும்பண்ணி பதிவாகும்கபனத்தில்நின்றுகொண்டு, கார்த்தப்பாவகைவகையாய் செம்

பிலூட்டு கனகமதுஎன்னசொல்வேன் மைந்தாமைந்தா, ஆர்த்தப்பா சிவயோகிதனக்குநல்ல அன்பான எளியோர்க்கு மீந்துபோடே. 760

போடப்பாசிவயோகி எளியோர்க்குந்தான் புத்திமனதொன்றாக ஈந்தால்மைந்தா, நாடப்பாசிவபூசையிதுதானுகும் நன்மையிலாமாந்தருக்குஈந்தாயானால், கோடப்பாதெளிந்திடுங்கா ணப்பாசொன்னேன் கோடறிந்துதானமதுகுணமாய்ச்செய்து, தேடப்பாசிவயோகவாழ்வு தன்னை தேடுவது பூரணத்திற் றேடுதேடே. 761

தேட்டமென்ன பூரணமே தெய்வந்தெய்வந் தெவிட்டாத பூரணத்தைக் கொண்டாயானால், வாட்டமென்ன தேகமப்பா வச்சிர காயம் வடிவான பூரணத்தை மறந்தாயானால், ஆட்டமென்ற ஆட்டமெல்லா மடங்கிப்போகும் அதின்பிறகு என்னசெய்வா யையா வையா, நாட்டமென்ற பூரணத்தைப் பூசைபண்ணி நன்மையுள்ள பற்பவகை நாட்டங்கேளே. 762

பஸ்பவகை.

கேளப்பாசெந்நீருங்கட்டுவகைநீருங்கிண்ணமென்றபீங்கானில் சரியாய்வார்த்து, வாளப்பா ரவிதனிலே வைத்துப்பாரு மகத்தான நீரதுவும் வெண்ணீராகும், ஆளப்பா விந்துவென்ற சரக்கையாட்டி அதில்விடுவாய்வீரமென்றரசத்தைத்தானும், மாளப்பா அரைத்திடுவாய்வெந்நீர்விட்டு மனமடங்க அரைத்தநல்ல வட்டுபண்ணே. 763

பண்ணியதோர்வட்டதனையோட்டில்வைத்துபதிவாகமேலோடு பதியமூடி, உண்ணியதுபோகாமல் மண்ணுஞ்செய்து ஒருமுழத்திற் குழிவெட்டிபுடத்தைப்போடு, தண்ணிமையாய்புடமாறி யெடுத்துப் பாருதன்மையுடனீறியது தவளநிறமாகும், வன்னியெனநின்றதொருநாதவுப்பால் மகத்தான சரக்கெல்லாம் பஸ்பமாச்சே. 764

ஆச்சப்பாபஸ்பமென்றுமகிழ்ந்திடாம லரையானகுகைதனிலே வைத்துப்போற்றி, பாச்சப்பா பணவிடைதா னகத்துள்ளேதான் பத்தியுடன் கொண்டதினல் பரமதேகம், காச்சப்பா மனக்கண்ணாற் கனலைத்தூண்டி கற்பூரதீபமதிற்கருத்தைவைத்து, மூச்சப்பா தானிறுத்தி முழித்துப்பார்த்து முக்காலும் ரேசகபூரகமும்பண்ணே. ()

பண்ணியதோர்பஸ்பத்தின் பலனைக்கேளு பக்குவமாய் செம்பதிலே நூற்றுக்கொன்று, தன்னிமையாய்ப் பணிந்துபஸ்பம் பணவிடைதானெடுத்து தாயானசெம்பதிலேயூட்டிப்பாரு, விண்ணிறைந்த கயிலாசங் கொள்ளையாச்சு வெள்ளையென்ற வெள்ளிவித்தை யதிகமானால், புண்ணியமாம் சிவயோகி யெளியோர்க்குந்தான் பத்தியுடதான தர்மம் புகழ்ந்துசெய்யே. 766

செய்யப்பாமணதுகளிகூர்ந்துநன்றாய் சிவயோகிதங்களுக்குஅன்னமீவாய், மெய்யப்பாஅவரவர்கள்மனதின்படிசெய்தால்வெகுகோடி தவமகிமைமிகுந்துசேரும், கையப்பாவுதவுமது சிவத்தின்கூறு கருணையுடன்சிவமதுவே செய்தாயானால், தையப்பாதவமதுதான் கைக்குள்ளாகுந் தன்மையுடனன்மையதா யிருந்துவாழே. 767

### நடுவணையமுது.

வாழ்வதற்கு இன்னமொரு வளமைகேளுமார்க்கமுட னடுவான அமுதங்கொண்டால், கால்வலுக்குங்கண் துலங்குங் காற்றைப்போக் குங் கருத்துமிகத்தான்வளருங்கருணைசேரு, மேல்வலுக்குமதிகம தாய் பிலமுண்டாகு மெய்யிலுளநோய்களெல்லாம் விளங்கிப்போ கும், ஆள்வதற்குக்குருவுதவியதிகமுண்டாம் அரகராநடுவான அமு தங்கொள்ளே. 768

### பூரணமகிமை.

கொள்ளப்பா ஆண்டொன்றில் சித்தியாகுங் குணமாகஇன்ன மொருகுறியைக்கேளு, விள்ளப்பா சொல்வதற்குநாவுண்டோசொல் விசையானசத்தியடிமூலம்வாங்கி, நாளப்பாதினம்பார்த்து அமுதத் தோடே நல்மனதாயுட்கொண்டுவிட்டால்மைந்தா, காலப்பாபிலத்து தடாமூலவன்னியாலே கலங்காதுவாசிநன்றாய்க் கட்டிப்போமே.

கட்டிப்போம்வாசியது கடக்காதப்பா காலவரைமூலமதிற்கலந் துஆடும், குட்டிப்பார்தேகமது குழைந்துகாணுங் குருவானதேகமது கற்பூரம்வீசும், வெட்டிப்பார்தேகமது அசையாதையாவெகுகோடி பகைக்குமொரு மெய்யாய்நிற்குந், தட்டாதஅவமிருத்து தட்டிப் போகுந் தயவானபூரணத்தின்தன்மைதானே. 770

தானென்றும்நானென்றும் வேறுண்டோசொல் தானவனுய் நின்றுதடாமூலவன்னி, கோனென்றகுருவானவன்னிதன்னைகூர்மை யுடன்கண்டுமனதொன்றாய்நின்றால், தேனென்றஅமுதமது அருவி பாயுந் தெவிட்டாதஅமுதமதுதெய்வந்தெய்வம், வீணென்றுதெய்வ மதைசொன்னாரானால் விண்தெறிக்கும்விண்தெறிக்கு மெய்சொன் னேனே. 771

சொன்னதொருஇந்தநூல்மைந்தாகேளு துருவமுள்ளஆயிரத் தியிருநூறாகும், முன்னோர்கள்மொழிந்தவொரு நூல்கட்கெல்லா முகமானகுருநூலா மிந்நூல்மைந்தா, கண்ணனகண்மணிபோ லிந் நூல்தன்னை காட்டாதேமானிடர்க்குக்காட்டினக்கால், விண்ணோர்கள் சாபமதுஈவாரீவார் விவேகமுள்ளபுலத்தியனே நூல்காட்டாதே.

நூல்காட்டவேணுமெனச்சித்தர்கூடி நுணுக்கமிலாநுணுக்கமது செய்தாரானால், நாள்காட்டியவர்களுக்கு நன்மைகூறி நாட்டமிலாப் பேர்களைமாரணமேசெய்வாய், கால்காட்டுங்கேசரமாயிரத்தைப்பாரு காவியமாயிரத்தைக் கருத்தாய்ப்பாரு, சேல்காட்டுஞ் சமாதிகற்பந் தீட்சைகாரு சிவசிவா என்னுடைய ஞானம்பாரே. 773

பாரப்பாஅண்டபகிரண்டமெல்லாம் பண்பாகப்பூரணத்திலொ டுக்குமையா, ஆரப்பா அறிவார்கள் பூரணத்தினேர்மை அரகரா தச நாத மார்தான்காண்பார், காரப்பாமூலமதிற் கருத்தைவைத்து கமல மென்ற ஆயிரத்தெண் ணிதழைப்போற்றி, தேரப்பா தேர்ந்துநீ அமுதுங்கொள்ளு சிவசிவா கயிலாசத் தேகமாமே. 774

## அபக்குவர் தன்மை.

தேகமென்ற அகமறியார்சித்தர்கோடி சிவவேடங்காணுத திரு ட்டுச்சித்தர், ஆதமென்றநூல்முறையைப் பற்றிநின்று அலைவார்கள் வாய்புலம்பி அருளைக்காணுர், பாகமென்ற சுவையறிவார் பாதகர்கள் மெத்த பாலறியாப் பாலருந்தும் பாவிமார்கள், ஏகபர வஸ்துவென் பான்யோகமென்பான் எட்டிரண்டுமறியாத குருடன்தானே. 775

தானென்ற தத்துவத்தை யறியாமூடர் தன்மையென்றசொல்ல றியார்தருகுறும்பர், நானென்ற மதமேதான் பேசிப்பேசி நல்லோ ரைத்தான்பழிக்கும் நலமிலாதான், கோனென்றசற்குருவை யறியா தானுங் கூசாமல்சாராய வெறியால்மைந்தா, ஆணென்றும் பெண் ணென்று மறியாமல்தான் அகம்பிடித்த மட்டிகலை யடுத்திடாதே.

அடுத்தமெள்ள முப்பூவின் விபரங்கேட்பான் அதின்பிறகு வேதைமுகம் என்னவென்பான், நடுத்தரமாய் சரக்குவகை பஸ்பங் கேட்பான் நலமானசெந்தூர முறையைக்கேட்பான், கடுத்தவொரு மெழுகுவகை என்னவென்பான் கருவானசரக்குவைப்பு முறைதான் கேட்பான், விடுத்துமிகச் சொல்லாவிட்டால் போம்போம் என்பான் விதியுண்டானல் வருமென் றெண்ணுன்பாரே. 777

எண்ணுமல் எண்ணிஎண்ணி மனதுநொந்து இடைந்துமிகக் கரைந்தஒரு பாவிமார்கள், கண்ணுன கண்பார்த்து கனலைத்தூண்டி கற்பூரதீபமதிற்கருத்தைவைத்து, பண்ணுனரேசகபூரகமும்பண்ணி பதிவானகும்பகத்தில்பதியமாட்டார், தண்ணுன தன்பெருமை தனி யேஎண்ணி தானவனுமென்றதுறை தனைக்காணுரே. 778

காணுமல்கருத்தழிந்தமடையர்மெத்த கர்மருனைதீராத கழுதை மாண்பர், வீணுனவாய்மொழிகள் மெத்தப்பேசி வேதமென்ன சித் தாந்த மென்னவென்பான், கோனுன குருபதத்தைக் காணுமாந்தர் குவலயத்தில் மெத்தவுண்டு கண்டுதேறு, தேனுன மதியமுதம் பானம்பண்ணு திரமான சிந்தையடா நாதமாமே. 779

ஞானமென்ன பூருவமைய மழுத்திப்பாரு நந்தியொளிப்பிரகா சஞ் சோதிசோதி, மோனமென்ன பிரணவமே நாதம்நாத முக்காலு நாதமதில் விந்துவிந்து, பானமென்ன நாதவிந்து ரெண்டுங்கூடிப் பாஞ்சவிடம்பரமான பூரணமேயாகும், வானமென்ன அந்தரத்தில் நாதவோசை மகத்தான ஓசையடா நாதமாமே. 780

## தாளகக்கட்டு.

நாதமென்ன தாளகத்தின் கட்டுசொல்வேன் நலமான விந்துவுட னுதஞ்சேர்த்து, பாதமென்ற அடிமுடியுங் கூடச்சேர்த்து பாங்கான வெடியுடனேகாரஞ்சேர்த்து, நீதமென்றபழச்சாற்ருல்கலவத்தாட்டி நிசமானதாளகத்துக் கங்கிபூட்டி, வாதமென்ற பிரிதிவியால் சீலை செய்து வலுவாக ரவிமுகத்தி லுலர்த்திடாயே. 781

உலர்ந்தபொரு கவசமது நன்றுய்க்காய்ந்தால் உத்தமனே எரு வடக்கிபுடத்தைப்போடு, அலர்ந்துமிகப்புடமாறிஎடுத்துப்பாரு அப்பனே தாளகந்தான் ரவிபோல்கட்டுந், தளர்ந்துமிகவாடாதே சொல்லக்கேளு தன்மையுடனுதநீர் விட்டுஆட்டி, மலர்ந்தபொரு காரீயத் தகட்டிற்பூசி மைந்தனே யோட்டில்வைத்து சீலைசெய்யே. 782

செய்யப்பா எருவடக்கி புடத்தைப்போடு செம்மையுளதகடது வும்நீறிப்போகும், மெய்யப்பாசொல்லுகிறேன் பஸ்பந்தன்னை மேகமென்ற ரோகத்துக் கிதுதானீய, வையப்பா மேகமெல்லாம் பறந்து போகும் பஸ்பமதின் செயல்தன்னைப் பகரக்கேளு, வையப்பா ரசமதனைச் சுத்திசெய்து வாகான கல்வுத்தி லூற்றிடாயே. 783

ஊற்றியதோரசமதனில்பத்துக்கொன்று வுத்தமனேபஸ்பமது ஒன்றுபோடு, தேற்றியேவாய்நீரைவிட்டுஆட்ட சிவசிவாரசமதுவும் வாலையாச்சி, போற்றியே வாலைரசம் பதனம்பண்ணி புலத்தியனே கைமுறையைப் புகலக்கேளு, வாத்தியே பரித்தகட்டில் தடவிநன்றுய் வரிசையுடன் புடம்போட வளமைகேளே. 784

கேளப்பாவட்டமதாயோடுதட்டி கெணிதமுடன்செய்கலென்ற பொடிபரப்பி, தாளப்பா தகடுவைத்த பொடிபரப்பி தன்மையுடன் மேலோடு தயவாய்மூடி, மூளப்பா எருவடக்கி அனலைமூட்டி முக்காலுஞ்சுற்றிவந்து முன்னேநின்று, ஆளப்பா வன்பாகப் பொடித்து நின்று அனலாறி யெடுத்துப்பார் குருவாய்ப்போமே. 785

குருவான பரித்தகட்டை எடுத்துப் பார்க்கில் குருபரமாம் விந்துவெனத் தோற்றமாகும், பருவமுட னுடைத்திடவே நொறுங்கிப்போகும் பரமான குருவப்பா பதனம்பண்ணு, திருவான செம்பதிலே நூற்றுக்கொன்று செம்மையுடன் கொடுத்திடவே நன்மையாகுங், கருவான வெள்ளியிலே நூற்றுக்கொன்று கணக்காகக் கொடுத்திடவே வணக்கமாமே. 786

வணக்கமுடன் குருவிலொரு பணந்தான்தூக்கி மகத்தான வெள்ளிசெம்பு கணக்காய்ச் சேர்த்து, இணக்கமுடன் கொடுத்திடவே மாற்றுபத்தா இருக்குமடா புலத்தியனே யிணங்கிப்பாரு, தனக்குமிது கிடைத்தபொரு ளென்றேநீயுந் தானிருக்கும் ஒடுக்கமதில் பதனம்பண்ணி, மணக்குமிது பொருளதனை சிவயோகிக்கு மனமகிழக் குருபூசை செய்குவாயே. 787

செய்வதுதான் மனதுருமை யாகவேணுஞ் சிவபூசை குருபூசை செய்யவேணுந், தெய்வமென்றசிவயோகிதனக்குமைந்தாசிந்தைமன தொன்றுகநடக்கவேணும், சைவமென்றநெறிதனிலேநிற்கவேணுஞ் சங்கற்பவிகற்பமெலாந் தள்ளவேணு, மெய்வனுவாய் மனதொத்து நடக்கவேணும் மேல்வரம்பு கீழ்வரம்பு மெய்யிற்காணே. 788

காணப்பாவுலகத்தோ டொத்துவாழ்ந்து கமலமென்ற ஆயிரத் தெண்மலருக்குள்ளே, தேனப்பா போலவுமே அமுதநிற்குஞ் சிவ

சிவாஅமிர்தத்தைக்கொள்ளவென்றால், ஊணப்பாமூலமதில்மனதை வைத்து வுறுதியுடன்ரேசக பூரணமும்பண்ணி, தானப்பா கும்பகத்தில் தனதாய்நின்று தன்பசிதானுறுமட்டு மமிர்தங்கொள்ளே. 789

கொள்ளப்பா அமுர்தமதைக் கையில்வாங்கி குணமாக வசிய மென்று குறிப்பாய்க்கொண்டு, மெள்ளப்பா பூரணத்தில் மனதை நாட்டி மேலாதாரத்திலந்தச் சுடரைப்போற்றி, செல்லப்பா போதகத்தில் நின்றுகொண்டு செகத்திலுள்ள மானிடர்தன் னேயைப் பார்த்து, விள்ளப்பா சிவயவசி யென்றுசொன்னால் மெய்யிலுள்ள வினைகளெல்லாம் விலகிப்போமே. 790

சத்துருவசியம்.

போமப்பாபூரணத்தில் மனதைவைத்து பொறுமையுடன்ரேசகத்தால்பூரகத்தைப்பார்த்து, நாமப்பாகும்பகத்தில் நின்றுகொண்டு நயமயநவென்றுநீ சொன்னையானால், தாமப்பா சத்துருவும் வசியமாகுஞ் சகலகலைக்ஞானமெலாந் தானேதோற்றும், காமப்பாகலவியிலே தம்பனத்தைக்கேளு கட்டாக நிஷ்டைமுறை கருத்தில்வையே.

வையப்பாவாசிதனைமூலத்தூட்டி மகத்தானமூலமதால்ரேசகத்தைப்பற்றி, செய்யப்பா பூரகத்தால் கும்பத்தில்நின்று செபித்திடுவாய் வசியசிவ வென்றுமாறி, பய்யப்பா பகைவர்மேலாசைகொண்டால் பதறாதுவிந்துவது செயமாய்நிற்கும் மெய்யப்பாயிம்மொழியை யுலகத்தோர்க்கு விள்ளாதே குற்றம்வருஞ் செயமாய் நில்லே. (இது விந்துஸ்தம்பனம்.) 792

சத்துருமாரணம்.

செயமாகச்சத்துருமாரணத்தைக்கேளு செப்புகிறேன்யவசிவய வென்றுமாறு, பயமாகிச் சத்துருவு மயங்கிப்போவான் பஞ்சுதனிலக்கினிபோற் பற்றும்பற்றும், நயமாக மாறிநிற்ப தாரையென்றால் நல்லோரைத்தூஷணிப்போர்நன்மையில்லோர்,மயமானசீவசெந்தை அழித்தோர்தன்னை மாரணிப்பாய் புலத்தியனே மனதிற்காணே.

காணப்பா பூரணத்தைக் கண்டுபேசி கைமுறையாய்க் கொண்டதினுற்காணுஞ்சித்து, வீணப்பா வென்றுசொல்லி நினைத்தாயானால் வேதாந்தஞ் சித்தாந்த மிரண்டுங்கிட்டார், தானப்பாதாமவனாய் தனதாயந்த தன்மையுளபூரணத்தி னன்மையாலே, தூணப்பா துரும்பாகுந்துரும்புதூணுஞ் சொல்லாதயிந்நூல்தான்குருநூலாமே. 794

குருநூலாமாயிரத் திருநூறுந்தான் குறிப்பாகவாதியந்தம் நன்றாய்ப்பார்த்தால், தருநூலாஞ்சகலசித்துமிந்திரசாலந் தன்மையுள்ள மந்திரமுஞ்சித்துதானும், வழிநூலாம்வாதமது வனந்தஞ்சொல்லும் வாருதிபோல்செயநீரும்வலுவாய்ச்சொல்லும், கருநூலாம்பந்நிரண்டு நூறுங்காத்து கட்டாக எட்டுடனே நாலைச்சேரே. 795

பூரணபூசை.

நாலானபூரணத்தில்நின்றாயானால் நடுங்காதுஎட்டிரண்டு மொன்றாய்ப்போகும், காலான வாசியது கட்டுங்காட்டங் கட்குதே கலங்

மதுவச்சிரகாயம், மேலானதேகமப்பாபிர்மமாச்சு மெய்யில்நின்றவா சியதுபரமாய்ப்போச்சு, தாளானயிதழ்ப்பூவு மறியலாகுந் தயங்கா மற்பூரணத்தைதப்பூசைபண்ணே. 796

பூசையென்ன நேசமதாயிருந்துகொண்டு பூரணமே பராபர மாய்புத்தியாலே, ஆசையுடன்ரவிமதியையன்பாய்க்கண்டு அக்கினி யின்கோத்திரமாயருளைப்போற்றி, நேசமுடன் ரவிமதியைமாறி மாறீ நிலைத்ததொரு அக்கினியில்நிலைத்தாயானால், பாசமென்றதேக மதுவலுத்துப்போச்சு பரமானதேகமதாய்நிலைக்கலாச்சே. 797

கற்பத்துக்குப்பத்தியம்.

நிலைக்கவேகாயசித்தி பண்ணும்போது நேராக வொருபோது போசனந்தான், மலைக்காமல் பச்சரிசி சிறுபயறுங்கூட்டி வாகாக அமுதுசெய்துசக்கரைதேனுடனே, குலைக்காமலொருபோது அமுது கொண்டு குணமாகமுப்பழமும் பாலுங்கூட்டி, கலைக்காமல் கற்பம தைக்கொண்டால்மைந்தா காயசித்தியுறுதியடாகருதிப்பாரே. 798

பாரப்பாயின்னமொருபாகங்கேளு பால்தனிலேபச்சரிசிபாகம் பண்ணி, நேரப்பாசர்க்கரையுந்தேங்காய்ப்பூவும் நேராகப்போட்டு நன்றாய்ப்பதமாய்க்கிண்டி, தேரப்பாகனிவகையுங் கூடச்சேர்த்து திரமாகவொருபோதுஅமுதுகொண்டு, காரப்பாகற்பமது கொண் டாயானால் காயமதிலஷ்டமாசித்துமாமே. 799

சித்தென்ன தேகமதுயிறுகிநல்ல சிவசிவாதேகமது பரமானந் தம், பத்தென்ன மனதுரிமை யாகவேணும் பலருசியைத் தேடின தால் பலனேதுண்டு, கத்தென்னகருமானங் குருவால்பத்து கருத் தோடே அநுபவித்தால் காணுஞ்சித்து, செத்தென்ன வதின்பிறகு என்னகாணுஞ் சிவசிவாதேகமல்லோ சிவன்கூறுமே. 800

கூறுகயின்னமொரு பாகங்கேளு குணமான வமுதுபடி வாங்கி மைந்தா, நேராகத்துவரையுட பருப்புங்கூட்டி நீர்தனிலே வமுது செய்துநினைவாய்க்கேளு, சோறுகும்பருவமதில் தேங்காய்ப்பூவுஞ் சுகமாகச்சர்க்கரையும் நெய்யுங்கூட்டி, சேறுகக் கிண்டினன்று யாற வைத்தால் சிக்கெனவேயிருகிநல்ல பதமாம்பாரே. 801

பதமான வமுதெடுத்து வொருபோதுண்டு பக்குவமாயதின் பிறகுகற்பங்கொள்ளு, மதமானமதங்களெல்லாமடங்கிநல்ல மகத்தா னதேகம்வச்சிரகாயமாகும், விதமானவட்டசித்துஎட்டுமாடும்விவே கமதுதான்வளரும்விசிதமாகும், அதமானமனவிருத்தியகன்றுபோ கும் அரகராஅம்பரத்தினருள்காண்பாயே. 802

காணப்பாஅமுதுபடிசமைத்துக்கொண்டு கருத்துறவேகட்டு முப்பூதொட்டுக்கொண்டு, பேணப்பாஒருபோது அமுதுகொண்டு பிலமானகற்பமதுகொண்டால்மைந்தா, தேனப்பாஅமுதமதுகசிந்து காணுந் தெவிட்டாத அமுதமதைப்பானம்பண்ணு, பூணப்பா குரு பதத்தைத்தொழுதுகொண்டு பொல்லாதமாய்கையெல்லாம் போக்கு போக்கே. 803

போக்கான அமுதுபடி அவனோடொக்க புதுசானஏலரிசிபொடித்துப்போட்டு, வாக்காக அமுதுசெய்துவெல்லத்தோடு வளமாக ஒருபோதுகொண்டலப்பா, தாக்கானசடலமது வலுத்துபோகுந் தன்மையுடன்கற்பமதுசார்ந்துகொண்டால், நாக்கான அமுதமதுசொலிக்கும்பாரு நரைதிரைகள் தானொழிந்துநலமாம்பாரே. 804

நலமாகயின்னமொருபாகங்கேளு நல்லதொருஅமுதுபடிவாங்கி மைந்தா, பில்மாகச்சீரகமுஞ்சுத்திபண்ணி பெருமையுடனிரண்டு மொன்றாயமுதுசெய்து, குலமானவெல்லமதைத் தொட்டுகொண்டு கூர்மையுடனொருபோது அமுதுகொண்டால், தலமானபித்தமெலாம்பிரண்டுபோகுந் தரணிதனில்மன்மதன்போலாவாய்பாரே.

பாரப்பாஅமுதுபடிகொழியலாக பக்குவமாய்த் தானெடுத்து வைத்துக்கொண்டு, வாரப்பாகிராம்புதனைக்கஷாயம்பண்ணி வகையாகக்கஷாயமதிலமுதுசெய்து, சேரப்பாசக்கரையைத் தொட்டுக்கொண்டு திரமாகஅமுதுகொண்டால்தேகவச்சிரங், காரப்பாமூலமென்றதெல்லாம்போகுங் கட்டாகக்கற்பமுறையுண்டுதேறே. 806

தேர்ந்தபின்பு யின்னமோர்பாகங்கேளு திறமாகப்பருத்தி விரைப்பாலும்வாங்கி, சார்ந்துசப்பா அமுதுபடி சமைக்கும்போது சக்கரைதே னூட்டிநன்றாய் பாகஞ்செய்து, கூர்ந்துமிக வுதயமதிற் கொண்டால்மைந்தா கொண்டதொரு மேகமெல்லாமற்றுநல்ல, வூர்ந்துமிகவீரியமேயதிகமாகும் உண்மையுள்ளதாதுவெலாம் பிலக்கும்பாரே. 807

பாரப்பாகம்புடனே தினையுங்கூட்டி பக்குவமாய் பால்தனிலே பாகஞ்செய்து, காரப்பாயினிப்புடனே அமுதுகொள்ளு கலங்காமலொருபோதுகொண்டால்மைந்தா, நேரப்பாசதையிலுள்ளபித்தநீர்கள் நீங்கிவிடுந் தேகமதுகுளிர்ச்சியாகும், வீரப்பா செய்யாமல்கற்பங்கொள்ளு வீரடங்கிதேகம்வச்சிரகாயமாமே. 808

காயவகை.

காயமென்ற காயமொன்று சொல்லக்கேளு கனமான திரிகடுரு ஓமங்கூட்டி, நேயமுடன் வறுத்திடித்துப் பொடியேசெய்து நினைவாகச்சட்டியொன்றுகாயவைத்து, தாயகமாய்கருப்புட்டியதனிற்போட்டதப்பாமலுருகியதுகுழம்பாய்நிற்கும், ஞாயமுடன்பொடிதூவிக்கிண்டும்போது நலமாகமெழுகுபதம்நன்றாய்பாரே. 809

ஆமப்பாமெழுகெடுத்துவுதையந்தன்னில் அன்பாகக்கொண்டவுடனேயாகேளு, நாமப்பாசொல்லுகிறோம் உதாரந்தன்னில் நளிருடனேமேகவெட்டையற்றுப்போகுந், தாமப்பாகற்பமதுக்குறுதியாகுந் தனதானபித்தநீர் தானேபோகுங், காமப்பால் கொண்டவுடனுறுதியாகுங் கற்பூரவாசமதாய்காந்தியாமே. 810

அரிதாரபஸ்பம்.

காந்தியாமரிதாரங் கல்வத்திட்டு கருவான ஆதியந்தங்கூடச்சேர்த்து, பாந்திபமாய்செயநீராலரைத்துமைந்தா பக்குவமாயோட்டில்வைத்துபுடத்தைப்போடு, சாந்தமாய்நீறியதுபற்பமாகுஞ்சயமானரோகமெல்லாமடித்துப்போடு, மாந்தமென்றவாய்வுகளுங்குன்மந்தீரு மகத்தானசீதசுரமற்றுப்போமே. 811

துரிசுசெந்தூரம்.

போமென்றுவிடுகாமல் துருசுதுத்தம் புனிதமுடனாதியந்தங் கூடச்சேர்த்து, ஆமென்றுகல்வமதிலரைத்துமைந்தா அழகானதாரமதுக்கங்கிபூட்டி, சாமென்றுமண்சீலைவலுவாய்ச்செய்து சாக்கறிந்து புடம்போடத்தாரங்கட்டி, ஓமென்றசெந்தூரங்காந்தியாக வுண்மையுடனிருக்குமதைப்பதனம்பண்ணே. 812

பண்ணியதோர் செந்தூரம் பணவிடைதானெடுத்து பாங்கான திரிகடுகு சூரணமேசெய்து, உண்ணியதோர் செந்தூர மணைத்துக் கொண்டால் உள்வெக்கைமந்தாரகாசம்நீங்கும், புண்ணியனே கற்பமதுகொள்ளவென்றால் போக்கறிந்துதேகமதின் நோயைத்தீர்த்து, தன்னிமையாக் கற்பமதுகொண்டால்மைந்தா தனதாகத்தேகமது வலுத்துப்போமே. 813

தாம்பிரபஸ்பம்.

வலுவானதாம்பிரபஸ்பஞ்சொல்வேன் மகத்தானதுருசுடனே துத்தங்கூட்டி, நழுவாமல்சீனமொடுதாரபஸ்பம் நலங்காமல்முலைப் பாலர்லரைத்துமைந்தா, சிலுகாமல்துட்டதற்குக்கவசம்பண்ணி சிக்கெனவேஓட்டில்வைத்துசீலைசெய்து, அழுகாழல்புடம்போட்டுஎடுத்துப்பாரு அப்பனேதாம்பிரமும்நீறிப்போமே. 814

நீறிப்போமின்னமொரு நெறியைக்கேளு நெடிதாகத்தாம்பிரந் தகடாய்த்தட்டி, தேறிப்பாரறிதாரக்கட்டைநன்றாய் தேன்விட்டு அரைத்தரைத்தகட்டில்பூசி, பாரப்பாயோட்டில்வைத்துசீலைசெய்து பக்குவமாயொருமுழத்தில்புடத்தைப்போடு, ஆறிப்பார்கவசமதில் நொறுங்கிநிற்கு மப்பனேபழச்சாற்றாலரைத்திடாயே. 815

அரைத்துநன்றாய்வழித்தெடுத்துவட்டுபண்ணி அலரநன்றாய் காய்ந்தபின்புவோட்டில்வைத்து, வரைத்தடங்கள்தெரியாமல் மண்ணுஞ்செய்து வலுவாகநிறையறிந்துபுடத்தைப்போடு, நிறைத்துவனலாறியே எடுத்துப்பாரு நிறையோடே பழுத்தவெள்ளை யாகு மைந்தா, கரைத்தபழச் சாறதனால் பின்னுமாட்டி கருவாகமுன் போலே புடத்தைப்போடே. 816

போட்டபுடமாறவிட்டு எடுத்துப்பாரு புதுமையுடன் பூப்போலேநீறிப்போகும், தேட்டமுடனீன்றெடுத்துப்பதனம்பண்ணி சிவசிவாபஸ்பமதின்செயலைக்கேளு நாட்டமுடவெள்ளிதனில் நூற்றுக்

கொன்று நன்றாகக்கொடுத்திடமாற் றீரஞ்சாகும், வாட்டமுடபிணிகளுக்குத்தேனிலீந்தால் வாங்காதகுன்மமுமேமாண்டுபோமே. 817

போமென்றுவிடுகாம வின்னமொன்று புத்தியுடன் சொல்லுகிறேன்மைந்தாகேளு, ஆமென்றதாம்பிரம் பொடியாய்செய்து அப்பனேபழச்சாற்றால் சுத்திபண்ணி, நாமென்றுசொல்லுகிறோ மாதியந்தம் நயமாகயிடைக்கிடைதான்சேர்த்துக்கொண்டு, தாமென்றபழச்சாற்றாலரைத்துமைந்தா தன்மையுடன்புடம்போடநீறிப்போமே.

## கெந்தகபஸ்பம்.

யோமப்பாகெந்தகத்தைச்சுத்திபண்ணி போக்கோடேயாதியந்தங்கூடச்சேர்த்து, காமப்பாபழச்சாற்றால் கல்வத்தாட்டி கனமெலூம்பஆட்டினதால்மெழுகாய்நிற்கும், ஆமப்பாவழித்துநன்றாய் வட்டுபண்ணி ஆறவிட்டுவோட்டில்வைத்துசீலைசெய்து, நாமப்பாசரக்கினுடனிதானங்கண்டு நன்மையுடன்புடம்போடநீறிப்போமே. 819

போமப்பா பற்பமதைபணவிடைதான்கேளு புதுமையுடன் தேனதிலேகொண்டாயானால், நாமப்பாசொல்லுகிறோ மேகமெல்லாம்நாடாமலோடிவிடும்நன்மையாக, தாமப்பா தாதுவிர்த்தியதிகமுண்டாந் தயவானகெந்தகத்தின்பற்பத்தாலே, ஆமப்பாநாகரசபற்பமாகும் ஆதியந்தமமர்ந்ததினாலெல்லாம்போச்சே. 820

## சாதிலிங்கக்கட்டு.

போச்சென்றுவிடுகாமலின்னமொன்று புதுமையுள்ளசாதிலிங்கக்கட்டுசொல்வேன், போச்சென்றுநினையாதே ஆதியந்தம் பொறுமையுள்ளசரக்கெடுத்துபாலாலாட்ட, நீச்சென்றுமெழுகாகுமைந்தா கேளு நிசமானகெந்திபற்பமெழுதிச்சேர்த்து, ஆச்சென்றுகல்வத்திலாட்டிமைந்தா அரகராலிங்கம்திற்கவசம்போடே. 821

போடப்பாகவசமதையழுத்திமைந்தா போட்டபின்புபூப்புடத்திற்போடுபோடு, நாடப்பாஇப்படியேமூன்றுபுடம்போடு லதிமானசாதிலிங்கமிறுகிக்கட்டும், ஆடப்பாமதிதனிலேநின்றுஆடு அதன்பிறகுரவிதனிலேஅழுந்திப்பாரு, தேடப்பாசிவயோகப்புதுமைதன்னில்தேடினதால் தேகசித்தித்திரமிதாமே. 822

## பூரணதிலேகியம்.

திரமாகஇருக்கவென்றால்பூரணதி செப்புகிறேன்புலத்தியனே திறமாய்க்கேளு, வுரமானதிரிகடுகுசூரணமேசெய்து வுற்றதொரு மூலிகையின்காம்புவிரைநீக்கி, கரமானசட்டிதனைக்காயவைத்து கருகாமல்மூலிகையைக்களைந்துமைந்தா, நிறமான திரிகடுகு சூரணமே செய்து நேராகத்தான்கடைந்துவைத்துக்கொள்ளே. 823

கொள்ளப்பாபழச்சாருவாங்கிநல்ல குணமாகஅடுப்பேற்றிபாகாய்க்கிண்டி, மெள்ளப்பாபாகுவருஞ்சமயந்தன்னில் மேலாகஇருபொடியுமெள்ளக்கொட்டி, மல்லப்பாபிடித்ததுபோற் கிண்டுகிண்டு

மார்க்கமுள பாகுடனேபொடியுஞ்சேர்த்து, தெள்ளப்பாபோலவுமே திரளுநன்றாய் திறமாகப்பிசைந்துருட்டி பதனம்பண்ணே. 824

பண்ணியதோர்லேகியந்தான்பூரணாதி பார்தனிலேயிந்தமுறை ஒருவர்காணார், உண்ணப்பா சுண்டக்கா யளவுவீதம் உண்டபின்பு மூலமதில் மனத்தைவைத்து, விண்ணப்பா தானோக்கி மெள்ளரேசி விதமாகரேசினதால் பூரகமேசெய்து, நண்ணப்பா கும்பகத்தே நின்றால்மைந்தா நலமான ஞானத்துக் குருதியாமே. 825

## வேறு லேகியம்.

உறுதியுள்ளலேகியந்தானின்னமொன்று உண்மையுடன்சொல்லுகிறேன்மைந்தாகேளு, பருதியெனுஞ்சாதிக்காய்சாதிபத்திரி பதமானகிராம்புடனேஏலங்கூட்டி, சுருதிஎனும்பின்கூட்டியைந்துமொன்றாய் சுகமாகவெண்ணெயினால் மெழுகாயாட்டி, கருதிமனதொன்றாய் மூலிகைதான்வாங்கி காம்புவிதைதனைநீக்கி கருக்கிடாயே. 826

கருக்குவது பொன்னிறம்போல் கருக்கிக்கொண்டு கடைந்திடுவாய்ப்பொடியாக மைந்தாமைந்தா, வுருக்குவது வெல்லமெல்ல பிசைந்துகொண்டு வுடன்சேருமுன்னரைத்தமருந்துதன்னை, நெருக்கிநன்றாய்ப் பிசைந்துருட்டி பீங்கான்தன்னில் நிறுத்திமிகப் பதனமதாய் வைத்துக்கொண்டு, அரிக்கிமுத லெழுத்ததுவைப் பணிந்து போற்றி அப்பனே யுடலறிந்து கொண்டிடாயே. 827

கொண்டவுடன் பூரணத்தின் போதைதன்னை கூறுதற்கு நாவுமுண்டோபாவுமுண்டோ, விண்டதொருமொழிதவிரா அறிவுகுன்றி விள்ளுகிற நாவுலரா மேனிவாடா, அண்டர்பிரான் அருள்மிகவுஞ் சொலிக்குமப்பா அரகரா பன்னிரண்டு மடங்கும்வீட்டில், குன்றாத பூரணமாய் போதையாகி குணமாகச் சதாபோ[illegible]த யாகும்பாரே. ()

## சாராயதோஷம்.

பாரப்பா போதமய மாகவென்று பரிக்கெட்டசாராயந் தனைக்குடித்தால், வீரப்பாதான்மீறிபித்தங்கொண்டு மெய்மறந்துபித்தநீர் மேலேசென்று, வூரப்பாதேகமெல்லாமரிப்புமீறி உண்டதொருகற்பமெல்லாம் விழலாய்ப்போகும், நேரப்பா வுதரமதுதடித்துநல்ல நங்காத நரைதிரையால் சாவான்பாரே. 829

## கள்ளின்தோஷம்.

பார்க்கவே கள்ளினுடநேர்மைகேளு பாங்கான பித்தநீர் சிரசிற்கொண்டு, ஏற்கவே கண்ணொளிவு மயங்கிப்போகும் எழுந்திருக்கவொட்டாது மயக்கித்தள்ளும், சேர்க்கையுட னனல்மீறிப் புலம்புவிக்குஞ்செடந்தளர்ந்துவாசியதுசிறுஞ்சீறு, மூர்க்கமுடன்ரவிதேயந்துமதியநின்று மோனநிலைதான்மறந்து போவான்காணே. 830

## புத்திகூறல்.

காணப்பாகள்ளுசாராயத்தாலே கண்மறந்துசெத்தவர்க ளனந்தங்கோடி, வீணப்பா இதுரெண்டுத்தள்ளுதள்ளு வீணருடன்பேசா

தேமொழி தப்பாதே, தானப்பாவென்றமதந்தனைக்கொள்ளாதே தனை யறிந்து மதியமுதந் தானேகொண்டால், துாணப்பா துரும்பாகுந் துரும்புதூணாஞ் சொல்லவொணு அஷ்டசித்துங் கைக்குள்ளாமே.

துஷ்டரைத் தண்டித்தல்.

ஆமப்பா புலத்தியனே யின்னமொன்று அடைவான வுண்மை யென்றுசொல்லக்கேளு, தாமப்பாபெரியோரைத் தவசியோரைதா மென்றமொழிமறந்தயோகியோரை, காமப்பால்கொண்டசிவ ஞானி யோரைகாலறிந்துபோகமதைக்கருதினோரை, நாமப்பா எளியோரை வடியோர்தன்னை நன்முன தாய்தகப்பன் நல்லோர்தானே. 832

தானென்றசற்குருவுந் தரணிதன்னில் தயவான தெய்வமுதல் சொன்னதெல்லாம், வீணென்று தானினைந்து அழும்புபேசி வினை செய்யுஞ்சண்டாளருலகத்துள்ளே, நானென்ற மதம்பேசித் திரிவா ரப்பா நலமிலாப் பாதகரைக் கண்டாயானல், ஆதியென்றும் பெண் ணென்றுமெண்ணவேண்டா மனியாயப்பாவிகட்குச்சொல்லகேளே.

கேளென்றுநாம்சொன்னே மனதுநொந்தால் கெடிகலங்கிஅண் டமுதல்நடுங்குமப்பா, ஆளப்பா அவர்கள்மனம் நோகப்பண்ணுமச டருக்குமாரணத்தைச் சொல்வேனையா, மாளப்பா துரோகியுடபே ரைச்சொல்லி மனதாகமாரணிக்க மாண்டுபோவான், நாளப்பாஅதி னாலேகுற்றமில்லை நன்மையிலாத் துஷ்டரைச் சங்காரம்பண்ணே.

பண்ணப்பா அறிந்துநீ சொல்லாவிட்டால் பலகோடி சித்தருட சாபம்நல்கும், விண்ணப்பா தானிடியும்பால் சொன்னேன் வினை செய்தோன் தனக்குவினை செய்தால்நன்மை, பண்ணப்பா தனக்கு மருந்திட்டுஅந்த புண்ணூற்று மகிமையடா புத்திசொன்னேன், சண் ணப்பா வாரிதியில் பேய்ச்சுரைவை தன்மையுடன் கொண்டுவந்து தயிலம்வாங்கே. 835

பேய்ச்சுரைத்தயிலம்.

வாங்கியந்தத்தயிலமதி லிங்குசேர்த்து மத்தித்துச் சிமிழ்தனில் பதனம்பண்ணி, தீங்கிலாத் தீங்குகள் செய்யும்பாவி திருடர்களைத் தானழைத்துவைத்துக்கொண்டு, ஓங்கிடுமத்தயிலமதில் பணவிடை தானெடுத்து வுண்மையுடன்வஞ்சகமா யவனுக்கீவாய், தாங்கியே தயி லமது சென்றபோதே தான்மயங்கி அறிவிழுந்து போவான்பாரே.

பார்மீதிலேதிரிந்து அவனுமைந்தா பஞ்சரிப்பா னுலகோரைக் கண்டால்மைந்தா, நேராகப் பெரியோரைக் கண்டால்மைந்தா நெடி தாகக் கீழ்விழுந்து பணிவான்பாவி, ஊர்மீதில் கழுதைய்து திரியுமா போல் உட்சென்றுபற்றவுமே ஓடிப்போவான், ஆர்மீதிலழும்புகளும் பேசமாட்டான் அதட்டினாலோடுவா னறிந்துபாரே. 837

வவ்வால்தயிலம்.

அறிந்துபா ரின்னமொரு வஞ்சகநான்சொல்லேவ னரகரா யிப்ப டியேவவ்வால்வாங்கி, பரிந்திரண்டு சிறகையு மறுத்துநல்ல பதமான புகையிலையில்கூடச்சேர்த்து, தெரிந்துநீபுகையிலையில்பாரமேற்றுதிர

மாகவைத்திடுநீ மைந்தாமைந்தா, பொருந்திரண்டு மொன்றுகப்பொ ருந்தும்பாரு புவியோர்கள்காணில் புகையிலையென்பாரே. 838

பாரப்பா இப்புகையைப் பாவியோர்க்கு பரிவாகக் கொடுத்திட வேமைந்தாகேளு, நேரப்பாநிலைதப்பி அறிவுகுன்றி நெஞ்சாரப்பித் தமது மேலேநோக்கி, ஊரப்பா திரிவான்காண் பித்தன்போலே யுல கோரைக்கண்டவுடன் பயந்துநிற்பான், சீரப்பாகண்டதெல்ாந் தின் பான்பாவி திரங்கெட்டு மதிகலங்கிப் போவான்பாரே. 839

அப்பிரகப்பொடி.

பார்க்கவே அப்பிரகம் வாங்கிமைந்தா பண்பாகப் பொடித்தத னைப்பதனம்பண்ணி, ஏற்கவே விபூதியுடன் கலந்துகொண்டு எள்ள ளவுதானெடுத்துக் கையில்வைத்து, மூர்க்கமுள மூடர்முன்னே யூது வூது மோசமுள அப்பிரகமதுதான்சென்று, சேர்க்கையுடன் கண்ணை திலேபறந்துவிழும் க்ஷணத்திலே கண்ணைமெள்ளக் கசக்குவானே.

கசக்கையிலே அதாதுவும் விழியில்பற்றி கறகறெனத்தண்ணீ ராய்க்கரைந்துபோகு, மசக்கமதாய்க்கண்ணொளிவு மயங்கிப்போகும் வையகத்தில்நடப்பதற்குக் காலங்கேது, பிசக்குமில்லைகண்போனாற் காலங்கேது பிணம்போல மதிகெட்டு அலைவானப்பா, வசக்கமிலா மானிடரை யகற்றவேணும் வாதவினைதீர்வதற்கு மருந்தும்பாரே.

மருந்தறிந்து பிணிவிலக்கும் வாறுபோலே வஞ்சகர்க்கு மருந் திதுதான் மக்காள்மக்காள், வருந்தியிந்த மருந்துவகை செய்துக் கொண்டுவஞ்சகரைசங்காரம்பண்ணவேணும், அருந்தமிழாலுரைத்த பன்னிரண்டுநூற்றில் அவையடக்கம் பொருளடக்கம் அனந்தஞ் சொன்னேன், தெரிந்துகொண்டுபன்ரண்டு நூறைமைந்தா சிவசிவா அடக்கம்தாய் தெரிந்துகொள்ளே. 842

கொள்வதற்குப் பன்னிரண்டு சுவாசந்தன்னைக் குறிப்புடனே தானடங்கி குருவைப்போற்றி, செல்வதற்கு மூலமதில் மனத்தை யோட்டி தீர்க்கமாய் நல்மனதைச் சேர்த்துக்கொண்டு, வெல்வதற்கு மேல்மூல நடுவிலாணி வேதாந்த ரேசகத்தால் பூரணத்தைப்பற்றி, சொல்வதற்கு வுவமையில் கும்பகத்தில்நின்று சோராமல் மதியமு தம் பூரணமாய்க்கொள்ளே. 843

அறிவுகூறல்.

மதியமுதமென்றதொரு வகையைமைந்தா மார்க்கமுடன்கோடி யில் ஒருவன்காண்பான், விதியறிந்தால்மதியறியு மதிதான்தேய்ந்து விசையான ரவியதனு லமுதங்காணும், பதியறிந்து அமுதமதைக் கொள்வதற்கு பக்குவமாய்மூலமதில் மனதையோட்டி, கதிமோட்ச மென்றதன்மேல்மூலம்பாரு கருணையதினுண்டாகுமறிவைப்பற்றே.

பற்றுவதுமேல்மூல மாறுதாரம் பங்கயத்தின் தரிசனத்தைப் பற்றினுக்கால், யுத்தமுகங்கசிந்துமிகவொழுகுமப்பாபுத்தியுடனதை யறிந்து கொள்வாயானால், முத்தியுள்ள மோட்சமெய்துங் கடாக்ஷ

முண்டாம் மூதறிவுதோற்றுமடா கற்பங்கொள்ளு, அற்றுதடாதேக மதில் நின்றுநோய்கள் அரகரா அமுதரச தேகமாச்சே. 845

தேகமென்றமூலத்தில்சூடுகொண்டால் சிவசிவாஅப்புகைதான் மேலேசென்று, ஆகமுடன்சிரசதிலே அனல்தான்மீறி அப்பானநீர்ப் பணைத்துவலியுண்டாச்சு, பாகமுட னக்கீர்தான் தசையிற்சேர்ந்து பக்குவமாய் சூடுகொண்டால் சுரங்களாச்சு, தாகமுடன்சுரமீறி வாத பித்தந் தணிந்ததனுல் சேத்துமத்துக் குயிர்தானுச்சே. 846

ஆச்சப்பா சேத்துமந்தான் மீறிற்ருனல் அப்பனே தோஷத் துக் குறுதியாச்சு, நீச்சப்பா தோஷத்துக் கடிதானென்ன நிலையான வாதமதில்பித்தமீறி, போச்சப்பா பாதாதிகேசந்தொட்டுப் பொங்கி யந்தப்பித்தநீர் பறந்துமீறி, காச்சப்பா தேய்வுடனே வாய்வுகூடி கடினமுடனுகாசம் புக்கும்பாரே. 847

பாரப்பாமூன்றுமொன்ருய்க் கூடிப்போச்சு பகையானபிரிதியுப் பும்நின்று, சேரப்பாகரைந்துதண்ணீர் மண்ணுய்ப்போச்சு சிவசிவா பஞ்சகர்த்தாள் கூத்தியாச்சு, ஆரப்பா அறிவார்கள் சடலவாழ்க்கை அரகராநீர்க்குமிழி மாய்கைமாய்கை, தேரப்பாகனுப்போலாஞ் சடல வாழ்க்கை சிவசிவா இதையறிந்து குருவைக்காரே. 848

## திரிகடுகுலேகியம்.

காரப்பாநீரிழிவு முதலாயுள்ள காமம்வினை யனந்தமடா லக்கோ வில்லை, பாரப்பாபிணியறிந்து மருந்துசெய்ய பக்குவங்கள் சொல்லு கிறேன் நன்ருய்க்கேளு, தேரப்பா திரிகடுகு சூரணமேசெய்து திர மான முப்பூவுங் கூடச்சேர்த்து, வாரப்பா தேனதிலே பிசைந்துக் கொண்டு மார்க்கமுடன் கொண்டுவிட்டால் சுரங்கள்போச்சே. 849

## திரிகடுகுகஷாயம்.

போச்சப்பா கஷாயமொன்று சொல்லக்கேளு புகழாகஅரத்தை யுடன் திரிகடுகுகூட்டி, காச்சப்பா தட்டிநன்ருய்க் கஷாயம்வைத்து கணக்காகவடித்திறுத்து முப்பூச்சேர்த்து, பாச்சப்பா தேனதிலே கொஞ்சம்விட்டு பக்குவமாய்க் கொடுத்திடவே சுரங்கள்போகும், ஆச்சப்பா சுரமென்றதெல்லாம்போகும் அரகராகுளிர்சுரமுமகன்று போமே. 850

## சுரத்துக்குத்தயிலம்.

போமப்பாதயிலமொன்று சொல்லக்கேளு புத்தியுடன்சீரகமும் ஓமங்கூட்டி, காமப்பா சிறுநீரா லரைத்துக்கொண்டு கணக்காக ஒரு படிநல்லெண்ணெவாங்கி, ஆமப்பாபசுவின்பால் கூடச்சேர்த்து அரை மருந்து அதுவுடனேகரைத்துக்கொண்டு, தாமப்பாமெழுகுபதமாய் வடித்து தன்மையுடன் முழுகிவரச் சுரங்கள்போமே. 851

சுரமானபித்தத்தால் வெட்டைமீறிச் சூடுகொண்டமேகநீரிழிவு காணுஞ், சிரமானநீரிழிவு பிலத்துதானுல் திரமாகாசனையுட னிறங் கும்பாரு, வுரமானரசனையது மீறிற்ருனல் உடன்காணும் நீர்ப்பிள

வையுண்மை, திறமாகத்தேகமதால்கண்டரோகஞ்சேர்ந்ததொருநீரி ழிவுபோகக்கேளே. 852

நீரிழிவுகருகஷாயம்.

கேளப்பாகஷாயமொன்று சொல்லக்கேளு கிருபையுளமஞ்ச னத்தில்ஆவாரைவேர்பட்டை, வேளப்பா கடலாஞ்சிபட்டைக்கூட் டிவிபரமுடன்மூன்றுமொன்று யிடித்துநல்ல, நாளப்பாபாண்டமதி லிட்டுமைந்தா, நல்லதண்ணீர்நாலுபடி எட்டொன்றுக்கி வாளப்பா அதிலரைக்காற்படியிடித்துமகனேநீகுருப்போட்டுக்குடித்திடாயே.

நீரிழிவுக்குலேகியம்.

குடித்திடுவாய்நாலுமுறைமைந்தாமைந்தா குணமாகும்நீரிழிவு குடிலம்நிற்கும், தடித்ததொருநீரிழிவுபணைப்புப்போகதன்மையுடன் லேகியந்தானுனென்றுகேளு, அடுத்ததொருதிரிகடுகுதிரிபலாதி அர கராவகைக்கு ஒருபலமாய்வாங்கு, விடுத்ததொரு ஆவாரைசெங்கிளு வைக்கொன்றை விதமானமஞ்சனத்திநெல்லியாமே. 354

ஆமப்பாஅஞ்சுவேர்பட்டைவாங்கி அப்பனே யிடித்திடுவாய் வெவ்வேறாக, தாமப்பாபொடிவகையோர்பலமாய்க்கூட்டி சங்கையு டன்முன்மருந்துபொடித்துச்சேர்த்து, நாமப்பாசொன்னஜாபத்திரி சாதிக்காய் நலமானகுங்குமப்பூகிராம்புகூட்டி, காமப்பாவகைக்கு அரைபலமாய்வாங்கி கடுகநீபொடித்துமுன்பொடியிற்சேரே. 855

சேர்த்ததொருபொடிகளெல்லா மொன்றாய்க்கூட்டி செம்மை யுடன்வைத்ததின்மேல்முறையைக்கேளு, சாற்றிடுவாய்பசுவின்பால் தேங்காய்ப்பாலுந் தன்மையுடனுட்டுப்பாலிளநீர்பாலுந், நேர்த்தி யாய்வகைக்குவொருபடியாய்வாங்கி நினைவாகப்பாண்டமதி விட்டுக் கொண்டு, கார்த்திடுவாயடுப்பேற்றியனலைமூட்டி காணவேகொதி கிளம்பும்போதுதானே. 856

தானேதான் கொதிகிளம்பும் பருவந்தன்னில் தப்பாமல்நல் லெண்ணைபடியேவார்த்து, மானேகேள்பொடிவகையைக்கொட்டிக் கிண்டு மக்களேமெழுகுபதமாகும்போதில், வீணேதான்திரியாமல் சாணைவாங்கி மெய்யானரசனையடாபலமோரெண்டு, பூணேதான்முற் குருவில்வராகன்பத்து புதுமையுடனிரண்டையுமே பொடித்துப் போடே. 757

போட்டவுடனிறக்கிநன்றா யாறவிட்டு புதுசான பீங்கான்தன் பரணிதன்னில், நாட்டமுடன்வழித்துவைத்துபதனம்பண்ணி நல மானசுண்டக்காயளவுகொண்டு, தாட்டிகமா யிருபதுநாட்கொள்ளும் போது தப்பாமல்நீரிழிவுதானேபோகுந், தேட்டமுள்ளநீர்பேதம் நாவரட்சி தீராதபிளவையொடுமேகம்போமே. 858

போமப்பாதயிலமொன்றுசொல்லக்கேளு பொல்லாதமேகநீரி ழிவுபோக, ஆமப்பாகஸ்தூரிதயிலஞ்சொல்வேன் அப்பனேபுலத்தி

யனேநன்றாய்க்கேளு, தாமப்பாநல்லெண்ணை ஆவின்நெய்யுந்தன்மை யுள்ளநிம்பஎண்ணைவகைமூன்றுக்கும், நாமப்பாவகைக்கு ஒருபடி யாய்வாங்கி நலமானபாண்டத்திலிட்டுக்கொள்ளே. 859

கொள்வதற்குச் சந்தனமோர் பலந்தான்பத்து கூர்மையுட னெண்ணைதனிற்கஸ்ரத்துமைந்தா, விள்வதற்கு தாய்க்கொள்ளிக் கிழங்குசாறும் விதமானபழச்சாறும்படிதான்வாரு, சொல்லுமிளநீர் படிரெண்டுவாரு சுத்தமுளசாதிக்காய்சாதிபத்திரி, செல்வமொரு சீரகமும்பழச்சாறுலே திரளஅரைத்தந்தப்பாகுடனேசேரே. 860

சேர்த்துமிகஅடுப்பேற்றித்தீயைமூட்டிசெம்மையுடன்மெழுகு பதமாகும்போதில், யார்த்துமிகக் கஸ்தூரிப்பல மரைதான்வாங்கி பக்குவமாய்காகமதில்போட்டுமைந்தா, வார்த்திடுவாய் தயிலமது காகத்துள்ளே மகத்தான தயிலமதைப்பதனம்பண்ணி, போற்றிமிக முழுகிவரமேகங்காங்கை பொல்லாதநீரிழிவுக்ஷயங்கள்போச்சே.

க்ஷயத்துக்கு கஷாயம்.

போச்சப்பாசிலேத்துமத்தால்சயங்கள்மீறி பொல்லாத இரும லாய்பித்தமீறி, காச்சப்பாஅனல்மீறிதேகம்வற்றிகாங்கையோடுஇரு மலிலேகசமாய்ப்போவான், பாச்சப்பாசயமானரோகந்தீரப் பக்குவ நான்சொல்லுகிறேன்பண்பாய்க்கேளு, ஆச்சப்பா அரத்தைநன்று யிடித்துக்கொண்டு அமுரிவிட்டுக்கஷாயநீயளவாய்க்காச்சே. 862

க்ஷயத்துக்குலேகியம்.

காச்சினதோர்கஷாயமதை யிறுத்துக்கொண்டு கனமானமுப் பூவில்வராகன்சேர்த்து, பாச்சுவாய்தேகமதிற்கஷாயந்தன்னை பக் குவமாய்மூன்றுநாள்கொள்ளும்போதில், பாச்சலென்றஇருமலீதக லுமைந்தா மனதாகலேகியந்தானென்றுகேளு, தாட்சியிலாத்தூது ளைகண்டங்கத்திரி சமூலமேயிடித்துநன்றாய்வடித்துக்கொள்ளே. ()

கொள்ளப்பாஇருவகையுமொன்றாய்ச்சேர்த்து குருவானஅமுரி விட்டுரவியிற்காச்சு, அல்லப்பாஇப்படியேபத்துமுறைகாச்சு அதின் பிறகுளட்டிலொன்றுசக்கரையைச்சேர்த்து, வில்லப்பா முப்பூவுஞ் சேர்த்துக்கொண்டு விசையானபசுவின்பால்நெய்யுங்கூட்டி, நல்லப்பா அடுப்பேற்றிப்பொடியைக்கொட்டி நலமாகமெழுகுபதமாகவாங்கே.

க்ஷயத்துக்குதயிலம்.

வாங்கியேநெல்லிக்காயளவுகொண்டால் மாறுதசயங்களெல்லா மாறிப்போச்சு, ஏங்கியேஓடிவிடுஞ்சயமாம்பேய்தான் என்சொல் வேன்மண்டலத்தில்தேகசித்தி, தூங்கியேவாடாதேதயிலமொன்று சொல்லுவேன்புலத்தியனேநன்றாய்க்கேளு, தேங்காயின்பால்நாழி தயிருநாழி செம்மைநிறப்பசுவின்கோமியமும்வாங்கே. 865

வாங்கிநன்றாய்ப் பாண்டமதிலிட்டுக்கொண்டு மைந்தனேபழச் சாறுகொடுப்பை முசுமுசுக்கை, பாங்குடனேவகைக்குவொருபடிதா

வார்த்து பக்குவமாய்மிளகுவொரு பலந்தான்வாங்கி, ஆங்கிகொண்ட அமுரியிஞ லரைத்துவாங்கி அப்பனே பாண்டமதில் கரைத்துக் கொண்டு, சாங்கமாய் நல்லெண்ணைபடி நாலுவார்த்து சமர்த்தாக அடுப்பேற்றிக் காச்சுகாச்சே. 865

காச்சிநன்ருய் மெழுகுபதமானபின்பு கரகமதில் தான்வடிக்கும் போதுமைந்தா, ஆச்சியேகரகமதி லண்டச்சுன்னம் அன்பான தார பஸ்பங்கஸ்தூரியோடு, தாட்சியில்லாவகைக்குஅரைபலந்தான்போடு சமர்த்தாகத்தயிலமதை வடித்துமைந்தா, தேச்சுமேமுழுகிவாசயங் கள்போச்சு சிவசிவா தேகமது வலுத்துப்போச்சே. 866

## குன்மத்துக்குலேகியம்.

போச்சப்பாகுன்மமென்ற தெல்லாம்போக புதுமையுள்ளலேகி யந்தாஞென்றுகேளு, காச்சியதோர்கருப்புட்டிப் பலம்பத்துவாங்கி கருவானஅமுரியிஞல்கரைத்துகொண்டு, பாச்சுவாயடுப்பதனிலனலை மூட்டிப் பக்குவமாய் காச்சுவாய் பாகுபோல, தாட்சியில்லாப்பாகு தனில் சேர்மருந்தைக்கேளு தப்பாமல் காரமுடன் சாரம்வாங்கே.

வாங்குவாய்வெடியுப்பு சவுக்காரந்தான் வளமான வளையலுப்பு இந்துப்போடே, பாங்குடனேபொரிக்காரஞ்சூடனுப்பு பக்குவமாய் யெட்டுவகையுப்புவாங்கி, சாங்கமாய்பொடித்துப்பாகதனிற்சேர்த்து சமரசமாய்க்கிண்டிவர மெழுகுமாகும், ஆங்கவனே மெழுகுதனைப் பீங்கானுள்ளே அடைத்துநீ பதனமாய் வைத்துப்போற்றே. 868

போற்றியேமெழுகுதனைமைந்தாகேளு புத்தியுடன்பத்துநாள் கொள்ளச்சொல்லு, தேற்றியேகொண்டதிஞல்சத்திகுன்மந் திரளா னவாயுவிஞல் வலிகுன்மங்கள், சாற்றுகிற நெஞ்சடைப்பு சத்திகுன் மஞ்சலஞ்செய்யும் எரிகுன்மம்ருத்திரவாய்வு, ஆற்றியதோர் சூதகத் தின்வலியோடொக்க அரகரா குறுக்குவலி யனைத்தும்போமே. 869

போமப்பாவாய்வுமேல் வந்தநோய்கள் பொல்லாததிரட்சியொடு மூர்ச்சையெல்லாஞ், சாமம்பா லேகியத்தைக் கண்டபோதே சாங்க மாய்குன்மமென்றதெல்லாம்போகும், ஆமப்பாதயிலமொன்றுசொல் லக்கேளு ஆனதொருநல்லெண்ணை நாலுபடிவாங்கி, தாமப்பாபாண்ட மதிலிட்டுக்கொண்டு தப்பாமல் மிளகுஒரு படிநீவாங்கே. 870

## மிளகுதயிலம்.

வாங்கப்பா ஏலமரை படிதான்வாங்கி வலமாக இரண்டையுமே யுடைத்துக்கொண்டு, தீங்கிலாமுற்குருவில்விராகன்வைத்துசேர்த்து நன்ருய்ப் பொட்டணமாய்க் கட்டிமைந்தா, தாங்கியே பொட்ட ணத்தை எண்ணைக்குள்வைத்து தப்பாமல் ரவிமுகத்தில் வைத்து நன்ருய், பாங்குடனே தலைமுழுக வேண்டிஞக்கால் பண்பொன்று சொல்லுகிறேன் கேளுகேளே. 871

கேளப்பா பொட்டணத்தைப் பிழிந்துக்கொண்டு கெணிதமு டன்முழுவாச்சீயக்காயால், வாளப்பா எட்டுநாளொரு தண்டகம்வரி

சையுடன்முழுகிவரவளமைகேளு, மேலப்பாகொண்டதொருவாய்வு போச்சு மெய்நிறைந்தவூஷ்ணங்களெல்லாம்போச்சு, நாலப்பா அசதி மேலசதிபோச்சு காபநீர் பித்தநீர் மேகம்போச்சே. 872

மேகத்தினாலெழுந்த தோஷம்போச்சு வீறான பித்தமொடு வாதம்போச்சு, காகத்தால்நாவரட்சி அகன்றுபோச்சு சலமான பீனிசங்கள் தானேபோச்சு, தேகத்தில் கதிரொளிபோல் காந்தியாச்சு திரமாகத்தந்தங்க ளிறுகிப்போச்சு, மோகத்தில் மன்மதன்போல் களையுண்டாச்சு மோசமில்லை மிளகினுட தயிலந்தானே. 873

## மூலத்துக்குமூலிகை.

தானென்றமூலத்துக்குறுதிசொல்வேன் தயங்காதமூலமென்றதெல்லாம்போகும், தேனென்றபுல்லறுகு துளிரவைத்து செழுமையுள்ள தண்ணீரில் குடித்தாயானால், ஊனென்ற மூலமெல்லாந் தீருந் தீரும் உத்தமனே யீரஞ்சுநாளில்மைந்தா, வீணென்ற மூலமெல்லா மொழிந்துபோகும் விசையாக இன்னமொரு பாகங்கேளே. 874

## மூலத்துக்கு லேகியம்.

கேளப்பாகருணையென்ற கிழங்குவாங்கி கெட்டியாயமுரியினால வித்துமைந்தா, நாளப்பாதிரிபலையைப் பொடியாய்செய்து நலமான கிழங்குடனே பிசைந்துகொண்டு, வேளப்பா முப்பூவுங் கூடச் சேர்த்து விசையாக அடுப்பேற்றிக் கிண்டும்போதில், ஆளப்பா நல்லெண்ணெ அளவாய்விட்டு அரகரா மெழுகுபதமாக வாங்கே. 875

வாங்கியதோர்லேகியத்தை அந்திசந்திவரிசையாய் நெல்லிக்காயளவுகொள்ள, ஏங்கியேபறந்தோடு மூலமெல்லா மென்னசொல்வேனீரஞ்சு நாளில்மைந்தா, பாங்குடனே யுள்மூலம் வெளிமூலந்தான் பற்றிநின்ற சீமூலம் ரெத்தமூலந், தாங்கிநின்ற குதமூலம் வாய்வுமூலந் தப்பாமல் மூலமொன்பதுவும்போமே. 876

## மூலத்துக்குத் தயிலம்.

போமப்பாதயிலமொன்று சொல்லக்கேளு புதுமையென்ற நல்லெண்ணெநெய்யுங்கூட்டி, ஆமப்பாபழச்சாறுந்தயிருஞ்சேர்த்து அன்பாகஈருள்ளிச்சாறுங்கூட்டி, தாமப்பாஅடுப்பேற்றிக்காச்சும்போதில் தன்மையுடனேங்கோலங் கொஞ்சம்விட்டு, நாமப்பா மெழுகுபதமான போதில் நற்காகமதிற்பூரம் புழுகும்போடே. 877

போட்டதொரு காகமதில் வடித்து மைந்தா புகழாகத் தலைக்கிட்டு முழுகச்சொல்லு, தேட்டமுடன் முழுகிவர மூலவாய்வு திரங்கெட்டுவோடிவிடுமப்பாசொன்னேன், நாட்டமுடனேயகன்றுதேகம் பொன்போல் நன்மையுள்ளதேகமதாய் நளினமாகும், வாட்டமில்லா லட்சுமிதன் கடாக்ஷமுண்டாம் மன்மதன்போல் காந்தியுண்டா மைந்தாபாரே. 878

பாரப்பாபன்னிரண்டு நூறுக்குள்ளே பாடிவைத்த பொருள்களெல்லாமடக்கமாகும், நேரப்பா பன்னிரண்டாயிரச்சுருக்கம் நினை

வாகஇந்நூலைப்பதனம்பண்ணு, காரப்பாகுருபதத்தைக் குணமாய்ப் போற்றி கற்பூர தீபமதிற்கருத்தைவைத்து, சாரப்பா மதியமுதம் பானம்பண்ண சதாபோதைசிவயோகமாகுந்தானே. 879

## கெற்பவியாதிபோக.

தானென்றகெற்பநோய் தீர்வதற்குத் தயவானகருவொன்று சொல்லக்கேளு, வூனென்றசருகெடுத்துக் கருக்கிமைந்தா வுண்மையுடன் சிறுநீரிற்பிசைந்துருட்டி, வானென்றரவிதனிலேகாயப்போடு மார்க்கமுடனிப்படியே பத்துமுறைபண்ணு, கோனென்ற அமுரியிலேகரைத்துமைந்தாகுளுமையுடன்தெளிவிறுத்துரவியில்வையே

வைக்கவே யுப்பதுவும் படரும்பாரு வரிசையுடன் பானமதாயெடுத்துமைந்தா, தைக்கவேபீங்கானில்பதனம்பண்ணிதாரணியில் பெண்களுக்குக் கெற்பநோய்தான், நயக்கவேவந்து தென்னவென்றுல்மைந்தா நன்மையுடன்ருதுவாகும்நாளிற்றுனே, மயக்கவேமாப்பண்டம்பால்பழத்தினலே வந்துதடாருதகத்தின்வாய்வுதானே.

தானென்ற கருக்குழியில்வாய்வுதங்கி தளர்ந்ததொரு சோரையினல்தசைதான்மூடி, ஊனென்ற தேகமெல்லாமகர்த்துநல்ல வுண்மையுள்ள அடிவயிற்றில்வலியுண்டாச்சு, பானென்ற கருக்குழிதான் விளக்கமன்றி பரமானவிந்துவங்கேஅணுகாதையா, ஏனென்றுலாதியிலேவாய்வுகொண்டுஇருந்ததினல்கெற்பமதுஇல்லைதானே. 882

## கெற்பவாய்வுக்கு உப்பு.

தானப்பாகெற்பமதில்வாய்வுபோக தயவாக முன்சொன்னவுப்பைமைந்தா, தேனப்பா அதில்நுணுக்கிக் குழப்பியுண்ண செடத்திலுள்ளமலசலங்கள் சேரப்போகும், காணப்பா கெற்பமதில் வாய்வுபோகுங்கருவான கருக்குழியும் விளக்கமாகுங், கோணப்பாகுருவருளால்கெற்பமுண்டாம் கூறுகிறேனின்னமொருபாகங்கேளே. 883

## கெற்பமுண்டாக எண்ணெய்.

கேளப்பா தேங்காய்பால் மஞ்சள்பாலுங் கெடியான தைவேளைவீழிச்சாறும், நாளப்பா நிலவாகைச் சாறுங்கூட்டி நன்மையுடன் வகைக்கு ஒருபடியாய் வாங்கி, மேலப்பா இடுமருந்தை வகையாய்க் கேளுமேன்மைதிரிகடுகுதிரிபலையிந்துப்பே. 884

உப்பதுவுங் கால்பலந்தான் வாங்கிநல்ல வுடன்சேர்ந்த மருந்து அரைபலமாய்வாங்கி, செப்பவே பெருங்காயம்விராகன்பத்து சேரவேபொடித்தந்த எண்ணெதனில்கலக்கி, தப்பாம லடுப்பேற்றிமெழுகுபதந்தன்னில் தயவான குருப்போட்டு வடித்துமைந்தா, அப்பா கேள்பதனமதாய்வைத்துக்கொண்டுஅதின்விபரஞ் சொல்லுகிறேன் மைந்தாகேளு. 885

கேளப்பா விலக்குமுள்ள மூனுநாளும் கெணிதமுடன் படியரைக்கால்வீதங்கொள்ளு, நாளப்பாமூன்றுநாள்கொண்டபோது நல

மில்லாச்சீதமொடுமேல்கட்டெல்லாந், தாளப்பாகழன்றுவிடும்வாய்வு போகுந் தருகாத வயிற்றுவலியுடனே நிற்கும், ஆளப்பா மறுசூதக மில்லையில்லை அரகராகெற்பமதுவுண்டாம்பாரே. 886

பாரப்பாவுலகத்தில் மலடேயில்லை பக்குவமாய் செய்வோர்க்கு எல்லாஞ்சித்தி, சாரப்பா குருபதத்தைத்தொண்டுபண்ணு காயாதி கற்பமதைமறந்திடாதே, ஆரப்பாவுனக்கீடுஆதிகற்பம் அனுதினமும் நேசமுடன் பூசைபண்ணு, வீரப்பா செய்யாமல் மனதடங்கி நில்லு விண்ஞானகண்ணொளியைமேவிப்பாரே. 887

பாரப்பாபதிதலத்தில் மதியொடுங்கி பாலகனேரவிபெருக்கில முதஞ்சிந்தும், ஆரப்பா வுனக்கீடு அமுதங்கொண்டு அன்பான பூரணத்தைஅறிவார்பாரு, தேரப்பாஇந்நூலைப்பதனம்பண்ணு செகத்தோர்க்கு இந்நூலைச் செப்பவேண்டாங், காரப்பா பன்னிரண்டு நூறைமைந்தாகண்ணிமைக்குள்வைத்ததனைப்பதனம்பண்ணே. ()

குஷ்டத்துக்குத் தயிலம்.

பண்ணப்பாகுஷ்டமொடுகறப்பான்போக பண்பொன்றுசொல்லுகிறேன்மைந்தாகேளு, நண்ணப்பாபரங்கியுடபட்டைவாங்கி நலமான பழச்சாற்றிலூறப் போட்டு, விண்ணப்பா ரவிபடவேயுலரப் போட்டுவிசையாகஇப்படியேபத்துமுறைபண்ணு, தண்ணப்பாநன் கவுலர்ந்தபின்பு தாக்கிநன்றாயிடித்துவடிக்கட்டுவாயே. 889

கட்டாகச்சிவனார்தன்வேம்பைவாங்கிகண்டமதாய்நருக்கிகுழித் தயிலம்வாங்கி, திட்டமதாய் தயிலமதில்பட்டைத் தூளுஞ் சேர்த்து நன்றாய்ப் பிசைந்துருட்டி வைத்துக்கொண்டு, மட்டாதநெல்லிக்கா யளவுகொண்டால் மாறாதகிரந்தியொடுசூலைப்புண்கள், தொட்டவுடனோடுகின்ற குஷ்டரோகஞ் சொரிசிரங்கு பெருஞ்சிரங்கு இன்னங் கேளே. 890

கேளப்பா மேல்புற்று வெடிப்புவெடிவெள்ளை கேளாதசெவிய டைப்பூமூக்கடைப்பு, தாளப்பா மேகத்தால் வந்தரோகந் தருகாம லோடு மிருபதுநாட்கொண்டால், கேளப்பா ஒன்றிலை 'முப்பூவுஞ் சேர்த்து குணமாகக்கொண்டவுடன்குடிலநீங்கும், நாளப்பாநாளுக்கு நாளேதேகம் நன்றாகக்காணுமடாநமனுடானே. 891

சொரிசிரங்குதயிலம்.

நாடாமலின்னமொரு தயிலம் சொல்வே னலமானதேங்காய்ப் பால்படிதான்வாங்கி, வாடாமல்துரிசிஅரிதாரங்கெந்தி வகையொன் றுக் கிருகழிஞ்சி வாங்கிமைந்தா, தேடாமலுரைத் தப்பால்தனிற் கலக்கி செம்மையுடன்காச்சிஎண்ணை த்திரமாய்வாங்கி, ஆடாமலெண் ணைதனைவைத்துக்கொண்டு அப்பனேமுற்குருவில்கழஞ்சிசேரே. ()

சேர்த்தபொருளெண்ணைதனைவைத்துக்கொண்டு தேகமதிற்றான் தடவிசாயுங்காலம், கார்த்தல்லோ அரைப்பிட்டு குளித்தாயானல் பறக்குமடாசொரிசிரங்குபறங்கிக்குஷ்டம். மாற்றானமேல்பற்றுவெ

ணைவண்டுமாறுபடா அதனிலொருவயணங்கேளு, கார்த்தல்லோமோ
றுஞ்சோறுண்டுமைந்தா காசிடைகாணுண்டிடவேகர்மம்போமே. ()

### பேதிக்குழம்பு.

போமப்பாமலசலங்கள்போவதற்கு புகலுகிறேம்புலத்தியனே
நன்றாய்க்கேளு, நாமப்பா வாளமதைப் பழத்தின்சாற்றால் நன்றாக
மூன்றுநாளூறப்போட்டு, தாமப்பா மறுநாள்தா னவிழ்த்துப்போடு
சண்டாளநஞ்சதுவுமற்றுப்போகும், ஆமப்பாபருப்பெடுத்துகாயப்
போட்டு அப்பனேநன்றாகவுலரவையே. 895

வையப்பா லிங்கமொருவராகன்வாங்கு வாங்கடா அதுக்கிரட்
டிப்பொரிக்காரந்தான், மெய்யப்பா அதுக்கிரட்டிவாளஞ்சேரு விபர
முடனதுக்கிரட்டிவிள்ளக்கேளு, செய்யப்பா ஆமணக்கம்பருப்புங்
கூட்டி திரமாகத்தானரைக்கும்போதில்மைந்தா, கையப்பாதிறந்து
டனேஅரைக்கும்போதில் கருவானமுப்பூவில்விராகன்சேரே. 896

சேர்த்தல்லோஆட்டிநன்றாய் வழித்துமைந்தா திறமாகச்சிமிழ்
தனிலேபதனம்பண்ணி,பார்த்தல்லோகுன்றியிடையீந்தால்மைந்தா
பக்குவமாய்மலசலங்களகன்றுபோகும், கார்த்தல்லோ பேதியதுமீ
றிற்றானால் கடுகவே மோறுஞ் சோறுண்ண நிற்கு, மாற்றுநீரணை
போட்டவாறுபோல அடைக்குமடாமோரினுட ஆண்மைதானே. ()

### நவாச்சாரபேதி.

தானென்றஇன்னமொருபேதிசொல்வேன் தயவான நவாச்சா
ரம்பலமொன்றுவாங்கி, நானென்றகொடிக்கள்ளிப்பாலில்நாட்டி நன்
றாகக்கல்வத்தில் மைபோலாட்டி, தானென்ற சிமிழதனிற் பதனம்
பண்ணி தப்பாமல் குன்றியிடை தயவாய்க்கொண்டா, வூனென்ற
மலக்கட்டு ஜலக்கட்டெல்லாம் ஓடுமடா அதின்பிறகு பொறுக்கா
தன்றே. 898

பொறுக்காதே மயங்கினதால்மைந்தாமைந்தா பொக்கெனவே
நிற்பதற்குப் புதுமைகேளு, மறக்காதே எலுமிச்சம்பழத்தைத்தின்
றால் மறிக்குமடாபேதிதனைவளமாம்பாரு, தருக்காதபெருவயிறுவாய்
வுகட்டு தப்பாத மகோதரம் நீராம்பலோடு, வுருக்காதே வுருகிமல
ஜலக்கட்டோடே உள்வினைகள்தீருமடாவுண்மைதானே. 899

### அகஸ்தியக்குழம்பு.

உண்மையாய்நம்முடையகுழம்பைக்கேளு வுறுதியுள்ளபெருங்
காயமிந்துப்போட்டு, தன்மையுள்ள கடுகுரோகணியுங்கூட்டி தய
வானரசமுடனேகாரங்கூட்டி, நன்மையுள்ள நிருவிசமுஞ்சிலையுந்தா
ரம் நல்லநருஞ்சீரகந்திப்பிலியுஞ்சேர்த்து, வண்மையுடன்துகைபார்க்
கப்பத்துமாச்சு வரிசையுடன்சரியிடையாய்வாங்கிக்கொள்ளே. 900

வாங்கியதோர் மருந்துக்குஇடைதான்வாளம் வளமாக அதுக்க
ரைதான்பச்சைசேர்த்துப், பாங்குடனே கல்வத்திலிட்டுக்கொண்டு
பக்குவமா யீராறுசாமமாட்டி, தீங்கிலாமுப்பூவும் பத்துக்கொன்று

சேர்த்துநீதிரமாகச்சாமமாட்டு, சாங்கமாய்மருந்தரைக்கும்போதில் மைந்தா தயிருடனேசோறுண்டுதயவாயாட்டே. 901

ஆட்டிநன்றாய்வழித்தெடுத்தமேதிக்கொம்பு அடைவான சிமிழ தனில்பதனம்பண்ணி, நாட்டிலே மானிடர்க்கு வருநோய்க்கெல்லா நமலானஅனுபானமறிந்துசெய்தால், வாட்டமுடனோடிவிடு மைந்தா கேளு மகத்தானவித்தையடாகுழம்பைத் தேடிக்கொண்டு சிவசிவா நம்முடையபேர்வைத்தாரே. 902

பேர்வைத்ததாரென்றால்மைந்தாகேளு பெருமையுள்ளசித்தர் தபோதனர்கள்கூடி, நேர்வைத்தமருந்துருகிகுறிப்பைக்கண்டு நேர் மையுள்ள அகத்தீசர்குழம்பென்றார்கள், பார்வைத்த அகத்தீசர்பண் பறிந்தால்மைந்தா பதறினதோர்குழம்புறுதியறிவானப்பா, கூர்வைத் தகுழம்புறுதி யென்னவென்றால் குணமான பரிச்சையட' வுயிரு மாச்சே. 903

உயிரான பச்சைதனை யறிந்துக்கொண்டு வுண்மையாய் நம்மு டையகுழம்புபண்ணி, பயிரானமானிடர்க்குவருநோய்கண்டு பாச்சு கிறவிதமுனக்குப்பகருவேன்கேள், துயரானலோகருக்குச் சுரங்கள் கண்டால் சுகமாக இஞ்சியைநீசுரசம் பண்ணி, வயிரான குழம்பில் கால்பணவிடைதான்கரைத்து வரிசையாய்க் கொடுத்தவுடன் பேதி யாமே. 904

ஆமப்பாபேதித்தபோதில்மைந்தா அணுகிநின்ற சுரமனைத்து மகன்றுபோகும், தாமப்பாசோறுபொங்கிவெந்நீர்விட்டு தாகமதுதா னடங்கக்குடிக்கச்சொல்லு, நாமப்பாசொல்லுகிறோம் பத்தியமில்லை நன்மையில்லாதோஷமது நாடிற்றானால், போமப்பா கடுகளவு கண் ணிற்போட்டு புரிசமுடனுவினிலேதீற்றுவாயே. 905

தீற்றிநன்றாய்க்கண்ணிலிட்டால்முழித்துப்பார்ப்பான் திரமான நாவரட்சிவிட்டுப்போகும், பார்த்துநன்றாய்ப்பரிசுடனேபிணியறிந்து பருவமுடன்செய்துவந்தால்பலனுமைந்தா, கார்த்துமிகக்கருவறிந்து குணத்தைக்கண்டு காலறிந்துமேலறிந்துகர்மம்போக்கி, போற்றிநன் றாய்மருந்துமிகச் செய்தாயானால் பூலோகராஜரிஷியாவாய்பாரே. ()

பிளவை முதலானதுகளுக்கு.

பாரப்பா பிளவைமுதலேழு நோய்க்குப் பண்பாகவுமிநீரால் குழைத்துப்பூசு, நேரப்பாவீரமெல்லாந் தீருந்தீரும் நேர்மையுடன் புரைமுதலாய்புண்கள்தீருங், காரப்பாவிஷ மனைத்தும் போகவென் றால்கடுகளவு கண்ணிலிடக் காணுதோடுஞ், சாரப்பா ஸிரியனுக்குச் சிறுபாகைச்சாற்றில் தன்மையுடனீகுழைத்துகண்ணில்தீற்றே.

தீற்றியேகடிவாயில்பூசிப்பாரு செம்மையுடன்விஷந்தீருந் திரந் தானப்பா, போற்றியேசிலவிஷங்க ளனைத்தும்போக புதுமையுடன் சிறுநீரைசிறுசுவாங்கி, பார்த்துமேகடுகளவு கரைத்துக்கொண்டால் பறக்குமடா சிலவிஷங்களனைத்துமைந்தா, காத்துமேவயித்தியமாயி ரத்தில்மைந்தா சருவாகவயித்தியத்திற்கருதினேனே. 908

கருதினேன் சவுமியசாகரத்தில்மைந்தா கருவான வழலைமுதல் சரக்குக்கெல்லாம், உறுதியாய்ப் பேர்வகையு மாரணமுஞ் சொன்னேன் உண்மையுள்ள சத்துரு மித்துருவுஞ் சொன்னேன், பருதி எனும் பலதிரட்டில் சரிகையொடுகிரிகை பாங்கான ஞானமுடன் யோகஞ்சொன்னேன், அறுதியாய் சகலசாத்திரங்களுக்கு மானகுரு சூத்திரமா யடக்கினேனே. 909

அடக்கினேனவையடக்கமிந்தநூலில் அடக்கமென்றபொருள்களெல்லா மிதிலேசொன்னேன், விடக்கெடுத்த நாய்போல வாய்வீண்பேசிமேதினியிலுகுசிரம்வெடித்துப்போகு, முடக்கமில்லைபூரணியாளிட்டசாபம் மொழிகவரியணுகளவு வெளியில் போட்டால், நடக்குமிகுவாசியது காணுதோடும் நடப்பறிந்து வாசியைநீ கட்டுகட்டே.

கட்டாகவயித்திய பூரணந்தானப்பா கருதினேநானூற்றி லாதியந்தம், திட்டமாய் பற்பவகை செந்தூரங்கள் திரமான லேகியங்கள் சூரணங்கள், சட்டமாய் கற்பவகை ரசாயனங்கள் சாந்தமாய் கஷாய வகை குடிநீர்போக்கு, மட்டாகத் தயிலமுதல் மாத்திரைகளெல்லா மார்க்கமுடன் சொற்பமதாய் வசனித்தேனே. 911

வசனித்த வயித்திய பூரணத்தைக் கண்டால் வாய்பொத்தும் நோய்களெல்லா மைந்தாமைந்தா, நிசனித்த இந்நூலை சித்தர்கூடி நேராகக் குகைதோறு மொளித்தாரையா, திசனித்துவாதாடி நூலை வாங்கி செகத்திலே நல்லோர்க்கு ஈந்தேனப்பா, அசனித்த மனங்குவிந்த வாறுபோல அன்பாக வயித்தியத்தை யழுந்திப்பாரே. 912

## வயித்தியனைத் தர்க்கித்தல்.

பார்க்கையிலே வயித்தியத்தில் எதிர்த்தானாகில் பரிசுடனேமுப்பூவின்விபரங்கேளு, சேர்க்கையுடன்குருமுறையைச் சொன்னானாகில் செம்மையுட னவர்களிடம் பேசுபேசு, மார்க்கமுள்ள வகைதனையே அறியேனென்றால் மார்பிலே அறைந்தவனை அகலத்தள்ளு, தீர்க்கமுடன்வாதிவந்து எதிர்த்தானாகில் திறமாகச்சரக்குவகை கட்டுகேளே.

கேளப்பா கட்டுவகைக் கருவைச்சொன்னால் கிருபையுடனவர்களிடங்கேள்விபேசு, ஆளப்பாஆதியந்தமறியேனென்றால்அதட்டியே அவன்சிரசிற்குட்டுப்போடு, கோளப்பா குறியறியாரிடத்திற்றானுங் கூடாதே கூடினதால் தோஷமுண்டு, நாளப்பா ஞானிவந்து எதிர்த்தானாகில் நண்ணுவது மனந்தானே யெங்கேயென்னே. 194

எங்கென்றுகேட்டவுட னுன்னிப்பாய்ந்தால் இன்பமுட னவர்களிடமிருந்துபேசு, மயங்கியவன் மதிகெட்டுப் போனானாகில் மார்புதனிலேயறைந்து கண்ணிற்குத்து, வங்கியென்ற பயல்களிடம் பேசவேண்டாம் வணங்கிமிகவந்தாலு மகலத்தள்ளு, சிங்கமென்றுயோகிவந்து எதிர்த்தானாகில் சிவசிவாமூலத்துக் குறுதிகேளே. 915

கேட்கையிலே கைமுறையாய் சொன்னானாகில் கிருபையுடனவனிடத்திற்கேள்விகேளு, வாழ்க்கையுடனாதியென்று சொல்வானாகில்

வலுவாகவாய்தனிலே அறைந்துதள்ளு, ஆட்கையுள்ள கவுனிவந்து எதிர்த்தானுகில் அடைவான சாரணைக்கு வகையைக்கேளு, வேட்கையுள்ள சாரணைக்கு விசையைச்சொன்னல் வேண்டியே யவனிடத்தில் தொண்டுபண்ணே. 916

பண்ணப்பாசாரணை தான்முறைவிள்ளாட்டால்பாதரட்சைதன்னலேபடைத்துத்தள்ளு, கண்ணப்பாகண்ணறியாப் புண்ணர்மெத்த கபடமுளவேடமதுகருத்தாய்ப்பூண்டு, விண்ணப்பாஅறியாதசித்தர் கோடி வீணருடன்பேசாமலிருந்துகொண்டு, தண்ணப்பா தன்னிலையைத்தானேகண்டு சமர்த்தாக பூரணத்தின் திறமாய்நில்லே. 917

பஞ்சசுன்னக்குகை.

திறமாக அஞ்சுசுன்னக் குகையைக்கேளு தீர்க்கமுள்ள கடல்நுரைதான்பலமேவாங்கி, உரமானகருவாலே அரைத்துவூதுவுத்தமனேமாண்டபின்கல்லுப்புக்கூட்டி, மறவாமற்கருவாலேயலைத்துவூது மார்க்கமுள்ள வெடியுப்பு கூடச்சேர்த்து, நிரையாகக் கருவாலேயரைத்துவூதி நிச்சயமாய்த் தானெடுத்து சொல்லக்கேளே. 918

கேளப்பா சீனமுடன் கூடன்கூட்டி கெணிதமுள்ள கருவாலேயரைத்துக்கொண்டு, மாளப்பா மிகவரைத்து வட்டுபண்ணி மார்க்கமுடன் காயவைத்தோடுமூடி, தானப்பாமண்சீலை வலுவாய்ச்செய்து தன்மையுடன் புடம்போடச் சுன்னமாகும், ஆளப்பா அஞ்சினமும் ஒன்றாய்க்கூட்டி அரகரா சுன்னமதாய் நீறிப்போச்சே. 919

போச்சப்பா நீறின் சுண்ணும்பைமைந்தா புகழாகக் கருவாலே குகைதான்பண்ணு, நீச்சப்பாயிக்குகைதான் பஞ்சபூதம் நிறையான அஞ்சுசுன்னக்குகையுமாச்சு, வாச்சப்பாவாதமஞ்சுக்குகையைக்கண்டால் மகத்தானசரக்கெல்லாம்நடுங்கிச்சாகும், காச்சப்பாசரக்கிட்டுக் குகையைமைந்தா கடுங்காரச்சுண்ணும்பாய் நீறிப்போச்சே. 920

நீறிப்போமிதைவிட்டால்சுன்னப்போக்கு நிலையாது அஞ்சுசுன்னக்குகையைவிட்டால், தேறிப்போம்சுத்தமது திறமாய்நீறுந் திறமானபொன்னீறும் வெள்ளிநீறும், கூறப்போ முபரசங்களெல்லா நீறுங் குணமான நாதவிந்து குறியாய்நீறும், ஆறிப்போம்சாரமுதற்றுருசுநீறும் அப்பனேயுப்போடு மெல்லாம்நீற்றே. 921

நீற்றுவகைக் கிதுவிட்டால் சுண்ணும்பில்லை நிறையாக இந்த முறைப்படியேபண்ணு, மாற்றுவகைக் கிதைவிட்டால் சுன்னமாகா மக்களேகரிகட்டு மாளவேண்டாந், தேற்றியே மனதடங்கி அறிவில் நின்று திறமாகப் பதருமல் வாதம்பார்த்தால், நேற்றியுள்ள பூரணமாய் காணலாகும் நிறையாத வகைவிபரம் நீதான்கேளே. 922

ஔஷதமுடிக்குமாதங்கள்.

கேளப்பாபங்குனியின்சித்திரையினுள்ளே கெணிதமுள்ளமுப்பூவுக்குறுதியாகும், வாளப்பா தைமாசி ரண்டுக்குள்ளே மகத்தான

செயநீருக் குறுதியப்பா, நாளப்பா ஐப்பசி கார்த்திகையினுள்ளே நலமான வுருக்கினத்தை நாடிப்பாரு, தாளப்பா ஆடி ஆவணியி னுள்ளே தவிராமல் திராவகத்தைத் தயவாய்ப்பாரே. 923

பாரப்பா வையாசி ஆனிரெண்டில் பதறுமல்சாரணையைத் தீரு தீரு, நேரப்பா புரட்டாசி மார்கழியிரண்டில் நிறையாகச் செந்தூரம் நினைவாம்பண்ணு, காணப்பா பன்னிரண்டுஞ் சரியாய்ச்சொன்னேன் கட்டாகப்பனிரண்டு ஊறைப்பார்த்து, தேரப்பா தொழில்முறை யைத்தேர்ந்துபாரு திரமாகத் தொழில்முறையைச் செப்பக்கேளே.

## தொழில்முறை.

கேளப்பாசவுக்காரம் வங்கம்ரெண்டுங் கெதிதப்பில்துருசுக்குக் கெணிதமில்லை, மாளப்பா கெந்தகமுஞ் சூதம்போனால் மகத்தான செந்தூரமார்க்கம்போச்சு, தேளப்பாவெடியுப்புசீனம்போனால் திரா வகத்தின் நேர்மையெல்லாஞ் சிதறிப்போச்சு, ஆளப்பா அமுரியுட கூர்மைபோனால் அடங்காத செயநீரு மசதியாச்சே. 925

ஆச்சப்பாவுருக்கினந்தான்காரஞ்சாரம்அப்பனேவீரம்விட்டால் நீறும்போச்சு, போச்சப்பாபுடம்விட்டால்சாரணையும்போச்சு போத மாயினந்தப்பில் வர்னம்போச்சு, சாச்சப்பா தங்கம்விட்டால் களை காணாது கருவான ரசம்போனு லெல்லாம்போச்சு, பாச்சப்பா இனி என்ன பருவம்பாரு பண்பாகத் தொழில்முறைக்க பருவம்பாரே.

பாரப்பாசுன்னம்விட்டால்செயநீர்போச்சு பாங்கானசாரம்விட் டால்கட்டேபோச்சு, வீரப்பாசிங்கிவிட்டால்சூதம்போச்சு வேகாதே வேகுதற்குத்தீனியாச்சு, காரப்பாகிராவணத்தைவிட்டானுகில் கசிந் துருகும்வெண்காரஞ்சுருக்கும்போச்சு, தேரப்பாஅறிந்தவர்களினத் தைச்சொன்னேன் தெரியாதப்படியவர்க்கு அடிதான்தானே. 927

## ஔஷதபரிட்சை.

தானென்றதுரிசதுவும் நீறிற்றுனல் தன்மையுடன்மஞ்சளிலே சிவக்கவேணுங், தேனென்ற சாரமது வுருகும்போது திரமாகமயிர் தனிலே புகையவேணும், நானென்றவெங்காரம் உருகும்போது நலியாதே பொங்கிநின்று ஆடவேணும், கோனென்ற வெடியுப்பு கட்டிச்சானல் குணமாகத் தந்தம்போல் கட்டுகட்டே. 928

கட்டப்பாகல்துப்புகட்டிற்றுனல் கனமாகக்கரியில்நின்று வுருக வேணு, மட்டாதசீனமது கட்டிற்றுனல் மார்க்கமுடன் மணிபோலே யாடவேணுங், திட்டமுடன் சூடனது கட்டிற்றுனல் திரிகொளுத்த எரியாமல் நிற்கவேணும், மட்டான துரிசியது கட்டிற்றுனல் மார்க்க முடன் இளகாமல் நிற்கும்பாரே. 929

பாரப்பா இந்துப்பு வெடிக்காணுது பாரதனில்வெகுகோடிவித் தையப்பா, ஆரப்பா அறிவார்க ளிந்தவித்தை அறிந்தவர்கள் செய் வார்களாதிதொட்டு, காரப்பாகாவியத்தில்நன்றுய்ச்சொன்னேன் கப

டம்விட்டு வயித்திய பூரணமுஞ்சொன்னேன், நேரப்பா சௌமிசா கரத்தில்நன்ருய் நிறைந்தபொருள் வெடியாகப் பாடினேனே. 930

பாடினதோர் சாத்திரத்தை யெல்லாம்பார்த்து பக்குவமாய் பன்னிரண்டு நூருய்ப்பாடி, நாடினதோர் சாலவித்தை நன்ருய்ச் சொன்னேன் நலமான கருக்களெல்லாம் வெளியாய்ச் சொன்னேன், தேடினதோர் மந்திரங்கள் திரமாய்ச்சொன்னேன் திறமாக வசிய முதல் மார்க்கஞ்சொன்னேன், ஆடினதோ ரஞ்சனமும் வாடை சொன்னேன் அஷ்டமாசித்துமிக அறிவித்தேனே. 931

அறிவித்தேன்சகலசித்துமாடவேணும் அன்பானபுலத்தியனே யுனக்குச்சொன்னேன், நிறுவித்த சமாதிகற்பம் வகையாய்ச்சொன் னேன்நிச்சயமாய்வாதமதுநிலேத்தேனப்பா, தருவித்தஇந்நூலேப்பத னம்பண்ணி சதாகாலம் பூரணத்தில் சார்ந்துநில்லு, கருவித்து கரு வறிந்து செய்யவேணுங் காலறிந்து யோகமதில் கருத்தாயூணே. ()

சிவவேடம்.

ஊணடாசிவவேட மார்க்கந்தன்னே உறுதியாய்ச் சொல்லுகிறே னுனக்காய்மைந்தா, காணடாஜெபமாலே அன்பத்தொன்று கண்க்காக ருத்ராட்சங்கையிலேந்து, தானடாயோகதெண்டு அளவைகேளுதன தாக அணிவிரல் முப்பத்திரண்டு, பேணடா அளவாகச் செய்து கொண்டு பேணியே கைதனிலே யெடுத்துக்கொள்ளே. 933

கொள்ளடா விபூதியுந் தள்மாய்ப்பூசி கொண்டபின்பு வேட்டி புடனளவைக்கேளு, நல்லடா அகலமது மூன்றுமுழமாகும் நலமான நீளமது ஆறுமுழமாகும், உள்ளடா பின்ஞ்சாணகலங்கூட்டி உத்தம னேநீளமதுநால்சாணுகும், அள்ளடாகாவியிலேநீர்க்காவியாகும் அர கரா சிவவேட மகிமைதானே. 934

தானென்ற வேடமதை யறியாமாண்பர் சதிரான காவியைத் துவைத்துப்போர்த்து, வீணென்றகுறடதனேக்காவிற்போட்டுமெய் நிறையவிபூதியைத்தான்மெய்க்கப்பூசி, நானென்றஆணவத்தால்மத மேபேசிநலமானபூரணத்தைத்தூஷித்தேதான், கோனென்றகுருவ றியாகுருட்டுமட்டை குவலயத்தில்வேடமிட்டு ஏங்கினேனே. 935

ஏக்கியே யுலகரிடம் வாய்வீண்பேசி ஏமாறிவயிறுபசி பொறுக் காமற்றான், தாங்கியே பொய்பேசித் திரிவார்மெத்த தயவான வாலே யென்று சாராயத்தை, வாங்கியே குடித்துமதி கெட்டுப்போவான் மார்க்கமுடன் கள்ளுண்பான் கஞ்சாதின்பான், தூங்கியே வாய் புலம்பித் திரிவானேயா சுகமான பூரணத்தை யறியான்தானே. 936

தானென்ற தத்துவத்தின் செயலேக்கண்டு சார்வாகமூலமதில் மனதைவைத்து, கோனென்றகுருபதத்தில்சேர்ந்துக்கொண்டுகுண மானரேசகபூரகமும்பண்ணி, மானென்றகும்பகத்தில்நின்றுமைந்தா மருவியே பூரணத்தை மனதாய்க்கண்டு, தேனென்ற அமுதரசங் கொண்டால்மைந்தா சிவசிவா கைலாசந் தேகமாமே. 937

வாசியடக்க.

ஆமப்பாமேல்மூலமாருதாரம் அண்டமெல்லாந் தொட்டுநிற்கு மூலாதாரந், தானப்பாமேல்மூலமூலாதாரந் தனிமையுள்ள மூலமுத லாருதாரங், காமப்பால்சரமெழுகுமேலேதாரங்கமலமென்ற ஆயிரத் தெட்டிதழில்நின்று, நாமப்பாரேசக பூரகமும்பண்ணி நலமானகும் பகத்தைநாடிப்பாரே. 938

பார்க்கையிலேபரமகுரு தெரிசனைதான்காணும் பரவெளியின் சபையதனில் சத்தங்காணுங், காக்கையிலே நடனவொலி நடனங் காணுங் கற்பூரதீபமது கருத்தாய்த் தோணும், மார்க்கமுள்ள தீப மதில்மனத்தைவைத்து மந்திரபஞ்சாட்சரத்தைமகிழ்ந்துபோற்றி, தீர்க்கமுடன்ரேசகபூரகமும்பண்ணி சிவசிவாகும்பத்தின் திறத்தை ப்பாரே. 936

செந்தூரமுறை காந்தம்.

பாரப்பாசெந்தூரமுறைகள்சொல்வேன் பண்பான காந்தமது பலந்தான்பத்து, தேரப்பாவெள்ளையதுபலந்தானொன்று திறமான காரமதுபலந்தானொன்று, வேரப்பாதாளகந்தான் பலந்தானொன்று வேகமற்றசாரமதுபலந்தானொன்று, சாரப்பாபூநீறுபலங்கால்கூட்டி தயவானபழச்சாற்று லரைத்துவாங்கே. 940

வாங்கியே பில்லைசெய்துகாயப்போட்டு மார்க்கமுடன் குகையி விட்டுக்குகைவாய்மூடு, தாங்கியேமண்சீலை வலுவாச்செய்து சமர்த் தாகவுலையிவிட்டு நன்றாயூது, பாங்குடனே குகையுருகநன்றாயூதபத மாகவுருகியதுமணிபோல்நிற்குஞ், சாங்கமாய் குகையாறியெடுத்துப் பாரு தயவானகாந்தமதுமணிபோலாமே. 941

ஆமப்பா மணியெடுத்து உடைத்துக்கொண்டு அன்பாகமுன் போலேமருந்துசேர்த்து, நாமப்பாசொல்லுகிறேன் குகையில்வைத் து நன்றாகமண்சீலை வலுவாச்செய்து, தாமப்பா குகையழுக வுலையி லூது தப்பான காந்தமது ஆயமாகுஞ், சாமப்பாநாகமது ஈயங்கண் டால் தயவானஈயமதை பதனம்பண்ணே. 942

பண்ணியதோரீயத்துக்கிடைதான்சூதம் பாங்கான வீரமொடு காரஞ்சாரம், உண்ணியே பழச்சாற்றாலரைத்துக்கொண்டு உத்தம னேபில்லைசெய்துகாயப்போட்டு, நண்ணியே யோட்டில்வைத்து சீலை செய்து நலமாகப்புடம்போட நீறிப்போச்சு, புண்ணியனே யிந்நீற் றைப்பதனம்பண்ணி புகழாகஅயத்தினுடவிபரங்கேளே. 943

அயத்தின்ஈயம்.

கேளப்பா அயப்பொடிதான் பலந்தான்பத்து கெடியாக வெள் ளையதுபலந்தானொன்று, வாளப்பாதாளகமும் பலந்தானொன்று வரி சையுள்ளசூதமது பலந்தானொன்று, நீளப்பாகாரமதுபலந்தானொன் று நினைவாகச்சாரமதுபலந்தானொன்று, ஆளப்பாநீறுகால்பலந்தான் கூட்டி அப்பனேகல்வத்திலாட்டுஆட்டே. 944

ஆட்டுவாய்பழச்சாறுவிட்டுமைந்தா அன்பாகஈராறுசாமமாட்டி, தாட்டிகமாய்நன்றாக அரைத்துமைந்தா சமர்த்தாக வழித்தெடுத்து பில்லைசெய்து, நாட்டியேரவிமுகத்திற் காயப்போடு நன்றாகவுலர வைத்துக்குகையில்வைத்து, பூட்டியேமண்சீலைவலுவாச்செய்து புரி சமுடனுலையிலிட்டுவூதிப்பாரே. 945

பாரப்பாகுகையதுவூதிக்கொண்டு பண்பாகஆறியபின்னுடைத் துப்பாரு, நேரப்பாவெண்கலமாயுருகிநிற்கும்நினைவாகப்பின்பொருக் காலூதிப்பார்த்தால், வீரப்பா தானடங்கி யீயமாகும் விசையான அயத்தினுடஈயங்காணூர், ஆரப்பாவறிவார்கள் அயத்தினீயம் ஆதி யந்தந்தனையறிந்தோனறிவான்காணே. 946

காணப்பா அயக்காந்தமீயந்தன்னைக் கண்டவர்கள்தேகமடா கற் றாணுகும், வீணப்பா வென்றுசொல்லி யிருந்தானுகில் வீடதுவும் பிலக்காதுவெளிகாணாது, நானப்பாயின்னூலில்வெளியாய்சொன்னே னன்மையுடனயக்காந்தமீயஞ்செய்து, கோனப்பாகுருவருளால்செந் தூரம்பண்ண குறியுனக்குசொல்லுகிறேன்கேளுகேளே. 947

காந்தசத்துச் செந்தூரம்.

கேளப்பாகாந்தசத்து பலந்தானென்று கேள்மகனே அயச்சத் துபலந்தானென்று, வேளப்பா தங்கமொரு பலந்தான்தூக்கி விசை யாகமூன்றுமொன்றாயுருக்கிக்கொண்டு, வாளப்பாகல்வமதில்பொடித் துக்கொண்டு வரிசையுடன் கூறுகிறமருந்துகேளு, ஆளப்பா கணடி டைக்குவீரம்வாங்கி அப்பனேயிடைக்குநிகர்சூதஞ்சேரே. 948

சேர்ந்ததொருயிடைக்குநிகர் கெந்திசேர்த்து திரமாகமூலைப்பா லாலாட்டிக்கொண்டு, காத்துமேரெண்டுநா ளாட்டிப்பின்பு கருவான பழச்சாற்றாலாட்டிநன்றாய், பார்த்துநீயுலரவைத்துப் பொடியதாக்கி பண்பாகக்குப்பியிலே அரைமாடிட்டு, கோத்துநீ பாண்டமரை யுப் பைக்கொட்டி குணமாகஅதின்மேலே குப்பிவையே. 949

வைத்தபின்புகுப்பியுடகழுத்துமட்டு மறைப்பாக வுப்புடனே மண்ணுங்கொட்டி, மெய்த்ததொருமேல்மூடிசீலைசெய்து விசையாக வாலுகையிலெரிப்பாயப்பா, நைத்ததொரு மூன்றுநாள்முத்தீயிட்டு நலமாகஆறவிட்டு எடுத்துப்பாரு, கைத்ததொரு செந்தூர முருக்கம் பூப்போல் காணுமடாசெந்தூரம்பதனம்பண்ணே. 450

பண்ணப்பா ஈசானம்பூசைசெய்து பாமகுருசெந்தூரம் பண விடைதான்கொள்ளு, நண்ணப்பாமண்டலமேகொண்டாயானால்நரை திரையுமாற்றுமடாசட்டைபோகும், விண்ணப்பாகுருபதமுமடுக்கக் காணும் விசையானசிவயோகவிருப்பஞ்செய்யும், பொன்னப்பாவுண் டாகுஞ்செந்தூரத்தில் பூட்டுகிறவிதமுனக்குபுகலுவேனே. 451

செந்தூரத்திற் கனுபானம்.

புகலுகிறவிதமேதுவென்றால்மைந்தா பூட்டுகிறேன் மூதண்ட லேகியத்தில், பகருகிறேன்லேகியத்தில்கழஞ்சிவாங்கி பணவிடை

செந்தூரமதில்வைத்து, நெகிழாமல் மனதுறுதியாகக்கொண்டு நேசமுடனிருந்ததினால் நேர்மைகேளு, அகலாத குன்மமுதல் குஷ்டரோகம் அகடான நீரிழிவு காசம்போமே. 952

காசமொடு பவுத்திரங்கள் தசைநோயெல்லாங் கதிகெட்டு ஓடுமடா இன்னங்கேளு, நேசமுடன்செந்தூரம் பணவிடைதானெடுத்து நினைவாக வெல்லமதிற் கொண்டாயாகில், பாசமுடன் சுரமனைத்து மோடிப்போகும் பண்பானமுறைகாச்ச லோடிப்போகும், வாசமுள்ள தேனதிலே கொண்டால் மைந்தா மயக்கமென்ற நெஞ்சடைப்பு வாங்கிப்போமே. 953

போமப்பாமுலைப்பாலில்பணவிடைசெந்தூரம்புகட்டியேகொண்டதினால் மைந்தாகேளு, ஆமப்பா தோஷமொடு சுவாசந்தீரும் அடங்காத நாவரட்சிவிட்டுபோகுந், தாமப்பாபறங்கிமுதல்கறப்பான்தீருந் தடிப்பான வெளுப்புடனே பதுமந்தீரும், நாமப்பா செந்தூரமதீதமெத்த நலமான புண்ணியங்க ளில்லைதானே. 954

தானென்றசெந்தூர தினமுங்கொண்டால் சடலமென்ற கூடது தான்பிலத்துதப்பா, நானென்றஅவம்ருத்தோடிப்போகுநரைதிரையுமற்றுதடாநமனுரில்லை, தேனென்றவனுபான மறிந்துகொண்டால் சிவசிவா கயிலாச தேகமாகும், ஊனென்ற வுடம்பெடுத்தா லுறுதி வேணும் வுழன்றுமனந் திரிந்ததனாற் றளர்ந்துபோமே. 955

தளராமலிருப்பதற் கின்னமொன்று சாற்றுகிறேன் புலத்தியனே தயவுள்ளானே, யுளராமற்செந்தூரம் பணவிடைதானெடுத்து வுண்மையென்ற முப்பூவிலவ் விடைதான்கொண்டு, தளராமல் மனதுறுதியாகிக்கொண்டால் கழலுமடா சட்டையொன்று கறுப்பாய்த் தானே, வளருமடாதேகமது வெளிபோற்காணு மகத்தானதேகமது பிரமமாமே. 956

ஆமப்பாசித்தாந்தம்ஞானமார்க்கம் அப்பனேவேதாந்தம்யோகமார்க்கம், காமப்பாஞானவரையோகத்துக்கு தயவானமூலமடாநந்திநந்தி, நாமப்பாநந்தியடிமூலங்கண்டால் நாடலாமாறுவகையதின்மேலப்பா, காமப்பா கானப்பா விரண்டுங்கூடி கரைகாணும் பூரணமாய் நிற்குந்தானே. 957

சலாசத்துபஸ்பம்.

தானென்றசலாசத்து பலந்தானொன்று தயவானபொரிக்காரம் பலந்தானொன்று, வூனென்றபழச்சாற்றால்கல்வத்தாட்டி உறுதியுடனாட்டிநன்றாய் வழித்துக்கொண்டு, பானென்றாவிமுகத்தி லுலர்த்திமைந்தாபக்குவமாய்புடம்போடப்பறப்மாகுந், தேனென்றபற்பமது பதனம்பண்ணி தேனதிலே பணவிடைதான் கொள்ளச்சொல்லே.

சொல்லப்பா நீரடைப்பு பிறமேகந்தான் சூழ்ந்தமகோ தரமுடனேவெட்டைபோகும், நல்லப்பாகல்லடைப்புதசையடைப்புநன்மையில்லாமேகத்தா லெழுந்தநோய்கள், அல்லப்பாவோடிவிடு மின்னங்கேளு அரகராநீர்க்கடுப்பு நீர்ச்செறிப்பு, சொல்லாமலோடிவிடு மின்னங்கேளு சிவசிவா பத்தியங்களில்லைதானே. 959

அப்பிரகச்சித்து.

தானென்ற அப்பிரகச் சத்துசொல்வேன் சதுரான அப்பிரகம் பொடிதான்செய்து, வானென்ற பலமொன்று எடுத்துக்கொண்டு மைந்தனே மேல்மருந்தின் வகையைக்கேளு, வூனென்ற வெடியுப்பு காரசாரம் உத்தமனேகாளகமும் கெவுரிசூதம், மானென்றசிங்கியுட பூநாகந்தான் மைந்தனேவகைவகைக்குக் கழஞ்சிவாங்கே. 960

வாங்கடாமுப்பூவுங்கழஞ்சிகொண்டு வரிசையாய்மருந்தெல்லாங் கல்வத்திட்டு, தாங்கியே பழச்சாற்று லாட்டிமைந்தா தயவாகவிரு சாமம் நன்றாயாட்டி, பாங்குபெற பில்லைசெய்து ரவியிற்போடு பக்குவமாய் வச்சிரமாங் குகையில்வைத்து, சாங்கமாய் சில்லிட்டு சீலை செய்து தயவாகக்குகையமுக வூதுவூதே. 961

ஊதியந்தக்குகையாறியெடுத்துப்பாரு உத்தமனேயீயமதாயுருகிநிற்கும், வாதியென்றவாதிகளோகாணப்போரார் மகத்தானயோகியடா சத்துகாண்பான், ஆதியென்ற அப்பிரகச்சத்துகாண அரகராவாதிகள்தா னலைந்தோசெத்தார், சோதியென்ற வப்பிரகச் சந்தை மைந்தா சிதமாகச் செந்தூரம் பண்ணுபண்ணே. 962

பண்ணப்பா அப்பிரகச்சத்துவாங்கி பலமெடுத்து குகைதனிலே யுருகும்போது, வுண்ணப்பா தங்கமொடு பலந்தான்சேர்த்து வுருகி ரெண்டுங்குண்டாகிமணிபோல்நிற்கும், பண்ணப்பாகல்வத்தில்பொடிக்கத்தூளாங் கண்டைக்கு வீரமொடு சூதஞ்சேரு, அண்ணப்பா கண்டிடைக்கு கெந்திகூட்டி அழகான பழச்சாற்று லாட்டிப்பாரே.

பாரப்பா பழச்சாற்றுலாட்டிப்பின்பு பண்பான பொடுதலையின் சாற்றாலாட்டி, காரப்பா ரெண்டுநாளரைத்தபின்பு கருவாகப்பொடி செய்து குப்பிக்கேற்றி, சாரப்பாமண்சீலை யேழுஞ்செய்து தன்மையுடன்காய்ந்தபின்பு சொல்லக்கேளு, தீரப்பாமுன்போல வெரித்துப்பாரு சிவ்சிவா செந்தூரஞ் சிவப்புதானே. 964

தானென்ற செந்தூரம் பதனம்பண்ணி தன்மையுடன்பணவிடைதான் தேனிற்கொண்டால், ஊனென்ற காயமது பிலத்துநல்ல வுறுதியாச் சட்டைஒன்று தள்ளுந்தள்ளுந், தேனென்ற கற்பமடா செந்தூரந்தான் திரமானஅனுபானமறிந்துகொண்டால், வானென்ற மேகம்போம்சூலைபோகு மக்களேமுந்நூற்றை மகிழ்ந்துகேளே.

கேளப்பாமுந்நூற்றில் செந்தூரமார்க்கம் கிருபையுடனிருநூற்றின் பற்பஞ்சொன்னேன், நாளப்பா ஆயிரத்து நூற்றில்மைந்தா நன்மையுடன் வயித்தியத்தில் நன்றாய்ச் சொன்னேன், வேளப்பா அறுநூற்றின் விபரமெல்லாம் விரித்துநன்றாய் சொல்லிவிட்டேன் விபரமாக, ஆளப்பா நூற்றில் வயித்திய பூரணந்தான் அன்பாகப் பாடினதை நன்றாய்ப்பாரே. 966

பாரப்பாஅப்பிரகச்செந்தூரத்தை பாச்சடாவெள்ளியிலேநூற்றுக்கொன்று, தேரப்பாமாற்றது முன்னூறாகும் திரமானகுடவகிட

லேயிருநூறுகுஞ், சாரப்பாவெள்ளிசெம்பில்நூறுமாற்று தயவாகத் தனிச்செம்பிலேம்பதாகும், ஆரப்பா அறிவார்கள்செந்தூரப்போக்கு அன்பானபுலத்தியனேயின்னங்கேளே. 967

பொன்னிமிளேச்சத்து.

கேளப்பாபொன்னிமிளேச்சத்துசொல்வேன் கெடியானநிமிளே யதுபலந்தான்வாங்கி, நாளப்பாரோமமதுஇடையேசுற்றி நன்றாகத் தாரபற்ப நாகபற்பம், வேளப்பா நிமிளேயின்மேல் பூசிக்கொண்டு மேலாகரோமத்தைச்சுற்றிமைந்தா, தாளப்பா அதின்மேலே முப் பூச்சுன்னந் தயவாகப்பூசிநல்லகுகைக்குள்வையே. 968

வையப்பா குகைவாயைமூடிநன்றாய் மார்க்கமுடன்மூசையிலே வைத்தூது, மெய்யப்பா சொல்லுகிறேன் குகையமுகவூது மெய் யானசத்ததுவும்வெண்கலமாய்நிற்கும், பையப்பா ஆறவிட்டு சத்து வாங்கி பாலகனேகுகையிலிட்டுகாரமூட்டி, நையப்பாவுருகிப்பார்கண் விட்டாடும் நன்றாகஅதில்சேரும்வகையைக்கேளே. 969

கேளப்பாநாகமொடுதங்கம்ரெண்டுங் கெடியான சத்துருக்குச் சரியாய்த்தூக்கி, வாளப்பாசத்துநின்று வுருகும்போது வரிசையாய் நாகதங்கமிதிலேயூட்டு, தாளப்பாசத்துடனேரெண்டுஞ்சேர்த்துதய வாகமூன்றுமொன்றாயுருகுமப்பா, ஆளப்பாகுகைமாறி யெடுத்துப் பாரு அரகராகளங்காகுமைந்தாகேளே. 970

கேளடாகளங்கதனைக்கல்வத்திட்டு கெட்டியா யுடைத்திடவே தூளாம்பாரு, வாளடாவீரமதுபலந்தான்மூன்று மைந்தனேவாலே ரசம்பலந்தான்மூன்று, தேளடா கெந்திபலம்நாலுங்கூட்டி தெவிட் டாதஆதியந்தம்பலமூங்கூட்டி, ஆளடா முலைப்பாலால் நன்றாயாட்டி அதின்பிறகுபொடுதலேயின்சாற்றாலாட்டே. 971

ஆட்டியே வழித்துருட்டிக் காயப்போட்டு அப்பனே பொடி செய்துகுப்பிக்கேற்றி, நாட்டியேவாலுகையில்மூன்றுநாள்தான் நல மாகமுத்தீயும்நன்றாய்மூட்டி, காட்டியேசலாகைகொண்டு சோதிச்சே பார் கதிர்முனையில்கறகறக்கும்பதந்தானப்பா, தாட்டிகமாயாறவிட்டு வுடைத்துப்பாரு சமர்த்தானபொன்னிமிளேச் செந்தூரமாச்சே. ()

ஆச்சப்பா செந்தூரம்பதனம்பண்ணி அப்பனேகுன்றியிடை யிருபோதுண்ணு, காச்சப்பா பசுவின்பால் தன்னிற்கொள்ளு கதி ரொளிபோல்தேகமதுகாந்தியாகும், நீச்சப்பா முலைப்பாலிற் குன்றி யிய நோனதோஷம்போம்சுவாசம்போகும், பாச்சப்பா விஷக்கடி கள்குஷ்டரோகம் பகையானமேகமென்றதெல்லாம்போமே. 973

போமடா வாதத்திலெழுந்ததோஷம் பொல்லாத பித்தத்தா லெழுந்ததோஷம், ஆமடாசிலேற்பனத்தாலெழுந்ததோஷம் அஞ் சாததோஷமெலாமகன்றுபோகுஞ், சாமடா நிமிளேதனைக்கண்டரோ கஞ் க்ஷணத்திலேஓடிவிடுமையாஐயா, நாமடாவுனக்காகச்சொன்னேன் மையா நலமாகச்செந்தூரத்தொழிலேக்கேளே. 974

கேளப்பா பணவிடைச்செந்தூரம்வாங்கி கெட்டியாய் வெள்ளியிலே நூற்றுக்கொன்று, தாளப்பாகொடுக்கையிலேவாங்கிக்கொண்டு சமர்த்தானவெள்ளியிலே பழுத்துப்போகும், வாளப்பா வெள்ளியதுபழுத்துதானால் வயதுசொல்ல முடியாது மைந்தா மைந்தா, நாளப்பாவெள்ளிசெம்பிலீந்தாயானல் நன்மையதாய்ப்பழுத்துமிகத் தங்கமாமே. 975

ஆமப்பாகுடவனிலேநூற்றுக்கொன்று அருள்பெருக வுருகிப் பாரதிகமாற்று, நாமப்பாசெந்தூரம்வலுவோமெத்த நயமானசெந்தூரந்தன்னைக்கண்டு, தாமப்பாமகிழாதேமன தடங்கிநில்லு தண்மையுடன்பூரணத்தைத்தயவாய்ப்போற்று, காமப்பால் கானற்பால்கண்டேகொள்ளு கமலமலரமுர்தமதுகசிவாய்க்கொள்ளே. 976

தாளகசத்து.

கொள்ளப்பா இன்னமொரு முறையைக்கேளு குருவானதாளகத்தின்சத்துசொல்வேன், நல்லப்பா தாரமதுபலந்தானென்று நலமானசுன்னத்தில்சுத்திபண்ணி, கல்லப்பாசுன்னமுடன் துருசுதுத்தங் கருவானசாரமுடன் காரங்கூட்டி, அல்லப்பா வீரமுடன் பூரஞ்சேர்த்து அரைத்துஅந்தத்தாளத்துக்கங்கிபூட்டே. 977

பூட்டியேகுகையில் வைத்துக்குகைவாய்மூடி புகழாகமண்சீலை ஏழுஞ்செய்து, தாஷ்டிகமாய்க் குகைதனிலே வைத்துவூது சமர்த்தாகக்குகையமுகவூதித்தீரு, நாட்டியேகுகைமாறி யெடுத்துப்பாரு நலமாகத்தாளகந்தானீயமாகும், ஆட்டினதோரீயமது பதனம்பண்ணு அன்பர்கக்காரமிட்டுவுருகிப்பாரே. 978

உருக்கையிலேநாகமந்தஇடையேசேரு வுண்மையுள்ளதங்கமப்படியேசேரு, கருக்காகக்கட்டினதோரசத்தைச்சேரு கருவாகநாலுமொன்ருயுருகுமப்பா, பெருக்கமுள்ளகளங்காகுமப்பாசொன்னேன் பேணியேகல்வத்தில்பொடிக்கத்தூளாங், குருக்களென்ற வீரமந்த இடையேசேரும் குணமாகக்கெந்திரெட்டிப்பார்க்ச்சேரே. 979

சேர்த்துநன்ருய்ப் பொடிசெய்து குப்பிக்கேற்றி திரமாகமண் சீலைவலுவாய்ச்செய்து, போற்றியே முன்போலே யெரித்துவாங்கு பூரணமாயாறவிட்டுஎடுத்துப்பாரு, ஆற்றியே குப்பிதனையுடைத்துப் பாரு அரகராசெந்தூரமருணநிறமப்பா, தேற்றியேசெந்தூரம் பதனம்பண்ணி சிவசிவாகுன்றியிடைதேனிற்கொள்ளே. 980

கொள்ளவேசுவாசமொடுகாசந்தீருங் குஷ்டமொடுபாங்கிமுதல் குலைநோய்தீரும், அல்லல்செய்யுங்குன்மமொடுமகோதரங்கள் அண்டத்தின்வாதமொடுஅனந்தவாதம்,வல்லல்செய்யுங்குதிவாதமுகத்துவாதங்காலகதிமேல்சதிகனத்தவாதம், நல்லதொருசெந்தூரங்கண்டபோதேகாடாமலோடிவிடுமின்னங்கேளே. 981

கேளப்பா செந்தூரத் தொழிலைக்கேளு கெணிதமுள்ள வெள்ளியிலேநூற்றுக்கொண்டு, வாளப்பாகொடுத்திடவேவயதுசொல்ல வாயேதுநாவேதுவலுத்ததங்கம், ஆளப்பாவெள்ளிசெம்பில் நூற்று

க்கொன்று அணைத்திடவே பதினறுவயதுபிள்ளை, காவலப்பாமாறி யவன்நடனஞ்செய்வான் கண்டுள்ளமகிழாதே கருத்தாய்நில்லே. ()

நில்லென்ற குடவணிலேநூற்றுக்கொன்று நீட்டினல்பத்தனை தான்தப்பாதுண்மை,சொல்லொன்றுதப்பாதுகருவாய்ப்பாருசொல் மறந்துபார்த்ததினல் சோதிகாணும், கல்லென்ற கல்லேறிந்து புல் லைத்தின்னு காலறிந்துயோகமதிற் கருத்தாய்நில்லு, கொல்லென்று வாய்பசப்புங்குறும்பரோடே கூடாதுவாசியிலேகூர்ந்துநில்லே. 983

நில்லடாவாசியிலேநின்றுதேறி நினைவாகப்பூரணத்தைக்கண்டு. பூசி, சொல்லாதமந்திரத்தை யுருவேசெய்து சோராமற்கனியருந்தி மணியைப்பூசி,தள்ளடாதனையார்தன்னைத்தானேசமையமதங்கொண் டாடுந்தவத்தோர்தன்னை, புல்லென்றமனுக்களுடன்பொருந்தவேண் டாம் பூரணத்தைத்தினநோக்கிபூண்டுநில்லே. 984

நாகச்செந்தூரம்.

பூண்டுக்கொள் நாகச்செந்தூரந்தன்னை பூரணமாய் நாதவிந்து தெளிந்ததண்ணீர், ஆண்டுகொண்டுஅச்சலத்தில் நாகஞ்சாய்க்க அப் பனேசீறடங்கியடங்கிக்கட்டும், நீண்டதொரு குகைதனிலே நாகம் போட்டு நினைவாகவுருகையிலே மைந்தாகேளு, மாண்டதொருநாகத் துக்கிடையேதங்க மகத்தானதங்கநிறச்சத்தைவாரே. 985

வார்த்துமிகவுருக்கையிலேமூன்றுமொன்றாய் வளமாக வுருகிய துமணிபோல்நிற்கும், பார்த்துமிகத்தானெடுத்துக் கல்வத்திட்டு பத ருமலந்திடைக்கு வீரஞ்சேர்த்து, போற்றிநன்று யிடைக்கிரட்டி கெந்திகூட்டி பொடிசெய்துதானெடுத்துவைத்துக்கொண்டு, காற்று மிகக்குப்பிதனி லேற்றிக்கொண்டு கனமாக மண்சீலை வலுவாய்ச் செய்யே. 986

செய்யப்பாவாலுகையில் முன்போல்வைத்து திரமாகஅறுசாம மெரித்துவாங்கு, பையப்பா ஆரவிட்டுஎடுத்துபாரு பரமானசெந் தூரமென்னசொல்வேன், மெய்யப்பா செந்தூரம் பதனம்பண்ணி மெய்க்கவே தேனதிலே பணவிடைதான்கொள்ள, ஐயப்பாகிராணி யென்றதெல்லாம்போகு மாகாகுன்மமென்றதனைத்தும்போமே.

போமப்பாமேகமென்றதெல்லாம்போகும் பொல்லாத நீரிழிவு கிரந்திகுஷ்டந், தாமப்பா மகோதரமும் விஷபாகங்கள் தருகாத பாண்டுமுதல்சுவாசகாசம், ஆமப்பாநாகச்செந்தூரங்கண்டால் அடங் காதநோய்களெல்லாமடங்கிஓடும், நாமப்பாசொல்லுகிறேம் வச்சிர காயம் நல்லமனதாயிருந்தவர்க்குஎல்லாஞ்சித்தே. 988

சித்தாகஇருக்கவென்றால் மைந்தாகேளு சிவமான செந்தூரம் பூரணத்தோடொக்க, பத்தாசையாக நீபணவிடைதான்கொண்டால் பழுக்குமடாதேகமதில்சட்டைபோகும், வற்றாகசெந்தூரந்தினமுங் கொண்டால் வயதுசொல்லமுடியாதுமைந்தாகேளு, முத்தானமுத்த ரெல்லாமுத்தியாகு மோகமில்லைசெந்தூரமுறையைக்கேளே. 989

கேளப்பா வெள்ளியிலே நூற்றுக்கொன்று கெடியான வெள்ளி செம்பில் நூற்றுக்கொன்று, நாளப்பாகுடவனிலே நூற்றுக்கொன்று நன்மையிலாச் செம்புதனில் நூற்றுக்கொன்று, கோளப்பா வாராமல் பழுக்குந்தங்கங் குறியான தங்கமதை யார்தான் காண்பார், ஆளப்பா ஆதியென்ற தங்கந்தன்னை அறிந்துக்கொண்டு தவமகிமை யறிந்துசெய்யே. 990

செய்யடா தவமதிலே மனத்தைநாட்டு தீர்க்கமுடன் குருபதத்திற் சேர்ந்துநில்லு, மெய்யடா கற்பமதை விரும்பியுண்ணு விரும்பி மிகவுண்ணையிலே தீபம்பாரு, கொய்யடா கருவிகளைக் கொய்துப் போட்டு கூர்மையுட னடுமனையைக் கூர்ந்துபாரு, பையடா மூலமதிலாறுந்தாண்டி பராபரத்தி னருளதனைப் பற்றிப்பாரே. 991

பற்றிமிகப்பாராமற் பொருளைக்கண்டு பதுமைபோல் பெருமையிலே பற்றிநின்று, முத்தியில்லா மூடர்களாய்க் கூட்டங்கூடி மோசமென்ற பாசமதை யிழுத்துக்கொண்டு, சத்தியென்ற பெண்ணைமிக நிறுத்திக்கொண்டு சகல ஆபரணமிகத் தானேசாற்றி, புத்தியில்லா நடத்தைகளைப் பார்த்தாயானால் பூரணத்தி லுன்துசிரம் வெடித்துப்போமே. 992

வெடித்துமிகப்போவதுவுமெத்தநன்றேவேதாந்தப்பதியிநிற்க மிகவுநன்றே, படித்துமிகரெண்டையுநீயருந்திப்பார்த்து பக்குவத்தோடேயிருந்துபதியில்தாக்கு, வடித்தமெழுகதுபோல இந்தநூலில் வசனித்த கருக்களெல்லா மனதிற்காரு, விடுத்தபொருடனையறிந்து காராவிட்டால் விண்ணிடியு மண்கரையு வீணாய்ப்போமே. 993

களிவங்கச் செந்தூரம்.

போகாம லின்னமொரு சேதிகேளு பொன்னனை, கருவங்கம் வாங்கிமைந்தா, வாதாக ஆதியந்தக் கருவினாலே மகத்தான வங்கத்துக்கங்கிபூட்டி, நோகாமற் புடம்போடக் கட்டிப்போகும் நுண்மையுடன் தானெடுத்து குகையில்வைத்து, சாகாமற்காரமிட்டு வுருக்கிப்பாரு சக்கரம்போல் கணவிட்டு ஆடுந்தானே. 994

தானென்றவங்கத்துக் கிடையேநாகந் தயவான தங்கமுடன் ரசமுங்கூட்டி, கோனென்றகுருவருளா லுருக்கிப்பார்க்க குணமாகநாலுமொன்றாய் மணியாய்நிற்கும், மானென்ற கல்வத்தில் நொறுக்கிக்கொண்டு மாட்டடாவீரமொடு லிங்கந்தானும், தேனென்றகாரமொடு வொன்றாய்க்கூட்டி சிவசிவா இதுக்கிரட்டி கெந்திகூட்டே. 995

கூட்டிநன்றாய்பொடித்துமிகக்குப்பிக்கேற்றி குணமானமண்சீலை வலுவாய்பூசி, காட்டியே முன்போல எரித்துவாங்கி நல்லபதமறிய வென்றாய்சலகைபோட்டு, மாட்டியதோர்சலாகைமுனைவெளுத்துதானல் மார்க்கமுடன் தானெடுத்து ஆறவைத்து, தாட்டிகமாய்க் குப்பியைநீ யுடைத்துப்பார்க்கத் தங்கநிறமான செந்தூரமாமே. 996

பாரப்பாசெந்தூரம் பணவெல்லத்திற் பக்குவமாய்க் குன்றியிடைகொண்டால் மைந்தா, ஆரப்பா வுனக்கிடு சொல்லப்போறேன்

அத்தேகம் வச்சிரகாயமாகுந், தேரப்பாபண்விடைதான் தேனிற் கொண்டால் சிவசிவாமேகமென்ற தெல்லாம்போகும், நேரப்பாஜல விஷங்கள்குஷ்டரோகம் நிலையில்லாநீரிழிவுநீங்கிப்போமே. 997

போமடா பவுத்திரமுங் கண்டமாலை பொல்லாத குன்மமொடு பாண்டுதீரும், நாமடாதோஷமொடுகாசம்போகும்நழுக்கானமூலமுத லண்டவாதம், தாமடா குதிவாதம் நடுக்குவாதஞ் சமர்த்தானவாத மதிற்பச்சைவாதம், ஆமடாபித்தமென்ற தெல்லாம்போகும் அரகராவருங்கமதிகந்தானே. 998

தானென்றசெந்தூரத்தொழிலைக்கேளு தப்பாமல் நூற்றுக்கு வொன்றுபோட்டால், மானென்றவெள்ளியிலேநூறுமாற்று மகத்தானசெம்பதிலேஅன்பதாகுந், தேனென்ற வெள்ளிசெம்பிலிருநூறுகுந் தெவிட்டாதகுடவனில்எண்பதாகுங், கோனென்ற குருவருளால்செந்தூரத்தை குறிப்புடனேகொண்டவரேகுருவாம்பாரே. ()

குருவான சற்குருவைக் காணவேணுங் குணமாகநந்திதனைப் பணியவேணும், உருவான வுருவறிந்து வுண்ணவேணும் உண்மையுள்ளசத்திசிவங்காணவேணுந், திருவானமலரொளியைப்பற்றவேணுந் தெவிட்டாதமதியமுதங் கொள்ளவேணுந், தருவான கற்பகத்தைப்பூசைபண்ணி சதாகாலம்பூரணத்திற்சார்ந்துநில்லே. 1000

தாம்பிரச்செந்தூரம்.

நில்லென்றநிலைதனிலேநின்றுகொண்டு நினைவாககுருபதத்திற் பூண்டுக்கொண்டு, சொல்லென்றதாம்பிரச்செந்தூரம்பண்ணி துருவமுடன்கொள்வதற்குவிபரங்கேளு, தெல்லென்றதுட்டதனை அராவிக்கொண்டு சிறமாகப்பழச்சாற்றிலூறப்போட்டு, கல்லென்ற சுன்னநீர்விட்டுநன்றாய் களிப்பறவேகழுவிவிடுகசடுபோச்சே. 1001

போச்சென்றுதாம்பிரப் பொடிதானொன்று புதுமையுள்ளதங்கமொன்றுரசந்தானொன்று, நீச்சென்றதாளகமும்வீரமொன்றுநிலைத்ததொருலிங்கமொன்றுநாகமொன்று, பாச்சென்றகல்வமதிலேழும் போட்டு பக்குவமாய்பழச்சாற்றாலாட்டிநன்றாய், ஆச்சென்றுகல்வத்தில்நன்றாயாட்டி அரகராரெட்டிப்புகெந்திகூட்டே. 1002

கூட்டியே பழச்சாறும் பொடிதலையின்சாறுங் குணமாகவிட்டு நன்றாய்மைபோலாட்டி, ஆட்டியே வழித்தெடுத்துக் காயப்போட்டு அப்பனேபொடிபண்ணிக்குப்பிக்கேற்றி, தாட்டிகமாய்மண்சீலைவலுவாய்ச்செய்து சமர்த்தாகமுன்போலே யெரித்துவாங்கு, நாட்டியே ஆறவிட்டுஎடுத்துப்பாரு நன்மையுள்ளசெந்தூரமதிகந்தானே. ()

தானென்ற செந்தூரம் பதனம்பண்ணி தண்மையுடனீசானம் பூசைசெய்து, தேனென்றதேனதிலே பணவிடைதான்கொண்டால் தீராதகுன்மமுதல்குஷ்டந்தீரும், வானென்றமேகமொடுகிரந்திதீரும் வகையானபீலிகையுமகோதரமுந்தீரும், ஊனென்றமூலமுதல்கண்டமாலை யுள்மூலம்பிறமூல மொழிந்துபோமே. 1004

மாத்திரை.

ஒழியாமலிருப்பதற்குமாத்திரை தானென்று உத்தமனேசொல்லுகிறேனன்றாய்க்கேளு, வழியான அயக்காந்தச் செந்தூரமொன்று மார்க்கமுள நாகச்செந்தூர மொன்று, நெளியாததாளகச் செந்தூர மொன்று நேரான தாம்பிரச்செந்தூரமொன்று, அழியாதவங்கச்செந்தூரமொன்று அப்பனேஐந்துமோரிடையாய்வாங்கே. 1005

வாங்கியே கல்வத்திலிட்டுக்கொண்டு மகத்தான முலைப்பாலும் பழத்தின்சாறும், பாங்குடனேரெண்டுநிறை ஒன்றாய்ச்சேர்த்து பக்குவமாய்கல்வத்திலாட்டும்போது, தாங்கியேதிரிகடுகுமூன்றுமொன்றாய் சரியிடையாய் செந்தூரந்தன்னிற்சேர்த்து, ஆங்கதுகொண்டேயரைப்பாயாறுநாள் தான் அதின்பிறகுமத்தஞ்சாறதனில்வாரே. ()

வார்த்துநன்றா யாறுநாளரைத்தபின்பு மார்க்கமுடன்வழித்து மாத்திரைகள்செய்து, பார்த்து நன்றாய் நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு பக்குவமாய்குணங்குறிகளறிந்துகொண்டு, காத்துமிகஅனுபானமறிந்துசெய்தால் காணுமலோடிவிடுஞ்சுவாசதோஷம், சாற்றுகிறேன்கலிக்கமொன்று சொல்லக்கேளு தன்மனதைத் தானறிந்து தன்தாய்நில்லே. 1007

கலிக்கம்.

தனதானகிராம்புடனே திரிகடுகுகூட்டி தன்மையுள்ள கிராம்பதுவுங்கூட்டிச்சேர்த்து, மனதானவாளமொன்றுஎட்டுக்கொன்றுமாட்டுவாய்கல்வத்திற்பழச்சாறிட்டு, வளமானஅபின்கூட்டி நன்றாயாட்டி ஊமத்தஞ் சாறதனிலொருநாளாட்டி, சனதானகயறுபோலுருட்டி மைந்தா காற்றில்லாவிடம்பார்த்துக்காயவையே. 1008

வைத்துநன்றாய்க்காய்ந்தபின்புஎடுத்துக்கொண்டு வரிசையுடன் சொல்லுகிறேனன்றாய்க்கேளு, கைத்ததொருமுலைப்பாலாலுரைத்து நாவில் கண்ணிலிடச்சகலசன்னிகாணுதோடும், மெய்த்தசிவருத்திரனைமாத்திரைவைத்து வேணபடிவயித்தியத்தைவிரும்பிச்செய்தால், நைத்ததொரு சாத்தியமசாத்தியம்ரெண்டும் நன்றாகத்தீருமடா நலமாம்பாரே. 1009

வேறு-கலிக்கம்.

பாரப்பாகலிக்கமொன்றுசொல்லக்கேளு பக்குவமாய் திரிகடுகு துரிசுதுத்தம், நேரப்பாயரிதாரமிந்துப்போடு நினைவாகரோகணியுஞ சரியாய்த்தூக்கி, காரப்பாபவளமதுநாலுக்கொன்று கருவானபழச்சாற்றாலரைத்துமைந்தா, தீரப்பாகயறுபோல்திரட்டிக்கொண்டுசிவசிவாநிழலுலர்த்திபதனம்பண்ணே. 1010

பண்ணியதோர்கலிக்கமாத்திரையைமைந்தா பக்குவமாய்சிமிழ்தனிலேபதனம்பண்ணி, உண்ணியேமுலைப்பாலாற் கண்ணில்தீற்றி உறுதியுள்ள ஜன்னிமுதல் விஷங்கள்போகும், நண்ணியதோர்குளிர்

சுரம் சொல்லாதோடும் நலமில்லா நெஞ்சடைப்பு மூர்ச்சைபோகும், புண்ணியனே மழுவான கலிக்கமப்பா புனிதமுடன் பதனமாய் வைத்துப்போற்றே. 1011

போற்றப்பாநீர்தோஷங்கபாலசூலை புகைச்சலென்றகண்புகைச் சல்காதுமந்தம், பார்த்தப்பா மூக்கடைப்பன் கண்டமாலை பவுத்திர மகோதரமுங் குஷ்டங்குன்மம், ஆறப்பா போவதற்கு மருந்து சொல்வேன் அன்பான சாதிக்காய் சாதிபத்திரி, மாற்றப்பா மதுர மதி விடையமோமம் மகத்தான திரிகடுகு சீனங்கூட்டே. 1012

கூட்டியேசரியிடையாய்வாங்கிக்கொண்டு குணமாகச்சூரணித்து முப்பூச்சேர்த்து, நாட்டியேதேனதிலே கொண்டால்மைந்தா நலமாக நான்சொன்னவியாதிதீரும், தேட்டிலேயிந்நூலைத்தேடவேணுந் திர மாகப்பனிரண்டுங்காக்கவேணுந், தாட்டிகமாய்க்கற்பமதைக்கொள்ள வேணுந் தனதான பூரணத்தை மருவிப்பாரே. 1013

பூரப்பா பூரணமாம் பச்சைபச்சை பகராதபச்சைதனைப் பதி வாய்பார்க்க, ஆரப்பா அறிவார்கள்காரசாரம் அம்பரத்தின் தரிசனத் தையார்தான் காண்பார், தேரப்பா மனதறிவால் தேறிக்கொண்டு தெவிட்டாதபூரணத்தைப் பணிந்தால்மைந்தா, நேரப்பாமதுரரசஞ் சொலிக்கும்பாரு நினைவாக அமுர்தமதைப் பானம்பண்ணே. 1014

## காயாதி கற்பமுண்ணும் பக்குவம்.

பண்ணப்பா காயாதி கற்பங்கொள்ள பக்குவத்தைச் சொல்லு கிறேன்பண்பாய்க்கேளு, விண்ணப்பாஆதியந்தநடுமூன்றுக விளங்கு கின்றபொருளதனைவிரும்பிக்கேளு, கண்ணப்பாவமுதகற்பம் அகார பீட நடுவானபோதமடா ஆர்தான்காண்பார், உண்ணப்பா அகார மென்றபொருளைக்கேளு வுறுதியுள்ள புலத்தியனே யுண்மைதானே.

தானென்றஅகாரமடாவிந்துவிந்து தண்மையுள்ளவிந்துநீர்தண் ணீராச்சு, கோனென்றவிந்துநீர் தன்னைவாங்கி குணமாக அந்திசந்திக் கொண்டுமைந்தா, கோனென்றகுறுபதத்தில்மனதைவைத்து குண மாக ரேசகபூரகமும்பண்ணி, நானென்ற அகம்போக்கி கும்பகத்தே நின்றால் நலமில்லா தேகம்வெகு வுறுதியாமே. 1016

ஆமப்பா வுறுதிமன துறுதியாக அப்பனே கொண்டுவிடு மண்ட லந்தான், நாமப்பா வாதபித்த சேத்துமத்தினலே நாடிவரும் வியாதி யெல்லாம் நாடாதோடும், போமப்பா நரையோடு திரையும்போகும் பொல்லாத கிரோதகையின் மாய்கைபோகும், தாமப்பா நந்தியொளி பிரகாசிக்குந் தயவாக போகும்வெகு தண்மைதானே. 1017

தானென்ன நீயென்ன ரெண்டுமொன்று தடையில்லா மனதாக இருந்தாயானல், கோனென்ன குருவென்ன நீயேயாகுங் குணமான மனதுறுதியானதாலே, ஆணென்னபெண்ணென்னரெண்டுமொன்று அரகராமனதடங்கி அறிவிற்சேர்ந்து, தேனென்னவந்தநொருவிந்து நீரை தெவிட்டாமற் கொண்டுமறு கற்பங்கேளே. 1018

கேளப்பா நடுவான அகாரந்தொட்டு கிருபையுட னடியான உகா ரங்கேளு, நாளப்பாஉகாரமென்றஅடி தான்மூலநலமான மூலமென்று லார்தான் காண்பார், கோளப்பா வொன்றுமில்லை நாகம்நாதங் குரு வான மவுனமதைக் கூறப்போமோ, வாளப்பா நாதமென்ற சருகு வாங்கி மைந்தனே தினந்தோறும் பூசிப்பாயே. 1019

பூசிப்பாய் நாதமென்ற சருகுவாங்கி புகழாக ரேசகபூரகமும் பண்ணி, நேசிப்பாய் கும்பகத்தில் மனதைநாட்டி நினைவாக மன துறுதி யாகக்கொண்டால், ஆசிப்பா வாசிப்பா யழுத்திப்பாரு அழுத்திமிக பார்க்கையிலே யருளேதோன்றும், வாசிக்கு முயிரான வுகாரந்தன்னை வரிசையுடன் பூசிக்கும் வகையைக்கேளே. 1020

பூசிக்கும்வகை.

கேளப்பா வுதையாதி சிவத்தைப்பூசி கெணிதமாய் மதியத்தில் போசனமேசெய்து, நாளப்பா மாலைதனில் உகாரதீட்சை நன்மை யுள்ள சத்தியைநீ பூசைபண்ணு, தாளப்பா மூலமுதலாறுதாரந் தான்கடந்து மேலான சுழினைக்குள்ளே, ஆளப்பா அண்டபகிரண்ட மெல்லாம் அரகரா அகாரமுடன் உகாரந்தானே. 1021

தானப்பாவகாரமென்றசத்திதன்னை தண்மையுடன்மண்டலமே பூசித்தாக்கால், தேனப்பா அமுர்தரசங் கனிந்துகாணும் கிவசிவா அமுர்தரசமந்தமாகும், பேணப்பாஉகாரமென்றஅமுர்தரசந்தன்னை பிலத்தபுத்தி யறிவதினாற் பேணிப்பார்த்து, வூணப்பா மூலமதில் ரேசகமேபண்ணி உம்மெனவே நடுவரையில் பூரகமேசெய்யே. ()

செய்யப்பா நடுவரையில் பூரகமேசெய்து திடமாக மேல்மூலஞ் சேர்ந்துக்கொண்டு, பையப்பாகும்பகத்திற்ப ற்றிபாரு பருதிமதிசுட ரொளியில் பகுந்தேநில்லு, கையப்பா தடவுவதுபோலேமக்காள் கரு வானசத்தியைநீ கருத்தில்வைத்தால், மெய்யப்பா வுனதுசெடம் வலுத்துப்போச்சு மேதினியில் சித்தனென்ற பேருமாச்சே. 1023

ஆச்சப்பா சித்தனிலே அதிகசித்தன் ஆதியென்ற மூலமதை யறிந்ததாலே, போச்சப்பாநரைதிரையும்நமனுமில்லைபொன்போலே பூரணமாந்தேகமாச்சு, பாச்சப்பாவாசியைநீவாசிகண்டு பக்குவமாய் மதியைமெள்ள ரவியிற்சேரு, காச்சப்பா பஞ்சமுகாக்கினியினாலே கருத்துறவே செடத்தை மெள்ளக்காச்சே. 1024

காச்சுதற்கு அக்கினியில் கருவைச்சொன்னேன் கருத்துறவே சிவபூசை நன்றாய்ச்சொன்னேன், பாச்சுதற்கு சத்தியுட பூசை சொன்னேன் பத்தியுடன் பகுத்தறியாய்ப் புத்திக்கொண்டு, மூச்சு தற்கு முன்னிலைதான் பீடமாகும் முனையான சுழிமுனையே வகார பீடம், பேச்சுதற்கு பேசுதற்கு நாவேயில்லை பெருமையுடன் சத்தி சிவ பூசைகேளே. 1025

சத்திசிவபூசை.

கேளப்பா சத்தியென்ற உகாரந்தன்னில் கிருபையுள்ள அகார மென்ற சிவத்தைநாட்டி, நாளப்பா தினம்பார்த்து நமசியென்றோது

நசிவசத்தியொன்றும்பாரு, வாளப்பா உகாரமுடன் அகாரஞ்சேர்ந்து மார்க்கமுடன் நமசியென் றுருவேசெய்து, கோளப்பாவாராதுமண்டலமேசெய்தால் குடிலமென் றதேகவச்சிரகாயமாமே. 1026

காயமது பிலத்துதடா கல்போல்மைந்தா காயாதிகற்பமென்ற தேகமாச்சு, நேயமுடன்சத்திசிவபூசையாலேநிலைத்துதடாஐந்துருவு நீங்காமற்றான், மாயமென்ற நரைதிரையு மாறிப்போகும் மகத்தான தேகமதுவலுத்துப்போச்சு, தேயுமதுமதிதானுந் தேய்ந்துதேய்ந்து திறமானரவியதுவுமொளியுமாச்சே. 1027

ஆச்சப்பா பரமவெளி கண்கொள்ளாது அரகராசோதியிலே அதிகசோதி, மூச்சப்பாவோடாதுமுன்பின்னுகை முக்கியமுடன்பன்னிரண்டுமடங்கும்வீட்டில், பாச்சப்பாமூலமென்றஅனலைத்தாண்டி பக்குவமாய்ரேசகபூரகமும்பண்ணி, காச்சப்பாஅஞ்சமுகாக்கினியில் நின்று கருத்துறவேகும்பகத்தில்தீபமேற்றே. 1028

ஏற்றப்பா தீபமது என்னசொல்வேன் ஏகாந்தமானதொரு ஏக தீபம், போற்றப்பா தூண்டாததீபந்தன்னை புத்திமனதொன்றாகப் பொருந்திநின்று, காத்தப்பாசத்திசிவபூசைபண்ணி கமலமலரமுதமதைக்கருத்தாய்க்கொண்டு, சாத்தப்பா வாடாத மலரைக்கொண்டு தயவானமனோன்மணியைப்பூசைபண்ணே. 1029

## மனோன்மணி பூசை.

பண்ணப்பா மனோன்மணியைப் பூசைபண்ண பக்குவத்தை சொல்லுகிறேன்பண்பாய்க்கேளு, நண்ணப்பாஅகாரமுடன் உகாரங் கூட்டி நலங்காமல் நசிமசியென் றுருவேசெய்து, விண்ணப்பாதானேக்கிமகாரந்தன்னை மேவினதால் பராபரத்தினொளியே காணுங், கண்ணப்பாமனக்கண்ணாற்கசிந்துபாரு கமலமென்ற ஆயிரத்தெண்ணிதழ்காண்பாரே. 1030

காணப்பாஇதழறிந்துபூசைபண்ண கனியுமடா அமுதமதுகசிந்துபாயும், பேணப்பாஅமுதமதைபூசைபண்ண பெரிதானமனோன்மணிதான்பிரசாதிப்பாள், ஊணப்பாமனோன்மணியின்பீசங்கேளும் மெனவே சிங்கென்று வுருவேசெய்தால், பேணப்பா மகாரமென்ற அண்டந்தோறும் பெரிதானஅண்டமதுப்பரமதாமே. 1031

## பரத்தின்பூசை-காயாதிகற்பம்.

ஆமப்பாசிவ பூசைசொன்னேன் அரகராபரத்தினுட பூசை கேளு, நாமப்பாசொல்லுகிறோம்சத்தியொன்றுநலமானசிவமொன்று பரந்தானென்று, தாமப்பாமூன்றுக்கும் விபரங்கேளு சத்தியென்ற உகாரமாச்சு, காமப்பாசிவமென்ற அகாரந்தன்னை கருவான விந்து மென்றசாரமாச்சே. 1032

ஆச்சப்பாமகாரமென்றயகாரந்தானும் அப்பனேபரமான அண்டமாச்சு, காச்சப்பா தாரமுடன்சாரம்ரெண்டும் கருவானவிந்துவுட நாதமாச்சு, பாச்சப்பா நாதமதில்விந்துசேர்ந்து பதிவாகத்தெளிவிறு

த்துபதனம்பண்ணி, போச்சப்பா வொன்றுமில்லை யண்டந்தன்னை பேணியேகல்வமதில் ரொறுக்கிக்கொள்ளே. 1033

கொள்ளப்பாநாதவிந்து தெளிந்ததண்ணீர் கூர்மையுள்ள பழச்சாறென்றிதற்குநாமம், கல்லப்பா வென்றகல்உண்டந்தன்னை கைமுறையாய்நன்முகஆட்டிப்பாரு, நல்லப்பா ஆட்டியே பார்க்கும்போது நலமானமெழுகாகுமண்டந்தானுஞ், செல்லப்பாஅண்டமென்றமெழுகுதன்னை சிவசிவா தானுருட்டிவட்டுபண்ணே. 1034

பண்ணியதோர்வட்டதனைகாயப்போட்டு பக்குவமாய் காய்ந்தபின்புமைந்தாகேளு,வுன்னியேகாரோட்டில்வைத்துமைந்தாவுரமாக மண்சீலைவலுவாய்ச்செய்து, புண்ணியனேயீசானம்பூசைசெய்துபுனிதமுடன்காடையென்றபுடத்தைப்போடு, தன்னிமையாய் நீறியது தவளம்போலாஞ் சதாநந்தியானதொருபற்பந்தானே. 1035

தானென்ற பற்பமதுக்கிணைதானில்லை தன்மையுள்ளரசபற்பமிதுக்குமீடோ, வூனென்றகாந்தத்தின் செந்தூரந்தான் உற்றுப்பாரிதற்குநிகருண்டோ, கோனென்றபூபதியுமிதற்குமீடோ கொடிதானமாத்திரைகளிதற்குமீடோ, தேனென்றபற்பமது ஆதிவித்தை சிவசிவாகாயாதிகற்பமாமே. 1036

ஆமப்பா பற்பமதில் பணவிடைதானெடுத்து அமுதமென்றதேனதிலே வைத்து மைந்தா, நாமப்பா சொல்லுகிறேன் மேல்மூலத்தூணி நன்முகவாசியைநீயமுத்துமைந்தா, தாமப்பாதன்னிலையைத்தான்தான்கண்டு சமரசமாய்ரேசகத்தைப் பூரணமேசெய்து, காமப்பால்திரையகற்றிகும்பகத்தேநின்று கருணையுடன்பற்பமதைபூசைபண்ணே. 1037

பூசையென்னமனதுறுதியாகக்கொண்டு பூரணத்தைபற்றிமனதறிவாய்நின்றால், நேசமுள்ள மனதுறுதியாகுமாகும் நிஷ்டையிலே அஷ்டாங்கயோகங்காணும், பாஷையென்ற பரிபாஷை பண்பாய்க்காணும் பக்குவமாய் கற்பூரத்தீபந்தோணும், ஆசையென்ற தசதீட்சைகாரந்தோன்றும் அரகராஇன்னமொருகற்பங்கேளே. 1038

பூரணகற்பம்.

கேளப்பா ஆதியென்ற பூரணத்தைப்பற்றி கிருபையுடனுதவிந்துவொன்முய்வாங்கி, வாளப்பாபீங்கானில்பதனம்பண்ணி மசத்தானசெயநீரால் கரைத்துக்கொண்டு, கோளப்பா வாராமல் ரவியில் வைக்க குறுகிநன்முய் வற்றியபின் மைந்தா மைந்தா, ஆளப்பா யிப்படியேபத்துமுறைகாச்சு அப்பனேகசடற்றுநீறிப்போமே. 1039

நீறிப்போமறுபடியும் பத்துமுறைகாச்சு நிச்சயமாய் நீறியது பற்பமாகும், கூறியேநீறினதோர்பற்பந்தன்னை குணமாக குண்டலியைக்கண்டு போற்றி, வாரியேபீங்கான்தன் பரணிதன்னில் மார்க்கமுடன் பதனமாய்வைத்துப்போற்றி, தேறியே மனதறிவால் பூரணத்தைப்பற்றி சிவசிவாரேசகபூரகமுஞ்செய்யே. 1040

செய்யப்பாகும்பகத்தில்மனதைதவைத்து செயமானபற்பமதில் பணவிடைதானெடுத்து, மெய்யப்பாசொல்லுகிறேன் சற்குருவைப் பற்றி மேலானபற்பமது கொண்டால்மைந்தா, பையப்பா தேகமது வலுத்துப்போகும் பாரதனில் வெகுகோடி காலம்வாழும், ஐயப்பா வென்றசொல்லகன்றுபோகு மரகாரமவுனமென்றவமுதமாமே. ()

## அமுதரசகற்பம்.

ஆமப்பாவமுதரசகற்பமொன்று அன்பானபுலத்தியனேசொல் லக்கேளு, தாமப்பாவடிமுடியுமொன்றாய்ச்சேர்த்து சமர்த்தாகபாண் டத்திலிட்டுக்கொண்டு, நாமப்பாகுழித்தயிலம் நன்றாய்வாங்கி நன்றா கக்குப்பிதனில் பதனம் பண்ணி, காமப்பா ரவிபீசம் பொடித்துள் ளிட்டு கமலமென்றபீங்கானில்பதனம்பண்ணே. 1042

பண்ணியதோர்தயிலமதைப் பணவிடைதானெடுத்து பத்தியுட னிருபொழுது மண்டலந்தான்கொள்ள, உன்னியதோர் வியாதியெல் லா மொழிந்துபோகும் உத்தமனே யாக்கைதனில் சட்டைதள்ளும், நன்னயமாய் தேகமதிற்காந்திமீறி ரவிபோல வொளிவீசும் நாட்டங் காணும், புண்ணியனே அமிர்தரசதேகமாகும் புத்திமிகவுண்டாகும் புனிதமாமே. 1043

## மேருகற்பம்.

ஆமப்பாயின்னமொருகற்பங்கேளு ஆண்டுமொருபூவாதசாயை வாங்கி, போமப்பா கல்லுரலிலிருப்புக்கோலால் புத்தியுடன்மைபோ லேயிடித்துக்கொண்டு, தாமப்பாசிறுநீரிற் கரைத்துக்கொண்டு தப் பாமல் மறுதினத்தி லிறுத்துப்போடு, நாமப்பா பத்துமுறைஇப்ப டியேபண்ணி நன்றாகரவிமுகத்திலுலர்த்திடாயே. 1044

உலர்த்தி நன்றாய் முன்போல விடித்துத்தோண்டி உத்தமனே ரவிமுகத்தில்காயப்போடு, சுழித்திமிகநன்றாகக்காய்ந்தபின்பு சுருக் காகவுரலிலிட்டுமைபோலாக்கி, ஜலத்திலிட்டுநன்றாகக் கரைத்துநீயுந் தெளியவைத்துத் தெளிவிறுத்து ஜலத்தைவாரு, பிலத்துடனிப்படி பத்துமுறைநீபண்ண பேணியேரவிமுகத்தில்காயப்போடே. 1045

போட்டுநன்றா யுலர்த்திமிகக்காய்ந்துதானால் புனிதமுடன் மாப் போலேயிடித்துக்கொண்டு, நாட்டமுடன்வடிகட்டிமேருக்கேற்றிநட ராசர் சக்கரத்தை நன்றாய்க்கீறி, தாட்டிகமா யதின்மேலே மேரு வைத்து சமர்த்தாக ஈசானம்பூசைபண்ணி, வாட்டமில்லாமலரொளி யில்மனதைவைத்து மகத்தானமேருவைநீ பதனம்பண்ணே. 1046

பதனமதாய்மேருவைநீவைத்துப்போற்றி பராபரமாங்கேசரத் தில்மனதைவைத்து, சதமாகரேசக பூரகமும்பண்ணி தன்மையுடன் கும்பகத்தில் சார்ந்துநின்று, மிதமாகப் பணவிடைதா னெடுத்து மைந்தா மிஞ்சாமல்தண்ணீரிற்கொண்டாயானால், அதமானதேகமது வச்சிரம்போலாம் அப்பனேமண்டலத்தில்சட்டைபோமே. 1047

போமப்பாநரை திரையுமொழிந்துபோகும்பொன்போலேதேக முமாய் புத்தியுண்டாந், தாமப்பா போதையென்ன சொல்லப்போ றேன் தயவாகப் போதைவெகு தன்மையாகும், தாமப்பா வாசியது அடங்கும்வீட்டில் தானென்றபேர்போச்சு அரந்தானுச்சு, ஆமப்பா ஆறுவரையேறுதற்கு அரகராவாசியது அடங்கும்பாரே. 1048

பாரப்பா வாசிபன்னிரண்டுந்தானும் பக்குவமா யுள்ளடங்கிப் பணியுமப்பா, நேரப்பாசுழிமுனையுந் துலக்கமாகும் நெறியுடனேகற் பூரதீபம்வீசுந், தேரப்பாதீபமதில்நின்றுதேறிசிவசிவாபூரணத்தை தினமும்நோக்கி, காரப்பா ஆயிரத்தி னிதழைப்பற்றிக் கசிந்துவரு மமிர்தமது கசிந்துகொள்ளே. 1049

கொள்ளப்பா சூரணத்தை தினமுங்கொண்டால் கொடிதானவ வமிருத்தின்குடிலம்போகு,மல்லப்பாசொல்வேன்மண்டலமூன்றுனு லப்பனே வயதுமாயிரமுமாகு, நல்லப்பா வருஷமது கொண்டால் மைந்தா நலமான வயதுபதினுயிரந்தான், சொல்லப்பா மனந்தேறி சதாகாலங்கொள்ள சிவசிவாவயதுசொல்லமுடியாதெண்ணே. 1050

எண்ணவேசூரணத்தைத்தயிலத்தோடே யேகமாயொன்றுக்கி பதனம்பண்ணி, முன்னவனைத்தான் பணிந்து பணவிடைதான் கொள்ள முதுமையுள்ள தேகமது வாலவயதாகும், உண்ணையிலே சுழிமுனையில் மனத்தைவைத்து உம்மெனவே கும்பித்துரேசகமே பண்ணி, நன்னயமாய்ப் பூரணத்தைப் பூரகமேசெய்ய நளினமதாய் தேகவச்சிரகாயமாமே. 1051

ஆமப்பாதேகவச் சிரகாயமாகும் அப்பனேஆதியந்தமறைவிற் காட்டுந், தாமப்பாகெவுனரசதேகமாகுஞ் சதாசிவமாய்பூரணத்தைச் சார்ந்துநிற்கும், போமப்பாஅண்டவரை உசரத்தூக்கும் போக்கான அஷ்டமாசித்துமாடும், நாமப்பாசொல்லுகிறே மின்னமொன்று நல மானவல்லாரைச்சூரணத்தைக்கேளே. 1052

வல்லாரைச்சூரணம்.

கேளப்பாவல்லாரைச்செடிபூண்டல்ல கெணிதமுள திங்களிலே ஆறுந்திங்கள், நாளப்பாதினம்பார்த்துவல்லாரைவாங்க நாமொன்று சொல்லுகிறே நன்றாகக்கேள், ஆளப்பா வெல்லமதில் ரவிபீசஞ் சேர்த்து அப்பனே பிசைந்துருட்டி யுன்பாய்க்கொள்ளு, வாளப்பா விதனமின்றி வல்லாரைவாங்கி மைந்தனே ரவிமுகத்தி லுலர்த்தி டாயே. 1053

உலர்த்திமிக நன்றாகவுரலில்தாக்கி உத்தமனே தானிடித்துத் தூளதாக்கி, கலத்திமிகத்தான்போட்டுக்காடிவார்த்து கரைத்துநன் றாய்ரவிமுகத்திற்காயப்போடு, செலத்தில்மிகவூறிநன்றாய்க் காய்ந்த பின்பு சிவசிவா மறுபடியுங்காடிவார்த்து, பிலத்துடனே யிப்படியே பத்துமுறைகாய்ந்தால் பிசகாதுவல்லாரைக்குயிர் தானுச்சே. 1054

வல்லாரைமெழுகு.

ஆச்சப்பாசுத்திசெய்தவல்லாரைவாங்கி அப்பனேயிடித்துவஸ் திரகாயம்பண்ணி, பாச்சப்பாபீங்கானிலிட்டுக்கொண்டுபக்குவமாய்ப்

சாறுங்தேனும்விட்டு, காச்சப்பாபிசைந்துரவி முகத்தில்வைக்கக் கருவான மெழுகாகு மஞ்சாநாளில், பேச்சப்பா பேசுதற்கு நாவுமுண்டோ பேணியே பரணிதனில் பதனம்பண்ணே. 1055

பண்ணியதோர் மெழுகுதன்னில் பணவிடைதானெடுத்து பரமான குருபதத்தைப் பணிந்துபோற்றி, உண்ணியே மூலமதில் மனதைவைத்து ஓமெனவே ஒருமனதாய்க் கொண்டால் மைந்தா, கண்ணிமைக்குள் மூலமென்ற வன்னிமீறிக் காட்டுமடா கற்பூர தீபந்தன்னை, சென்னிவளர் தீபமதைக் கண்டால்மைந்தா தேகசித்தி யோகசித்தி ஞானமாமே. 1056

ஆமப்பாஞானமென்றால்மெய்ஞ்ஞானமாகும் அப்பனேமெய்ஞ்ஞானங்காணவென்றால், நாமப்பா சொல்லுகிறேன் நினைவாய்கேளு நலமான சரிதையிலே நின்றுதேறி, தாமப்பா கிரிகையிலே சார்ந்துகொண்டுதயவானமனதோடேயிருந்தாயாகில், காமப்பால்கானற்பால் ரெண்டுங்கொண்ட கையிலாச் சற்குருவும் வருவார்பாரே. 1057

வருவார்கள்வெகுவிதமாய்மனதுகாண மைந்தனேபெரியோரை தெண்டம்பண்ணி, பருவமுட னவர்பதத்தைப் பணிந்துகொண்டு பக்குவமாய்மனதுருக நடந்தாயாகில், குருவான சற்குருவந்தாண்டு கொண்டு குணம்பார்க்கவுன்னிடத்தி லிருப்பாரையா, கருவாக மனப்பதிய நடந்துகொண்டால் காட்டிவாராதியந்தக் கருவைத்தானே. ()

அகஸ்தியர் தன் வரலாறுரைத்தல்.

தானென நான்பெற்ற பேரைக்கேளு சத்தியமாய் மேருவுக்குத் தென்புறத்தில், தேனென ரசமெழுகி அருவிபாயுந் தெவிட்டாத அருவிகளைக் கருவிலேதான், கோனென பிர்மகுல ராஜயோகி குருவான சற்குருவாமாதியான, மானென மவுனமான மகத்தான பிரமகுல வேதியோனே. 1059

வேதியனைக்காக்குமுன்னே மனந்தான்தேறி விரும்பிமிகக்கற்பமதைமேவிக்கொண்டு, ஆதியிலேபிறந்தசடமழியாமல்தான் அகத்தினுடசெயலறிந்து அறிவார்கூடி, நீதியுடன் சஞ்சார சமாதிசெய்து நேரானநிலையறிந்து யிருக்கும்பப்போ, சோதியென்ற சற்குருதான் வந்தாரப்போ சொல்லறிய வேணுமென அடுத்தேன்பாரே. 1060

பாரப்பா அடுத்துமிகச்சென்றேனப்போ பரிவாக என்குருவும் வாவாவென்றார், நேரப்பாநின்றகுரு வாலேநாதம் நெஞ்சாரக்கேட்டவுடன்நேர்மையாக, மாரப்பாமணலழுந்தப் பணிந்தேனப்போ மனமகிழ்ந்து அருகிலென யிருத்திகொண்டு, தேரப்பா தசதீட்சை வைப்பதற்கு திடசுத்தி செய்ததொரு திரத்தைக்கேளே. 1061

திரமாகப்பஞ்சகணதீட்சையாலே தீர்க்கமாயெக்கியங்கள்வளர்த்தாரையா, உரமாக எக்கியம்வளர்குண்டந்தன்னில் உறுதியுடன்கும்பமொன்றுவதிந்துதையா, பரமானகும்பமதிலடியேன் தன்னைபாயென்றார்சொன்னவுடன்பாய்ந்தேனப்போ, நிறமானகும்பமதுவாலேயாச்சுநீதியுள்ளவாலேயடாகும்பப்பெண்ணே. 1062

பெண்ணனகும்பேஸ் பரிக்கும்பிள்ளை பேர்பெற்றயெக்கியவே தியர்க்கும்பிள்ளை, கண்ணனமணிபோலேயெனவளர்த்துக்கருவான கருக்கவௌல்லாந் திரட்டிமைந்தா, தண்ணன சீஷனென்றே யீந்தாரையா தண்மையுடனுன் வாங்கிக்கொண்டேனப்பா, பண்ணனசீஷன் வெகு நன்மையென்று பாவித்தார் பரமான ஆதிதானே. 1063

ஆதியிலே ஆதிதனை யறிந்தேனப்பா அரகராபிர்மரிஷிக் கூட்டமாச்சு, சோதியெனு மாலயனுங் காணாதன் சுருதியுள்ள விசுவனுக்குச் சொன்னர் சூட்சம், நீதியிலே போதகிரி தன்னிற்சென்று நினைவுதவிருமல் மனதுறுதியாக, பாதிமதியணியுமான் தேவிபாதம் பதம்பிடித்து மனதறிவி லமர்த்தினேனே. 1064

அமர்ந்ததொருகல்லானை யறியமாட்டார் அப்பனே ஆதியென்ற பிண்டங்காணர், சுமந்ததொரு கேசரிபோல் திரிவாரையா சொல்லுகிறேன் பிண்டவித்தை யண்டஞ்சாக, நமந்தகளிச் சுன்னமடா நந்திநந்தி நாதனர்விந்துமுறை நவில்வாரையா, சமைந்ததொரு பெண்ணீராற் கொல்லுங்கொல்லுந் தன்மையுள்ள விந்துவடா சாரமாச்சே. ()

சாரமென்றுங் காரமென்றும் வழலையென்றுந் தன்மையுடன் சொல்லுவார் தண்மைகாணர், பூரமென்றும் வீரமொன்றும் புரவிபேசார் புகழ்பெரிய கல்லானை மதத்தைகாணர், காரமென்ற அண்டமதை காணமாட்டார் கருவான சாரமென்ற மூலங்காணர், வீரமென்ற வீரமது அஞ்சாங்காச்சல் விசையான கம்பியுப்பாகிதானே.

ஆதியென்று மந்தமென்று முடிதானப்பா அப்பனே ஆதியது அடிமுடியிற்சேர்ந்து, குதியென்ற துடியொடுங்குங் கும்பாச்சொன்னேன்கொள்வதற்குசெலமுண்டுமுடிதான்போச்சு, பதியென்றமுடிபோனலடிதானேது பார்மகனே அடிமுடியுமாதியந்தம், மதியென்ற பருதிமதியறியவேண்டி மக்களேசடாதாரஞ் சித்திபண்ணே. 1067

சித்தித்தால்சிவன்வேறே யுண்டோஐயா தேகசித்தியில்லாவிட்டால் சிவன்வேறுண்டு, முத்திகொண்ட யெதினலே கும்பமுனியென்று முக்கியத்தில் கும்பகத்திற் பாய்ந்து, பத்திகொண்டு வந்ததினல் கும்பமுனியென்றும் பதிவான பொதிகைமுனி அகத்தீசரென்றும், புத்தியுள்ள தெட்சணமூர்த்திமுனி என்றும் போதமிகவுண்டாகும் பூரணமேபாரே. 1068

பாரப்பா வல்லாரை யார்தான் காண்பார் பக்குவமாய் குருசொல்ல காணவேணும், நேரப்பா குருவுரைத்து கண்டாலுந்தான் நினைவாகமனதுறுதியாகவேணும், காரப்பாமனதுறுதியானலுந்தான் கைபாகஞ் செய்பாகங் காணவேணும், ஆரப்பாவானலுங் குருவில்லாதவித்தை அசத்தியந்தா னசத்தியந்தானகாதெண்ணே. 1069

## நவநீதவெண்ணை.

எண்ணப்பாபுலத்தியனேநவநீதவெண்ணை இன்பமுடன்சொல்லுகிறே னன்ருய்க்கேளு, நண்ணப்பாநவக்கிரகம் ஒன்பதுக்குங்குரு

டிநின்ற அனுக்கிரகமார் தான்காண்பார், விண்ணப்பா ஆகாசமார் தான் காண்பார் விதமானமவுனமடா அண்டக்கூறு, தண்ணப்பா தன்னிலே யைத் தானேகண்டு தயவான வீரமடா திண்ணந்தானே. 1070

தானென்ற அண்டமடா பூமிநாதம் தருவாள பூரணமாய் நாத விந்து, நானென்றஆணவந்தானிரண்டுமொன்றாய் நன்மையுடன்கூடி னதைக்காணப்போமோ, கோனென்ற குருவருளாற் கண்டுகொண்டு குணமானபதியறிந்து குருவைப் போற்றி, தேனென்ற பூரணமாஞ் சோதிதன்னில் சிவசிவாவென்றுசொல்லி அண்டம்வாங்கே. 1071

அண்டமெழுகு.

வாங்கப்பா அண்டமதுவாங்குதற்கு வளமையென்று சொல்லு கிறேன் மைந்தாகேளு, பாங்குபெற ஜெனித்ததொரு பதினாறுநாள் பசுமையுடன் கொண்டுவந்து பதனமாற்றி, தீங்கான தீங்கெல்லாஞ் சுத்திபண்ணி திருவான முப்பூவும் வீரம்பூரம், சாங்கமாய் வகைக்கு வொரு பலமாய்வாங்கி சமரசமாய் கல்வமதில் சாத்திடாயே. 1072

சாத்தியே குருபரனைத் தியானம்பண்ணி தருவான செயநீரை விட்டுமைந்தா, போற்றியேமெழுகுபோலரைத்துக்கொண்டுபுதுமை யுள்ள அண்டமதிற் கவசம்பண்ணி, தேற்றியே பானையரை யுப்பைக் கொட்டி திருவானஅண்டமதையதின்மேல்வைத்து, வாழ்த்தியேயுப் பைமிகநிரம்பக்கொட்டி வரிசையுடன்மேல்மூடிச்சீலைசெய்யே. 1073

செய்யப்பாசற்குருவைப்பணிந்துபோற்றி திடமாகக்குழிவெட் டிசமாதிவைத்து, பையப்பாகேசரியி னெருவைக்கொட்டி பாங்காக மேல்மூடி மண்ணுஞ்செய்து, மெய்யப்பா அதின்மேலே யிருந்துநீயு மேன்மையாய் செபதபங்கள் செய்துமைந்தா, கையப்பா தவிராமல் மண்டலமேசென்று கருத்துறவே ஈசானம் பூசைபண்ணே. 1074

பண்ணப்பா சிவபூசை குருவின்பூசை பண்பாகச் செய்தபின்பு பதனமாக, விண்ணப்பா நிறைந்ததோ ரண்டந்தன்னை விரும்பியே யெடுத்துப்பாரென்னசொல்வேன், பொன்னப்பாமென்மெழுகுபோ லமைந்தா புதுமையுள அண்டமது மெழுகாகிற்கு, நண்ணப்பாமெழு கெடுத்துபதனமாக நாடியேபரணிதனில் வைத்துக்கேளே. 1075

கேளப்பாதேகமதுசுத்திபண்ணிகிருபையுடனாத்மாவைப்பூசை பண்ணி, மேலப்பா மவுனமதை மனதுட்கொண்டு மேன்மையுள்ள குருபதத்தைவிரும்பிமைந்தா, ஆளப்பாமூலவன்னி கனலைத்தூண்ட அரகரா ரேசக் பூரகமும்பண்ணி, தாளப்பாகும்பகத்தில் தாழ்ந்துக் கொண்டு தண்மையுடன் மேருசக்கரத்தைச் செய்யே. 1076

செய்ததொரு சக்கரத்தை நன்றாய்க்கீறி திரமாகப் பரணிதனை யதன்மேல்வைத்து, மெய்யான சடத்தினுடவலுவைக்கண்டுமேலான அண்டமதின்மெழுகிலப்பா, கையாரப்பணவிடைதானெடுத்துநல்ல கண்ணொளியை விண்ணொளிக்குள் கருதிப்பார்த்து, ஐயாகொள் மெழுகுதனைப் பூசைபண்ணி அப்பனே தேகமது கட்டிப்போச்சு.

போச்சென்றுவிடுகாதேவின்னங்கொள்ளு பூரணத்தைப்பற்றி மனதறிவில்நில்லு, ஏச்சென்ற நரைதிரைக ளென்னசொல்வேன் இயல்பாகநரைகளெல்லா முதிர்ந்துபோச்சு, போச்சென்றதிரைக ளது சட்டைபோலே பேணியே திரைகளெல்லாங் கழன்றுபோச்சு, ஆச்சென்றதேகமது வாலையாச்சு அரகராகயிலாசத் தேகமாச்சே.

தேகமென்ற ஆதிதனைப்பூசைபண்ண சிவசிவா ஆண்டொன்றில் கெவுனமாகும், பாகமுடன்ரெண்டாண்டிலஷ்டசித்தும் பலிக்குமடா மூன்றாண்டில்பான்மைகேளு, ஆகமுடனண்டவரை ஒளிதான்தோற் றும் அப்பனே நாலாண்டில் அதிசயங்கள்காணும், தாகமுடன் தூர துலைசேதிசொல்ல தரணிதனில் சற்குருவாய்த் தானுவாயே. 1079

தானவனாய் நின்றநிலை தானேதோற்றும் தண்மையுள்ள பூர ணமே சித்தியாகும், காணலா மூலமுதலாறாதாரங் கயிலாசத் திரு நடனங் கண்ணிற்காட்டும், பேணவே வாசியது பிசகாதையா பிச காதவாசியது வுறுதியாகும், கோணவே அஞ்சுமுத லதிகமானால் சொல்லுகிறேன் வுத்தமரேளனத் தேகமாச்சே. 1080

தேகமென்ற செடமறியா மாந்தர்மெத்த செய்வினைகள் தீராத திருடர்மெத்த, யோகமென்றயோகநிலை யறியார்மெத்த ஒண்டிவிடந் தனையறிந்து வொண்டார்மெத்த, பாகமென்றசுவையறியாப் பழுதர் மெத்த பரமறியார் குருவறியார் பாரில்மெத்த, ஆகமென்ற பொரு ளறியாருலகத்துள்ளே அம்பரத்தையறியாம லலறினாரே. 1081

அலறினார்வேதமதைக் காணமல்தான் அப்பனேகவியாளர்மொ ழியைப்பார்த்து, குளறினார்குரலறிந்துகூறாமல்தான் குறும்பர்வெகு வேடமதைக் குணமாய்ப்போட்டு, தளருவார் தயங்கிமிகத் தன்னைக் காணார் சத்திசிவஙகுறுபதத்தின் தன்மைகாணார், மாரறிந்து மலரி னுடவாசங்கண்டு மதியமுதங்கொள்ளாதா ருடன்சேராதே. 1082

சேராதே துஷ்டருடன் வாதாடாதே தெவிட்டாத மதியமும் பொருள்சொல்லாதே, கூராதமந்திரத்தின்குறிசொல்லாதேகுறித்த விடங்காட்டாதே குணஞ்சொல்லாதே, நேரானமனதுறுதி நீசொல் லாதே நேர்மையுள்ளயோகநிலைக் கால்சொல்லாதே, மாறாதவாசியுட கருச்சொல்லாதே மகிமையுள்ள புலத்தியனே யின்னங்கேளே. ()

கேளப்பாமுப்பூவின்கருச்சொல்லாதேகிருபையுளபூரணத்தின் வழிசொல்லாதே, வாளப்பா வாழ்வதோர் வகைசொல்லாதே மகத் தானமெய்யுடனே பொய்சொல்லாதே, தாளப்பா அகங்கொண்ட சண்டாளர்க்குத்தாழ்ந்ததிக் குற்றமில்லை தன்மையாகும், காலப்பா காலறிந்துயோகஞ்செய்யுங் கற்பமுள்ள தேகமதைக் காருகாரே. ()

காரப்பா அவர்கள்மனங் கனியவேதான் கனிந்ததினால் சகலசித் துங்கைக்குள்ளாகும், பாரப்பாபன்னிரண்டு நூறைமைந்தா பக்குவ மாய்த்தானெடுத்துப் பதனமாக, சேரப்பாபொருளனைத்து மனதிற்

சேரு சேர்ந்துகொண்டுமன தடங்கிஅறிவில் நில்லு, ஆரப்பாஉனக்கீடு சொல்லப்போறேன் அரகராஅடிமுடியிலமர்ந்துநில்லே. 1085

அமர்ந்துமிக நின்றதினாலருள்கைகூடும் ஆனந்தலகிரியுட அருளேவாய்க்கும், நமந்துமிகப்போகாமல்நாளைக்காரு நாலானபூரணமே தெய்வந்தெய்வஞ், சிவந்தசடந் தளராமல்கற்பங்கொள்ளு சிவசத்தி ரெண்டையுமே தினமுங்காரு, சமைந்தகரு கற்பமதைத் தினமுங்கொண்டு சதாகாலம்பூரணத்திற்சார்ந்துநில்லே. 1086

நில்லென்றசொல்லறிந்து நின்றுகொண்டு நேரான பூரணத்தில் மனதைவைத்தால், சொல்லொன்றுந்தப்பாதுஎல்லாஞ்சித்திசொரூபமுள்ள அமுர்தரசஞ் சொலிக்குமப்பா, கல்லென்ற கல்லறிந்து காரமேற்றி கடுங்காரமானதொரு ஆனைக்கல்லாந், தெல்லென்ற ஆனைக்கல்மடிந்துதானால் சென்றசரக்கத்தனையுங்கட்டிப்போச்சே. 1087

## ஐங்கோலத்தயிலம்.

கட்டாக ஐங்கோலத் தயிலமொன்று கருத்தாக வுந்தனுக்குச் சொல்லக்கேளு, மட்டானஅழிஞ்சியடாமதனப்பூடு மைந்தனே பதிவானபதியைப்பார்த்து, திட்டமாய்ப்பதியறிந்து பதியிற்சேர்ந்து திடமாகமனதுறுதியாகநின்று, சட்டமாயஷ்டபந்த மெட்டுஞ்செய்து சமூலமாய்வடவேருந்தன்னைவாங்கே. 1088

வாங்கியந்தவடவேரைமைந்தாகேளுவரிசையுடன்கண்டமதாய் நருக்கிக்கொண்டு, பாங்குபெற நிழலுலர்த்திபாண்டத்திட்டு பக்குவமாய்முப்பூவுங் கூடச்சேர்த்து, தீங்கில்லாரவிபீசங் கூடச்சேர்த்து செம்மையுடன்வாய்மூடிசீலைசெய்து, சாங்கமாயீசானம் பூசைபண்ணி தண்மையுடன் குழித்தயிலந்தயவாய்வாங்கே. 1089

வாங்கியந்த தயிலமதை மேருக்கேற்றி வரிசையுடனீசானம் பூசைபண்ணி, தாங்கியந்தத் தயிலத்திற் பணவிடைதான்கொள்ளு தயவாகநாடிநரம்பிறுகிப்போகுந், தூங்கியதோர் தூக்கமதுமோடிப் போகும் சுந்தரம்போல்கற்பூரதேகமாகும், பாங்குபெறநரைதிரைகளுதிர்ந்துபோகும் பழுப்பானசதையெலும்புவலுத்துப்போமே.

வலுத்துப்போம் தேகமதுபழுக்கொண்ணாது வாசியதுநின்றிலங்குந்தீபம்போலே, துளுத்தசடஞ்சூட்சமாய்துலங்குமையாசுருக்காகவெகுனசித்தி கைக்குள்ளாகும், அமுத்தமுடன் அஷ்டசித்து எட்டுமாகும் அரகராதேகமது தங்கம்போலாம், பழுத்ததங்கந் தேகமது என்னசொல்வேன் பரமகயிலாசமென்றதேகமாச்சே. 1091

ஆச்சப்பா தயிலமதிற்புழுகுசேர்த்து அப்பனே மத்தித்துதிலதம்போடு, பேச்சப்பாபிறருக்கு நன்றாய்க்கேட்கும் பெருமையுள்ள சேடத்தையவர் காணமாட்டார், நீச்சப்பா வெகுதூலை கண்ணுட்டந் தோன்றும் நேராகப்பா தாளந்தூலைதானோடும், காச்சப்பா தயிலமதை கையில்செய்து கருவாகசரக்கோடுகட்டிப்போமே. 1092

போமப்பாபூரமொடுபுழுகுசேர்த்து புனிதமுள்ள தயிலமதால் கல்வத்தாட்டி, தாமப்பா திலதமிடவசியமாகுந் தண்மையுடன்பார்ப் போர்க்குத் தீபம்போலாம், நாமப்பா சொல்லுகிறோம் உலகிலுள் ளோர் நாதாந்த நாதனென வணங்குமையா, ஆமப்பா அழிஞ்சியுட ஆண்மைமெத்த ஆறறியப்போறார் ஏரழிஞ்சிதானே. 1093

ஏரழிஞ்சித்தயிலம்.

தானென்ற ஏரழிஞ்சி யுலகத்துள்ளே தயவாக மெத்தவுண்டு அறியமாட்டார், கோனென்றகுருவருளால்காணவேணும் குருமுறை யாய்க்கைபாகஞ்செய்யவேணும்,நானென்றஅகமதில்முறைகள்தப்பி நரகானநரகமது எய்தும்பாரு, தேனென்ற சற்குருவின் கடாட்சம் பெற்று செய்பாகஞ் செய்வதில் தீர்க்கமாமே. 1094

தீர்க்கமாயைங்கோலஞ் செய்துமைந்தா செம்மையுடன் தானி ருந்துதிரமாய்நின்றால், மார்க்கமுட னெட்டெட்டுசித்துமாடு மக்களே தேகம் வச்சிரகாயமாகுஞ், சேர்க்கையுடன் சிவயோகம் புதுமை யாகுஞ் செகத்திலொருபயமில்லை தீர்க்கவானாய், மூர்க்கமுள்ளமுனி யாவாய் ரிஷியுமாவாய் மூதண்டராஜரிஷி யாவாய்பாரே. 1095

அமுர்தரசமெழுகு.

பாரப்பா அமுர்தரசகற்பஞ் சொல்வேன் பரமான ஆதியடா அண்டமண்டம், நேரப்பா ஆதிதனையன்பாய்க்கண்டு நினைவாகப்பூர ணத்தைப்பதிவாய்வாங்கி, வாரப்பா பீங்கானில் வைத்துக்கொண்டு வளமானரவிமதியும்கூடச்சேர்த்து, காரப்பா ரவியில் நன்றாய்க் காய வைத்து கசடறவே காய்ந்தபின்பு மெழுகாய்ப்போமே. 1096

மெழுகான பூரணந்தான்பூரணமேயானால் மேன்மையதாயதின் வளமைவிள்ளக்கேளு, அழுகாத பிண்டமடா ஆதியாதி அன்பான பூரணமே தெய்வந்தெய்வம், பழுக்காத பொருள்களெல்லாம் பழுக் குமையா பரமான பூரணத்தின் பசுமையாலே, நழுக்காதுவாசியது முன்பின்னாக நாடினின்றனுடி தனை நாடிக்கேளே. 1097

கேளப்பாசிதம்பரத்தை தியானம்பண்ணி கிருபையுள்ளமெழு கிருக்குமேறுதன்னை,நாளப்பாதினம்பார்த்துசக்கரத்தின்மேலே நடு வானமேருதனையதின்மேல்வைத்து, கேளப்பா வாராமலர்ச்சனைகள் செய்து குருவானமூலமதில் மனதைவைத்து, ஆளப்பாரேசகபூரக மும்பண்ணி, ஆதியென்றகும்பகத்திநருளைப்போற்றே. 1098

போற்றியேபூரணத்தைப்பணிந்துகொண்டு பொருளானமெழு குதனிற் பணவிடைதானெடுத்து, ஆத்தியே மனந்தேத்திக்கொண் டால்மைந்தா அரகராதளர்ந்தசட மிறுகிப்போகும், தேத்தியேமண் டலங்கொண்டாலையா தேகமென்னகயிலாசதேகமாகும், வாழ்த்தியே ஆண்டொன்றில் கெவுனமாகும் வரிசையுட னிரண்டாண்டி லதிக சித்தே. 1099

சித்தியுட னஷ்டசித்துங் கைக்குள்ளாகுந் திறமாகும் வாசியது சிதறுதையா, புத்தியுடன் மூன்றுண்டில் பருவந்தன்னில் புதுமை வெகு அதிசயங்கள் தானேதோற்றும், பத்தியுடனுண்டுகாலுண்டால் மைந்தா பாய்ந்தண்டம்போய்வரலாம்பதனமாக, முத்திபெறஆண்டு பனிரண்டுங்கொண்டால் முத்தரென்ற கமலரிஷிக் கொப்பாம்பாரே.

## மும்மண்டலம்.

பாரப்பா மூலமுதலாறுவரைதாண்டி பண்பானமேல்வரையில் மண்டலந்தான்மூன்று, நேரப்பாமுதலான மண்டலந்தான் சந்திரன் நேராகவதின்மேலே சூரியமண்டலந்தான், காரப்பா வதின்மேலே அக்கினிமண்டலந்தான் கருவர்கயிதையறிந்து சந்திரனில் நின்று, சேரப்பா சூரியன்தன்மண்டலத்திலேறி செம்மையுடனக்கினியின் மண்டலத்தைச்சேரே. 1101

சேரப்பாஅக்கினியின்மண்டலத்தில்மைந்தாசேர்ந்துபராபரத் தினுடதெரிசனையைப்பாரு, காரப்பா கருத்துறவே தெரிசனையைக் கண்டால் கயிலாசக்கொடிமுடியைக் காணலாகும், ஆரப்பாவறிவார்கள் கொடுமுடியின்போக்கு அம்பரமாய் நின்றதொரு ஆதியாதி, பாரப்பா பத்திகொண்டு ஆதியென்ற பரமகுருதன்னருளா லண்டமதைச்சேரே. 1102

## ஆதியண்டகற்பம்.

அண்டமென்றுலாரறிவார்மூதண்டப்போக்கு அப்பனே பக்குவமா யன்பாய்ப்போற்றி, பிண்டமதின்தோடகற்றிக் கருவைவாங்கி பிசகாமல் சட்டியிற்குள்ளிட்டுமைந்தா, கண்டதொரு அமுரியினுற் கரைத்துக்கொள்ளுகருத்துறவேரவிமுகத்தில்வைத்துப்பாரு, விண்டிடவேரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தால் விரும்பியே முன்போல கரைத்துக்காச்சே. 1103

காச்சப்பா தீட்சைமுப் பத்திரண்டு கைமுறையாய் செய்தபின் கழறக்கேளு, ஆச்சப்பா அமுதமென்றமுலைப்பால்விட்டு அன்பாகக் கரைத்துரவிமுகத்தில்வைப்பாய், பேச்சப்பா முலைப்பாலில் மூன்று தீட்சை பிலமாகச் செய்தபின்பு திருநீறுச்சு, பாச்சப்பா திருநீற்றைக்குப்பிக்குள்ளே பக்குவமாய்தானடைத்து பதனம்பண்ணே.

பண்ணப்பாநாற்பத்துமூன்றுகோணம் பக்குவமாய்தானெழுதி நடுக்கோணத்தில், நண்ணப்பா திருநீற்றின் குப்பிவைத்து நலமான மலரதனு லற்சனைகள்செய்து, கண்ணப்பாவிண்ணோக்கிக்கமலதீபம் கருத்துறவேகண்டு தரிசனத்தைப்போற்றி, உண்ணப்பா திருநீற்றில்பணவிடைதானப்பா உண்டபின்பு குழிபாதமூணிப்பாரே. ()

ஊணிமிகப்பார்க்கையில்ரேசகமேபண்ணு முத்தமனேரேசகத்தால்கும்பகமேசெய்து, பேணியே கும்பகத்தில் மனதுறுதியானல் பிறளாதுவாசிசுழிமுனையில்நிற்குங், காணியாய்நின்றதலங்கைவசமேயானல் காயாதியுறுதியடா நரைதிரைகளில்லை, ஆணியா யென்நாளுந் தேகஞ்செத்தால் ஆண்டுவொருநாழிகையாயமருந்தானே. 1106

தானென்றதிருநீற்றில் தயிலஞ்சேர்த்து தன்மையுடன் பிசைந் துருட்டிபணவிடைதான்கொள்ள, வூனென்றதேகமசை யாதுகல்லா யுத்தமனை யெந்நாளும் பசியுந்தோணு, தேனென்ற கற்பங்காயாதி யாகுஞ் சிந்தைமனதொன்றாகி தினமுங்கொண்டால், கோனென்ற தேகமது தங்கநிறமாகுங் குருவான அமுதரசக்கற்பம்பாரே. 1107

ஆதிபிண்டத்தயிலம்.

பாரப்பாஆதியென்றபிண்டமதுவாங்கிபக்குவமாயதிலிருக்குஞ் சோரையதுநீக்கி, சேரப்பா கல்லுரலிலிட்டு மிகமைந்தா சேர்த்து ம்கத்தானிடித்து பாண்டமதில்வாங்கி, வாரப்பா சுத்தசலம் பானை யரைமட்டும் வாகாக கிண்டியதை அடுப்புதனிலேற்றி, காரப்பா தீமூட்டி பக்குவமாய்க்காச்சு கருகாமல்பதமாகக் காய்ச்சிவரும்பாகே.

பாகுபோல் காய்ச்சிநன்றாய் பதமாம்போதில் பண்பாக கடுகு போல் தயிலம்நிற்கும், வாகுடனே தயிலமதை வடித்துமைந்தா மகத்தான குப்பிதனில்வைத்துப்போற்றி, தாகமுடன் கடுகதுவும் பதனம்பண்ணி தன்மையுட னிதின்விபரஞ் சாற்றக்கேளு, ஆகமுட னீசானம் பூசைசெய்து அன்பாகச் சற்குருவைப் பணிந்துநில்லே.

நில்லப்பா குருபதத்தில் நேர்ந்துகொண்டு நேசமுடன் பூசை பண்ணியுதயந்தன்னில், கொள்ளப்பா கடுகதில் கழஞ்சிகொள்ளு கொண்டபின் மாலையில்கூறக்கேளு, மெள்ளப்பா தயிலங்காசிடை தான்கொள்ளு மேன்மையுள பூரணத்திலறிவாய்நில்லு, தள்ளப்பா ஆறுவகை தள்ளிமைந்தா த்யவாகவோர்பொழுதுபாலனங்கேளே.

கொள்ளப்பா நாம்சொன்ன முறைதப்பாமல் கொண்டதனால் மேனி வச்ரகாயமாகு, மெள்ளப்பா மண்டலம்கொண்டு தீர்ந்தால் மேனியது வாடாது வாலைவயதாகுஞ், செல்லப்பா கெவுனமதாயண் டவரைசுற்றுஞ் செம்மையுட னிமைக்குமுன்னே யிருந்திடமுங்கா ணும், நில்லப்பா சுழிமுனையில் சிங்குவங்கென்று நிச்சயமாய்நின்ற தினால் சித்துவகைகேளே. 1111

கேளப்பா சுழிமுனையில் தீபந்தோற்றுங் கிருபையுடன் தீப வொளிகண்டால்மைந்தா, வாளப்பாவிளக்கதில் நெய்யையூற்றி மைந் தனே திரிபோட்டுமனதையூணி, ஆளப்பா மனக்கண்ணால்திரியைப் பார்க்க அப்பனே திரிதானும்பற்றும்பாரு, கேளப்பா ஒன்றிலே பூரணத்தினன்மை கொண்டதினால்நினைத்தபடி கூடும்பாரே. 1112

பாரப்பாநினைத்தபடி யாடலாங்கேள் பக்குவமாயாதியந்தப்பதி வினாலே, நேரப்பா நின்றபொருள்கண்டதாலே நினைவாகமனதுறுதி கொண்டதாலே, வீரப்பா கொண்டதொருலகிரியாலே விள்ளாதே பூரணத்தின் செயல்தன்னாலே, சாரப்பாமதியமுதங்கொண்டதாலே சகலசித்துங்கைவசமாய்ச் சார்ந்துபோச்சே. 1113

அஷ்டகன்மச்சிலை.

சார்ந்துபார்எட்டுவகையோகத்துக்குஞ்சமாசமா வகையொன்று சொல்லக்கேளு, கூர்ந்துபாருலகமதில் மதனபூண்டு கோடான

கோடியுண்டு ஒருவர்காணூர், தேர்ந்துகொண்டு சற்குருவி னருளைப் போற்றி திரமாகமதனப்பூண்டதனைவாங்கி, நேர்ந்துகொண்டு மைங் காயமதின்மேல்பூசி நினைவாக ரவிமுகத்தில் காயப்போடே. 1114

போட்டவுடனன்றாகக் காய்ந்துதானல் புகழுடனேபத்துமுறை பூசிவாட்டு, நாட்டமுடனதிற்கசிவு கழன்றுபோகும் நன்மையுள்ள பூடதுவுந் துரும்புபோலாங், காட்டாதே யிப்பூவை யுலகத்தோர்க்கு காட்டினுல் குற்றம்வருங் கருவாய்ப்பாரு, தாட்டிகமா யிதற்குபே ரென்னவென்றால் தயவான அஷ்டகன்மச் சிலையுமாச்சே. 1115

ஆமப்பா அஷ்டகன்மச்சிலையைநாட்டி அதிலிருந்து அஷ்டகற்ப முறையைக்கேளு, நாமப்பாவகைதுகையாய்ச் சொல்வேன்கேளு நல மான எட்டுவகை கன்மத்துக்குந், தாமப்பா நன்றாக விரித்துச்சொல் வேன் தவமான புலத்தியனே தயவாய்க்கேளு, காமப்பாமதியசற்றி ரவியிற்சேரு கருவான ரவியறிந்தா லெல்லாஞ்சித்தே. 1116

ஸ்தம்பனம்.

சித்திக்குந் தம்பனமாம் வகையைக்கேளு சிவசிவாதேகசுத்தி பண்ணிக்கொண்டு, முத்திபெற இந்திரன் திசையேநோக்கி மூர்க்க முள ஆசனமாம் புலித்தோல்போட்டு, பத்தியுடனதிலிருந்து நீறுபூசி பதிவான பூரணத்தை மனதினோக்கி, வெற்றிபெறு ரேசகபூரகமும் பண்ணி வேதாந்த கும்பத்தில் மேவிச்சேரே. 1117

சேரப்பாமூலமதில் சேர்ந்துக்கொண்டு சிங்கென்று கமலமதின் மணியைவாங்கி, காரப்பா நமசிவய வென்றுசொல்லி கருத்துறவே நூற்றெட்டுசெபித்தால்மைந்தா, கூரப்பாகண்டதெல்லாந்தம்பனமே யாகுங் கொடிதானமிருகமுடன் அஷ்டநாகம், நேரப்பாசொன்னபடி கேட்குநல்ல நேர்மையுள தம்பனத்தின் நேர்மைதானே. 1118

தானென்றதாம்பிரத் தகடுதன்னில் தயவாக நமசிவயவென்றே மைந்தா, தேனென்றகருப்பூசித் தகடுதன்னை செம்மையுடன் மானி டர்க்குக் கட்டினுக்கால், ஊனென்ற தேகமதில் நோய்களெல்லாம் ஒடுங்கியே தம்பித்து ஓடிப்போகும், மானென்றலோகத்தி லவனைக் கண்டால் மனதடங்கி தம்பித்து வசமாவாரே. 1119

மோகனம்.

வாரப்பா தம்பனத்தைச் சொன்னேன் மைந்தா வரிசையுள்ள மோகனத்தின்வளமைகேளு, தேரப்பாமனதடங்கிதேகசுத்த செம் மையுடன்செய்துகொண்டுநீறுபூசி, காரப்பாதலைத்தோலாசனத்தில் மைந்தாகம்மெனவேஅக்கினியின்திசைநோக, பாரப்பாமனம்பதிய இருந்துக்கொண்டு பக்குவமாய் மிளகுமணிக் கையில்வாங்கே. 1120

வாங்கியே மூலமதில் மனதைவைத்து வரிசையுடன்ரேசகபூரக மும்பண்ணி, தாங்கியேகும்பகத்தில் நின்றுகொண்டு தயவாகச்சிவய நம வென்றுவோது, பாங்குபெற நூற்றெட்டு வோதினுக்கால் பாரி

லுள்ள மானிடர்க ளதிமோகமாவார், பூங்கமலத்திருமாது அகலா தப்பா புண்ணியனே சகலசித்து மோகமாமே. 1121

ஆமப்பா அரியதனால் தகடுசெய்து அப்பனே சிவாயநமவென்று தாக்கே, நாமப்பா கருப்பூசி உலகத்தோர்க்கு நன்மையுடன் கட்டின தால் நாட்டினோர்கள், தாமப்பா மோகனமாய் தண்மையாகுஞ் சதா நந்தியகலாது சாந்தமாவாள், காமப்பா மோகமதாய்க் கன்னியர்கள் வந்தால் கால்பிடித்து மாதாவே யென்றுபோற்றே. 1122

## வசியம்.

போற்றியேமோகனத்தைச் சொன்னேன்மைந்தா புதுமையுள் ளவசியமதுபுகலக்கேளு, தேற்றியே மனதறிவால் தேகசுத்தி செம் மையுடன் செய்துநீறுத் தளமாய்ப்பூசி, வாழ்த்தியே பங்கயாசனத் தைப்போட்டு வடகிழக்குமுகமாக இருந்துக்கொண்டு, சாற்றுவாய் பூரணத்தில் மனதைநன்றாய் சாற்றியே ரேசகபூரகமும்பண்ணே.

பண்ணப்பாகும்பகத்தில்நின்றுகொண்டுபக்குவமாய்ருத்திராட் சங்கையில்வாங்கி, விண்ணப்பா தானேக்கி நயமவசியென்று விரும் பியே நூற்றெட்டு செபித்தால் மைந்தா, நண்ணப்பா வுன்னையெவர் கண்டாலுந்தான் நாடியே வசியமதாய் வணங்கிநிற்பார், எண்ணப்பா வுலகமதில்சீவசெந்து வுண்டான வஸ்துவெல்லாம் வசியமாமே. ()

வசியமாய்க் காரீயந்தகடுசெய்து வளமாகநயமவசி யென்றுமாறி, உசிதமதாய் கருத்தொட்டுத் தடவிநன்றாய் உண்மையுள்ள மாந்தருக் குக்கட்டினுக்கால், பசிதாக மானதுபோ யுனைக்கண்டோர்கள் பணி வார்கள்வசியமதாய்ப் பண்பாய்மைந்தா, நிசிகமுள்ளமிருகதாபரசங் கங்கள் நேர்மையுடன் வசியமதாய் வணங்கும்பாரே. 1125

## மாரணம்.

பாரப்பாவசியமொன்றுநன்றாய்ச்சொன்னேம் பக்குவமாய்மார ணத்தைப் பகரக்கேளு, நேரப்பா தேகசுத்தி நன்றாய்ச்செய்து நினை வாகவுத்தளமாய்நீறுபூசி, சாரப்பா அத்தியாசனத்தைப்போடு கருத் துறவேதென்முகமா யிருந்துமைந்தா, சேரப்பா கும்பகத்தில்மனத் தைநாட்டி செம்மையுடன் ரேசக்பூரகமும்பண்ணே. 1126

பண்ணியே கும்பகத்தால் பணிந்துகொண்டு பக்குவமாய்நாசிம ணிக்கையில்வாங்கி, நண்ணியே சுழிமுனையில் நாட்டமுற்று நசிமயவ நூற்றெட்டுவுருத்தானேத, வுண்ணியேயுனக்குவினைசெய்தோரெல் லாமுத்தமனே மாரணித்து ஒடுங்கிப்போவார், தன்னிமையாய் மார ணந்தானதிகமாகுந் தரணிதனி லுனக்குவினை செய்தால்பாரே. ()

பாரப்பாவெள்ளியினால் தகடுதட்டி பக்குவமாய்நசிமயவஎன்று மாறி, நேரப்பா கருத்தொட்டுத் தகட்டிற்பூசி நெடிதானநோயோர்க் குக்கட்டினுக்கால், மாரப்பா நோய்களெல்லா மாரணித்துப்போகும் வஞ்சகருஞ்சத்துருவும்வகையுள்ளோரும், வேரப்பாஅற்றமரம்போ லேபோவார் மெய்யான மாரணத்தை விரும்பிச்செய்யே. 1128

## உச்சாடனம்.

செய்யப்பாமாரணத்தின்விபரஞ்சொன்னேன் திறமாகவுச்சாடனஞ்சொல்லக்கேளு, மெய்யப்பா தேகசுத்தி நன்றாய்ச்செய்து விரும்பிநீறுத்தளமாய் மெய்யிற்பூசி, கையப்பா மான்றோலி ஞசனத்தைக் கருத்துறவே நிறுதிமுகங் காத்துமைந்தா, பையப்பா மூலமுதல் மனதைஓட்டி பாங்கான ரேசக பூரகமும்பண்ணே. 1129

பண்ணப்பா கும்பகத்திற் பதியநின்று பத்தியுடன் துளசி மணிக் கையில்வாங்கி, விண்ணப்பா தானேக்கி மசிவநயவென்று விரும்பியே நூற்றெட்டு செபித்தால் மைந்தா, கண்ணப்பா நினைத்த தொரு பொருள்சாடிக்கும் நலமில்லா மாந்தரையு மாரணமேசெய்யும், உண்ணப்பா நீறுதொட்டுத் தெரிந்தாயாகில் உறுதியுள்ளவியாதியெல்லா மாரணித்துப்போமே. 1130

போமப்பா வெள்ளீயந் தகடுசெய்து புத்தியுடன் மசிவநய வென்றுமாறி, ஆமப்பா கருத்தொட்டு அழித்திப்பூசி ஆருதநோய் களுக்கு அளித்தாயானல், தாமப்பா னேய்களெல்லாம் உச்சாடிக்குந் தன்மையுடன் கண்டதெல்லாம் உச்சாடிக்கும், நாமப்பா கருவித்தை அதீதவித்தை நாட்டினேம் பன்னிரண்டு நூற்றிற்றனே. 1131

## ஆக்ருஷ்ணம்.

தானப்பா வுச்சாடணத்தைச் சொன்னேமையா, தயவாக ஆக்ருஷ்ணத்தைக்கேளு, பேணப்பா தேகசுத்தி செய்துக்கொண்டு பிலத்தபுத்தி யறிவதினல் நீறுபூசி, தானப்பா மேற்குமுக மிருந்துக் கொண்டு தயவாக தொப்பை யாசனத்தில் மைந்தா, வானப்பா தானேக்குந் தீயைப்போற்றி மனதாக ரேசக பூரகமுஞ்செய்யே. ()

செய்யப்பா கும்பகத்தி லறிவாய்நின்று செயமான சங்குமணி கையில்வாங்கி, பையப்பா நசிமயவ என்றுசொல்லி பதரும நூற்றெட்டுசெபித்தால்மைந்தா, மெய்யப்பாநினைத்தவண்ண மாக்ருஷ்ணமாகுமேலானவித்தையிலேயதிகவித்தை, கையப்பாவுதவுவதுபோல மைந்தா காட்டினே மாக்ருஷ்ணத்தை கருத்தாய்ப்பாரே. 1133

பாரப்பா குடவனிலே தகடுதட்டி பத்தியுடன்நசிமயவ வென்றுமாறி, நேரப்பாகருத்தொட்டுநன்றாய்ப்பூசிநேர்மையுடன்மானிடர்க்கு கட்டினுக்கா, லாரப்பாவறிவார்களாக்ருஷ்ணத்தின்போக்கம்பரத்தை யறிந்தீவர்க ளறிவாரையா, தேரப்பா மனத்தைநன்றாய் தேர்ந்து கொண்டு தேறினபின் அஷ்டகன்மச் செயலைப்பாரே. 1134

## வித்துவேஷணம்.

பாரப்பா ஆக்ருஷ்ணத்தைச் சொன்னேன் பத்தியுடன் வித்துவேஷணத்தைபகரக்கேளு, காரப்பாகால்முகங்கள்சுத்திபண்ணி கபமெனவே திருநீறு தளமாய்பூசி, ஆரப்பா அறிவார்கள் ஆசனியில்

பலகை அப்பனேவடமேற்கு வாய்வைப்பற்றி, தேரப்பாமேல்மூல பதியில்நின்று செம்மையுட னெட்டுமணி கையில்வாங்கே. 1135

வாங்கிநன்றாய்ரேசகபூரகமும்பண்ணிவரிசையுடன்கும்பகத்தில் மனத்தைவைத்து, பாங்குபெறமயவநசியென்றுமாறி பத்தியுடனூற் றெட்டு செபித்தால் மைந்தா, தாங்கியே வித்தெடுத்து பூமியிலூணி தன்மையுட னீர்வார்க்க ஷணத்தில் மைந்தா, ஆங்கதிகொண்டே வளர்ந்து காய்க்குமப்பா ஆக்ருஷணத்தினுட ஆண்மைதானே. 1136

தானென்றகுருத்தோலை நறுக்கிமைந்தா தயவாகமாவநசியென் றுமாறி, ஊனென்றகருத்தொட்டு தடவிமைந்தா வுறுதியுடன்மானி டர்க்குகட்டினுக்கால், வீணென்ற பிர்மையெல்லாந் தீருந்தீரும் வித மான பில்லிவஞ்சனைகள்தீருந், தேனென்றதேகமது வெகுசெம்மை யாகுஞ் சிவசிவா வித்துவேஷணத் திறந்தான்பாரே. 1137

பேதனம்.

பாரப்பாவித்வேஷணத்தைச்சொன்னேன் பண்பானபேதனத் தைபகரக்கேளு, தேரப்பா மனதை நன்றாய் சுத்திபண்ணி சிவசிவா வென்று திறநீறுபூசி, சேரப்பா ஆசனந்தான் தேவதாரஞ் செம்மை யுடன்குபேரனுடதிசையைநோக்கி, காரப்பாகருணையின்மேல்கருத் தைவைத்து கருவான முத்துமணி கையில்வாங்கே. 1138

வாங்கிமனதொன்றாகி நயமவசியென்று வரிசையுடனூற்றெட்டு வளமாயோத, சாங்கமாய் கண்டதெல்லாம் பேதனமேயாகுஞ் சம ரசமாயெடுத்ததெல்லாம் பேதனமேயாகும், பாங்குபெற பேதனத் தின் வகைசெய்தாக்கால் பாரிலுள்ளோருனதுபதம் பணிவாரப்பா, ஆங்கவனே ஆங்கதுகொண் டெட்டுசித்தும் அரகரா மனதடங்கி அறிவாச்செய்யே. 1139

செய்யப்பா யிரும்பினால் தகடுசெய்து தீர்க்கமுடன் நயவசிம என்றுமாறி, மெய்யப்பா கருத்தொட்டு தடவிமைந்தா மேதினியில் மானிடர்க்கு கட்டினுக்கால், பையப்பா நோய்கள் பேதனமாய்போ கும் பார்தனிலே ஒருவர்க்கும் பகரவேண்டா, மையப்பா பூரத்தின் கருவினாலே மார்க்கமுட னெட்டுவகை சித்தும்பாரே. 1140

பாரப்பா அஷ்டகன்மமெட்டுஞ்சொன்னேன் பதிவான தசதீட் சைபெற்றோர்க்காமே, நேரப்பா தசதீட்சைசும்மாஆமோ நேர்மையு டன்மனதுரிமை யானால்மைந்தா, காரப்பா மனதுரிமை வலுவைக் கண்டுகருணையுடன்கடாட்சிப்பார்தசமானதீட்சை, ஆரப்பாஆனாலுந் தசதீட்சைபெற்றோர் அவரிடமா யஷ்டசித்து மாடுந்தானே. 1141

தானென்ற அகம்போக்கித்தான்தானாக்கி தண்மையுடன்குருப தத்தில்சார்ந்துகொண்டு, வூனென்றகாயாதிகற்பங்கொண்டு ஒருமை யுடன்பூரணத்தி லொடுங்கிமைந்தா, தேனென்றமதியமுதங் கொண் டால்மைந்தா செம்மையுடன்சடலமதுவலுத்துப்போச்சு, நானென்ற ஆணவங்களற்றுநல்ல நலமான காலதுவு மசந்துபோச்சே. 1142

போச்சப்பா பூரணத்தைமறந்தால்சித்து பொய்யாகுமெந்தன் மேல் குற்றமில்லை, பாச்சப்பா பூரணந்தான் மதியமுதமாகும் அருளாகும் பொருளாகுமாசானுகும், ஆச்சப்பாவாசிதனக்குயிருமாகும் அருளாகும் பொருளாகுமாசானுகும், பேச்சப்பாதொனித்ததொரு சத்தமாகும் பேசாதசத்தமடா சுத்தசிவமாச்சே. 1143

ஆச்சப்பா சத்திசிவஞ் சத்திசிவமாச்சு அப்பனே சத்திசிவமறிந்துகொண்டு, பாச்சப்பாகாலைசிவமாலைசத்தி பக்குவமாய்நேர்மையுடன் பூசைபண்ண, மூச்சப்பா வோடாதுமுன்பின்னுக முனைகண்டால் கைலாசமுடிவுகாணுங், காச்சப்பா மவுனத்தி லமுதமுண்ணு கற்பூரதீபமனக்கண்ணும்பாரே. 1144

கண்ணுன கண்ணறிந்து கனலைத்தூண்டிக் காலறிந்து யோகமதால் கருத்தாய்நின்ருல், விண்ணுன அமிர்தமது அருவிபாயும் விள்ளாதேமதியமிர்த மனதுமாகும், சொன்னுலுந் தெரியாது மவுனப்போக்கு தொட்டுமிகக் காட்டினதால் தோணுந்தோணும், பொன்னுனகமலமடா பிர்மமாச்சு பொற்கமலமானதொரு அண்டமாமே. ()

அண்டமுடன்பிண்டமதை யார்தான்பார் அரகரா அண்டபிண்டமாதியந்தம், விண்டாலுமாதியந்தமறியப்போமோ விள்ளுகிறேன் புலத்தியனேநன்ருய்க்கேளு, கண்டாலுங்காணுது நாதவிந்து கருவாகச்சொல்லுகிருேங் கால்தலையுமாச்சு, வுண்டான கால்தலையில் மண்விண்ணுச்சு வுறுதியுள்ளமண்விண்ணுஞ் சத்திசிவமாச்சே. 1146

## சத்திசிவம்.

சத்தியென்றசத்திதனையார்தான்காண்பார் தவமானசிவமதனையறியமாட்டார், புத்தியுடன் ரெண்டையுந்தான் சொல்லக்கேளு புதுமையுள்ள சத்திசிவம் ரவிமதியுமாச்சு, பத்தியுள்ள ரவிமதிதான்காரசாரம் பாங்கானகாரமடா ரவியுமாச்சு, வெற்றியுள்ளமதியதுவும்சாரமாச்சு வேதாந்த தத்துவமுமிதுவேயாச்சு. 1147

ஆரப்பாரவிமதியிலாண்மைகேளு அப்பனே குருவினுற்செய்யுமார்க்கம், நீச்சப்பாமதிதனிலே மூதியாய்நின்று நினைவுதடுமாறியவாவியைக்காணுர், பேச்சப்பா ரவிகாணு மாந்தர்தானும் பிறந்திறந்துமாள்வார்கள் பேயைப்போலே, பாச்சப்பா இடைகலையை ரவியிற்சேரு பக்குவமாய்ச்சேர்ந்ததினுற் பாலனுமே. 1148

பாலறிந்து பால்பொசித்துப் பதியில்நின்ருல் பக்குவமாய்த் தமர்வாசற்பூட்டுத்தோணுங், காலறிந்து கால்பிடித்து வாசிபூட்டி கலங்காமல் நின்றதினுல் கால்தான்சென்று, மேலான தமர்வாசற்பூட்டிமைந்தா விசையாக நிற்குமடாவாசிசென்று, சேலான தமர்வாசல் திறந்ததாலே செம்மையுடன் பூரணம்நால்காணலாமே. ()

காணலாம் பரப்பிர்மக்கபாலந்தன்னை கருவான கபாலமடா கயிலாசமாச்சு, பேணலாங் கயிலாசமேரிற்சென்று பிலத்தபுத்தியறிவதனுலமிர்தங்கொண்டு, பூணலாம்பூரணத்தினமிர்தங்கொண்டால் போ

ணைதயென்ன சதாபோதை புகழ்ந்துகாணுந், தோணலாமப்பொய்கை தன்னில்நின்று துலங்காமச் சுனைவக்கவே நிஷ்டைகேளே. 1150

கேளப்பா ஆதியிலே மேருபூசை கெணிதமுடன் செய்ததினால் பொதிகைமுனி யானேன், நாளப்பா ஆண்டொன்றி லகத்தியமானேன் நலமானமேரினுட அமிர்தங்கொண்டேன், காலப்பா விசையறிந்து கயிலைதன்னிற்சென்றே கலங்காமல் காயாதிகற்பங்கொண்டேன், ஆளப்பா அதினாலே கும்பமுனியானேன் அரகராமேரினுட ஆண்மைதானே. 1151

## மேருபூசை.

பாரப்பா மேரினுடபூசைசொல்வேன் பத்தியுடன்புலத்தியனே நன்றாய்க்கேளு, காரப்பாசாணகல சாண்தாகீளங் கருவாகச் சந்தனத்தின்கட்டைவாங்கி, சேரப்பா பலகைநன்றாய்சேர்த்துக்கொண்டு திறமாகக் கால்நாலுங் கடைச்சல்போட்டு, நேரப்பா பலகைமீ மெதுவாய்பண்ணி நேர்மையுள்ள பூசையுளமுறையைக்கேளே. 1152

கேளப்பா தேகசுத்தி பண்ணிக்கொண்டு கிருபையுட னுத்தளமாய்நீறுபூசி, வாளப்பாபலகையின்மேனீறுசாத்தி வங்கென்றுதான் பார்த்து வளமேசெய்து, கேள்ப்பா கரநியாசஞ் செய்துக்கொண்டு செம்மையுடன் வடமாலைச்சிறப்பாய்ச்சாத்தி, கேளப்பாமந்திரத்தை உச்சரித்து கூர்மையுடனருச்சனைக்கு மலர்தான்கொய்யே. 1153

கொய்துமெள்ள அருச்சனைகள் செய்துநீயுங் கூர்மையுடன் மனம்பதிய அறிவில்நின்று, உய்தமுடன் தாம்பூலம் பால்பழங்கள் வைத்து வுண்மையுடன் தேங்காய்தா னுடைத்துபரப்பி, சைதன்யமாகவேயுடைத்துப்பார்த்து தண்மையுடன் ரேசகபூரகமும்பண்ணி, தொய்தமுள்ள கும்பகத்தில் பராபரத்தைநோக்கி சுத்தசிவயோக பிராணாயாமம்பண்ணே. 1154

## பிரம்னிஷ்டை.

பண்ணியபின் பிர்மனிஷ்டைதன்னைக்கேளு பதிவாகச்செம்மையுடனிருந்துகொண்டு, புண்ணியனே விந்துமுத்திரையேசெய்து பூரணமாய் ரேசகபூரகமும்பண்ணி, சண்ணிகமாய் கும்பகத்தில் சார்ந்துக்கொண்டு சமரசமாய் மாதாவைப் பூசைபண்ணு, நண்ணியேபிராணயம்பண்ணிக்கொண்டு நலமான திருநீற்றைப்பூசுவாயே. 1155

பூசியேதிருநீற்றின் பணவிடைதான்கொள்ள புதுமையுள்ள மாது அகலாதுமைந்தா, நேசமுடன் ஆண்டொன்றிற் பூசைபண்ணி நேர்மையுடன்கொண்டதினால் தேகஞ்சித்தி, வாசமுளமலரொளியில் மனதைவைத்து மனதாகப்பூரணத்தை மைந்தாகேளு, பாசமுடன் பதிந்துபூரணத்தைநோக்க பரப்பிர்மமானதொரு தேகமாச்சே. ()

## விஷ்ணுனிஷ்டை.

ஆச்சப்பாபிர்மனிஷ்டைசொன்னேன்மைந்தா அன்பாகவிஷ்ணுவுடனிஷ்டைகேளு, பேச்சப்பா சுகாசநமா யிருந்துகொண்டு பேணி

யேயிடதுகால் வலதுகால்மேல், பாச்சப்பா விந்துமுத்திரையைச் செய்து பதிவாகவும்மெனவே தியானம்பண்ணி, மூச்சப்பா முனை யடங்கப் பிராணயஞ்செய்து முழுநீறுத்தளமாக மெய்யிற்பூசே. ()

மெய்நிறைய விபூதியுத்தளமாய்ப்பூசி மேருவாஞ் சரக்கத்தை நிதானம்பண்ணி, கைநிறையமலரெடுத்துக் கருணையாகக் கருத்துறவேசிவயவசியென்றுசாற்றி, தொய்தமுடன் வடமாலைப்பால்பழங்கள்வைத்து சுகமாகத்தேங்காய்த் தாம்பூலம்வைத்து, செய்பாகந் தவிராமல் தூபமோடுதீபம் செம்மையுடன் தான்படைத்த தீற்கங் கேளே. 1158

தீற்கமேசுழிமுனையில் சிங்கென்றோட்டி திறமாக வாசியதை மூலத்தூணு, மாற்கமுடன் ரேசகபூரகமும்பண்ணி மருவியே கும்பகத்தில் மனதாய்நின்று, சேர்க்கையுடபிராணயஞ் செம்மையாக திரமாகச் செய்தபின்பு சிவசிவாவென்று, ஏற்கையுடன் சக்கரவிபூதிபூசி யின்பமுடன் பணவிடையுட்கொண்டுகேளே. 1159

கேளப்பா இப்படியேபூசைபண்ணி கிருபையுடன் குருமொழியைகூர்ந்துநில்லு, ஆளப்பா பூரணந்தான்சொன்னபடிகேட்கு மம்பரத்தின்தரிசனமு மழகாய்க்காணு, நீளப்பா மனதுகந்து அறிவிற் சேர்ந்தால் நினைத்தபடி யேயுனக்கு நினைவாய்க்காணுஞ், சேலப்பா வாசியைநீ வாசிவாவென்று சிந்தைமனதொன்றாக அறிவிற்கூடே.

கூடிநின்றுவாசியைநீ குறித்துப்பார்த்து கும்மெனவே அம்பரத்தின்குறிகண்டோட்டி, நாடியேநின்றதினால் சிவயோகமாச்சு நலமான தசநாதங்கேட்கலாச்சு, தேடிநின்றவாசியடாபூரணமேயாகுஞ் சிவசிவாபூரணமே தெய்வந்தெய்வம், ஆடிநின்று அலைந்தாலும் பூரணத்தைக்காணாய் அகாரமுடன் உகாரம்ரெண்டுமழுத்திப்பாரே. ()

## ருத்திரநிஷ்டை.

பாரப்பா மாலினுட நிஷ்டைசொன்னேன் பரிவாக ருத்திரநிஷ்டைபகரக்கேளு, காரப்பாகால்முகங்கள் சுத்திபண்ணி கருணையுடன் விபூதியுத்தளமாய்ப்பூசி, நேரப்பா நேர்மையுட னிருந்துக்கொண்டு நினைவாக வலக்காலை இடக்கால்மேலுந், தேரப்பா இடக்காலை வலக்கால்மேலுஞ் செம்மையுட னிதானித்துப் பிராணயம்பண்ணே. ()

பண்ணப்பா பிராணயம் பண்ணிக்கொண்டு பலகையின்மேல் மேருவைநீ பதிவாய்ச்செய்து, வுன்னியே மலரெடுத்து வைத்துக் கொண்டு ஓங்காரசத்திசிவமென்றுசாத்தி, புண்ணியனே வடமாலைப் பால் பழங்கள்வைத்துப் புனிதமுடன்தேங்காய் தாம்பூலஞ்சாத்தி, தன்னிமையாய் தூபதீபங்கள்காட்டி சமரசமாய் ரேசகபூரகமும் பண்ணே. 1163

பண்ணுவது கும்பகத்திற்பதிவாய்நின்று பரமகுருமாதாவைப் பணிந்துகொண்டு, வுண்ணுவாய் ஓம்கிலி சிவாயவென்று வுத்தமனே தோத்திரத்தை நன்றாய்ச்செய்து, கண்ணுமேற்புருவமதில்கனலைத் தாண்டிக் கற்பூரதீபமதைக் கருத்தாய்ச்சேவி,மண்ணுலகில்தன்னில் வெகுகீர்த்தியாகி வளருமடா அஷ்டைசுவ பாக்கியந்தானே. 1164

தானென்ற சக்கரத்தினீறுபூசி தயவாகப் பணவிடைதானுட் கொண்டாக்கால், வானென்றருத்திரியாள் கேட்டவரமெல்லாம் வரிசையுடன்தானீவாள் மைந்தாமைந்தா, தேனென்ற தேகமது எடுத்தால்மைந்தா சிவசத்திபூசையைநீசெய்யவேணும், ஊனென்றதேகத்துக்குறுதியென்ன வுத்தமனே சத்திசிவபூசைதானே. 1165

சத்திசிவபூசையென்றா லார்தான்காண்பார் தயவான மேருவல்லோசத்திசிவமாச்சு, முத்திகொண்ட சத்திசிவ மென்னவென்றால் மூர்க்கமுள்ள நாற்பத்திமுக்கோணமென்று, பத்திகொண்டசிதம்பர சக்கரந்தானென்று பார்மகனேயிதினுடைய பரிசுகேளு, புத்தியுட நாற்பத்துமூன்றுக்குந்தான் பூரணமாநின்ற சிதம்பரமதாச்சே. ()

ஆச்சப்பா சத்துக்கு சிவன்தான்கண்ணு அன்பான சிவத்துக் காதார்ங்கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை சத்தியுடனேசம்பிலமான நெசமென்னவென்றால் மைந்தா, மூச்சப்பா வொடுங்கிநின்ற நாதநாதம் மூர்க்கமுள்ள நாதமுக்கோணமப்பா, பாச்சப்பாமுக்கோணந்தந்நிலேதான் பதமான சிதம்பரமாம் விந்தையாச்சே. 1167

பாச்சப்பா விந்துவுடனாதஞ்சேரப் பதிவானபரத்துக்கு வுயிருமாச்சு, நீச்சப்பாவுயிரறிந்து வுயிரிற்சேர்ந்தால் நிசமான வாலையது நிர்த்தஞ்செய்வாள், ஆச்சப்பா வாலையவள் நிர்த்தஞ்செய்தால் அப்பனேவாசியது அகலாதையா, பேச்சப்பா தொனித்ததொருவாசி நின்றால் பிசகாதுகாயசித்தி அனைவோருக்குமாமே. 1168

மகேசுரநிஷ்டை.

ஆமப்பா ருத்திரநிஷ்டை சொன்னேன்மைந்தா அரகராமயேச்சுரத்திநிட்டைகேளு, தாமப்பா யில்லறத்தை சுத்திபண்ணி தம்பனத்தால் திருநீறு தளமாய்ப்பூசி, நாமப்பா சொல்லுகிறோம் பிராணாயத்தை நழுவாமல் மன்துரிமை யாகச்செய்து, சேமப்பா செப்பென்ற பலகைதன்னில் செம்மையுடன் திருநீற்றைப் பரத்திற்கேளே. 1169

கேளப்பா மேருசக்கரத்தைநன்றா கெணிதமுடனிதானித்துக் கிருபைகூர்ந்து, ஆளப்பாமலர்களினா லர்ச்சனைகள்செய்து அன்பாக வடமாலை அனம்படைத்து, வாளப்பா பால்பழந் தாம்பூலம்வைத்து வரிசையாய்த் தேங்காயையுடைத்துவைத்து, நீளப்பா தூபமுடன் தீபங்காட்டி நிச்சயமாய் தோத்திரத்தை நினைவாய்செய்யே. 1170

செய்யப்பா செம்மையுடனிருந்துகொண்டு திறமாக வலதுகாலு சரத்தூக்கி, பையபபா யிடதுமுழங்கையில்வைத்து பண்பாகரேசக பூரகமும்பண்ணி, மெய்யப்பா கும்பகத்தில் அங்கென்றோட்டி மேலானதீபமதைநோக்கிமைந்தா, வையப்பா வாசியைநீ தீபந்தன்னில் வைத்ததினாலதினுடைய மகிமைகேளே. 1171

மகிமையென்ன மயேஸ்பரியாள் நிர்த்தஞ்செய்வாள் மனதுகந்து கேட்டதெல்லாம் வளமாயீவாள், உகிமையில்லாப்பூரணத்தை யூட்டிவைப்பாள் உண்மையுடன் தன்மையாயுதவிசெய்வாள், அகம்வ

ளரும்பொருள்வளருமாயிபூசை அன்புடனேசெய்தபின்புஜையாகேளு, சுகம்வளருஞ் சக்கரத்தின் விபூதிதன்னை சுத்தமுடன் தானெடுத்து வைத்துப்போற்றே. 1172

போற்றிநன்றாய்மெய்க்கனிந்துவுட்கொண்டாக்கால்பூலோகமன்னரெல்லாம்வசியமாவார், பார்த்திபனேசகலசித்துங்கைக்குள்ளாகும் பரமானகயிலாசதேகமாகும், சாற்றியதோர்சகலகலைக்ஞானந்தோற்றுந் தயவாக மதியமிர்தங் கசிந்துகாணும், ஆத்தியே மனந்தேற்றி அருட்பாலீவாள் அரகரா மேரினுட ஆண்மைதானே. 1173

## சதாசிவநிஷ்டை.

தானென்றமயேசுரத்தினிஷ்டைசொன்னேன்சதாசிவத்தினிஷ்டைதனைசாற்றக்கேளு, ஊனென்றதேகமதைசுத்திபண்ணி உத்தளமாய்நீறணிந்து வுண்மைபோற்றி, நானென்ற அகம்போக்கிநீதானென்றுநன்மையுடன்ஒட்டியாணம்பந்தம்பண்ணி, கோனென்றகுருபதத்தில் மனதைவைத்து கூர்மையுடன் பிராணயங் குணமாய்ச்செய்யே.

குணமாகச்செய்துபின்புபலகைமீதில் கும்மெனவேநீரெடுத்து குறித்துமைந்தா, மனதாகமேருவைநீநிதானித்தப்பாவரிசையுடனாசனத்தின் மேலேவைத்து, தானதாகமலரெடுத் தர்ச்சனையேசெய்து தன்மையுடன்கும்பமொன்று தயவாய்வைத்து, கனமானகும்பத்துக்காடைசாத்தி கருத்துறவே தேங்காய்வைத் தர்ச்சனைநீ செய்யே. ()

செய்யப்பா அர்ச்சனைகள் செய்தபின்பு சிறப்பாகவடமாலை நன்றாய்ச்சாத்தி, வையப்பாரசவற்கங்கனிவற்கங்கள் வளமானபரமானந் தாம்பூலங்கள், மெய்யப்பா தேங்காய்க ளுடைத்துவைத்து விரும்பியே தீபமொடு தூபங்காட்டி, கையப்பா தான்கூப்பி தோத்திரமே செய்து கண்மூக்கு நெற்றியிலே சதாசிவத்தை நோக்கே. 1176

நோக்கியேவாசிதனை அம்மென்றேற்றி நுண்மையுடன்ரேசகபூரகமும்பண்ணி, தாக்கியே கும்பகத்தில் சதகமென்று தன்மையுடன் தானிறுத்தி பூரணத்தைநோக்கி, வாக்குமனதொன்றாகவாசமலர்தூவிமகத்தானதீபவொளி யதனைக்கண்டால், நாக்குநுனிநடுமூக்கு நாசிதனில்நின்றால் நலமான மனோன்மணியி னாட்டமதைக்காணே. 1177

நாட்டமதைக்கண்டவுடன்தாயேயென்று நன்மையுடனொருமனதாய்நயந்தாயாகில், கேட்டவரந்தானீவாள்கிலேசமில்லைகேசரத்தின் கேசரியாள் கிருபையாகும், வாட்டமிலா மனோன்மணிதா னருட்பாலீவாள் வரிசையுடன் கொண்டிடவே சித்தியாகுந், தேட்டமுடசக்கரத்தினீறுதன்னை செம்மையுடன் தானிணைந் துட்கொள்வாயே. ()

வாயாரமந்திரத்தைவழுத்தவேணும் மனந்தேர்ந்து பூசையிலே நினைக்கவேணும், நேயமுடன் செபதபங்கள் செய்யவேணும் நிலமையுள்ளதலமதனைக் காணவேணுந், தாயகமாய்ப் பூரணத்தைச் சாதித்தேதான் சதாநித்தம் நந்தியிடஞ் சாரவேணுங், காயறுத்துக் கனிபுசித்து நிலைக்கவேணுங் கற்பமதை யுண்டுநிற்றங் காணுகாணே. ()

காணுகிறகண்ணறிந்துகாணுகாணு கருவானகண்ணதுதான்மயி னக்கண்ணுச்சு, ஊணுகிற கண்ணறிந்து வூணுவூணு வுறுதியுள்ள வாசியினுலூணிப்பாரு, தோணுகிற பொருளேது சுடரொளிதான் மைந்தா சுடரானவொளியதுதான் பரமவொளியாகும், பேணுகிற வொளியதுஐயாஐயா பிலமானகற்பூர வொளியைப்பாரே. 1180

ஒளியான பேரொளிதா ஞதியந்தம் உத்தமனே அதினுடைய வுண்மைகேளு, அழியாத மோட்சமடா அந்தவீடு அதுகடந்தால் மேலேயொரு அரூபவீடு, நெளியாத அரூபவீடதனிலேதான் நின் ருடுங்கற்பூரத் தீபந்தானும், மொழியாத தீபமதி னருகிலேதான் மோனமுள்ள அமுதரச மிருக்கும்பாரே. 1181

மூலாதாரம்.

பாரப்பா பதியறிந்து அமுர்தங்கொண்டால் பசியாது காயமது கற்றாணுகும், நேரப்பா வாசியது நிர்த்தஞ்செய்யும் நிச்சயமாய்ப் பூரணத்தை நினைவாய்க்கொண்டால், ஆரப்பா வுனக்கீடு ஐயாஐயா அப்பனே ஆதாரமூலபீடங், காரப்பா மூலமதில் கணேசன்பாதங் கருணையுடன் ஓமென்று கசிந்துபோற்றே. 1182

போற்றியேமூலமதில் வாசிபூட்டி புதுமையுடன் ஓமென்றுசெ பித்தாயாகில், தேற்றியே கேட்டதெல்லாங் கணபதி வல்லபையுஞ் சிறப்பாக வுன்னிடத்தில் அகலாநின்று, வாழ்த்தியே கேட்டதெலா மீவார்பாருவரிசையுடனவர்கள்பதம்போற்றினக்கால், பார்த்திபனே சகலசவு பாக்கியமுண்டாம் பார்தனிலே பிர்மரிஷி யாவாய்பாரே.

சுவாதிஷ்டானம்.

பார்க்கநல்ல ஆதாரமூலஞ்சொன்னேன் பாலகனே சுவாதிஷ்டா னப்பரிசுசொல்வேன், ஏர்க்கையுடனங்கென்றுவாசிகொண்டுஇருத்தி மிகவூதயிலே பிர்மதேவர், மார்க்கமுடனுனதிடத்தில் நிர்த்தஞ்செய் வார்மைந்தனே அவர்பதத்தைப்பூசைபண்ண, சேர்க்கையுடன்கேட் டவர மீவாரையா செம்மையுடன் மனம்பதிந்து பூசைபண்ணே. ()

மணிபூரகம்.

பண்ணப்பா பூரகத்தின் வளமை சொன்னேன் பதிவாகயங் கென்றுவாசியூட்டு, விண்ணப்பாதானேக்கியிருந்தால்மைந்தாவிஷ்ணு வுடன்லட்சுமியும் விரும்பியேதான், நண்ணப்பா வுனதுவசமாவார் பாருநயந்துமிகக்கேட்டதெல்லாமீவாரீவார், பொன்னப்பாவுலகமதில் சம்பத்தோடு புகழாக வாழ்ந்திடுவாய் மைந்தாகேளே. 1185

அனுகதம்.

கேளப்பா அனுகதத்தின் கிருபைதன்னை கிருபையுடன் சிங் கென்றுவாசிபூட்டி, ஆளப்பா சுழிமுனையை யழுத்திப்பார்க்க அரகரா ருத்திருமருட்பாலீவார், வாளப்பாகேட்டதெல்லாம்வரிசையாகவரி சையுடன் தான்கொடுப்பார் மைந்தாமைந்தா, நாளப்பா நாளுக்கு நாளேமைந்தா நயந்துமிக வளருமடா பாக்யந்தானே. 1186

விசுத்தி.

தானென்றவிசுத்தியுட நேர்மைகேளு தயவாகவங்கென்று வாசி பூட்டி, தேனென்ற குருபதத்தில் திறமாய்நின்றால் சிவசிவாமயேஸ் பரனுங்கருணைகூர்ந்து, வூனென்றமதியமுர்தமீவார்பாரு வுகந்துமிகக் கேட்டதெல்லாம் ஒருமையாகக், கோனென்ற குருவருளா லீந்து மைந்தா குவலயத்தில் ராஜரிஷி யாவாய்பாரே. 1188

ஆக்கினை.

பாரப்பாசதாசிவத்தின்பெருமைகேளு பண்பானசயங்கென்று வாசிபூட்டி, நேரப்பாபூரணத்தை நோக்கிநின்றால் நேர்மையுள்ளசதா சிவனும் நிர்த்தஞ்செய்வார், காரப்பா அவர்பதத்தைப் பூசைபண்ண கருணையிலேமதியமுர்தங் காட்சிப்பார்கள், ஆரப்பாவுனக்கீடுசொல் லப்போறேன் அப்பனே கெவுனதி சித்துமாமே. 1189

மதிநேர்மை.

சித்தானமதியினுட நேர்மைகேளு திறமாக அம்மென்று வாசி பூட்டி, முத்தான பதிநோக்கி நின்றால்மைந்தா மூதண்ட கோடிமதி காந்திகாணும், வற்றாதமதியமுர்தமருவிபாயு மகத்தான அமுர்மதை மகிழ்ந்துகொண்டால், வித்தானதேகமதுக் கழிவேயில்லை வேதாந்த குருவெனவே விளங்குவாயே. 1190

ரவிநேர்மை.

விளங்கவேரவியினுட காந்திசொல்வேன் வேகமுடன் உம்மென வேவிரும்பிச்சொல்லு, கலங்காமல்ரவிகோடிகாந்திகாணுங்கண்மூக்கு மத்தியிலே காந்திகாணும், உளங்கனிய பூரணத்தைத் தொழுது போற்றி உறுதியுடன்நின்றதினால் மைந்தாகேளு, துலங்குமடாவுன் தேக மதிபோல்மைந்தா தூண்டாத மணிவிளக்கின் சோதிபாரே.

அக்கினி நேர்மை.

ஆமப்பா பகரறியா மோட்சவீடு அருளான அருள்பெருகு மாதிவீடு, காமப்பால் கானற்பால் சொலிக்கும்வீடு கற்பூர தீபமது காணும்வீடு, நாமப்பா மதியகத்தின் மாலின்வீடு நல்வினையும் தீவினையும் நாடும்வீடு, சோமப்பால் சொலிக்கும் பூரணத்தின்வீடு சொல் லாத சூட்சமடா மவுனவீடே. 1192

மவுனமென்றவீடறிந்து மதியைத்தள்ளி மகத்தான ரவிபெருக ஒளியில்நின்றால், கெவுனமென்ற கெவுனமது கைக்குள்ளாகும் கேள் மகனே பூரணமும் உன்வசமேயாகும், நவிலவொண்ணாப் பூரணத்தை நாடினக்கால் நரசென்மமில்லையடா நாயன்நாயன், பலமூலமான குரு பாதம்போற்றி பக்தியுட னுயிரத்தெட் டிதழைப்போற்றே. 1193

போற்றுவது என்னவென்றால் மைந்தாகேளு பூரணமாமவுன மதைப் போற்றிக்கொண்டு, தேற்றுவது மனந்தேறி பூரணத்தைக் கொண்டு செம்மையுடன் மனந்தேற்றிச் செம்மையாகி, காத்துமனக் கருணையிலே கருத்தாய்ப்பூட்டிக் கருத்தாகப் பனிரெண்டு நூரை

மைந்தா, பார்த்துமனம் பதியவொளி மவுனமாகப் பத்தியுடன் பார்த்ததினால் பலிக்குஞ்சித்தே. 1194

நூலுளடக்கம்.

சித்தான சித்தெல்லா மிதிலே சொன்னேன் திறமான கருவெல்லா மிதிலே சொன்னேன், முத்தான இந்திர மயேந்திரசாலம் மூர்க்கமுள்ள ஜாலமெல்லா மிதிலேசொன்னேன், பத்தான முப்பூவிலனந்தஞ் சொன்னேன் பாலகனே சவுக்காரம் வெகுவாய்ச் சொன்னேன், விஸ்தாரமானமைப் போக்குஞ் சொன்னேன் வினயமதாய் மோடியைநான் விளம்பினேனே. 1195

விளம்பினேன் செந்தூரம் நன்றாய்ச் சொன்னேன் விள்ளாத பற்பமெல்லாம் விளங்கச் சொன்னேன், தளம்பெறவே மேருடைய விபரஞ்சொன்னேன் தப்பாமல் செயநீரில் தன்மைச் சொன்னேன், உளங்கனிய கற்பமது விரித்துச் சொன்னேன் உண்மையுடன் வினையர்ட மோடிசொன்னேன், களங்கமற அஞ்சனமு மர்த்தஞ்சொன்னேன் காயாதி கற்பமதைக் கருதிச் சொன்னேன். 1196

சொன்னேன் நிஷ்டைமுதல் சமாதிகற்பஞ் சுருக்கான மந்திரமு மஷ்டகர்மம், எண்ணவொண்ணா வினோதவகை நன்றாய்ச் சொன்னேன் இயல்பாக நாம்சொன்ன முறைகட்கெல்லா, முன்னமே சொன்னதொரு சூத்திரந்தான் முக்காலு நூற்றிருப தையும்பாரு, நன்னயமாய்ப் பொருள்களெல்லாம் வெளியாய்த்தோணும் நலமான சூத்திரத்தை வெளியிடாதே. 1197

வெளியாகச் சூத்திரத்தை வெளிவிடாதே வேதாந்த புத்தியினால் நூலைக்காரு, மொழியாக முன்சொன்ன அறுபதிலேதான் முக்கியமுள்ள கருக்களெல்லா மொழிந்து வைத்தேன், வழியாக சூத்திரமு மறுவகையும் பார்த்தால் வகைதோணு மாயிரத் திருநூறுக்குந், தெளிவாக ரெண்டையுநீ யடக்கம்பண்ணி தேசத்தோர் கேட்டாக்கா லில்லையென்னே. 1198

இல்லையென்று ஆணையிட்டு சொல்லிப்போடு என்மகனே யென்மேலேஆணை ஆணை, புல்லரென்னபுலையரிடம்நூல்காட்டாதேபூரணத்தைப்பற்றிமன தறிவில்நின்று, கல்லென்ற குகைதனிலே யிருந்துக் கொண்டுகருவானகருக்களெல்லாமெடுத்துஆடு, தொல்லைவரும்வெளியரங்கம்பண்ணினாக்கால் சுகமான மனதடங்கி யறிவிற்சேரே. 1199

அறிவாக மனதடங்கி மவுனமாக அப்பனே நூலெடுத்துப் பாருபாரு, குறியான குருபதத்தில் குணமாய்நில்லு குணமில்லா தங்களிடம் கூடவேண்டாம், பரியான தங்கமடா பரப்பிர்மமாச்சு பாலகனே தங்கமென்றால் பூரணமேதங்கம், நெறியான பூரணத்தைத் தினமுநோக்கி நேரான பராபரத்தின் சார்வாய்முற்றே. 1200

**சகலகலைக்ஞானமென்றுவழங்குற**

அமுதகலைக்ஞானம்-முற்றிற்று.

கடவுள் துணை.

# பொருள் அட்டவணை.


| பொருள். | பக்கம். | பொருள். | பக்கம். |
|---|---|---|---|
| அ | | ஆ | |
| அகஸ்தியர்குழம்பு | 129 | ஆக்ருஷ்ணம் | 161 |
| அகஸ்தியர்தன்வரலாற்றுரை | 151 | ஆகாசஜெயநீருப்பு | 15 |
| அகஸ்தியர் புலத்தியருக்கு தமதனுபவமுறை | 31 | ஆக்கினை | 169 |
| | | ஆதியுப்பு | 106 |
| அக்கினிஸ்தம்பனசித்து | 83 | ஆதியண்டகற்பம் | 157 |
| அக்கினிநேர்மை | 169 | ஆதிபிண்டத்தயிலம் | 158 |
| அங்கிசசித்து | 64 | ஆறுதாரம் | 42 |
| அசுரகுலச்சித்து | 97 | ஆறுதாரச்சாபநிவர்த்தி | 56 |
| அசுவதியின்சித்து | 79 | ஆனைக்கல்சத்துமெழுகு | 19 |
| அஞ்சனம் | 56 | இ | |
| அடக்குமதிச்சித்து | 87 | இக்கோலசித்து | 85 |
| அஷ்டகன்மச்சீலை | 158 | இதமகிதச்சித்து | 63 |
| அணுமாதிசித்து | 69 | இரவிமண்டலம் | 9 |
| அண்டமெழுகு | 153 | ஈ | |
| அதிமோகச்சித்து | 82 | ஈசுரகுலச்சித்து | 96 |
| அபக்குவர்களிவரெனல் | 19 | உ | |
| அபக்குவர்தன்மை | 112 | உச்சாடனம் | 161 |
| அப்பிரகப்பொடி | 121 | உத்திகருச்சித்து | 80 |
| அப்பிரகச்சித்து | 138 | உப்புமெழுகு | 49 |
| அமிர்தசஞ்சீவி | 48 | உருமறைப்பு | 80 |
| அமிர்தரசகற்பம் | 149 | ஏ | |
| அமிர்தரசமெழுகு | 156 | ஏமரசக்களங்கு | 52 |
| அயத்தின்ஈயம் | 135 | ஏழிஞ்சித்தயிலம் | 156 |
| அரவின்சித்து | 85 | ஐ | |
| அரிதாரக்கட்டு | 22 | ஐங்கோலத்தயிலம் | 155 |
| அரிதாரமை | 57 | ஔ | |
| அரிதாரபஸ்பம் | 117 | ஔஷதமுடிக்குமாதங்கள் | 132 |
| அருணசித்து | 71 | ஔஷதபரிட்சை | 133 |
| அறுவகைச்சரக்குமையா | 58 | க | |
| அறிவுகூறல் | 121 | கடுக்காய்கற்பம் | 102 |
| அறுபத்துநாலுசித்து | 61 | கருவங்கச்சுன்னம் | 13 |
| அனுகதம் | 168 | கருநெல்லிக்கற்பம் | 29 |
| அன்னபேதிமை | 57 | கருவங்கச்செந்தூரம் | 112 |
| அன்புநிலைச்சித்து | 74 | கர்ப்பூரக்கட்டு | 12 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| கர்ப்பூரச்சுன்னம் | 13 |
| கலிக்கம் | 144 |
| கல்லுப்புக்கட்டு | 30 |
| கலங்குசெந்தூரம் | 53 |
| கள்ளின்தோஷம் | 119 |
| கற்பத்துக்குப்பத்தியம் | 115 |
| கா | |
| காந்திக்கருச்சுன்னம் | 51 |
| காந்தச்சத்துச்செந்தூரம் | 136 |
| காப்பு | 3 |
| காய்வகை | 116 |
| காயாதிகற்பம்வல்லாரை | 102 |
| காயாதிகற்பமுண்ணும்பக் | 145 |
| காரீயக்கட்டு | 45 |
| காரீயபற்பம் | 46 |
| காரூபச்சித்து | 74 |
| காலவளவுகூறல் | 8 |
| கு | |
| குஷ்டத்துக்குத்தயிலம் | 128 |
| குருமுறை | 90 |
| குன்மத்துக்குலேகியம் | 125 |
| கெ | |
| கெஜகரணம் | 92 |
| கெந்தகச்சுன்னம் | 13 |
| கெந்தகமெழுகு | 18 |
| கெந்திபாஷாணம் | 97 |
| கெந்தகபஸ்பம் | 118 |
| கெவுரிரசம் | 98 |
| கெற்பவியாதிபோக | 127 |
| கெற்பவாயுவுக்குஉப்பு | 127 |
| கெற்பமுண்டாகஎண்ணெ | 127 |
| கொ | |
| கொள்ளும்பொருள் | 15 |
| கோ | |
| கோகரணம் | 61 |
| ச | |
| சடாட்சரமகிமை | 8 |
| சதாசிவஉப்பின்மெழுகு | 50 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| சதாசிவநிஷ்டை | 167 |
| சத்துருமாரணம் | 92 |
| சத்துருவசியம் | 114 |
| சத்துருமாரணம் | 114 |
| சத்திசிவபூசை | 146 |
| சத்திசிவம் | 163 |
| சமாதியிடம் | 105 |
| சருவகுலச்சித்து | 73 |
| சலஸ்தம்பனசித்து | 82 |
| சலபேதிசித்து | 78 |
| சலாசத்துபஸ்பம் | 137 |
| சவுக்காரக்கட்டு | 11 |
| சவுக்காரப்போக்கு | 26 |
| சவுக்காரமிருக்குமிடம் | 27 |
| வேறு-சவுக்காரக்கட்டு | 27 |
| வேறு-சவுக்காரக்கட்டு | 28 |
| சவுக்காரகற்பம் | 29 |
| சவுக்காரவழலை | 35 |
| சவ்வீரவைப்பு | 99 |
| சா | |
| சாதிலிங்கக்கட்டு | 45 |
| சாதிலிங்கக்களங்கு | 45 |
| சாதிலிங்கக்கட்டு | 118 |
| சாத்துவிதச்சித்து | 78 |
| சாரவைப்பு | 95 |
| சாராயதோஷம் | 119 |
| சாலசித்து | 82 |
| சி | |
| சிங்கமுகச்சித்து | 79 |
| சிங்கிமுறை | 101 |
| சிங்கிமெழுகு | 102 |
| சிதம்பரச்சக்கிரமகிமை | 6 |
| சித்தர் அகஸ்தியரைக்கண்டுவசனித்தல். | |
| சித்தர் குலமும் அவர்கள் பாடிய நூல்களும் | 33 |
| சித்திரசித்து | 70 |
| சிவநிசிச்சித்து | 71 |
| சித்துமிகச்சித்து | 80 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| சிவவேடம் | 134 |
| சீ | |
| சீனமாதிமுப்பூச்சுன்னம் | 23 |
| சீனவைப்பு | 94 |
| சு | |
| சுக்குலசித்து | 94 |
| சுரத்துக்குத்தயிலம் | 222 |
| சுவாதிஷ்டானம் | 168 |
| சூ | |
| சூதரிஷிகற்பம் | 40 |
| செ | |
| செந்தூரவகை | 109 |
| செந்தூரமுறைகாந்தம் | 135 |
| செந்தூரத்திற்கனுபானம் | 136 |
| செம்புமை | 58 |
| செயநீர் | 14 |
| செயரூபச்சித்து | 76 |
| சொரிசிரங்குத்தயிலம் | 128 |
| ஞா | |
| ஞானமார்க்கம் | 88 |
| த | |
| தத்துவசாபநிவர்த்தி | 51 |
| தள்ளும்பொருள் | 15 |
| தா | |
| தாம்பிரத்தின்சித்து | 78 |
| தாம்பிரபஸ்பம் | 117 |
| தாம்பிரச்செந்தூரம் | 143 |
| தாரக்கட்டு | 31 |
| தாளகமெழுகு | 18 |
| தாளகமெழுகு | 39 |
| தாளகக்கட்டு | 112 |
| தாளகசத்து | 140 |
| தானியசித்து | 68 |
| தி | |
| திரிகடுகுலேகியம் | 122 |
| திரிகடுகுகஷாயம் | 122 |
| தீ | |
| தீயெரியுஞ்சித்து | 86 |
| தீயழியுஞ்சித்து | 87 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| து | |
| துஷ்டரைத்தண்டித்தல் | 120 |
| தும்பிவனிச்சித்து | 77 |
| துருசுக்கட்டு | 12 |
| துருசுசுன்னம் | 21 |
| துருசுமுப்பூச்சுன்னம் | 24 |
| துருசுவைப்பு | 95 |
| துருசுசெந்தூரம் | 117 |
| தொ | |
| தொட்டிபாஷாணவைப்பு | 100 |
| தொழில்முறை | 133 |
| ந | |
| நடுவணையமுது | 111 |
| நந்தியுப்பு | 41 |
| நரிபரியாஞ்சித்து | 79 |
| நவக்கிரகசாபநிவர்த்தி | 57 |
| நவநீதவெண்ணை | 152 |
| நவாச்சாரக்கட்டு | 36 |
| நவாச்சாரபேதி | 129 |
| நணையாதசித்து | 83 |
| நா | |
| நாகக்கட்டு | 37 |
| நாகரசக்கட்டு | 22 |
| நாகரசமுப்பூச்சுன்னம் | 24 |
| நாகக்கட்டு | 20 |
| நாகக்கட்டு | 55 |
| நாகக்களங்கு | 56 |
| நாதமுறை | 103 |
| நாகச்செந்தூரம் | 141 |
| நாதரிஷியையழைத்தல் | 34 |
| நாதரிஷியைச்சபித்தல் | 34 |
| நாதரிஷிவரலாறு | 35 |
| நாதவிந்துப்பு | 106 |
| நாதாந்ததழலை | 107 |
| நாற்பத்துமுக்கோணம் | 7 |
| நீ | |
| நீரிழிவுக்குகஷாயம் | 123 |
| நீரிழிவுக்குலேகியம் | 123 |
| நீரிழிவுக்குத்தயிலம் | 123 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| **நூ** | |
| நூலுளடக்கம் | 170 |
| நூல்வகை | 3 |
| நூல்பதனமுரைத்தல் | 4 |
| நூற்பெருமை | 17 |
| **ப** | |
| பஞ்சாட்சரமாற | 7 |
| பஞ்சபூதாதிவகையுரைத்தல் | 10 |
| பஞ்சாட்சரமகிமை | 16 |
| பஞ்சபூதமெழுகு | 17 |
| பஞ்சிகரணச்சித்து | 80 |
| பஞ்சசுன்னக்குகை | 132 |
| பத்தியம் | 102 |
| பரம்பரச்சித்து | 80 |
| பரத்தின்பூசைகாயாதிகற்ப | 147 |
| பராசரிஷிகற்பம் | 42 |
| பரிநகுலச்சித்து | 77 |
| பருதிவிம்பச்சித்து | 72 |
| பவமூலச்சித்து | 65 |
| பஸ்பவகை | 110 |
| **பா** | |
| பாரையுப்புக்கட்டு | 38 |
| பாஷாணபற்பம் | 46 |
| பாஷாணக்கட்டு | 64 |
| பாஷாணகட்டுருக்கு | 47 |
| பாஷாணவைப்பு | 96 |
| **பி** | |
| பிரமரிஷிகற்பம் | 41 |
| பிரமரிஷிகற்பம் | 44 |
| பிரமசாபநிவர்த்தி | 51 |
| பிரவதிகச்சித்து | 63 |
| பிரமகுலச்சித்து | 64 |
| பிரமாதிசித்து | 69 |
| பிரமநிஷ்டை | 164 |
| பிளவைமுதலானதுகளுக் | 130 |
| பிறையதிகச்சித்து | 63 |
| **பு** | |
| புசுண்டருக்குச் சொன்ன தாரக்கட்டு | 38 |
| புசுண்டரிஷிகற்பம் | 39 |
| புத்திகூறல் | 119 |
| **பூ** | |
| பூசிக்கும்வகை | 146 |
| பூநீற்றுக்கட்டு | 11 |
| பூநாதம் | 14 |
| பூமிநாதம் | 36 |
| பூரணமகிமை | 5 |
| பூமியுப்புமகிமை | 45 |
| பூரணமகிமை | 111 |
| பூரணபூசை | 114 |
| பூராணாதிலேகியம் | 118 |
| பூரணகற்பம் | 148 |
| பூரணதயிலமெழுகு | 55 |
| பூரவைப்பு | 94 |
| பூரணதரிசனமகிமை | 7 |
| **பெ** | |
| பெண்மயச்சித்து | 65 |
| பெரியோர்மகிமை | 104 |
| **பே** | |
| பேதனத்தின்சித்து | 83 |
| பேதனம் | 162 |
| பேதிக்குழம்பு | 129 |
| பேய்ச்சுருத்தயிலம் | 120 |
| பேரண்டமை | 59 |
| **பொ** | |
| பொரிக்காரகற்பம் | 49 |
| பொன்னிமிளைச்சத்து | 123 |
| **ம** | |
| மகேசுரநிஷ்டை | 166 |
| மணிபூரகம் | 168 |
| மதனகேளிச்சித்து | 76 |
| மதிரூபச்சித்து | 72 |
| மதிநேர்மை | 169 |
| மதுரகேளிச்சித்து | 81 |
| மவுனமகிமையுரைத்தல் | 5 |
| மனத்தியக்கச்சித்து | 85 |
| மனோன்மணிபூசை | 147 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| மா | |
| மாத்திரை | 144 |
| மாமோகச்சித்து | 81 |
| மாரணம் | 160 |
| மாரணத்தின்சித்து | 83 |
| மானதபூசை | 9 |
| மி | |
| மிளகுதயிலம் | 125 |
| மு | |
| முக்கட்டுச்சுன்னம் | 110 |
| முத்துதிருஞ்சித்து | 86 |
| முப்பூச்சுன்னம் | 12 |
| முப்பூவின்பெயர் | 16 |
| முப்பூமகிமை | 16 |
| முப்பூமுடிக்கும்வகை | 105 |
| முப்பூச்செயநீர் | 108 |
| முப்பூவிபரம் | 10 |
| மும்மண்டலம் | 157 |
| மூ | |
| மூலத்துக்குமூலிகை | 126 |
| மூலத்துக்குலேகியம் | 126 |
| மூலத்துக்குத்தயிலம் | 126 |
| மூலாதாரம் | 168 |
| மெ | |
| மெழுகுவகை | 18 |
| மே | |
| மேருகற்பம் | |
| மேருபூசை | 164 |
| மை | |
| மைபோடும்வகை | 57 |
| மோ | |
| மோகனம் | 159 |
| மோகினிசித்து | 73 |
| யோ | |
| யோகமுறைகூறுதல் | 14 |
| ர | |
| ரசமணி | 21 |
| ரஞ்சிதமெழுகு | 49 |
| ரவிநேர்மை | 169 |
| ரி | |
| ரிஷபமுகச்சித்து | 73 |
| ரு | |
| ருத்திரசாபநிவர்த்தி | 15 |
| ருத்திரநிஷ்டை | 165 |
| ரோ | |
| ரோமரிஷிவேதை | 43 |
| லி | |
| லிங்கரசமெழுகு | 19 |
| லிங்கக்களங்கு | 20 |
| லிங்கக்கட்டு | 103 |
| வ | |
| வகாரமயச்சித்து | 77 |
| வசியம் | 93 |
| வசியம் | 160 |
| வயித்தியனைத்தர்க்கித்தல் | 131 |
| வல்லாரைச்சூரணம் | 150 |
| வல்லாரைமெழுகு | 150 |
| வவ்வால்தயிலம் | 120 |
| வழலைநாதமுப்பூச்சுன்னம் | 22 |
| வழலைமுப்பூச்சுன்னம் | 26 |
| வழிநடக்குஞ்சித்து | |
| வன்னிகற்பம் | 47 |
| வா | |
| வாசியடக்கம் | 15 |
| வர்டைசித்து | 83 |
| வாதத்திற்குக் கருவுரைத்தல் | 5 |
| வாய்வுஸ்தம்பனசித்து | 84 |
| வி | |
| விகுர்தசித்து | 70 |
| விகுர்தரசச்சித்து | 74 |
| விசுத்தி | 169 |
| விசையபரச்சித்து | 75 |
| விஷ்ணுசாபநிவர்த்தி | 51 |
| விஷ்ணுகுலச்சித்து | 46 |
| விஷ்ணுநிஷ்டை | 164 |
| விதனம்வரும்சித்து | 82 |
| வித்துவேஷணம் | 161 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| விநாயகசக்கரம் | 9 |
| விந்துநாதம் | 36 |
| விரோதமயச்சித்து | 73 |
| வினோதவித்தைசித்து | 84 |
| வெ | |
| வெண்சாரைக்கற்பம் | 82 |
| வெண்காரவைப்பு | 4 |
| வெள்ளீயபற்பம் | 47 |
| வெற்றிமனச்சித்து | 81 |
| வே | |
| வேறுலேகியம் | 119 |
| வேறுகலிக்கம் | 144 |
| ஸ | |
| ஸ்தம்பனம் | 159 |
| க்ஷ | |
| க்ஷயத்துக்குகிஷாயம் | 124 |
| க்ஷயத்துக்குலேகியம் | 124 |
| க்ஷயத்துக்குதயிலம் | 124 |


பொருள் அட்டவணை.

முற்றிற்று.